# வள்ளுவர் இல்லம்



பேராசிரியர் சுந்தர சண்முகனார்

# வள்ளுவர் இல்லம்

ஆசிரியர்:
தமிழக அரசின் திருவள்ளுவர் விருதாளர்
திருக்குறள் நெறித் தோன்றல்
**பேராசிரியர் சுந்தர சண்முகனார்**
(தமிழ் அகராதிக்கலை ஆசிரியர்)
புதுச்சேரி.

வெளியீடு:
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
8, இரண்டாம் தெரு,
வேங்கட நகர், புதுச்சேரி - 605 011, இந்தியா.
☏ 0413-2213110

## தமிழ் வாழ்த்து

தமிழரின் பெருமை சாற்றும்
    தனிப்பெருஞ் சான்றாய் நின்றே
இமிழ்கடல் உலக மெங்கும்
    இசையினைப் பரப்பி ஓங்கும்
அமிழ்தமே! மக்கட் காக்கும்
    ஆருயிர் மருந்தே தேனே!
தமிழெனும் ஒப்பில் தாயே!
    தழைத்து நீஎன்றும் வாழி!

— சுந்தர சண்முகனார்

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வள்ளுவர் இல்லம் |
| மொழி | : | தமிழ் |
| நூலின் தன்மை | : | திருக்குறள் ஆய்வு |
| ஆசிரியர் | : | சுந்தர சண்முகனார் |
| உரிமை | , | சு. ச. அறவணன் |
| நூற்பதிப்பு | : | முதல் பதிப்பு, 1963<br>இரண்டாம் பதிப்பு, 2005 |
| பக்கங்கள் | : | XII + 212 |
| தாள் | : | 11.2 பெல்லாப்பூர் |
| அச்சு | : | 12 புள்ளி |
| விலை | : | ரூ. 70-00 |
| வெளியீடு | : | புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்<br>புதுச்சேரி - 605 011 |
| அச்சிட்டோர் | : | சுபம் பிரிண்டர்ஸ்,<br>சிதம்பரம்-608 001. ☏ 232544 |

# பதிப்புரை

தங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருப்பது 1947-ஆம் ஆண்டு முதல் 1997-ஆம் ஆண்டு வரை ஐம்பது ஆண்டுகளாகத் திருக்குறள் பரப்பும் வேள்வியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து மறைந்த பேராசிரியர் சுந்தர சண்முகனார் அவர்களின் 'வள்ளுவர் இல்லம்' என்னும் திருக்குறள் ஆய்வு நூலாகும்.

திருக்குறளின் பேரால் இதுவரை தோன்றியுள்ள பற்பல வெளியீடுகளினின்றும், 'வள்ளுவர் இல்லம்' என்னும் இந் நூலை வேறு பிரித்துணர முடியும். திருக்குறள் - அறத்துப் பால் - இல்லறவியலில் உள்ள இருபது பகுதிகளையும் (அதிகாரங்களையும்) இருபது சிறப்புத் தொடர் கட்டுரை களாக ஆசிரியர் சுந்தர சண்முகனார் இந்நூலில் அமைத்துத் தந்துள்ளார். ஒரு குறளும் விடுபடாமல், உரைக்கு உரையாகவும் - ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ஆராய்ச்சிக் கட்டுரையாகவும் இவ் வெளியீடு மிளிர்வதைக் காணலாம். இந் நூலின் பல இடங்களில் ஆசிரியர் அவர்க்கேயுரிய தனிப் பெருஞ் சிறப்பான துணிவினை, அஞ்சாமையை வெளிப்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக:

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"**

என்னும் குறளுக்கு ஆசிரியரின் விளக்கம்: "பிள்ளைகளின் திறமையை அறியும் அறிவு பெண்கட்கு இல்லையாதலின், பிறர் கூறக் கேட்டே அறிய வேண்டும் என்னும் கருத்துப் படப் பொருள் வரைந்துளார் பரிமேலழகர். தாமே அறியுந்திறன் பெண்டிர்க்கு இருப்பினும், இல்லாவிடினும், 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்றபடி தம் சிறப்பில்லாத பிள்ளைகளையும் சிறப்புடையவர்களாகக் கருதுவது பெரும்பாலும் பெற்றோர்க்கு இயல்பாகலின், பிள்ளையின் புகழைப் பிறர் வாயால் கேட்டு மகிழ்வதே பெரு மகிழ்வாகும் என்னும் கருத்துப்படப் பாடியுள்ளார் வள்ளுவர் என்பதைப் பரிமேலழகர் அறிந்திலர் போலும்!"

1948-ஆம் ஆண்டு முதல் பல்லாண்டுகளாக எழுதி வெளியிடப்பட்ட ஆசிரியரின் திருக்குறள் உரை விளக்கங்

களில் பல தற் புதுமைகள் வெளிப்பட்டன. எடுத்துக் காட்டாக, ‘‘கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான், தாளை வணங்காத் தலை,’’ என்னும் குறளில் உள்ள எண் குணத்தான் என்பதற்கு எட்டு வகையான குணங்களையுடையவன் இறைவன் என்பார் பரிமேலழகர். இவ்வுரையினை மறுத்து ஆசிரியர், ஆதி பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டா மையிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அறவாழி அந்தணன் என்ற எட்டு வகையான குணங்களையுடையவன் என வள்ளுவர் காட்டிய கடவுளுக்கு அவர் குறட்பாக்களுள் கூறிய எண் பெயர்களையே புதிய உரையாகப் புதுமை உரையாகக் கூறியமைக்குப் பாவேந்தர் பாரதிதாசனார் முதல் தமிழக, அறிஞர்கள் வரை அவரைப் பொன் போல் போற்றி உரைத்தனர்.

ஆசிரியரின் திருக்குறள் விளக்க வெளியீடுகள் பல நம் பதிப்பகத்தின் வாயிலாக முன்னரே வெளிவந்துள்ளன. ஆசிரியரின் புதுமை காணும் ஆராய்ச்சிக் கருத்துரை களுக்குத் தமிழ் மக்களிடமிருந்து எத்துணைப் பாராட்டும் – மதிப்பும் – வரவேற்பும் கிடைத்துள்ளன என்பதை அறிவிக்கு முகத்தான், ‘மக்கள் மதிப்புரை’ என்னும் பகுதி நூலின் இறுதியில் அமைக்கப் பெற்றுள்ளது. இந்நூலுக்கான அழகான மேலட்டையைத் தன் பொருட் செலவில் அச்சிட்டுத் தந்த புதுச்சேரி பிரெஞ்சுப் பேராசிரியர் க. சச்சிதானந்தம் அவர்கட்கும், நூலினை வெளியிடுவதில் ஆலோசனைகள் வழங்கிய கடலூர் புலவர் வ. ஞானப் பிரகாசம் அவர்கட்கும், நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த சிதம்பரம் சுபம் அச்சகத்தாருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வெளியீட்டுக்கு மக்கள் ஆதரவோடு, பாடநூற் குழுவினர் ஆதரவும் நூல் நிலையக் குழுவினர் ஆதரவும் கிடைக்கின் மேலும் பல நல்ல பயனுள்ள இலக்கிய வெளியீடுகளைப் படைக்க இயலும்.

**குமரேச திருநீலகண்டன்**
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**



பேராசிரியர் **சுந்தர சண்முகனார்**

# தெவிட்டாத திருக்குறள்

தமிழர்கள் திருக்குறளை மறந்தது உண்மைதான் அதனை அனைத்துலகிற்கும் அறிமுகப்படுத்த அவர்கள் மறந்தது உண்மைதான். ஆனால், திருக்குறள் தமிழர்களை மறக்கவில்லை. அவர்களை அனைத்துலகிற்கும் அறிமுகஞ் செய்து வைக்க அது மறக்கவில்லை. தன் கருத்தின் திண்மையால் உலக மக்களைக் கவர்ந்ததன் வாயிலாக, 'திருக்குறள் என ஒரு நூலுண்டு, அஃது எழுதப்பட்டது தமிழ்மொழியில், அம்மொழியினைப் பேசுபவர் தமிழர்கள், அவர்கள் அத்தகையதொரு நூலை உலகிற்கு அளிக்கவல்ல ஆற்றலும் அநுபவமும் நிரம்பியவர்கள்' என அனைத் துலகினரும் அறிந்து வியக்கச் செய்தது நம் அருமைத் திருக்குறளன்றோ? 'உலகிற்கு அறிமுகஞ் செய்து பரப்புவது அப்புறம் இருக்கட்டும், முதலில் நீங்கள் படியுங்கள்!' என்று திருக்குறள் சொல்லுவது போல் – திருவள்ளுவர் சொல்வது போல் தோன்றவில்லையா?

திருக்குறளை ஒரு முறை படித்தால் போதுமா? இரு முறை படித்தால் போதுமா? ஒரு கருத்துரையைக் கற்றால் போதுமா? ஒரு குறிப்புரையைக் கற்றால் போதுமா? திருக்குறளோ ஒரு வாழ்க்கை நூல் – வாழ்க்கைத் துணை நூல். இன்னும் சில்லாண்டுகள் சென்ற பின்னர்–சில அநுபவங்களைப் பெற்ற பின்னர் திருக்குறளை மீண்டும் ஒரு முறை படித்துப் பார்த்தால் தெரியும். புது அழகு–புது நயம்–புதுப் பொலிவு காணப்படும். இவ்வாறே ஆண்டுக்கு ஆண்டு, அநுபவத்துக்கு அநுபவம் திருக்குறள் தெவிட்டாது இனிக்கும்.

**சுந்தர சண்முகனார்.**

# பேரா. சுந்தர சண்முகனார் - ஒரு குறிப்பேடு

| | | |
|---|---|---|
| சூட்டிய பெயர் | : | சண்முகம் |
| சூட்டிக்கொண்ட பெயர் | : | சுந்தர சண்முகனார் |
| பிறந்த நாள் | : | 13—07—1922 |
| பிறந்த ஊர் | : | புதுவண்டிப்பாளையம், கடலூர். |
| மறைந்த நாள் | : | 30—10—1997 |
| பெற்றோர் | : | சுந்தரம்-அன்னபூரணி |
| குரு | : | ஐந்தாம் பட்டத்து ஞானியார் அடிகள், திருப்பாதிரிப்புலியூர் |

**பணியாற்றிய பதவிகளும் - நிறுவனங்களும்:**

1. 1940-46 விரிவுரையாளர், துணை முதல்வர், சிவஞான பாலய அடிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்.
2. 1949-58 தமிழ்த்துறைத் தலைவர், பெத்தி செமினார் மெட்ரிக்குலேசன் ஆங்கிலப் - பிரஞ்சுக் கல்விக்கூடம், புதுச்சேரி.
3. 1958-80 தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் ஆசிரியர் பயிற்சி மையம், புதுச்சேரி.
4. 1982 83 பேராசிரியர், தொகுப்பியல் துறைத் தலைலர். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
5. வாழ்நாள் உறுப்பினர், கல்விக்குழு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**பெற்ற சிறப்புப் பெயர்கள்:**

1. இயற்கவி - ''செந்தமிழ் ஆற்றுப்படை'' நூலுக்காக நாவலர் சோமசுந்தர பாரதியாரால் வழங்கப் பெற்றது.
2. செந்தமிழ்ச் செம்மல் - புதுவைத் தமிழ்ச் சங்கம்.

3. புதுப்படைப்புக் கலைஞர் - தொகுப்புக்கலை நூல் பாராட்டு விழாவில் புதுவை ஆளுநரால் அளிக்கப் பெற்றது.
4. செந்தமிழ்க் கொண்டல் - புதுவை சுப்பிரதீபக் கவிராயர் மன்றம்.
5. ஆராய்ச்சி அறிஞர்—சிவத்திரு ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர்.
6. திருக்குறள் நெறித் தோன்றல் - தமிழக அரசு வழங்கியது.
7. குறளாயச் செல்வர், ஈரோடு குறளாய இயக்கத்தின் புதுவைக் கிளை வழங்கியது.
8. தமிழ் ஆய்வுக் கடல்-தமிழகச் செங்குந்தர் பெருமன்றம் அளித்தது.
9. முனைவர் - உலகப் பல்கலைக் கழகம், அமெரிக்கா.

பெற்ற பரிசுகள்:

1. "பணக்காரர் ஆகும் வழி" நூலுக்கு மத்திய அரசின் பரிசு (1965).
2. "தமிழ் அகராதிக் கலை" நூலுக்குத் தமிழக அரசின் பரிசு (1969).
3. History of Tamil Lexicography நூலுக்குத் தமிழக அரசின் பரிசு (1973).
4. "கவுதம புத்தர் காப்பியம்" நூலுக்குப் புதுவை அரசு பரிசு (1987).
5. "தமிழ்நூல் தொகுப்புக் கலைக்களஞ்சியம்" நூலுக்கு மூன்று பரிசுகள்

   அ) தமிழக அரசின் பரிசு (1992)

   ஆ) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பரிசு (1992)

   இ) சென்னை M.A.C. அறக்கட்டளைப் பரிசு (1994)

**பெற்ற விருதுகள்:**

1. "தமிழ்ச் சான்றோர் விருது" - முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்களின் தமிழகப் புலவர் குழுவின் வெள்ளி விழாவின் போது, சேலம் தமிழ்ச் சங்கத்தில் 3—10—1983 அன்று பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் தலைமையில் வழங்கப் பட்டது.
2. "திருவள்ளுவர் விருது" - 15—1—1991 - இல் தமிழக அரசால் வழங்கப்பட்டது.
3. "தமிழ்ப் பேரவைச் செம்மல்" - 17—10—1991 அன்று மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தினரால் வழங்கப்பட்டது.
4. "இராசா. சர். அண்ணாமலை செட்டியார் விருது" - 1994 - ஆம் ஆண்டு சென்னையில் எம். ஏ. சிதம்பரம் அறக்கட்டளையினரால் வழங்கப்பட்டது.

**படைப்புகள்:**

**சிறுகதை:**

1. ஆத்திசூடி அமிழ்தம் (1948, 50)

**கவிதை நூல்கள்:**

2. தமிழ் அம்மானை - தனித்தமிழ்க் கிளர்ச்சி (1948, 1998)
3. குழந்தைப் பாட்டு (1948. 1951)
4. பொங்கல் வாழ்த்துக் கீர்த்தனைகள் (1948)
5. சிறுவர் செய்யுட் கோவை (1949, 1950)
6. செந்தமிழ் ஆற்றுப்படை (1951)
7. அண்ணா நாற்பது (1969)
8. அம்பிகாபதி காதல் காப்பியம் (1982)
   (அகவல் யாப்பில் 30 காதைகளாக அமைத்தது)
9. கவுதம புத்தர் காப்பியம் (1986)
   (பல்வேறு யாப்பில் 30 காதைகளாக அமைத்தது)

10, புத்தர் பொன்மொழி நூறு (1986, 1987).
(101 அறுசீர் ஆசிரிய விருத்தங்களால் அமைத்தது)
11. பல்வேறு தனிப் பாடல்கள்

உரைநடை நூல்கள்:

12. வீடும் விளக்கும் (குடும்பநூல்) (1947, 1958, 2001)
13. வாழ்க்கை ஓவியம் (வாழ்வியல்) (1950)
14. வாழும் வழி (கட்டுரைத் தொகுப்பு) (1962, 2003)
15. தமிழர் கண்ட கல்வி (கல்வி இயல்) (1964)
16. பணக்காரர் ஆகும் வழி (பொருளியல்) (1864)
17. இன்ப வாழ்வு (பாலியல்) (1965, 2003)
18. தமிழ் அகராதிக் கலை (ஆய்வு-அகராதியியல்) (1965, 2001)
19. போர் முயற்சியில் நமது பங்கு (இந்திய பாகிஸ்தான் போரின் போது எழுதியது) (1965)
20, தைத்திங்கள் (ஆய்வு) (வானியல்) (1972, 2002)
21. கெடிலக் கரை நாகரிகம் (பண்பாட்டு இயல்) (1975,
22. கெடில வளம் (பண்பாட்டு இயல்) (1984) 2001)
23. உலகு உய்ய (உலக ஒருமைப்பாடு) (1987)
24. தமிழ்க்காவிரி (அரசியல், தரைநூல்) (1988)
25. கருத்துக் கண்காட்சி (ஆய்வுக் கட்டுரைகள்) (1988)
26 இலக்கியத்தில் வேங்கடவேலவன் (திருப்பதி கோயில் ஆய்வு) (1988)
27. மக்கள் குழு ஒப்பந்தம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1989)
28. இயல்தமிழ் இன்பம் (ஆய்வுக் கட்டுரைகள்) (1992)
29. மனத்தின் தோற்றம் (ஆய்வுக் கட்டுரைகள் (1992)
30. தமிழ் அங்காடி (ஆய்வுக் கட்டுரைகள்) (1993)
31. பல்வேறு மலர்கள் மற்றும் இதழ்களில் பல ஆய்வுக் கட்டுரைகள்.

திருக்குறள் ஆய்வுகள்:

32. தெவிட்டாத திருக்குறள் (ஆய்வு) (1948-1958)
33. திருக்குறள் தெளிவு (ஆய்வு) (1948-1958)
"திருக்குறள் தெளிவு" - என்னும் திங்கள் இருமுறை [இதழ்நடத்தியுள்ளார்.

34. வள்ளுவர் கண்ட மனையறம் (ஆய்வு) (1957, 2004)
35. வள்ளுவர் இல்லம் (இல்லற இயல் விளக்க நூல்) (1963, 2005)
36. ஆழ்கடலில் சில ஆணிமுத்துக்கள் (ஆய்வு நூல்) (1991)

**கம்பராமாயணத் திறனாய்வுகள்:**

37. சுந்தர காண்டச் சுரங்கம் (1989)
38. அயோத்தியா காண்ட ஆழ்கடல் (1990)
39. சுந்தர காண்டச் சூறாவளி (மதிப்புரைக்குப் பதில்) (1990)
40. பாலகாண்டப் பைம்பொழில் (1991)
41. கிட்கிந்தா காண்டத் திறனாய்வு (1992)
42. ஆரணிய காண்ட ஆய்வு (1993)

**அறிவியல் ஆய்வுகள்:**

43. உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு (1988)
44. கடவுள் வழிபாட்டு வரலாறு (1988)
45. மருந்தாகித் தப்பா மரஇனப் பெயர்கள் (1989)
46. மர இனப் பெயர் வைப்புக் கலை (1990)
47. மாதவம் புரிவாள் (1991)
48. விளையும் பயிர் முளையிலே தெரியும் (1993, 2003)

**இலக்கணம்:**

49. எழுத்தாளர் துணைவன் (1954)
50. தொண்ணூறும் தொள்ளாயிரமும் (1971)

**மொழியியல்:**

51. History of Tamil Lexicography (1967)
52. தமிழ் இலத்தீன் பாலம் (1970)
53. தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு (1988)

**தொகுப்பியல்:**

54. தமிழ்நூல் தொகுப்புக் கலை (1972)
55. தமிழ்நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம் (1990)

**முழு உரைநூல்கள்:**

56. திருக்குறள் தெளிவுரை (1966, 2000, 2005)
57. நாலடியார் நயவுரை (1970)
58. திருமுருகாற்றுப் படை தெளிவுரை (1973)
59. இனியவை நாற்பது இனியவுரை (1987)

60. நன்னெறி நயவுரை (1989)
61. முதுமொழிக் காஞ்சி உரை (1991)
62. நல்வழி நயஉரை (1993, 2003)

சிலப்பதிகாரத் திறனாய்வு:

63. சிலம்போ சிலம்பு (1992)

வரலாறு:

64. காந்தியின் நாகரிகம் (1948)
65. புலிசை ஞானியார் அடிகளார் (1973)
66. பாரதிதாசரொடு பல ஆண்டுகள் (1987)
67. ஞானியார் அடிகளார் (1993)

புதினம்:

68. மலர் மணம் (1961, 2003)
69. தெய்விகத் திருமணம் (1990)

பாடமாக அமைக்கப் பெற்ற நூல்கள்:

1. ''அகராதிக் கலை'' சென்னை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகங்கள், வித்துவான், முதுகலை வகுப்பு களுக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் புலவர் வகுப்புக்கும் பாடமாக அமைந்தது.
2. History of Tamil Lexicography - சென்னைப் பல்கலைக் கழகம் முதுகலை வகுப்புப் பாடம்.
3. ''வாழும் வழி'' அண்ணாமலைப் பல்கலைக் கழகம், புதுமுக வகுப்புப் பாடம்.
4. ''தமிழர் கண்ட கல்வி'' - மதுரைப் பல்கலைக் கழகம், புது முக வகுப்புப் பாடம், பெங்களூர் பல்கலைக் கழகம், இளங்கலை வணிகவியல், பாடம்.
5. ''திருமுருகாற்றுப்படை தெளிவுரை'' - மதுரைப் பல்கலைக் கழகம் முதுகலைப் பாடம்.
6. ''கௌதம புத்தர் காப்பியம்'' - முதுகலை வகுப்பு, தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகம் - 2004-05 ஆண்டு முதல்.

தொகுப்பு:

சித்தாந்த இரத்தினம் புலவர் வ. ஞானப்பிரகாசம். கடலூர்.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இல்வாழ்க்கை | — | 3 |
| 2. | வாழ்க்கைத் துணைநலம் | — | 23 |
| 3. | மக்கட் பேறு | — | 37 |
| 4. | அன்புடைமை | — | 47 |
| 5. | விருந்தோம்பல் | — | 56 |
| 6. | இனியவை கூறல் | — | 70 |
| 7. | செய்ந்நன்றியறிதல் | — | 76 |
| 8. | நடுவு நிலைமை | — | 84 |
| 9. | அடக்கமுடைமை | — | 93 |
| 10. | ஒழுக்கமுடைமை | — | 103 |
| 11. | பிறன் இல் விழையாமை | — | 121 |
| 12. | பொறையுடைமை | — | 133 |
| 13. | அழுக்காறாமை | — | 142 |
| 14. | வெஃகாமை | — | 152 |
| 15. | புறங் கூறாமை | — | 160 |
| 16. | பயனில சொல்லாமை | — | 167 |
| 17. | தீவினையச்சம் | — | 174 |
| 18. | ஒப்புரவறிதல் | — | 182 |
| 19. | ஈகை | — | 191 |
| 20. | புகழ் | — | 201 |

# வள்ளுவர் இல்லம்

உலகில் உயர்திணையாகிய மக்களும் வாழ்கின்றனர் - அஃறிணையாகிய வேறு எல்லா வகை உயிர்களுந்தான் வாழ்கின்றன; மக்களும் ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து இனப்பெருக்கம் செய்கின்றனர் - மரஞ் செடி கொடிகள் உட்பட மற்ற உயிர்களுங்கூட அவ்வாறே ஆணும் பெண்ணுமாய் இணைந்து இனவளர்ச்சி செய்கின்றன. ஆயினும், இவ்விருதிணை உயிர்களின் வாழ்க்கைகளுக்கிடையே பெருத்த வேறுபாடு உள்ளதென்பதை எவரும் மறுக்கவியலாது. மற்ற உயிர் வாழ்க்கையினும் மக்கள் வாழ்க்கைக்குச் சிறப்பளிக்கும் வாழ்க்கை முறை ஒன்றுண்டு; அதுதான் இல்லற வாழ்க்கை.

இல்லறம் என்பது, ஓர் இல்லம் (வீடு) அமைத்து கணவனும் மனைவியும் உள்ளங் கலந்து, மக்களுடனும் மற்றவருடனும் அறநெறி நின்று நடத்தும் குடும்ப வாழ்க்கையாகும். ஏன் - அஃறிணை உயிர்களுங்கூடத்தான் ஆணும்

பெண்ணுமாய்க் கலந்து, தமக்கென தனியிடங்கள் (கூடு, புதர், குகை முதலியன) தேடிக்கொண்டு, குஞ்சு-குட்டிகளை ஈன்று வாழ்க்கை நடத்துகின்றன. அங்ஙனமிருக்க, மக்களுடைய இல்லற வாழ்க்கை மட்டும் எவ்வாறு உயர்ந்ததாகும்? உண்மைதான்! உயர்ந்ததாகாதுதான்! இன்னுங் கேட்டால், மக்களுட் சிலர், அஃறிணை உயிர் களினுங் கேடாய்க் குடும்ப வாழ்க்கை நடத்துகின்றனர். இது நல்லறமாகிய இல்லறமாகாது. அஃறிணை உயிர்களின் குடும்ப வாழ்க்கையினும் வேறுபட்ட — உண்மையான— உயர்ந்த - திருத்தமான - செப்பமான இல்லறம், திருவள்ளுவரின் திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள இல்லறவியல் என்னும் பகுதியில் இருபது தலைப்புக்களின் கீழ்த் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் கூறும் அந்த இல்லத்தில் (இல்லற நெறியில்) வாழ்பவர்களிடத்தே இருபது இல்லற இயல்புகளைக் காணலாம். நாமும் அந்த வள்ளுவர் இல்லம் போந்து பார்ப்போமே!

# 1. இல்வாழ்க்கை

மிகப் பழங்காலத்தில் விலங்குகள் போல் வாழ்ந்து வந்த மக்கள் - ஏன் - விலங்குகளினின்றும் தோன்றியவர் களாகச் சொல்லப்படும் மக்கள், இப்பொழுதுள்ள திருந்திய குடும்ப வாழ்க்கை முறையினை அமைத்துக்கொண்டிருப்பதே ஒருவகை விஞ்ஞான அருஞ்செயல்தான்! நடந்தே வழி கடந்து வருந்திய மனிதன், பலவகையான வண்டிகளிலும் கப்பல்களிலும், வானவூர்திகளிலும் வசதியாகப் பயணம் செய்வது எத்தகைய சிறப்பு வாய்ந்ததோ - அத்தகையதே, அன்று கண்டபடி அலைந்து திரிந்து அல்லலுற்ற மனிதன் இன்று மனைவியுடன் இல்லில் அமர்ந்து வாழும் இல்வாழ்க்கை நெறியும்!

அரசுத் தலைவர்களாக அமரும் சிலர் குடிமக்களுக்கு நன்மை தரும் ஆக்க வேலைகள் புரியாதது மட்டுமல்ல— அழிவு வேலைகளும் செய்துவிட்டுத் தப்பித்துக்கொண்டு தம் பதவிக் காலத்தைக் களிப்புடன் கழிக்கக்கூடிய இவ்வுலகில், அரசுத் தலைவரின் கடமைகளினும் மிகப் பல அரும்பெருங் கடமைகளைத் திருவள்ளுவர் இல்லறத் தானுக்கு ஏற்றிக் கூறியிருப்பது மிகவும் நயத்தற்கும் வியத்தற்கும் உரியதாகும்.

ஆம்; இல்லறந்தான் பலரைக் காக்கவேண்டும்— இல்லையில்லை — எல்லோரையுமே போற்றிக் காக்க

வேண்டும். அதாவது தன் குடும்பத்தையும் பேண வேண்டும். குடும்பம் என்றால், பெற்றோர், மனைவி, மக்கள் முதலியோரது தொகுப்பன்றோ? குடும்பத்தினரோடு உற்றார் உறவின் முறையார்க்கும் உதவ வேண்டும். வரும் விருந்தினரையும் ஓம்பவேண்டும். அம்மட்டுமா? துறவிகள், பற்றுக்கோடு (ஆதரவு) அற்றவர்கள், ஏழை எளியவர்கள் ஆகியோரையும் போற்றிக் காக்கவேண்டும். இம்மட்டுமா? ஆதரவின்றி இறந்துபோனவர்களை அடக்கம் செய்ய வேண்டும். இறந்துபோன முன்னோர்கட்கும் நினைவுவிழாக் கொண்டாட வேண்டும். தெய்வம் போற்ற வேண்டும். இவ்வளவும் செய்யும் இல்லறத்தான் தன்னையும் காத்துக் கொள்ளவேண்டும்; தான் இருந்தால்தானே இவ்வளவும் இயற்ற முடியும்?

> **''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
> **நல்லாற்றின் நின்ற துணை.''**

> **''துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
> **இல்வாழ்வான் என்பான் துணை.''**

> **''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்**
> **தான் என்றாங்(கு)**
> **ஐம்புலத்தா றோம்பல் தலை.''**

வள்ளுவர் குறளின்படி, இல்வாழ்வான் ஆற்ற வேண்டிய பணிகள், ஒரு நாட்டுத் தலைவனின் கடமைகள் போல் காணப்படுகின்றன அல்லவா?

அப்படியென்றால் வள்ளுவர் கூறும் இல்லம் எத்துணை மாண்புடையதென்று நோக்குக! ஆனால், இன்று சில பணக்கார இல்லங்களில் - படித்தவர் வாழும்

சில இல்லங்களில் - இருபதாம் நூற்றாண்டு நாகரிகத்தில் மூழ்கித் தோய்ந்து படிந்து ஊறிக் கிடக்கும் சில இல்லங்களில் - பொதுவாகப் பண்பாடற்ற இல்லங்களில், வள்ளுவர் கூறியுள்ள இல்ல மாண்புகளின் அடிச்சுவட்டை யாயினும் சிறிதாயினும் காண முடிகிறதா? சில இல்லங்களில் பின்பற்றப்படும் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக—வருந்தத் தக்கதாக உள்ளது. இல்வாழ்வான் மற்றவரைக் காவா விடினும் பெற்றவரைக் காத்தாலே போதும் என்ற நிலை சில குடும்பங்களில் உள்ளது.

சிலர் திருமணம் ஆனதும் மனைவியின் மனநிறை வுக்காகத் தாய் தந்தையரைத் தவிக்கவிட்டுத் தனிக் குடித்தனம் போய்விடுகின்றனர். மருமகளுக்கு மாமனாரும் மாமியாரும் அயலாராகத் தெரிகின்றனர். வீட்டில் அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையாம். எல்லாம் இவளுடையதாம் - இவள் கணவருடையதாம்! தான் வந்த பிறகும், அந்தக் ‘கிழங்கள்’ இன்னும் சாகாததற்கு நோகிறாள் மருகி. என்ன உலகம்! இந்நிலைக்கு ஆண்மகன் இடந் தரலாமா? இத்தகு இழிநிலை உலகில் ஒரு குடும்பத்தில் இருந்தாலே போதும் - இதனால், மனித இனம் முழுவதின் குடும்ப வாழ்க்கையும் தோல்வியடைந்ததாகவே பொரு ளன்றோ? பெற்றோரையே பேணாதார் உலகிற்கு என்ன செய்யக் கூடும்? இல்லறத்தார்கள் இதனை உணர்ந்து பார்க்க வேண்டும்.

உலகிற்கு உதவிக் கொண்டேயிருந்தால் குடும்பம் உருப்படுமா? என்ற ஐயம் இங்கே எழலாம். அதனைத் திருவள்ளுவர் பின்வருமாறு தெளிவுறுத்துகின்றார்:

உலகிற்கு உதவுபவன் ஒருபோதும் கெடமாட்டான். கெட்ட வழியில் பணம் தேடினும், தான் மட்டுமே உண்ணினும் உலகம் பழிக்கும் என்று அஞ்சி, நல்ல வழியில் தேடி, அதனைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்து உண்பவனுடைய வாழ்க்கை தொடர்ந்து நல்லவிதமாகவே நடக்கும்—என்பது ஆசிரியர் கருத்து.

> **''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
> **வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்''**

கெட்டவழியில் பொருள்தேடாவிட்டால் பலர்க்கும் பகுத்துக் கொடுக்கும் அளவு பொருள் சேர்வது எப்படி? நல்லவழியில் பொருள் தேடும் நல்லோர் சிலர் தம்மையே நன்கு பாதுகாத்துக் கொள்ள முடியாமல் தவிக்கின்றார்களே! அவர்கள் பலர்க்கும் பகுத்துக் கொடுப்பது எப்படி? செல்வம் சேர்ந்திருந்தாலும், பலர்க்கும் பகுத்துக் கொடுத்துக் கொண்டேயிருந்தால் அக்குடும்பம் விரைவில் நொடித்து விடாதா? பின்பு இடையறாமல் எப்பொழுதும் விளங்குவது எப்படி? என்பவற்றையெல்லாம் எண்ணும்போது இக் கருத்தில் சிலர்க்கு நம்பிக்கை தோன்றாதுதானே! இதனைச் சிறிது ஆராய்வோம்:

திருவள்ளுவர் இந்தக் குறளில் தெரிவித்திருப்பது என்ன? நல்ல வழியில் பொருள் ஈட்ட வேண்டும்; அப் பொருளை (பெற்றோர், மனைவி, மக்கள், துறந்தார்,

துவ்வாதவர், இறந்தார், தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றத்தார், தான் என்னும்) பலர்க்கும் பயன்படுத்தி வாழ வேண்டும் என்பதுதானே! இல் வாழ்வான் தன்னையும் (தன் குடும்பத்தையும்) காப்பாற்ற வேண்டும் என்றும் திருவள்ளுவர் கூறியிருப்பதால், ஒருவன் தன் செல்வம் முழுவதையும் பிறர்க்கே செலவிட்டுத் தன் குடும்பத்தை அழித்துவிட வேண்டும் என்பதன்று; போதுமான அளவு தன் குடும்பத்தையும் காப்பாற்றி, இயன்றவரை ஏனையோரையும் ஆதரிக்க வேண்டும் என்பது இனிது புலப்படுகின்றதல்லவா? எனவே, பிறர்க்கு ஓரளவு உதவுவதால் தன் குடும்பம் நொடித்துவிடும் என்பதற்கு இடமில்லை. பலர்க்கு உதவிப் பலருடைய நன்மதிப்பையும் பெறுவதால், தப்பித் தவறித் தன் குடும்பத்திற்கு ஒரு துன்பம் ஏற்பட்டாலும் அப்பலரும் உதவுவர். பலருள் சிலர் கூடவா நன்றி பாராட்டமாட்டார்கள்? பிறர்க்கு உதவாதவனுடைய குடும்பத்திற்கு ஒரு துன்பம் ஏற்பட்டால், அதிலும் அவன் கெட்ட வழியில் பொருள் ஈட்டியிருந்திருப்பானேயானால் அவன் குடும்பத்தை அனைவரும் வெறுத்து ஒதுக்குவார்கள்.

மேலும், கெட்ட வழியில் மிக்க பொருள் திரட்டி வாழ்வது வெள்ளத்தை நம்பி வாழ்வது போலாகும். வெள்ளம் எப்போதும் வருமா? ஆனால், நல்ல வழியில் பொருள் ஈட்டி வாழ்வதோ, ஊற்று நீரை நம்பி வாழ்வது போலாகும். ஊற்று எப்பொழுதும் சுரக்குமன்றோ? எனவே நல்வழியில் பொருளீட்டிப் பலர்க்கும் உதவி வாழ்வானுடைய

குடும்பம் தொடர்ந்து விளக்கம் பெறும் என்னும் இக்குறட் கருத்து இப்போது ஏற்புடையதாய்த் தோன்றுமே!

சிலர் இன்னொருவருடைய பொருளை எடுத்துத் தம்முடையதுபோல் வழங்குவார்கள். "கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைப்பது" என்றால் இதுதான்! இன்னும் சிலர், பிறரை வருத்திப் படாதபாடு படுத்தி அவரிடம் உள்ள பொருளைப் பறித்து, நல்லவர் போலத் தாங்கள் வழங்குவார்கள். "மாட்டைக் கொன்று செருப்புத் தானம் செய்வது" என்றால் இதுவே தான்! இவ்விதம் பழிப்புக்கிடமான முறையில் பொருள் தேடிச் செய்பவையெல்லாம் உண்மையான உதவியாகா. இது குறித்தே, "பழியஞ்சிப் பாத்தூண்" என்றார் ஆசிரியர்.

இல்வாழ்க்கைக்கு இருக்க வேண்டிய இலக்கணம் அன்பும் அறமும் உடைமையே. இல்வாழ்க்கையின் பயனும் அந்த அன்பும் அறமும் உடைத்தாய் இருப்பதே. அன்பும் அறமும் இல்லாதவன் இனிமையாக இல்வாழ்க்கையை எப்படி நடத்த முடியும்? முடியாது. அதனாலேயே அவ் விரண்டும் உடைமை இல்வாழ்க்கையின் இலக்கணமாம். யாவரிடமும் அன்பு காட்டுவதும் அறம் செய்வதுமே இல்வாழ்க்கையின் நோக்கம். ஆதலால், அவ்விரண்டும் உடைமை இல்வாழ்க்கையின் பலனும் ஆகும்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"**

இஃதென்ன! ஒன்றையே இலக்கணமாகவும் பலனாகவும் கூறித் தியங்கச் செய்துள்ளாரே திருவள்ளுவர் என்று திகைக்கலாம் சிலர். இத்தியக்கத்தாலேயே பிறர் வேறுவிதமாக உரை பகர்வாராயினர். கூர்ந்து நோக்கின் இங்குத் திகைப்பிற்கே இடம் இல்லை. எடுத்துக்காட்டு ஒன்று வருக:

பிள்ளையின் இலக்கணம் பெற்றோரைக் காப்பாற்றுதலும், உலகிற்குத் தொண்டு செய்தலும் ஆகும் என்று ஒருவர் கூறுவதாக வைத்துக் கொள்வோம். அவ்விரண்டுந் தானே பிள்ளையினால் உண்டாகும் பயனுங்கூட? எனவே, ஒன்றையே இலக்கணமாகவும், பயனாகவும் திருவள்ளுவர் குறிப்பிட்டிருப்பதைக் குறித்துத் தியங்க வேண்டாவன்றோ?

''ஒருவன் இல்வாழ்க்கை, தன் துணைவி மேல் செய்யத்தகும் அன்பினையும், பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடைத்தாயின் அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனும் ஆம். இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சு ஒன்றாகவழி இல்லறம் கடைபோகாமையின் அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனாயிற்று'' என்பது பரிமேலழகர் உரை.

அன்பு என்பதற்கு மனைவி மேல் உள்ள அன்பு என்று பகர்ந்துள்ளார் பரிமேலழகர். இங்கே வள்ளுவர் காதல் என்னும் சொல்லை வைத்திருந்தாலும் பரிமேலழகர் பகரலாம் அவ்விதம். இல்லையே! ஆகவே, அன்பு என்பதற்கு யாவரிடத்தும் உள்ள அன்பு என்று பொருள் கூறினால், அவ்வில்வாழ்வானுக்கும் பெருமை, திருவள்ளு

வர்க்கும் பெருமை! எல்லோரிடத்திலும் அன்பு உள்ளவன் தன் மனைவியிடத்திலா அன்பு இல்லாதவனாகப் போய் விடுவான்? பரிமேலழகர் கூறியபடியே வைத்துக் கொண்டாலும், தம் மனைவியின் மேல் அளவு மீறி அன்பு கொண்ட சிலர் பிறரை நோகச் செய்கின்றனரே! பிறரை என்ன? பெற்றோரையே பேதுறச் (மயங்கச்)செய்கின்றனரே! இதுதானா இல்வாழ்க்கையின் இலக்கணம்?

மேலும் பரிமேலழகர், அன்பை இல்வாழ்க்கையின் இலக்கணமாகவும், அறத்தைப் பலனாகவும் பகர்ந்துள்ளார். இங்குக் கூர்ந்து நோக்க வேண்டும். பண்பும் பயனும் அது என்பது குறள். "அது" என்னும் ஒருமை அன்பையும் அறத்தையும் உடைத்தாயிருக்கும் செயலைக் குறிக்கின்றது. எனவே, பண்பும் அச்செயல்தான், பலனும் அச்செயல்தான். பரிமேலழகர் உரைப்படி இரண்டையும் தனித்தனியாகப் பிரித்துக் கூறும் நோக்கம் வள்ளுவர்க்கு இருந்திருக்குமே யானால் "பண்பும் பயனும் அவை" என்று பாடியிருப்பார். அன்பு இலக்கணமாகும் போது, அறம் மட்டும் இலக்கணம் ஆகாதா? அறம் பயனாகும் போது, அன்பு மட்டும் பயனாகாதா? ஆகுமே! ஆய்க அறிஞர்.

உலகில் சிலரது குடும்ப வாழ்க்கை செம்மையுற நடத்தலைக் காண்கின்றோம். அந்தக் குடும்பத்தாரிடைக் குறையொன்றுங் கூறவியலாது. கணவன் மனைவி ஒற்றுமை, பெற்றோர் பிள்ளை ஒற்றுமை, விருந்தோம்பல், சுற்றம் தழுவல், பிறர்மனை நயவாமை, கள்-களவு-பொய்-சூது முதலியன இன்மை, இன்பத்தில் துள்ளாமை, துன்பத்தில் கலங்காமை முதலிய அறப்பண்புகளுடன் அவர்கள்

வாழ்வர். ஆனால், பெரும்பான்மையோர்க்கு அறத்தாற்று இல்வாழ்க்கையில் இன்பமோ, பெருமையோ, விறுவிறுப்போ இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு மாறான புறத்தாற்று இல்வாழ்க்கையிலேயே பூரிப்புப் பொங்குகிறது; இன்பங் கொழுந்து விடுகிறது; விறுவிறுப்பு முறுக்கேறுகிறது. ஆனால் புறத்தாற்று இல்வாழ்க்கை முதலில் முன்னேற்ற மாய்த் தென்படினும் பின்னர்க் கவிழ்த்து விடும்; ஆதலின் அறத்தாறே என்றும் நின்று நிலைத்து நீடிக்கும்.

**''அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவதெவன்''**

இந்தக் குறளில் அறத்தாறு, புறத்தாறு என இரண்டு நெறிகள் பேசப்பட்டுள்ளன. அறநெறிக்குப் புறநெறி (எதிர்மாறான நெறி) மறநெறி (தீயவழிகள்) என இயற்கையாய்ச் சொல்லமைப்பு-தொடர் அமைப்புக்களை ஒட்டி உரை எழுதப்பட்டது. ஆனால், பழைய உரையாசிரியர்கள், இங்கே பெரும் புரட்சிப் பொருள் புகன்றுள்ளனர். அவர் தம் துணிவைப் பாராட்ட வேண்டும். புறத்தாறு என்பதற்கு, இல்லற வாழ்க்கைக்குப் புறம்பான துறவற வாழ்க்கை– தவவாழ்க்கை என அவர்கள் பொருள் எழுதியுள்ளனர். நல்லமுறையில் இல்வாழ்க்கை நடத்தி னால், துறவறத்திற்குச் சென்றுதான் தீரவேண்டும் என்பது கட்டாயம் இல்லை; துறவறத்திற்குச் சென்று பெறக்கூடிய நன்மைகளையெல்லாம் இவ்வில்லறத்திலேயே பெறலாம் என்பது அவர் தம் கருத்து. உண்மைதானே!

உள்ளத்தில் ஒழுங்கு இல்லாமல், முற்றத் துறந்த முனிவரெனச் சொல்லிக் கொண்டு, காட்டில் திரிந்துதான்

என்ன பயன்? காற்றை உண்டுதான் என்ன பயன்? கந்தலைக் கட்டி ஓட்டைச் சுமந்து இரந்து உண்டுதான் என்ன பயன்? ஒன்றும் இல்லை. எல்லாம் வெளிப்பகட்டே? ஆனால் பெண்ணுடன் வீட்டிலேயிருந்து சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும், உள்ளத்தில் ஒழுங்கு உடையவர்கள் பேரின்பத்தையும் பெறுவார்கள். இதனை முற்றத் துறந்த முனிவரும் நுகர்ந்துகண்டவரும் (அநுபவ சாலியும்) ஆகிய பட்டினத்தாரே பகர்ந்துள்ளார்.

**''காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி**
**ஓடே எடுத்தென்ன உள்ளன்பு இலாதவர்**
**ஓங்குவிண்ணோர்**
**நாடேய் இடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர் பால்**
**வீடேயிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே''**

என்பது பட்டினத்தடிகளின் பாடல். (நாரியர் = பெண்டிர்) பெண்ணுடன் இருப்பவர்கள் வீட்டுலகப் பேரின்பத்தையும் பெறுவார்கள் எனில், இவ்வுலக இன்பங்கள் எல்லா வற்றையுங்கூட எய்த முடியும் என்பதில் எள்ளளவு ஐயமும் இல்லையன்றோ? இன்னும் இப்பாடலுக்கு, வீட்டுலகம் (மோட்சம்) சென்று பெறும் பேரின்பத்தை, இவ்வுலகிலேயே இல்லறத்தில் மனைவியுடன் இருந்து வாழ்ந்துகொண்டே பெற்றுவிடலாம் என்றும் பொருள் உரைத்துக்கொள்ளலாம். இந்தப் பாடலுக்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால் திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறே போதுமே!

எனவே, பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் கூறியுள்ள இந்தப் புரட்சியான கருத்து நன்றாய்த்தான் உள்ளது. வள்ளுவரே பின்வரப்போகும் குறளில் இந்தப்

புரட்சியைக் கையாண்டுள்ளார். அந்தப் புரட்சியின் அனல் இங்கேயும் வீச, உரையாசிரியர்கள் இங்கேயே குளிர்காயத் தொடங்கிவிட்டனர். ஆயினும், இந்தப் பொருளுக்கு இந்த குறளமைப்பு இடந்தரவில்லை என்றே தெரிகிறது. அறத்தாறு என்று சொல்லிப் பின்னர்ப் புறத்தாறு என்றால், அறநெறிக்குப் புறம்பான மறநெறிதான். புறவாழ்க்கை என்று சொல்லியிருந்தால், இல்வாழ்க்கைக்குப் புறம்பான துறவு வாழ்க்கை எனப் பொருள் கொள்ளலாம். அவ்வாறு இல்லையாதலின், பழைய ஆசிரியர்களின் உரை பொருந்தாது என்பது இப்போது புரிகிறது.

இந்தக் குறளில் 'போஒய்' என ஒரு சொல் உள்ளது. இதன் உண்மையான உருவம் 'போய்' என்பதுதான். இதன் நடுவிலே 'ஒ' என ஓர் எழுத்துச் சேர்ந்துள்ளது. இந்த எழுத்திற்கு இங்கே தனி ஒலி இல்லை. 'போ' என்பதை நீட்டிச் சொல்லும்போதே 'ஒ' என்பதற்கும் சேர்த்து நீட்டிவிட வேண்டும். போ - ஒய் எனப் பிரித்துப் படிக்காமல் 'போஒய்' என ஒரே நீட்டாய் நீட்டிச் சொல்லிவிட வேண்டும். போ என்பதிலுள்ள (ப்+ஓ) ஓ என்னும் உயிரெழுத்தின் அளவை மிகுதியாக எடுத்து ஒலிப்பதற்கு அறிகுறியாக 'ஒ' என்பது சேர்க்கப்பட்டது; ஆதலின் இதனை இலக்கணத்தில் 'உயிர்அளபெடை' என்பர். இங்கே இந்த உயிர் அளபெடை, இடம் அடைப் பதற்காகக் கையாளப்பட்டது, என்பது இலக்கண நூலாரின் கருத்து. இதனை ஒத்துக் கொள்ளமுடியாது. இடம் அடைப்பதற்கு வள்ளுவர்க்கு வேறுசொல் கிடைக்காதா? எனவே, ஒரு பொருள் கருதியே வள்ளுவர் இங்ஙனம்

அமைத்துள்ளார். அதாவது, அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றாதவர்களை நோக்கி, நீங்கள் புறத்தாற்றில் 'போஒய்' கிழிப்பது என்ன? என்று நீட்டி நெளித்து இளித்துக்காட்டி ஏளனம் செய்கிறார். இந்த 'ஒ' என்னும் ஒரேழுத்தை இடையில் புகுத்தி அளவை மிகுதியாக எடுத்ததில் இத் துணைப் பொருளழகு பொதிந்து கிடப்பதை நுனித் துணர்ந்து மகிழ்க.

இயல்பான ஒழுக்க முறையுடன் குடும்ப வாழ்க்கை நடத்துபவன் என்றும் புகழ்ந்து பேசப்படுவான். வேறு நன்மை பெற முயல்பவர்களுக்குள் எல்லாம் அவன் முதன்மையானவன் ஆவான்.

**"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை"**

இக்குறளில் உள்ள 'இல்வாழ்க்கை வாழ்பவன்' என்னும் தொடர் ஓர் அரிய அணுத் தொடராகும். இத் தொடரில் இரண்டு முறை வாழ்(தல்) என்னும் சொல் வந்துள்ளது. இதற்கு வள்ளுவர் அகராதியில் என்ன பொருள்? கணவனும் மனைவியுமாய் இல்லில் இயைந்து வாழ்தலையே வாழ்தல் என வள்ளுவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது. இல்வாழ்க்கையே வாழ்க்கையாக அவர்க்குப் புலப்பட்டிருக்கிறது. மற்ற வாழ்க்கை யெல்லாம், 'வாழாது வாழ்கின்றேன்' என ஒரு காரணம் பற்றி ஓரிடத்தில் மணிவாசகர் கூறியிருப்பதுபோல், வாழாத வாழ்க்கையே போலும்! வள்ளுவர் 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் பகுதியில், மனைவியை 'வாழ்க்கைத்துணை' எனக் கூறு கிறார். அங்ஙனமெனில், வாழ்க்கை என்பது எது? என

நாமே உய்த்துணர்ந்து கொள்ளலாமே. இல்வாழ்க்கையே வாழும் வாழ்க்கை என்னும் கருத்தை உள்ளடக்கியே 'இல் வாழ்க்கை வாழ்பவன்' என இக்குறளில் ஆசிரியர் கூறினார். (வாழ்க்கையை வாழ்தல் — அதாவது வாழும் வாழ்க்கை).

இத்தொடரில் இன்னும் ஒரு நயங் காணலாம். 'எங்கள் அகத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்' என்பது போல், இல்வாழ்கையில் உள்ள எல்லோருமே வாழ்ந்தவராகி விடுவார்களா? இல்லறமென்னும் நல்லறத்தைப் புல்லற மாக்கிக் கொண்டவர்கள் எத்துணையோ பேர்! 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' என்றபடி பேருக்குத் திருமணம் செய்துகொண்டு பேதுறுகின்ற பேதைப் பித்தர்கள் எத் துணையோபேர்! இவர்களெல்லாரும் இல்வாழ்க்கை வாழ்பவராக மாட்டார்கள். இல்வாழ்க்கை வாழவேண்டிய இயல்பின்படி வாழ்பவரே வாழ்வாராவார் என்ற கருத்தை யும் அடியொற்றித்தான் 'இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்' என்றார் வள்ளுவப் பெருமானார்.

இல்வாழ்க்கை வாழவேண்டிய 'இயல்பு' என்பது என்ன? இயல்பு என்பதற்கு, இயற்கை, தன்மை, உண்மை, ஒழுக்கம், நேர்மை, முறை என்றெல்லாம் பல பொருள் உண்டு. போதிய அளவு உழைத்து, உண்டு, உடுத்து, நுகர்ந்து, உறங்கி பிறருக்கும் உதவி வாழும் வாழ்வு இயல்பான வாழ்வு தான். இக்காலத்தில் பலரிடம் செயற்கையான போலி வாழ்வே காணப்படுகின்றதன்றோ? எண்ணத்திலும் பேச்சிலும் செயலிலும் இயல்பான

உண்மையின்றி, செயற்கையில் உண்மைபோல் நடிக்கின்ற போலித்தனமே காணப்படுகின்றதல்லவா? இது கூடாது. செயற்கையான போலித்தனமின்றி, இயல்பான ஒழுங்கு முறையுடன் இல்வாழ்க்கை வாழ்பவன், வேறு துறைகளில் முயல்பவர்களுக்கெல்லாம் தலைமையானவன் ஆவான் என்பதே இக்குறட் கருத்து.

இக்குறளில் உள்ள 'முயல்வார்' என்பதற்கு உலகியல்-பொருளியல் துறையில் முயலுபவர் என்னும் கருத்தில் மணக்குடவரும், தவநெறியில் முயலுபவர் என்னும் கருத்தில் பரிமேலழகர் போன்றோரும் பொருள் கூறியுள்ளனர். இயல்பான இல்வாழ்க்கையல்லாத வேறு துறைகளில் முயல்பவர் என்று நாம் பொருள் எடுத்துக் கொள்ளலாம்.

உலகில் எந்த உயிர்ப் பொருளை எடுத்துக் கொண்டாலும் ஆணும் பெண்ணுமாயிருப்பதையும், இவ்விரண்டின் சேர்க்கையாலேயே தோற்றம் ஏற்படு வதையும் நாம் கண்டு வருகின்றோம். எனவே, இயற்கைப் படைப்பின் அமைப்பு நோக்கம், ஈரினமும் இயல்பாய் இணைந்து வாழ்தலே! இவ்வாறு அமையாத வாழ் வெல்லாம் அரைக்கிணறு தாண்டும் அறைகுறை வாழ்வே. மனைவி மக்களுடன் வாழ்ந்தறியாதவன், பெரிய பணக்காரனாய் அல்லது பெரிய படிப்பாளியாய் அல்லது பெரிய துறவியாய் நூறாண்டு வாழ்ந்திருந்தாலும் அவனது வாழ்வு பதினெட்டு வயதுப் பையனது வாழ்வேயாகும். சாவு வாழ்வுக் காரியங்களில் சமூகம் அவனுக்கு முதன்மை கொடுப்பதில்லை. நிறையப் பிள்ளை குட்டி பெற்ற

நரைத்த தலைகளையே நாடுவர் மக்கள். அவர்களுக்குத் தான் மனித வாழ்வின் முழுப் பூட்டுத் திறப்பும் தெரியும். அவர்களே - அவர் தம் அறிவுரைகளே மற்றவர்க்கு வழி காட்டி. எனவே தான், இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன், அங்ஙனம் வாழாது வேறு வழியில் வாழ முயலுகின்ற மற்றவர்க்கெல்லாம் தலைமை தாங்குகிறான். இப்பொழுது புரிந்திருக்குமே இக்குறளின் உட்கிடை. தவம் என்றால் ஏதோ தனிப்பட்டது-அப்பாற்பட்டது என்று எவரும் தயங்க வேண்டா. ஒழுங்கான முறையில் இல்லறம் நடத்துவதும் ஓர் உயர்ந்த தவமே. மேலும் இந்த இல்லறத் தவம், துறவிகளின் துறவுத்தவத்தைவிட வலியதும் சிறந்ததும் ஆகும். சமய நூலார் 'இல்லறத் துறவு' என்று சொல்வது இந்த இல்லறத் தவத்தைத்தான் என்றும் கூறலாம். இல்லறத் துறவு என்றால் வேறு எதுவும் இல்லை; பொழுது விடிந்து பொழுது போகும்வரையும் தம் மனைவி மக்களை மட்டுமே கட்டியழுதுகொண்டு-அவர்கட்கு வேண்டியவற்றை மட்டுமே தேடி உழன்றுகொண்டு கிடக்காமல், மற்ற மன்பதைக்கும் (சமுதாயத்துக்கும்) தொண்டாற்றுதலே இல்லறத் துறவு. இத்தகைய தொண்டு புரிவோரே இல்லறத் துறவிகள்.

'தவஞ் செய்வார் தங்கருமம் செய்வார்' என மற்றொரு குறளில் கூறியுள்ளபடி, தாம் மட்டுமே தனியே அமர்ந்து 'மூக்கு விழிகளை' மூடிக்கொண்டு செய்யும் துறவுத்தவத்தைவிட, மனைவிமக்களுடன் மக்கள் சமுதாயத்துக்கும் தொண்டாற்றும் இல்லறத்தவம் எவ்வளவோ சிறந்ததுதானே! இது குறித்தே

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

என்றார் வள்ளுவர். ஆனால், எல்லோரையும் ஆற்றின் ஒழுக்கித் தானும் அறனிழுக்காது நடத்துகின்ற இல் வாழ்க்கையே நோற்பாரின் நோன்மையுடைத்து என்பதும் ஈண்டு நினைவிருக்கவேண்டும். எனவே, இல்லறத் தவத்துக்குரிய இலக்கணம், அனைவருக்கும் ஆகவேண்டிய உதவிகளைச் செய்து அவரவரையும் நல்வழியில் நடத்தல், தானும் நல்வழியில் நடத்தல் என இரண்டும் உடைமை எனத் துணிக.

இதைத்தானே பிசிராந்தையார் என்னும் சங்கப் புலவர் செய்தார்! அவர் தமது பண்பாட்டால் மனைவி, மக்கள், தொழிலாளர் முதலிய எல்லோரையும் திருத்தினார்; அரசனும் நல்லவன்; ஊராரும் சான்றோர்கள்; அதனால் அமைதியான நல்ல சூழ்நிலையில் நல்வாழ்வு வாழ்ந்தார் புலவர். இந்த இனிய இல்லற வாழ்வால், வயது மிக நிரம்பியும், என்றும் நரை திரையில்லாத இளைஞராகவே அவர் காணப்பட்டார். என்றும் இளமை பெற்ற இதனினும் பெரிய தவம்-பெரிய யோகம் வேறு என்ன? இதனை, தம் என்றுங்குன்றா இளமை பற்றி அவரே பாடிய

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்காகியர் என வினவுதி ராயின்,
மாண்டஎன் மக்களொடு மனைவியும் நிரம்பினர்,
யான்கண் டனையர் என் இளையரும்...
சான்றோர் பலர் யான் வாழு மூரே"

என்னும் புறநானூற்றுப் பாட்டால் அறியலாம்.

உலகில் எது எதுவோ அறம் என்று சொல்லப்படினும், உண்மையில் அறம் என்று சொல்லப்படுதற்கு உரியது இல்வாழ்க்கைதான்; அந்த இல்வாழ்க்கையும் பிறனொருவன் பழிக்காதபடி இருந்தாலே சிறந்ததாம்.

**"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன் பழிப்ப தில்லாயின் நன்று"**

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பதற்கு வாடிக்கையாக ஏதோ பொருள் சொல்வது வழக்கம். இல்லறம், துறவறம் என அறம் இருவகை; அவற்றுள் இல்லறமே சிறந்தது என்னுங் கருத்தில் பரிமேலழகர் எழுதியுள்ளார். இன்னும் எத்தனையோ அறங்கள் (முப்பத்திரண்டு அறங்கள்) சொல்லப்படுவதுண்டு; அவற்றுள் இல்லறமே சிறந்தது என்றெல்லாம் சொல்வதுண்டு. இங்கே உண்மையான கருத்தாவது: அறமே இல்வாழ்க்கை-இல்வாழ்க்கையே அறம். கரும்பே கன்னல்-கன்னலே கரும்பு என்பது போல, அகராதி தொகுப்பவர்கள் அறம் என்பதற்கு நேரே இல்வாழ்க்கை எனவும், இல்வாழ்க்கை என்பதற்கு நேரே அறம் எனவுங் கூட எழுதி வைக்கலாம். இதற்கு நிகண்டு போன்றதொரு சான்று 'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை' என்பதே.

'அறன் எனப்பட்டதே' என்பதின் இறுதியிலுள்ள 'ஏ' துறவறத்தினின்று இல்லறத்தைப் பிரித்துக்காட்டும் பிரிநிலை ஏகாரம் ஆகும் எனப் பொருள் கொண்டு, 'அஃது' என்ற சொல்லுக்கு 'அந்தத் துறவறமும்' எனப் பொருள் கூறியுள்ளார் பரிமேலழகர். ஏகாரத்தைத் தேற்ற

ஏகாரமாகக் கொண்டால் இந்தக் குழப்பத்துக்கு இட மில்லை. 'அ∴து' என்னும் சுட்டு எவ்வாறு துறவறத்தைக் குறிக்க முடியும்? முதலில் இல்வாழ்க்கையைக் கூறிப் பின்பு அது என்று சுட்டிக் காட்டினால் எது என்று எண்ணுக.

இல்வாழ்க்கையில் இருந்து கொண்டுதான் எல்லா அறமும் செய்யமுடியுமாதலின் 'அறனெனப் பட்டதே இல் வாழ்க்கை' என்றார். இல்வாழ்க்கையே அறம் எனத் தேற்றப்படுத்திக் கூறிவிட்டதால், குடும்பத்தில் இருந்து கொண்டு எவ்வளவு கொடுமை வேண்டுமானாலும் செய்ய லாமா? பிறர் பழிக்காதபடி நடந்து கொண்டால்தானே நல்லதாகும் என்பதை அறிவிக்கவே 'பிறன் பழிப்ப தில்லாயின் நன்று' என்றார் ஆசிரியர்.

அடுத்த குறளில் உலக வழக்கில் உள்ள உண்மை யொன்று பொதிந்து கிடப்பதாகப் புலப்படுகின்றது. உலகில் ஒழுங்கான முறையில் நல்வாழ்வு நடாத்திப் பின்னர் இறந்து போனவரைக் குறித்துச்சுட்டி, "அவர் செத்துத் தெய்வமாய்ப் போய் விட்டார்" என்று மக்கள் பேசிக் கொள்வதை நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். நாமே பலரைப் பற்றி அவ்வாறு சொல்லியிருப்போம். ஆனால், தீய செயல்கள் செய்து இறந்து போன கொடியவர்களை அவ்வாறு குறிப்பிட்டுச் சொல்வது வழக்கத்திலில்லை. அவர்கள் அலகையாய் அலைவதாய்ச் சொல்வதுதான் வழக்கம். ஆனால், நல்வாழ்வு வாழ்ந்து இறந்துபோன நல்லவரைக் குறிப்பிட்டுத்தான் "சும்மா சொல்லக்கூடாது; அவர் செத்துத் தெய்வமாய்ப் போய்விட்டாரு; அவர்

எவ்வளவு பாடுபட்ட மனிதன் தெரியுமா? அவர் மட்டும் இப்பொழுது இருந்திருந்தால் இது இப்படியா நடந்திருக்கும்? இத்நேரம் எவ்வளவோ மேல் நோக்கத் துக்குக் கொண்டு வந்திருப்பாரு'' என்றெல்லாம் சொல்வது உலகியல். மக்களது பேச்சு வழக்கு இங்கே எழுத்துக்கு எழுத்து அப்படியே கொடுக்கப்பட்டது. உண்மைதானே இது? இதே கருத்தைத்தான்,

> **'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும்''**

என்றார் திருவள்ளுவர்.

எனவே தெய்வநிலை யடைவதற்குரிய நேர்பாதைப் வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் போலும்!

இன்னும் இக்குறளின் உண்மைக்கு ஒரு சான்று:— உலகில் நல்லவரோ-கெட்டவரோ எவர் இறந்தாலும் 'சிவலோக பதவியடைந்தார்' 'வைகுண்ட பதவி யடைந்தார்' என்று கூறுதல் வழக்கம். இதிலுள்ள உண்மை யாது? செத்தவரைத் தெய்வமாக மதிக்கிற உண்மைதான். செத்தவருக்கு எவ்வளவு படையல்கள்-வழி பாடுகள் நடக்கின்றன தெரியுமா? செத்துப்போன கெட்ட வனையும் சமூகம் மதித்துத் தெய்வமாக ஏற்றுக் கொள்கிறது எனில், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப்படும்' என்று வள்ளுவர் சொல்லி யிருப்பதில் என்ன தவறு? என்ன தடையிருக்க முடியும்?

தெய்வங்கள் மண்ணுலகில் நம் நடுவே வெளிப் படையாய்க் காணப்படாமையின் அவை விண்ணுலகில்

எழுந்தருளியிருக்கக் கூடும் என்ற மக்களின் எண்ணத்தை எதிரொலிப்பவர்போல் 'வானுறையும் தெய்வம்' என்றார் வள்ளுவர். அவன் வானத்துக்குச் சென்ற பிறகுதான் தெய்வமாவான் என்பதில்லை; வாழ்வாங்கு வாழுமவன் வையத்துள் இருக்கும் போதேகூட தெய்வமாக மதிக்கப் படுவான் என்ற குறிப்புப் பொருள் 'வையத்துள்...... வைக்கப்படும்' என்பதிலிருந்து கிடைக்கின்றதல்லவா?

வாழ்வாங்கு வாழ்பவன் என்று கூறியுள்ளாரே——வாழ்வாங்கு வாழ்தல் என்றால் என்ன? இல்லறத்தான் இப்படி யிப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று இத்தனை குறள்களில் கூறிவந்தாரே - இன்னும் எத்தனையோ குறள் களில் கூறப்போகிறாரே, அப்படி யப்படி யெல்லாம் நடந்து கொள்வதுதான் 'வாழ்வாங்கு வாழ்தல்' என்பது. இயற்கை நியதியின்படி இல்லறத்தில் வாழ்வதே வாழ்வாங்கு வாழ்தல் தானே! இல்வாழ்க்கையின் முற்ற முடிந்த தனிப் பெருஞ் சிறப்பு இந்தக் குறளில் கூறப்பெற்றுள்ளது.

# 2. வாழ்க்கைத் துணை நலம்

குடும்பப் பெண்ணுக்குரிய குணச் சிறப்புடன் கணவனது வருவாய்க் கேற்பச் செலவு செய்பவள் எவளோ அவளே நல்ல வாழ்க்கைக் துணைவியாவாள். வாழ்க்கைத் துணையாகிய மனைவிக்கு ஈண்டு இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. என்ன! ஒருவனுக்கு மனைவிதான் வாழ்க்கைத் துணையா? அவன் தாய் தந்தையர் என்ன ஆவது? அவன் உடன்பிறந்தார்கள் என்ன ஆவது? உற்றார் உறவின் முறையார், ஊரார், உலகத்தார் என்ன ஆவது? இவர்கள் எல்லாரும் இருக்க, நேற்று வந்த பெண்டாட்டி வாழ்க்கைத் துணையாகி விடுவாளா? அவளுக்கு அவ்வளவு பெரிய பேரா? ஆம், அவளே வாழ்க்கைத் துணை. தாய் தந்தையரோ இறுதிவரை இருப்பதில்லை. இருக்கும்போதும் அவர்களது அன்பு பல பிள்ளைகளுக்கும் பங்கிடப்படுகிறது. உடன்பிறந்தார் களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அவரவர் கட்கும் தனிக் குடும்பம் உண்டாகிவிட்டால், அதன் பிறகு அண்ணனாவது, தம்பியாவது! அண்டை வீட்டுக்காரனே மேல்! உற்றார்-உறவின்முறையார், ஊரார்-உலகத்தாரோ, வாழ்ந்தாலும் பொறுக்கமாட்டார்கள் - தாழ்ந்தாலும் மதிக்க மாட்டார்கள். நண்பரோ, சொந்த வேலையாய்ப் போய்க் கொண்டிருக்கும்போது ஏறிட்டுப் பார்க்க மாட்டேன் என்கிறார் - சில சமயம் தெரு வாயிற்படியோடு நிற்க

வைத்துப் பேசியே வழியனுப்பி விடுகிறார். பிள்ளைகளுக்குள் பெண் பிள்ளைகளோ, அகப்பட்டவரையும் சுருட்டிக் கொண்டு அயலார் சொத்தாய்ப் போய்விடுகின்றனர். ஆண் பிள்ளைகளோ, திருமணம் செய்து வைத்துவிட்டால் அடியோடு மாறிவிடுகின்றனர். அவர்களுக்கு மனைவி என்ன–மாமனார் என்ன–மாமியார் என்ன –மைத்துனர்கள் என்ன–மைத்துனிகள் என்ன - இவர்களே நெஞ்சத்திரையில் நிழற்படம் போல ஓடிக்கொண்டிருக்கின்றனர். இப்படி ஒவ்வொன்றாகப் புடைத்துத் தூற்றிப் பார்த்தால், கடைசியாகத் தேறுவது மனைவி என்னும் ஒரு பொருள்தான். அவன் வாழ்வு அவள் வாழ்வு - அவன் தாழ்வு–அவள் தாழ்வு இன்ப துன்பம் இரண்டிலும் இறுதி வரையும் இணைந்து நிற்பவள் அவளே! எனவேதான், அவளை வாழ்க்கைத்துணை என்று வள்ளுவர் கூறுகிறார்.

**மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத்துணை''**

இங்கே வள்ளுவர் அளவு மீறிப் புனைந்துரைத்து விட்டார்; ஒருவேளை அவர் மனைவியார் அவ்வாறு நடந்திருக்கலாமோ, என்னவோ? சில பெண்டிரால், அவர்தம் கணவரது வாழ்க்கை பெரிதும் இடர்ப்படுகின்றதே — வாழ்க்கைக்கே இறுதி நேர்ந்து விடுகின்றதே! அவர்தமை வாழ்க்கைத்துணை எனல் வள்ளுவர்க்கு அடுக்குமா? என ஐயுறலாம் சிலர். வள்ளுவர் என்ன அவ்வளவு தெரியாதவரா? அதனால்தான், எல்லா மனைவியரும் வாழ்க்கைத் துணைகளாகிவிட முடியாது; மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காளே வாழ்க்கைத்

துணையாவாள் என்றார் வள்ளுவப் பெருந்தகையார். ''மனைத்தக்க மாண்பு'' என்பது என்ன? முறை தெரியாத பெண்ணொருத்தியை நோக்கி, குடித்தனம் செய்கின்ற பெண்ணா காரணமா தெரியவில்லையே என்று உலகியலில் பேசுவது வழக்கம். எனவே, குடும்பப் பெண் என்றால், அவளிடம் என்னென்னவோ நற்குண நற்செய்கைகளை மன்பதை (சமூகம்) எதிர்பார்க்கிறது, என்பது புலனாகும். 'நல்ல பெண்மணி' என்னும் தலைப்பில் இப்போது நாட்டில் ஒரு பாட்டுப் பாடுகின்றார்களே, அதன்படி ஒழுகினாலேயே கூட ஏறக்குறைய மனைத்தக்க மாண்புதான். அடுத்து, 'தற்கொண்டான் வளத்தக்காள்' என்றால் என்ன? கணவனும் மனைவியுமாக வெளியூரில் தனிக் குடும்பம் செய்கின்றனர் என வைத்துக் கொள்வோம். அங்கு மாமி இல்லை; மைத்துனி இல்லை; ஓரகத்தி இல்லை. ஊர் வம்புக்காரி ஒருத்தியுமே இல்லை. ஆயினும் அடிக்கடி இருவர்க்குள்ளும் இரும்பெரும் போராட்டம் நடக்கின்றது. அதற்குரிய காரணங்களுள் முதலிடம் பெறுவது, மனைவி விரும்பும் பொருள்கள் எல்லாம் வீட்டிற்கு வந்து சேராமை! அதனால் அவள் கணவனை மதிப்பதில்லை. பணிவிடை செய்வதில்லை. வேலைகளையும் செவ்வனே செய்து முடிப்பதில்லை. செலவாளிகளாக இருக்கின்ற அண்டை வீட்டு ஆறுமுகத்தையும் எதிர் வீட்டு ஏகாம்பரத்தையும் எடுத்து ஈடுகாட்டுகின்றாள். நீயும் ஓர் ஆண்மகனா என்று மானத்தை வாங்குகிறாள். குறைந்த வருவாயுடைய கணவன் என்ன செய்வான்? தன் எளிமையை வெளிக் காட்ட வெட்கிக் கடன் வாங்கியாவது தொலைக்கிறான். அதன் பிறகு, ஆகா! இத்தகைய கணவர் கிடைப்பாரா

என்ற புகழ்மாலை வீட்டில்! வாங்கிய கடனைக் கொடுக்க வழியற்றவன் என்ற இகழ்மாலை நாட்டில்! செலவானது வரவுக்கு மேற்படாமல் உட்பட்டிருக்குமானல் குறைந்த வருவாயினால் தாழ்வு ஒன்றும் இல்லை — என்னும் கருத்தில், "ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் கேடு இல்லை போகு ஆறு அகலாக் கடை" எனத் திருவள்ளுவரே தெரிவித்துள்ளார் மற்றோரிடத்தில். எனவே நூறு காசு ஈட்டி மேலும் பத்துக் காசு கடன் வாங்குபவனைக் காட்டிலும், ஐம்பது காசு ஈட்டி அதில் ஐந்து காசு மிச்சப் படுத்துபவனே மேலானவன் என்ற 'மந்திரத்தை' மனத்தில் இருத்தும் மங்கை நல்லாளே சிறந்த வாழ்க்கைத் துணை யாவாள். இது குறித்தே 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்றார் ஆசிரியர். ஆகவே மனைவி ஆடம்பரச் செலவுகளை அறவே அகற்ற வேண்டும். கணவன் அவ்வாறு செய்தாலும் அவனைத் திருத்த வேண்டும்.

இங்கே இன்னொன்றும் கவனிக்கவேண்டும். கருமித் தனமாய் இருக்கவேண்டுமென ஆசிரியர் சொல்லவில்லை. கணவனது வருவாய் வளப்பத்துக்குத்தக ஒழுகவேண்டும் என்றுதான் சொல்லியுள்ளார். எனவே, குறைந்த வருவாயானால் சிக்கனமாயிருக்க வேண்டும். நிறைந்த வருவாயானால் கூடிய வரை பிறருக்கு உதவியும் செய்யலாம். இங்கே வளத்தக்காள் என்பதற்கு வேறொரு பொருளும் சொல்லலாம்; அதாவது, கணவனது செல்வமாக இருக்கத் தக்கவள் — இவளே கணவனுக்குப் பெரிய செல்வ வளம் — என்ற அழகு உரைதான் அது!

பெண் வைத்திருப்பவர்களே! மாப்பிள்ளையின் சொந்த வருமானத்தைக் கருதிப் பெண் கொடுப்பீராக! முன்னோர் சொத்தில் பிழைக்கும் தலையில்லாத முண்டங்களுக்குப் பெண் கொடாதீர்கள் என்று எச்சரிப்பது போல் 'தற் கொண்டான் வளம்' எனும் தொடர் அமைந்திருக்கின்ற தல்லவா? பெண் பார்ப்பவர்களே! பணத்துக்காகவும் பளபளப்புக்காகவும் பெண் கட்டாதீர்கள்! பண்புக்காகப் பெண் கட்டுவீர்களாக என்று எச்சரிப்பது போல் 'மாண் புடையள்' எனுந் தொடர் அமைந்திருக்கின்றதல்லவா? என்ன அழகு? மனைவியிடம் குடும்பப் பண்புகள்-சிறப்புக் கள் இல்லையாயின், வேறு எது நிறைந்திருப்பினும் வாழ்க்கை சிறவாது.

மனைமாட்சி மனைவிக்கு இருக்கத்தானே வேண்டும். அதனால்தானே அவளுக்கு மனைவி என்னும் பெயரும் கொடுக்கப்பட்டது. மனைக்கு உரியவள் மனைவி. இல்லுக் குரியவள் - வீட்டுக்குரியவள் - இல்லாள். தமிழினம் மனைவிக்குக் கொடுத்திருக்கும் மதிப்புக்கு, மனைவி, இல்லாள் என்னும் சொற்களே சான்று பகருமே! மேலும், ஆடவர் தம் மனைவியரை 'எங்கள் வீட்டிலே' என்னுஞ் சொல்லால் குறிப்பிடுவது மரபு!

கணவனோ பட்டம் பல பெற்றவன். பதிவி மேல் பதவி வந்து மோதுகிறது. பணங்காசோ மிகுதி— இன்னும் எல்லாம் இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு குறை. அதுதான் மாட்சிமையுடைய மனைவி கிடைக் காத குறை. அது இல்லாமல் வேறு எது இருந்துதான் என்ன பயன்!

**''மனைமாட்சி இல்லாள்க ணில்லாயின் வாழ்க்கை**
**யெனைமாட்சித் தாயினு மில்''**

இங்கே வள்ளுவர்க்கு ஒன்றும் ஓடவில்லை—ஒன்றும் புரியவில்லை - ஒரே குழப்பம் - உணர்ச்சி வயப்பட்டு விட்டார். பிறமாட்சிகளினும் மேலானதாக மனைமாட்சியைச் சிறப்பிக்க வந்த ஆசிரியர், இந்த மாட்சி இருந்தாலும் போதாது - அந்த மாட்சி இருந்தாலும் போதாது என்று எவையேனும் சில மாட்சிகளையாயினும் குறிப்பிட்டிருக்க வேண்டுமல்லவா? எதைக் குறிப்பிட்டாலும் ஈடாகாதுபோல் தெரிகிறது. எனவே போங்களையா, அது எந்த மாட்சி யாயிருந்தாலும் முடியாது என்னுங் கருத்தில் 'எனை மாட்சித்தாயினும்' என்று சொல்லிவிட்டார். மனைமாட்சி இல்லாவிடின் வாழ்க்கை இனிக்காது - சிறக்காது என்று சொல்லியிருக்கலாமே எனின், வாழ்க்கை இருந்தல்லவா அதன் பிறகு இனிப்பது-சிறப்பது? வாழ்க்கையே இல்லை போங்களையா என்று சொல்பவர்போல், 'எனை மாட்சித் தாயினும் இல்' என்று ஒரேயடியாய் அடித்துவிட்டார். எனவே மனைக்கு வாய்த்துள்ள மங்கையர்களே! என்ன செய்ய இருக்கின்றீர்கள்? மனைவிக்கு மாண்பு இருந்தால் குடும்பத்தில் இல்லாதது என்ன? எல்லாம் இருக்கும். மனைவிக்கு மாண்பு இல்லையானால் குடும்பத்தில் உள்ளது என்ன? ஒன்றும் இருக்காது.

**''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை''**

இந்தக் குறள், குடும்ப விஞ்ஞானத்தின் எல்லைக் கோட்டைத் தொட்டுவிட்டது - இல்லை, எல்லைக்

கோட்டையும் தாண்டிவிட்டது. இதற்குமேல் இன்னும் எந்தெந்தச் சொற்களால் குடும்பக் கலையின் உயர் நிலையை உரைத்துக் காட்ட முடியும்?

வீட்டில் ஒன்றும் இல்லாவிடினும் மனைவிக்கு மாண்பு மட்டும் இருந்துவிட்டால், மனைக்கு வேண்டிய மற்ற எல்லாம் இருப்பதாகவே பொருளாம். வீட்டில் எல்லாமே இருந்தாலும் மனைவிக்கு மாண்பு இல்லையானால் ஒன்றும் இல்லாததாகவே பொருளாம். இதனை இல்லது என்? உள்ளது என்? என்னும் வினாக்களால் விளங்க வைத்துள்ளார் ஆசிரியர். இங்கே வள்ளுவர், திட்டவட்டமாகத் தெளிவான ஒரு முடிவுக்குத் துணிந்து வந்துவிட்டவராகக் காணப்படுகிறார். வேறு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும், குடும்பத்துக்கு உண்மையான மூலதனம் (Capital) மனைவியே-அதுவும் மாண்புமிக்க மனைவியே என்பது வள்ளுவர் கருத்து.

இனி இக்குறட் கருத்தை இன்னும் சிறிது விளங்க நோக்குவோம்:-வீட்டில் போதிய பொருள்கள் இல்லாவிடினும் போதிய திறமையும் ஊக்கமும் உடைய மனைவி, எல்லாம் இருக்கும் வீட்டை விடத் தன் குடும்பத்தைச் சீர் திகழச் செய்வாள்; திறமையும் ஆர்வமும் இல்லாதவளோ, எல்லாம் இருப்பினும், ஒன்றும் இல்லாத வீட்டைவிடத் தன் குடும்பத்தைப் பாழ்படுத்துவாள். முன்னவள் செட்டாகப் புதிய பொருள்களைச் சேகரிப்பாள் - நீண்ட நாள் வைத்துப் படைப்பாள். பின்னவளோ, புதிய பொருள்களைச் சேகரிப்பதுஞ் செய்யாமல், உள்ள பொருள்களையும் விரைவில் அழித்து ஒன்றும் இலையாக்குவாள். முன்னவள்

வீட்டிற்கு விருந்தினர் வந்தால், குறைந்த பொருளைக் கொண்டே பலவகைக் கறிகள் செய்து உணவு படைப்பாள். பின்னவளோ, எல்லாம் இருப்பினும் இரண்டொன்றும் சரியாய்ச் செய்யாது கடனைக் கழித்தனுப்புவாள். முன்னவள் தன் ஏழைக் கணவன் இன்று காய்கறி வாங்கக் காசு இல்லையே என்றால் நேற்று வாங்கி வந்தவற்றுள் மிச்சம் உளது என்பாள்; பின்னவளோ, தன் கணவன் இன்றைக்கு என்ன வேண்டும் என்றால், நேற்று வாங்கி வந்தவை போதவில்லை; இன்றைக்கு இன்னும் நிறைய வாங்கிவர வேண்டுமெனக் கட்டளையிடுவாள். மேலும், இருப்பதைக் கொண்டு கணவன் முதலியோரை இன்புறுத்தித் தானும் இன்புறுவாள் முன்னவள்; எல்லாம் இருப்பினும், ஒரு விழுங்கு வெந்நீருக்கும் வழியின்றித் திண்டாடித் தவிக்க விடுவாள் பின்னவள். வேறு துறைகளிலும் இவ்விதமே, இவ்விதமே! ஆவது முன்னவளால்; அழிவது பின்னவளால். இதனாலேயே, முன்னவள் வீடு எல்லாம் உடையதாகவும், பின்னவள் வீடு ஒன்றும் இல்லாததாகவும் வள்ளுவரால் உரைக்கப்பட்டன. இக்குறட் கருத்தே, 'இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றில்லை' என்னும் ஔவையின் மொழிக்குச் செவ்வியளிக்கின்றது. இங்கே திருவள்ளுவரின் மனைவியார், இளையான்குடி மாறரின் மனைவியார், போன்ற நற்பெண்டிரின் வரலாறுகள் நமக்குப் போதிய சான்று பகரும். மாண்பு அற்ற பத்து மாட்டுக்காரி, மாண்பு பெற்ற ஒரே ஒரு மாட்டுக்காரியிடம் பால் வாங்கிய கதை பலரும் அறிந்ததே!

"கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை" என்றார் ஒரு பெரியார். கற்பு எனப்படுவது, 'கட்டிய கணவன் கல்லாயிருந்தாலும் வேறு எவரையுங் கருத்தாலும் கருதாத தூய்மை' என்கின்றனர் ஒருசிலர். 'பிறந்த வீட்டில் பெற்றோரும், புகுந்த வீட்டில் கணவன் முதலியோரும் கற்பித்தபடி ஒழுகுதலே கற்பு' என்கின்றனர் ஒருசிலர்.

'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்' என்னும் அழகு பொருந்தக் கற்பு என்னும் சொல்லுக்கு நாம் பொருள் காண்போமாயின், திருக்குறளுள் வாழ்க்கைத் துணை நலம் என்னும் இப்பகுதியுள், பெண்கட்கு இருக்க வேண்டுவனவாகக் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தையும் கற்று, அவற்றைச் செயல் முறையில் செய்து காட்டுவதே சிறந்த கற்பாகும் என்று ஒருவாறு துணியலாம். இதனுள் அடங்காததாக ஏனையோரால் இயம்பப்படும் கற்பு நிலைதான் யாதுளது?

"பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு, பெண்டு வாய்க்கும் புண்ணியவானுக்கு" என்னும் மொழிப்படி, இருப்பதைக் கொண்டு இல்லாததையும் ஈட்டி, கணவன் களிக்கக் கற்புக் கடன் பூண்டு திகழும் ஒரு மங்கையை மனைவியாகப் பெற்ற மணவாளனுக்கு, அவளினும் மாநிலத்தில் பெறத்தக்க மாண் பொருள் வேறு யாது? ஒன்றும் இல்லை.

> **"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
> **திண்மை உண்டாகப் பெறின்"**

**கணவனையே கடவுளாகக் கருதும் கலங்காத கற்புடைய பெண்கள், இயற்கைக்குத் தாம் அடிமை**

யாகாமல், இயற்கையைத் தம் அடிமையாக்கி, எடுத்த காரியத்தை இனிதே முடிப்பர். அதாவது அவர்கள் 'பெய்' என்றால் மழையும் பெய்யுமாம்.

**''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை''**

கற்புடைய பெண்ணின் வாய்ச் சொல்லுக்கும் மழைக்கும் மின்சாரத் தொடர்பு இருக்கின்றதா என்ன?

இயற்கையின் படிப் பெய்தலும், பெய்யாமையும் செய்கின்ற மழை, ஒரு பெண் சொல்லிவிட்டால் பெய்யுமா? மழை பெய்யாத இடங்களில் பெய்யும் படிப் பெண்கள் ஏவலாமே! ஒருவேளை அங்கே கணவனை மட்டுமே தொழும் கற்புறு மடந்தையர் இல்லைபோலும்! அல்லது, கற்புறு மடந்தையர் ஒரு சிலராவது இருப்பதனால் தான், கொஞ்சம் மழையாவது பெய்து நெஞ்சை நனைக் கின்றதா? அல்லது, வஞ்சகர் நிறைந்த இவ்விடங்கள் வாடட்டும் என்று சிலவிடங்களில் உள்ள கற்புறு மங்கையர் பெய்ய வேண்டாம் என்று கட்டளையிட்டுவிட்டார்களா? ஒருவேளை திருவள்ளுவர் வேண்டுமென்றே புனைந் துரைத்துள்ளாரா? அல்லது விஞ்ஞானம் தெரியாதவரா? என்றெல்லாம் பற்பல எண்ணங்கள் பரந்துபட்ட மக்க ளிடத்துத் தோன்றுவது இயற்கை!

விஞ்ஞானிகள் விரும்பினால் செயற்கை முறைகள் சிலவற்றால் பெய்விக்கலாமே தவிர, ஒரு பெண் பெய் என்று சொல்லிய அளவில் மழை பெய்யவே பெய்யாது. இஃது உறுதி! உறுதி! ஆயின் திருவள்ளுவர் இங்ஙனம்

தெரிவித்திருப்பதன் நோக்கம் என்னவென்பதை ஆராய வேண்டும்.

ஒழுங்காகக் குடும்பம் நடத்தும் பெண், முன்னிய காரியத்தை முட்டின்றி முடிப்பாள் என்பதே, இக்குறளில் குறிப்பாகக் கொள்ள வேண்டிய கருத்தாகும். இங்குத் திருவள்ளுவர் எடுத்துக்கொண்ட பொருளைச் சிறப்பிக்க வேண்டும் என்று கருதிக் கற்பனையையே கையாண் டுள்ளார். இது ஒரு வகையான கவிமரபு. இன்னோரன்ன கவிமரபுகளைக் குற்றம் உடையதாகத் தள்ள முடியாது.

வள்ளுவர் ஓரிடத்தில், துன்பத்திற்குக் கலங்காதவர் துன்பத்திற்கே துன்பம் கொடுப்பர் என்னும் கருத்திலும், துன்பம் துன்பப்படும் என்னும் கருத்திலும்,

**"இடும்பைக்கு இடும்பை படுப்பர்"**
**"இடுக்கண் இடுக்கண் படும்"**

என்று கூறியுள்ளார். உண்மையில் துன்பம் ஓர் உயிருள்ள பொருளா? அத்துன்பத்திற்கு ஒருவர் துன்பம் கொடுப்பது என்பதும், அத்துன்பம் துன்பப்படும் என்பதும் முயற் கொம்பும், குதிரைக் கொம்பும் அல்லவா? இதன் உண்மைக் கருத்து என்ன? துன்பத்திற்காக மனம்சோராமல் இருந்தால் அத்துன்பம் துன்பமாகத் தோன்றி வருத்தாது நீங்கும் என்பதே.

மற்றோரிடத்தில், பிறந்த குடிக்குப் பெருமை தருவேன் என்று முயலும் ஒருவனுக்குக் கூடத் தெய்வமும் தன் இடுப்பு உடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு வந்து உதவி செய்யும் என்னும் கருத்தில், "குடி செய்வல் என்னும்

ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்'' என்றியம்பியுள்ளார் வள்ளுவர். உண்மையில் தெய்வம் இடுப்பு உடையை இறுக்கிக் கட்டாவிட்டால் உடை அவிழ்ந்து விழுந்துவிடுமா? எனவே இன்னோரன்னவை யெல்லாம், எடுத்துக் கொண்ட கருத்தை வற்புறுத்துவதற் காகவும், கற்போர்க்குச் சுவை தருவதற்காகவும் கவிகள் கையாளும் கற்பனை மரபு என்பது காணக் கிடக்கும். அன்றுதொட்டு இன்று மட்டும் எந்தக் கவிதான் கற்பனையைக் கையாளவில்லை?

மேலும் இக்குறளுக்கு, கணவனை வணங்கும் கற்புடைய பெண், பெய்யென்று சொன்னால் பெய்யக் கூடிய ஒரு மழை இருந்தால் எவ்வளவு நன்மை பயக்குமோ அவ்வளவு நன்மையைக் குடும்பத்திற்குச் செய்வாள் என ஒரு பொருள் கூறுதலும் உண்டு. இங்ஙனம் கூறின், இல்லாத பொருளை எடுத்துக் காட்டும் ''இல் பொருள் உவமையணி'' உடையதாக இக்குறளைக் கொள்ள வேண்டும்.

பெண், தன்னையும், கணவனையும், குடும்பப் பெருமை யினையும் காப்பாற்றிச் சோராதிருக்க வேண்டும்.

தூங்குபவனை எழுப்ப முடியும்; விழித்திருப்பவனை எழுப்ப முடியாது; அதுபோல, தன் ஒழுக்கத்தில் தனக்கே கவலையுள்ள பெண்ணையே பிறரால் காக்க முடியும். அல்லாத பெண்ணை அறையில் இட்டுப் பூட்டினாலும் காக்க முடியாது.

ஆண் பெண் இருபாலார்க்கும் அறிவுரை வழங்குவதே இக்கருத்து. பெண்களைப் பூட்டி வைக்கும் பேதையர் களே! அவர்கட்கு விடுதலை நல்குங்கள்! எங்கிருப்பினும், எங்குச் செல்லினும் நல்லோர் நல்லோரே; அல்லோர் அல்லோரே! என்று ஆண்கட்கும், அரிவைமார்களே! ஆண் களால் உங்களை அடக்க முடியாது; நீவிரே நும்மை நேரிதின் நடத்திக் கொள்ள வேண்டும் என்று பெண்கட்கும் தெளிவுறுத்துகின்றார் தெய்வப் புலவர்.

கணவனோடு ஒன்றி வாழும் கற்புடையாளைத் தேவரும் போற்றுவர். எடுத்துக்காட்டு வேண்டுமானால் கண்ணகி சாலும். கணவனும் மனைவியும் ஒருவரை யொருவர் புரிந்துகொண்டு, இரண்டறக் கலந்து இயைந்து வாழ்ந்தால், தேவர் என்றென்ன – யாவரும் போற்றுவர்.

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

''சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை''

''பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு''

புகழுக்குரிய மனைவி கிடைக்கப் பெறாதவன் பிறர்முன் சிங்கம் போல் தலை நிமிர்ந்து நடக்க முடியாது; எல்லோ ராலும் இகழவும் படுவான். 'நம்மிடம் ஐயா காட்டும் ஆர்ப்பாட்டம் எல்லாம், அடுப்பங்கரையில் அம்மாவிடம் சென்றால் அடங்கிவிடும்' என்று பெண்டாட்டி யடியவர்

களை நோக்கி உலகினர் எள்ளி நகையாடுவர். ஆதலின் பெண் கணவனுக்குப் பெருமையளிக்க வேண்டும்.

வீட்டிற்கு விளக்கம் பெண்கள்; பெண்கட்கு விளக்கம் நல்ல பிள்ளைகள். இங்கு, ''மனைக்கு விளக்கம் மடவார், மடவார் தமக்குத் தகைசால் புதல்வர்,, என்னும் நான்மணிக் கடிகைச்செய்யுள் ஒப்பு நோக்குதற்குரியது.

**''புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை''**

**''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு''**

# 3. மக்கட் பேறு

உலகில் மனிதர் பெறவேண்டிய பேறுகளுக்குள் சிறந்த பேறு பிள்ளைப் பேறே யாகும். சிறந்த பேறு வேறு இருப்ப தாக இதுவரையும் அறிந்ததும் இல்லை; இனிமேலும் என்றும் அறியப் போவதும் இல்லை.

> ''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற''

என்ன! இல்லற இயலை விளக்க வந்த வள்ளுவர், கணவனுக்கும் மனைவிக்கும் மாட்சிமை வேண்டும் என்றார்; அன்பு வேண்டும் என்றார்; விருந்தோம்புதல் வேண்டும் என்றார்; இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல் முதலியன வும் வேண்டும் என்று இயம்பியுள்ளார்; இவற்றைப் போலவே கணவனும் மனைவியும் பிள்ளைகளைப் பெறுவதிலும் கருத் தூன்ற வேண்டும் என்று கூறியுள்ளாரோ! இதனைக் கூடவா மக்களுக்குச் சொல்லித் தர வேண்டும்? அதிலும் பொதுமறையாகிய திருக்குறளிலா புகல வேண்டும்? அல்லது இக்காலத்துப் போர்களினால் மனிதப் பஞ்சம் ஏற்பட்டதனால் மிகுதியாகப் பிள்ளை பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கப் படும் என்று விளம்பரம் செய்து தூண்டும் சில நாடு களுக்கு ஏற்பட்ட நிலை, நம்நாட்டிற்கும் வள்ளுவர் காலத்தில் ஏற்பட்டதா? என்றெல்லாம் வேடிக்கையான மனக் கிளர்ச்சிகள் விளையலாம் சிலர்க்கு.

பூணூல் பூண்டவர்கள் (இரு பிறப்பாளர்) தென் புலத்தார் கடனைக் கழிப்பதற்காகப் பிள்ளை பெற்றே தீரவேண்டும் என்று பதமாகப் பகர்ந்துள்ளார் பரி மேலழகனார். அப்படியானால் மற்றவர்பிள்ளை பெற வேண்டியதில்லை போலும்! நாம் தென்புலத்தார் கடனைக் கழிக்கவேண்டும்; மோட்சத்திற்குச் செல்லவேண்டும் என்ற கருத்தைத்தான் காதலர் கண்கள் ஒன்றுக் கொன்று அறிவித்துக் கொள்கின்றன போலும்! ஆண் - பெண்களின் கூட்டுறவின்போது அந்நோக்கந்தான் முதலிடம் பெறுகின்றதுபோலும்! விசுவாமித்திர முனிவர் முதல் வீரப்பன் வரையும் — அகலிகை முதல் ஆண்டிச்சி வரையும் சிற்றின்பத்தில் ஈடுபட்டதற்குரிய காரணம் என்ன வென்பது எவர்க்கும் தெரியாது போலும்!

இன்ப உலகின் இயல்புகளை எடுத்தோதி, அவற்றுள் சீர்திருத்தம் காண்பிப்பதே, பண்டைய செந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பியல்பாகும். இத்தகையதே திருக்குறளின் மக்கட் பேறும். வாழ்க்கையில் எவ்வளவு இன்பம் இருப்பினும் குழந்தையில்லாவிட்டால் என்ன பயன்? தமக்குப்பின் குடும்பத்தின் நிலை என்ன? கொழு கொம் பில்லாத கொடிபோல் குன்றுமே வளர்ச்சி! உலகில் எப் பொருள் தோன்றினாலும் பிள்ளைப் பேறு இல்லாவிடின் உலகந்தான் நடைபெறுவது யாங்ஙனம்?

எனவே துறவு, கைம்மை என்னும் திரை மறைவில் ஒளிந்து வாழ்ந்து கருவைச் சிதைப்போர் சிலரும், மணந்து கொண்டும் பிள்ளை பெறாதவர் சிலரும், பிள்ளை பெற்றும் தம்முடைய ஒழுக்கக் குறைவாலும், வளர்த்து முன்னுக்குக்

கொண்டுவரும் திறமை இல்லாததாலும் பிள்ளைகளைப் பயனற்றவராக்கித் தாமும் பயன்பெறாது போகின்ற சிலரும் உலகில் உள்ளனர் ஆதலால், அவர்களை நோக்கி, மனிதர்களே! அறிவு நிரம்பிய நன்மக்களைப் பெற்று, பயன் பெற்று உலக வளர்ச்சிக்கும் உதவுதலே சால அழகிதாம் என்று கூறியுள்ளார் திருவள்ளுவனார். மேலும், நிலநீர், வீடுவாசல், நகைநட்டு முதலியவற்றைப் பெறுவதைப் பேறு என்னாமல், பிள்ளை பெறுவதையே 'பேறு' (பெறுதல்) என்னும் சொல்லால் குறிக்கின்றனர் தமிழ் மக்களும். எடுத்துக்காட்டு வேண்டுமானால், 'என் மகள் கருவுற்றிருக் கின்றாள், பிள்ளைப்பேறு பார்ப்பதற்குப் பணம் வேண்டும்' என்றும், 'தாய் மகளுக்குப் பிள்ளைப்பேறு பார்ப்பதற்காக வந்திருக்கிறாள்' என்றும் வழங்கும் உலகவழக்குகளே போதும்! இவ்வுலக வழக்குகளும் இக் குறளும் ஒன்றுக் கொன்று உறுதுணையன்றோ?

அறிவற்ற, பயனற்ற பிள்ளைகளைப் பெறுவதைவிட பெறாமலே இருப்பதும், மரக்கட்டையைப் பெறுவதும், பொம்மைகளை வைத்துக்கொண்டு கொஞ்சுவதும் நல்லது; ஏன்? பெறுந் துன்பமும், பொருட் செலவும் குறையும் அன்றோ? இக்கருத்தையடக்கி 'அறிவறிந்த மக்கள்' என்று பாடியுள்ள நயம் நன்று நன்று!

பிள்ளைகள் கெட்டவராய் இருந்தால், பெற்றோர் களுக்கும் கெட்ட பெயரும் கெடுதியும் நேரிடுகின்றன. பிள்ளைகள் நல்லவராய் இருந்தால், பெற்றோர்களுக்கும் நல்ல பெயரும் நன்மைகளும் ஏற்படுகின்றன. நன்மை ஒரு வேளை மட்டுமா? ஒரு நாளைக்கு மட்டுமா? இல்லை;

எப்பொழுதும் எந்நாளும் நன்மையே! என்பதை வற்புறுத்துவதற்காகவே 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' என்று திருவாய் மலர்ந்தருளினார் திருவள்ளுவனார்.

**"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்."**

பெற்றோர்களுடைய செல்வம் பிள்ளைகளே. பெற்றோர் தொழில் செய்து ஈட்டும் செல்வம் பிள்ளைகளுடையதாம். பெற்றோர்கள் தாம் தொழில் செய்து ஈட்டும் செல்வத்தைத் தம் பிள்ளைகளுடையதாகவும், தம் பிள்ளைகளைத் தம்முடைய செல்வமாகவும் கருதுவது என்றும் இயற்கைதானே இவ்உலகில்!

**"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தந்தம் வினையான் வரும்"**

ஒருவர் உண்ணும்போது அவ்வுணவில் பிறர் வந்து கையை இட்டுப் பிசைந்து சிதைப்பாரேயானால் உண்ணுபவர்க்குப் பிடிக்காது. ஆனால் அவருடைய சிறு குழந்தை உணவில் கையை இட்டுப் பிசைந்து வாரி இறைக்குமேயானால் அவ்வுணவு சுவையில் மிகுந்த அமிழ்தத்தைக் காட்டிலும் அவர்க்கு இனிக்கும் என்பது உலகத்தில் உள்ள உண்மைதானே!

பல்வகைச் செல்வங்களைப் படைத்துப் பலரோடு உண்ணக்கூடிய பெருஞ் செல்வராயினும் சரியே; குறுகுறுவெனத் தளர் நடை நடந்தும், சிறிய கையை நீட்டி உணவில் இட்டும், தொட்டும், கௌவியும், துழாவியும், உடம்பின் மேலே வாரி இறைத்தும் மனத்தை மயக்குகின்ற

மக்களைப் பெறாதோர்க்கு வாழ்நாளில் பயன் ஒன்றும் இல்லை என்னும் கருத்துடைய செய்யுள் ஒன்று, பழந் தமிழ்ச் சங்க நூலாகிய புறநானூற்றில் உள்ளது.

அது வருமாறு:-

**"படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டியும்
இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை வில்லை தாம் வாழுநாளே"**

என்பது செய்யுள். ஈண்டுரைத்த குறளின் விளக்கமே இப்புறச் செய்யுள் என்றால் பொருந்தும்.

மற்றும் சில சமயங்களில் பெற்றோர் பெரிய துன்பக் கடலுள் மூழ்கியிருக்கும்போது, பிள்ளைகள் வந்து உடம்பைத் தொட்டும், இனிய மழலைகளைப் பேசியும் மகிழ்விக்க, திரும்பவும் பெற்றோர் இன்பக் கடலுள் மூழ்கி இறுமாப்பதைக் காண்கின்றோம்.

ஆடம்பர உடையில் அவாமிக்க இளைஞன் ஒருவனை எடுத்துக் கொள்வோம். அவன் தன் இளமையில் மடிப்புக் கலங்காத சட்டையை அணிந்து கொள்கின்றான். எவரேனும் அச் சட்டையைத் தொட்டால், தொடாதே, மடிப்புக் கலங்கிவிடும் என்று சினக்கிறான். தன் தம்பியோ, தங்கையோ மேலே வந்து விழுந்தால், நான் கலங்காமல் வெண்மையான உடை உடுத்தியிருக்கின்றேன்; ஏன் மேலே விழுந்து அழுக்காக்கினீர்கள்? என்று கூறி

அடிக்கிறான். நண்பர் எவரேனும் தோளின்மேல் கையை வைப்பார்களேயானால் பதமாகக் கையை எடுத்துக் கீழே விட்டு, சட்டை கலங்காமல் பார்த்துக் கொள்கின்றான். அவ்விளைஞனுக்கு மணப்பருவம் நெருங்கியது. மணம் நிகழ்ந்தது. குழந்தை பிறந்தது. தெருவிலே புழுதியிலே விளையாடிக் கொண்டிருக்கின்றது குழந்தை. தந்தை ஆடம்பரமாக உடுத்துக் கொண்டு அயலூருக்குப் புறப்பட லானான்; வீட்டை விட்டுத் தெருவிலே காலை வைத்தான். பார்த்தது குழந்தை. புழுதி படிந்த உடம்போடு, 'அப்பா நானும் வருகிறேன்' என்று கூறிக் கட்டிக் கொண்டது. விலக்கி உள்ளே அனுப்ப முயற்சி செய்தான், முடிய வில்லை. தேம்பியது குழந்தையின் வாய். தூக்கி மார்போ டணைத்துக் கொண்டான் தந்தை. முத்தமிட்டுக் காசு தந்து உள்ளே அனுப்பினான். குழந்தையின் புழுதி படிந்த உடம்பைத் தழுவியதில் தந்தைக்கோர் தனியின்பம்! 'நானும் வருகின்றேன்' என்றதைக் கேட்டதில் ஒரு பேரின்பம். தெருவில் தேரின்மேல் ஏறிப் புறப்பட்ட தந்தையைக் குழந்தை தடுக்க, தந்தை கீழே இறங்கி மார்போடணைத்துக் கொண்டு மகிழ்ந்ததாக ஒரு நிகழ்ச்சி பண்டைய நூலாகிய அகநானூற்றிலும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அன்றியும், தங்களுக்குப் பிறந்த குழந்தையின் மழலைப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தவர்கள், புல்லாங்குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளின் இசை இனிமை உடைத்து என்று இயம்பமாட்டார்கள். தங்கள் குழந்தையின் கொஞ்சலைக் கேளாதவர்களே பிற இசைகளைப்

புகழ்வார்கள். இங்ஙனம் கூறுவதன் கருத்து, குழந்தையின் கொஞ்சல் மிகமிக இனிது என்பதை வற்புறுத்துவதே! அம்மம்மா! குழந்தையின்பம் எத்துணைப் பேரின்பம்!

**"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்**
**சிறுகை யளாவிய கூழ்"**

**"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"**

**'குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்"**

ஒரு தந்தை தன் மக்களுக்குத் தேடித்தர வேண்டிய பொருள், வீடு வாசலா? நிலம் நீரா? காசு பணமா? அழகிய மணப் பெண்ணா? இல்லையில்லை! இவற்றினும் மேலான கல்வியறிவே! ஏனையவற்றை அறவே அளிக்க வேண்டாம் என்றும் சொல்ல வரவில்லை. அவற்றை மட்டும் அளித்துக் கல்வியை அளிக்காமல் விடுதல் கூடாது என்பது இங்குக் கருத்து. ஏன்? ஏனையவை தந்தைக்குப் பின் அழியினும் அழியும். ஆனால் கல்வி அழியாத விழுமிய பொருளன்றோ? இது குறித்தே

**"எச்சம்என ஒருவன் மக்கட்குச் செய்வன**
**விச்சை மற்றல்ல பிற"**

என நாலடியாரும் நவில்கின்றது. எனவே, தந்தை மகனுக்குச் செய்யும் உதவியாவது, அவையத்தின் கண்ணே எல்லோரினும் முந்தியிருக்குமாறு கல்வி உண்டாக்குதலாம்.

**"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்"**

பிள்ளைகள் அறிவுடையராய் இருந்தால் மகிழ்ச்சி பெற்றோருக்கு மட்டுமா? பெற்றோரைவிட, உலகத்துள்ள உயர்ந்த மனிதர்கள் மிகுதியாக மகிழ்வார்கள். எப்படி? பெற்றோர் தம் வாழ்நாள் வரையும், வீட்டில் மட்டும் மகிழ்வார்கள். உலகினரோ, பிள்ளைகள் இருக்கும் வரையும் இறந்த பின்னும் பல துறைகளில் மகிழ்வார்கள். பள்ளிக் கூடத்தில் ஆசிரியர் மகிழ்வார். தொழில் செய்யும் இடத்தில் தலைவர் மகிழ்வார். அரசாங்கம் மகிழும். பயன் பெறும் ஏழைகள் மகிழ்வர். இன்னும் எல்லோர்க்கும் எப்போதும் மகிழ்ச்சியே யன்றோ? திருவள்ளுவர் முதலியோரின் அறிவு பற்றி அவர்களின் பெற்றோர்களைவிட உலகம் அன்றும் இன்றும் என்றும் — மகிழ்ந்ததே, மகிழ்கின்றதே, மகிழுமே!

> **"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
> **மன்னுயிர்க் கெல்லாம் இனிது"**

இரட்டுற மொழிதல் (இரண்டு பொருள் படச் சொல்லுதல்) என்னும் இலக்கண விதிப்படி, இக்குறளுக்கு இன்னொரு பொருளும் இயம்பலாம். அஃதாவது, "பெற்றோராகிய தங்களின் அறிவைக் காட்டிலும் பிள்ளைகள் மிக்க அறிவுடையராயிருப்பது உலகோர்க்கு உவகை யளிக்கும்" என்பதாம். புலியின் வயிற்றில் பூனை பிறத்தலாகாது. ஆனால், சிப்பியின் வயிற்றில் இப்பி (முத்து) பிறப்பது குறித்து உலகம் உவக்கின்றதன்றோ?

வேறொரு பொருளும் விளம்பலாம் இக்குறட்கு! அஃதாவது, "உலகிலுள்ள எல்லாப் பெற்றோர்களுக்கும் தங்கள் தங்களைக் காட்டிலும் தங்கள் தங்கள் பிள்ளைகள்

மிக்க அறிவுடையவராயிருப்பது மனத்திற்கு மகிழ்ச்சி யளிக்கும்'' என்பதாம். பெற்றோரினும் பிள்ளைகள் அறிவிற் பெரியவராய் விளங்குவதால் பெற்றோர்க்குப் புகழ்ச்சி பெருகுந்தானே!

பத்துத் திங்கள் வருந்திச் சுமந்து நொந்து பெற்ற தாயின் பொறையுயிர்ப்புத் துன்பத்தைப் (பிரசவ வேதனையைப்) போக்கும் மருந்து குழந்தையின் குரலன்றோ? பிறந்த உடனே குழந்தை 'குவா, குவா' என்று குழறுவதைக் கேட்டதும், துன்பத்தில் தோய்ந்துள்ள தாய்க்குக் கட்டுக் கடங்காத களிப்பு! மட்டற்ற மகிழ்ச்சி! அம்மகிழ்ச்சியைக் காட்டிலும் தன் பிள்ளை கல்வியறிவில் தேர்ந்தவன் எனப் பிறர் புகழ்வதைக் கேட்டபோது பெரிதும் மகிழ்வாள் தாய்.

**''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்''**

பிள்ளைகளின் திறமையை அறியும் அறிவு பெண் கட்கு இல்லையாதலின், பிறர் கூறக்கேட்டே அறிய வேண்டும் என்னும் கருத்துப்படப் பொருள் வரைந்துளார் பரிமேலழகர். தாமே அறியுந்திறன் பெண்டிர்க்கு இருப் பினும், இல்லாவிடினும், 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்றபடி தம் சிறப்பில்லாத பிள்ளைகளையும் சிறப்புடையவர்களாகக் கருதுவது பெரும்பாலும் பெற் றோர்க்கு இயல்பாகலின், பிள்ளையின் புகழைப் பிறர் வாயால் கேட்டு மகிழ்வதே பெரு மகிழ்வாகும் என்னும் கருத்துப்படப் பாடியுள்ளார் வள்ளுவர் என்பதைப் பரிமேலழகர் அறிந்திலர் போலும்!

பெற்று வளர்த்துப் பேணி மகிழ்ந்து கல்வியறிவும் தந்து ஆளாக்கிவிட்ட பெற்றோர்க்குப் பிள்ளை செய்யும் உதவி என்ன? இவனைப் பெறுவதற்கு இவன் பெற்றோர் என்ன தவம் செய்தார்களோ என்று பிறர் தன் கல்வியறிவு, ஒழுக்கம் முதலியன பற்றித் தன் பெற்றோரைப் புகழும் வண்ணம் ஒவ்வொரு பிள்ளையும் நடந்து கொள்ள வேண்டும்.

**"மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்லெனும் சொல்"**

இப்பகுதியுள் தந்தை மகளுக்குச் செய்வதென்றோ, தாய் மகனுக்குச் செய்வதென்றோ, மகள் தந்தைக்குச் செய்வதென்றோ, மகன் தாய்க்குச் செய்வதென்றோ குறிப் பிடாமல், தந்தைக்கும் மகனுக்குமே தொடர்பு காட்டி யிருத்தலின், அறிவுடையவர்கள் ஆண்பிள்ளைகள் மட்டுமே என்று கொள்ளலாகாது. அமிழ்தம் உண்டவன் வாழ்வான் என்றால், அமிழ்தம் உண்டவள் வாழ்வாள், உண்டவர் வாழ்வார், உண்டது வாழும், உண்டன வாழும், என மற்றைய பால்களுக்கும் கொள்ளலாம் என்பதை 'ஒரு மொழி ஒழிதன் இனம் கொளற்கு உரித்தே' என்னும் நன்னூல் விதி உணர்த்துகின்றதன்றோ? அவ்விதிப்படியே ஈண்டும் மகன் என்றபோதெல்லாம் மகள் என்றும் கொள்ளலாமே!

# 4. அன்புடைமை

ஆட்டைப் பார்ப்பதைப் போல—மாட்டைப் பார்ப்பதைப் போல, ஒருவர் மற்றொருவர்மேல் கொண்டுள்ள அன்பை, நாம் தனியாகப் பிரித்து எடுத்து வைத்துப் பார்க்க முடியாது. ஒருவர் நோய் முதலியவற்றால் துன்புறும்போது, அவர்மேல் அன்பு கொண்டுள்ள மற்றொருவர் கண்ணீர் விடுவார். அக்கண்ணீரைக்கொண்டு, அன்பு உண்டென்று கண்டு தெளியலாம். எனவே, அன்பின் அறிகுறியாகிய கண்ணீரை, வரமுடியாமல் அடைத்து மறைக்கும் ஆற்ற லுடைய தாழ்ப்பாள் எதுவும் இல்லை எனலாம். இதற் கேற்ற சிறு கதையொன்றும் வழங்குவதுண்டு.

நள்ளிரவு; மழை 'சோ' வெனப் பெய்கிறது. அரண்மனை யொன்றில் தகப்பனும் மகனுமாகிய இருவர் திருடச் சென்றார்கள். காவலரால் தந்தையின் தலை துண்டிக்கப்பட்டது. தலையை மட்டும் தூக்கிக்கொண்டு தன் வீட்டிற்கு ஓடித் தோட்டத்தில் மண்ணில் மறைத்து விட்டான் மகன். காரணம், தலையைக் கொண்டு தந்தை யினையும் தன்னையும் காவலர் கண்டுபிடித்து விடுவார்கள் என்பதாகத் தானே இருக்கவேண்டும்!

முண்டத்தைப் பெற்ற முண்டங்களாகிய அரண்மனைக் காவலரால் திருடர்களைத் தெரிந்து கொள்ள முடிய வில்லை. அரசன் அமைச்சரொடு சூழ்ந்தான். "ஊர்

முழுவதும் தெருக்கள் தோறும் முண்டத்தைப் புரிகட்டி இழுத்துக் கொண்டு போக வேண்டும். எல்லா வீட்டுப் பெண்களும் தவறாமல் தெருவில் வந்து முண்டத்தைப் பார்க்கவேண்டும். அழுகையை அடக்கமுடியாமல் எப் பெண் அழுகிறாளோ, அவளுடைய உடைமைப் பொருளே முண்டம் எனக் கண்டுபிடித்துவிடலாம்'' என்பது அமைச்சர் களின் அறிவிப்பு. முண்டத்திற்கு உரிமை பூண்ட மனித குலப்பெண், முண்டத்தைப் பார்த்தும் அழாமல் இருக்க முடியாதல்லவா?

இறந்து போன பெரிய திருடனின் மனைவி, சிறிய திருடனாகிய மகனிடத்தில் செப்பினாள், என்னால் அழாமல் இருக்கமுடியாதென்று. ''அழாதே அம்மா! அழுதால் என் தலைக்கும் கேடு'' என்று அறிவுறுத்தினான் மகன். தாய் ஒத்துக் கொள்ளவில்லை.

முண்டம் திருடர் வீட்டின் எதிரில் வந்தது. தெருவில் உள்ள முருங்கை மரத்தின்மேல் ஏறிக்கீரை இணுக்கிக் கொண்டிருந்த மகன் (சிறிய திருடன்) தவறிக் கீழே விழுந்து விட்டான். ''ஐயோ கை ஒடிந்து விட்டதே'' என்று கத்தி அழுதான். ''ஐயோ மவனே'' என்று தாயும் ஒப்பாரி வைத்தாள், முண்டத்தைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே. முண்டம் தெரு வழியே சென்று விட்டது. தாயும் மகனும் வீட்டிற்குள் நுழைந்தார்கள். துன்பத்திலோர் இன்பம்! எப்படி? அரசனின் ஆட்களை ஏமாற்றி அழுது விட்டோமே என்று! அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லையன்றோ! ஆனால், இவர்களின் செயலைக் கேள்விப்பட்ட அரண்மனை முதலமைச்சர் தீர ஆராய்ந்து

இவர்களைக் கண்டு பிடித்துவிட்டார். எப்படி? இவர்களின் புன் கண்ணீர் பூசல் தந்து விட்டது அமைச்சரின் அறிவிற்கு! ஆகா, எவ்வளவு அழகிய குறள்!

**''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்''**

பிறரிடத்து அன்பிலாதவன் எச்சில் கையால் காக்கை ஓட்ட மாட்டான் - ஏன் ஈரக் கையைக்கூட உதற மாட்டான்; காரணம் அவ்வீரத்தின் உதவியால் மற்றோர் உயிர் குளிர்ச்சி பெறுவதைப் பொறுக்க முடியாமையே! இவனா ஏனைய பொருளைப் பிறர்க்கு உதவுவான்? ஆனால், பிறரிடத்து அன்புள்ளவனோ எல்லாப் பொருளை யும், தன் உடம்பையும்-ஏன், தன் உடம்பிற்குள் இருக்கும் எலும்பையும் கூட பிறர் விரும்பினால் உதவுவான்.

பாரி முல்லைக் கொடி படர்வதற்காக ஒரு தேரை விட்டுவிடவில்லையா? பேகன் மயிலுக்குப் போர்வை போர்த்த வில்லையா? சிபிச் சோழன் புறாவிற்காகச் சதையை அரிந்து கொடுக்கவில்லையா? குமணமன்னன் தமிழ்ப் புலவர்க்காகத் தலையையே கொடுக்க உடன்பட வில்லையா? இவையெல்லாம், பிற உயிர்களின் மேற்சென்ற அன்பு வெள்ளத்தின் அறிகுறியன்றோ?

**''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு''**

மாணவர்க்கும் பள்ளிக்கூடத்திற்கும் ஏற்பட்ட தொடர்பு ஒழுங்காகக் கல்வி கற்பதற்காக! கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட தொடர்பு, ஒழுங்காய் வாழ்க்கை நடத்துவதற்காக! அரசர்க்கும் ஆட்சிக்கும் ஏற்பட்ட

தொடர்பு, ஒழுங்காய்க் குடிகள் நன்மை பெறுவதற்காக! இவற்றைப் போலவே, நம் உயிர்க்கும் உடலுக்கும் ஏற்பட்ட தொடர்பு பிற உயிர்களிடத்து அன்பு பூண்டு வாழ்வதற்காக! எனவே, பிற உயிர்களிடத்து அன்பின்றி வாழும் மக்கள், உயிரும் உடம்பும் ஒன்றாத பிணமாகவே கருதப்படுவர் என்பது தெளிவு.

**''அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போ டியைந்த தொடர்பு''**

'உயிரும் உடம்பும் ஒன்றியிருப்பது பிற உயிரிடத்து அன்பு செலுத்துவதற்காகத்தான்'' என்று திருவள்ளுவர் தெரிவித்திருப்பது பொருந்துமா? இக்குறளின் நோக்கந்தான் என்ன? வள்ளுவர் எதைக் கூறினாலும் நம்பிவிட வேண்டுமா? அதற்கும் ஆதாரம் வேண்டாவா? என்று சிலர் வினவலாம்.

ஒரு மனிதன், எந்த வகையிலும் பிறர் உதவி சிறிதும் தேவையின்றித் தானே தனித்து வாழ முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை! எனவே, ஒருவர்க்கொருவர் உதவிக் கொண்டால்தான் உலகில் வாழ முடியும், என்பது வெளிப்படை! அதற்கு அன்பு தேவைதானே! அன்பு செலுத்தி ஒன்றி வாழத் தெரியாதவர்கள் பிணத்திற்கு ஒப்பாவார். பிணம் எங்கு கிடப்பினும் எப்படிக் கிடப்பினும் பிறர் உதவியைப் பற்றிய கவலை அதற்கு இல்லையல்லவா? ஆனால், அப்பிணத்தின்மேல் அன்பு கொண்டு அதனைச் சிறப்போடு அப்புறப்படுத்துகின்றோம். அதுபோலவே அன்பில்லாத கல் நெஞ்சினர் மேலும் பிறர் அன்புகொண்டு உதவுகின்றனர். ஆயினும் அவர் பிணத்திற்கு ஒப்புத்தானே! இதைத்தான் வள்ளுவர் நயமாக வற்புறுத்தியுள்ளார்.

உறவினரிடத்தில் அன்பு காட்டப் பழகியவனுக்கு, உறவினர் அல்லாதவரிடத்தும் ஆர்வம் காட்டும் பழக்கம் தோன்றும். தோன்றவே, அயலார் அனைவரும் அவனுக்கு நெருங்கிய நண்பராகிவிடுவர். எனவே, அவனுக்கு எல்லோரும் நண்பராக இருப்பார்களே தவிர, பகைவ ராகவோ, (பகையும் அன்பும் இல்லாத நடுத்தரமான) நொதுமலராகவோ இருக்க மாட்டார்கள் என்பது தெளி வாகும். எனவே, அன்பு ஆர்வத்தை அளிக்க, ஆர்வம் நண்பனை நல்கும் என்பது புலனாகும்.

உலகில் இன்பத்துடனும், பல்வகைச் சிறப்புக் களுடனும், பழிச்சொல்-குற்றம்-குறை முதலியன இன்றியும் வாழும் பலரைக் காண்கின்றோம். அவர்கட்கு இந்நன்மைகள் எல்லாம் எப்படிக் கிடைத்தன? அனைவரிடத்தும் அன்புற்று அமர்ந்து வாழ்ந்த வழக்கத்தினாலன்றோ கிடைத்தன! நல்லவருக்கு நாலா பக்கத்திலும் உதவி கிடைக்குமே!

**"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு"**
**"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு"**

குற்றம் செய்த குழந்தைகளைப் பெற்றோர் தண்டிக் கின்றனர்; குற்றம் செய்த மாணவர்களைப் பள்ளிக் கூடத்தினர் தண்டிக்கின்றனர்; குற்றவாளிகளை அரசியலார் தண்டிக்கின்றனர்; தண்டனையாகிய மறச்செயலை இவரெல்லாம் செய்வதற்குக் காரணம் என்ன? குற்றம் செய்தவர்கள் இனியும் அங்ஙனம் செய்து கெட்டுவிடாமல், திருத்தமுற்று நல்வாழ்வு வாழவேண்டும் என்று அவர்கள்

மேல் கொண்டுள்ள அன்பன்றோ காரணம்! குற்றவாளி களால் பிற குடிமக்களுக்கும் தீங்கு நிகழக்கூடாது, என்று பிறமக்களிடத்தும் கொண்டுள்ள அன்பும் காரணமாகிற தன்றோ? எனவே அறம் செய்வதற்கு மட்டுமன்று - மறம் செய்வதற்கும் அன்பே காரணம் என்பது புலப்படும். ஆனால் இங்கு மறம் என்பதற்கு - சில தீயோர் தன்னலங் கருதிப் பிறரை அடித்து வதைத்துப் பறித்துத் துன்புறுத்தும் கொடுஞ்செயல் என்று பொருள் கொண்டுவிடலாகாது.

**"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை"**

சிலர், பிறரிடம் அன்பு இல்லாததால் அடாத காரியம் பல செய்து அல்லல் இழைக்கின்றனர். இவர்களை அறம் தண்டிக்கும். அறம் தண்டிக்கும் என்றால், இயற்கை தண்டிக் கும், நீதி தண்டிக்கும், சட்டதிட்டம் தண்டிக்கும் என்பது பொருளாம். அன்பின்றி, அடாதனவற்றை அஞ்சாது செய்து வருபவன், ஒரு காலத்தில் மக்கள் குலத்தாலாவது, அரசியலாராலாவது தண்டனையைப் பெற்றே தீர்கிறான் அன்றோ? இஃது உலக இயற்கை. இத்தண்டனை ஒர வஞ்சனையாக அவனுக்காக மட்டும் ஏற்பட்டதன்று. இங்கோர் எடுத்துக்காட்டை நோக்குவோம்: நடுப்பகல்; ஞாயிறு (சூரியன்) காய்ந்துகொண்டிருக்கிறது. நடுத் தெருவில் பல மனிதர் செல்லுகின்றனர்; வெய்யிலைத் தாங்கிக் கொள்கின்றனர்; பறவை விலங்குகள் நடமாடு கின்றன. வெய்யிலைத் தாங்கிக் கொள்கின்றன. ஆனால், எலும்பில்லாத எறும்பு, புழு முதலியன சென்றால் செத்துவிடுகின்றன; வெய்யிலைத் தாங்க முடியவில்லை.

ஏன்? ஞாயிறு, மனிதர்க்கு ஒருவிதமாகவும், பறவை மிருகங்கட்கு ஒருவிதமாகவும் காய்கின்றதா? இல்லையே! அப்படியிருக்க, வெய்யிலை ஏற்றுப் பொறுக்கும் நிலையில் இவ்வுயிர்கள் ஒன்றற்கு ஒன்று மாறுபடுவது ஏன்?

ஞாயிறு எல்லோர்க்கும் பொதுவாக ஒரே விதமாகத் தான் காய்கின்றது. வன்மையான உடம்புடைய உயிர் களால் வெப்பத்தைப் பொறுக்க முடிகிறது. வன்மையற்ற உடம்புடைய உயிர்களால் பொறுக்க முடியவில்லை. எனவே, உண்மைக் காரணம், ஞாயிற்றின் ஓரவஞ்சனை யன்று, உயிர்களின் உடலமைப்பே என்பது தெளிவா மன்றோ? அதுபோலவே, அன்பு பூண்டு அறம் செய்யும் மனிதர்கள் அனைவராலும் போற்றப்பெற்று வாழ்வார்கள்; வன்பு பூண்டு மறம் செய்யும் மனிதப்பதர்கள் உலகியலால்- இயற்கையால் - நீதியால் (அறத்தால்) தண்டிக்கப் படுவார்கள். எனவே, ஒருவர் புகழும் இன்பமும் பெறு வதற்கும் மற்றொருவர் தண்டனை பெறுவதற்கும் உலகி யலின் ஓரவஞ்சனை காரணமன்று; அவர்களின் அன்பு வுடைமையும் அன்பு இன்மையுமேயாம் என்பது புலனாம். ''அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்'' என்னும் ஆன்றோர் வாக்கியத்தையும் ஈண்டு ஒத்திட்டு நோக்குக!

**''என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்''**

பாறைபோன்ற கெட்டியான நிலத்தில், பட்டுப் போன மரம் மீண்டும் தழைப்பது என்பது எப்படி முடியாத காரியமோ, அதுபோலவே, அன்பில்லாத மனிதர் உலகில் வாழமுடியும் என்பதும் முடியாத காரியமே! நிலம்

இருக்கிறது. அதன்மேல் வற்றிய மரம் நிற்கிறது. ஆனால் தழைப்பதற்கு இடையே தண்ணீர் இல்லையே! கட்டாந் தரையிலன்றோ நிற்கிறது வற்றிய மரம்? என் செய்வது! வன்பால் போல் இளகாத மனத்தை உடைய உடம்பு இருக்கிறது. வான்பாலில் மரம் நிற்பது போல், அவ் வுடம்பில் உயிர் நிற்கிறது. ஆனால் மரம் தழைப்பது போல உயிர் வாழ்வு பெறுவதற்குத் தண்ணீராகிய அன்பு இல்லையே - என் செய்வது!

கண்ணால் நேரே காணக் கூடிய தலை, கை. கால் முதலிய உறுப்புக்களை மட்டும் உடையவனுக்கு மனிதன் என்னும் பெயர் பொருந்தாது. மரப் பொம்மை - மண் பொம்மைகளுக்கும்தான் அவ்வுறுப்புக்கள் உள்ளன. அவற்றால் என்ன பயன்? எனவே, மனத்தால் அன்பு, அருள், கண்ணோட்டம் என்று உய்த்துணரக் கூடிய உள்ளுறுப்புக்களும் உடையவனே உண்மையான மனிதனாவான், என்பது ஒருதலை. எனவே அன்பென்னும் அகத்துறுப்பு இல்லாத மனிதன் தனக்கும் பிறர்க்கும் ஒருங்கே பயன்படமாட்டான், என்பது உறுதியாகுமே! ஆம், உள்ளே அன்பில்லாமல் கை, கால் முதலியன கொண்டு எவ்வாறு இல்வாழ்க்கை நடத்த முடியும்? எவ்வாறு விருந்தோம்ப முடியும்?

ஓர் இடத்தில் ஓர் அரக்கன் இருந்தான். அவன் ஒரு கட்டிளங்கன்னி - அரசகுமாரியைக் காதலித்தான். தன் இருப்பிடத்திற்குக் கொண்டு வந்து விட்டான். தன் விலங்குணர்ச்சிக்கு இரையாக்கப் பார்த்தான். ஆனால் அவள் இசையவில்லை. அங்கு ஒரு கட்டிளங்காளை -

அரசகுமாரன் அரக்கன் அறியாது சென்றான். கன்னி காளையைத் துணை வேண்டினாள். இருவரும் காதலரா யினர். காதலனின் சூழ்ச்சிப்படி, காதலி அரக்கனை அடைந்தாள். ஆடினாள்; பாடினாள்; ஆசை காட்டினாள். மயங்கிய அரக்கனிடம், 'உன் உயிர் நிலை எங்கே உள்ளது'? என்று பதமாகக் கேட்டாள். 'அதோ தெரி கின்றதே - அந்த ஆலமரத்தின் அடியில் ஐந்து வண்டுகள் உள்ளன. அவற்றில் தான் என் உயிர்நிலை உள்ளது' என்றான் ஆசைக்கு அடிமைப்பட்ட அரக்கன். ஐந்து வண்டுகளும் நசுக்கப்பட்டன. அரக்கனும் பொசுக்கப் பட்டான். இத்தகைய கட்டுக் கதைகளைக் கேட்டிருப்போம். இதனை இங்கு எடுத்துக்காட்டியது நம்புவதற்காக அன்று! உயிர்நிலை என்பதை நினைவூட்டி விளக்குவதற்காக! இது போல மனிதனுடைய உயிர்நிலை அன்பில்தான் இருக்கிறது. அன்பு அழிக்கப்பட்டால் அவனும் அழிக்கப் படுவான். அன்பில்லாத மனிதனைத் தோலால் மூடி வைத்திருக்கின்ற எலும்புக்கூடு என்று இயம்புவதில் என்ன தவறு? எலும்புக்கூட்டால் யாருக்கு என்ன நன்மை உலகில்?

> **"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
> **வற்றல் மரம் தளிர்த் தற்று"**
> **"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**
> **அகத்துறுப் பன்பி லவர்க்கு"**
> **"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு"**

எனவே, பொதுவாக மக்கள் வாழ்க்கைக்கு - அதிலும் சிறப்பான இல்வாழ்க்கைக்கு அன்பு மிகவும் இன்றியமை யாத பொருள் என்பது இப்போது இனிது விளங்குமே!

# 5. விருந்தோம்பல்

இல்லறத்தார்கள் தம் இல்லத்திற்கு வரும் விருந்தினரைப் பேணிக் காக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறார் வள்ளுவர். விருந்தோம்பல் என்னும் தலைப்பின்கீழ் ஆசிரியர் கூறியுள்ள ஒரு கருத்து உலக வியப்புகளுள் ஒன்றாகும். இப்படி ஒரு கருத்தினை உலகில் எத்துணை அறிஞர்கள் - எத்துணை தத்துவ மேதைகள் - எத்துணைப் பொது நலத்தொண்டர்கள் - எத்துணை சமுதாயச் சீர்திருத்த வாதிகள் சொல்லி யிருப்பார்களோ தெரியவில்லை. இப்படியொரு கருத்தைச் சொன்னால் எல்லோருக்கும் புரியுமா? புரிந்தாலும் எல்லோரும் நம்புவார்களா? நம்பினாலும் எல்லோரும் பின் பற்றி நடப்பார்களா? பின்பற்றி நடந்தாலும் முன்னுக்கு வரமுடியுமா? இவ்வளவு சிந்தனைக்குரிய - இத்தனை வியப்பிற்குரிய - இத்துணை ஆராய்ச்சிக்குரிய அந்தக் கருத்து என்னவென்று பார்ப்போமே! “ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மணந்து கொண்டு இல்லறம் நடத்துவது தம் நன்மைக்காக அன்று; வரும் விருந்தினரைப் பேணிக் காத்தற்கும் பலர்க்கும் உதவி செய்வதற்குமேயாம்” என்பது தான் அந்தக் கருத்து.

**“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு”**

என்பது குறள். இந்தக் கருத்து எந்த அளவு பொருந்தும்? ஆய்வோமே!

நாம் நமக்கென ஒரு வண்டி வாங்கிப் பாதை வழியே ஊர்ந்து செல்லும்போது, வழியில் ஒருவர் நம்மை நோக்கி ''நீவீர் வண்டிவாங்கி ஊர்ந்து செல்வது உமக்காக மட்டும் அன்று; வழியில் தளர்ந்து காணப்படும் பிறருக்கும் வண்டியில் இடம் தந்து ஏற்றிக் கொண்டு செல்வதற்கே'' என்று சொல்வாரேயானால், கேட்ட நமக்குத் தூக்கி வாரிப் போடும். நாம் மழைக்குக் குடைபிடித்துக் கொண்டு செல்லும்போது, நம்மைக் கண்ட ஒருவர் ''நீவிர் குடை பிடித்துச் செல்வது உமக்காக மட்டும் இருக்கக் கூடாது; வழியில் குடையில்லாமையால் நனைந்து நடுங்கும் பிறரையும் குடைக்குள் கொள்ளும்வரை நுழைத்துத் தள்ளிக் கொண்டு போகவேண்டும்'' என்று தெரிவிப்பாரேயானால் திடுக்கிடுவோம் நாம். ஏன்? அது உண்மைதானே? வண்டியும் குடையும் உள்ளவர்கட்கும், இல்லாவிட்டாலும் தம்மைத்தாமே சமாளித்துக் கொள்ளும் ஆற்றல் உடையவர் கட்கும் வண்டியுள்ளும் குடையுள்ளும் இடம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினால், ஒருவேளை அக்கருத்துப் பொருந்தாது என்று மொழியலாம். ஆனால், வண்டியும் குடையும் இல்லாமல், சமாளித்துக் கொள்ளவும் முடியாமல் உடல்நலங்குன்றி வழியில் வருந்தும் ஏழை எளியவர்கட்கு இடம் கொடுக்கலாம் அன்றோ? இதைத்தான் திருவள்ளுவர் குறளில் வேறு விதமாக எடுத்துக்காட்டியுள்ளார். நாம் வாழ்க்கை என்னும் பாதையில் குடும்பம் என்னும் வண்டி அல்லது குடையின் துணை கொண்டு வழி கடந்து

செல்லுங்கால், அப்பாதையில் நாம் பெற்ற நலம் பெற முடியாமல் இருப்பவர்க்கு நம் பங்கில் ஒரு சிறிது இடம் ஒதுக்குதல் நன்றன்றோ? இதற்குத்தான் விருந்தோம்பல் என்று பெயராம். எனவே, நாம் வீட்டில் இருந்து வாழ்வ தெல்லாம் விருந்தோம்பும் நோக்கத்தை உடையதாக இருக்க வேண்டும் என்னும் வள்ளுவர் வாய்மொழி இப்போது தெளியப்படலாமே!

ஆம், தெளிவாகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் ஆகும் வரைக்கும் தம் சொந்த வினைகளை மட்டுமே—சொந்த நன்மைகளை மட்டுமே பார்க்கின்றனர். அதாவது, தம் பெற்றோரைக் கொண்டு தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர் — உடலை வளர்த்துக் கொள்கின்றனர்—கல்வி பெறுகின்றனர். இந்த நிலை, எதிர்கால வாழ்க்கைக்குத் தங்களை ஆயத்தம் செய்து, கொள்ளும் ஒருவகைப் பயிற்சியாகும். திருமணம் ஆகும் வரையும் தன்னலம் கருதி வந்தவர்கள், திருமணம் ஆன பின்பு பிறர் நலம் பேணுபவராக மாறிவிடுகின்றனர். அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சூழ்நிலை அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கிவிடுகிறது. அதாவது பெற்றோரால் காப்பற்றப்பட்டு வந்தவர்கள், இப்போது பெற்றோரைக் காப்பாற்ற வேண்டிய கடமை உடைய வராகின்றனர். உணவு, உடை, கல்வி முதலிய தேவைகளின் நிமித்தம் சமூக மக்களின் உழைப்பைப் பெற்றுவந்தவர்கள் இப்போது தாங்களும் சமூகத்திற்காக உழைக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இன்னும் விருந்தோம்பல், ஐயம் (பிச்சை) இடுதல் முதலிய நன்மைகளும் புரிகின்றனர்.

இந்த இயற்கையமைப்பு நிலையை ஒட்டி நோக்கினும், இல்லற வாழ்க்கை என்பது, பிறர் நலத்தை அடிப்படை யாகக் கொண்டது என்பது நன்கு புலனாகும்.

விருந்தினரை வெளியே விட்டுத் தான் மட்டும் உண்டால், அது தன்னை உண்டவனுக்குச் சாவையே உண்டாக்காத நன் மருந்தாகும் என்று சொன்னாலும்கூட அப்படி உண்டு உயிர் வாழத் தேவையில்லை. அவ்விதம் பிறர்க்கு உதவாமல் உயிர் வாழ்வதனால் உலகத்திற்கு என்ன நன்மை? அதனினும் பிறர்க்கு உதவி உதவி இறந்து விடுதலே நன்றன்றோ? ஒரு விளக்கு ஒருவருக்கும் உதவாமல் உருப்படியாகப் பெட்டியில் வைக்கப் பட்டிருப்பதைக் காட்டிலும், பலர்க்கும் பல நாள் பலவிடங் களில் வெளிச்சம் தந்து, பின்பு ஒருநாள் உடைந்து விட்டாலும் தவறொன்றும் இல்லையன்றோ?

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"**

என்பது குறள். எனவே, என்றைக்கும் இறப்பை உண்டாக்காத ஒரு நன்மருந்தை நாம் உண்பதாக இருந்தாலுங்கூட, விருந்தினரை வெளியே விட்டு உண்ணவே கூடாது.

**"மருந்தே யாயினும் விருந்தோ டுண்"**

என்பது ஔவையின் அருள்மொழி யன்றோ? அவ்வளவு கூறுவானேன்? உணவைக் கண்ட ஒரு காக்கை, மற்றைய காக்கைகளை வற்புறுத்தி வரவழைத்து உண்ணுகின்றதைக் காண்கின்ற நாம், தாமாகவே தேடிவந்துள்ள விருந்தினரை வெளியே விட்டு உண்ணுவது ஒழுங்காகாதன்றோ?

அடுத்து ஆசிரியர் கூறியுள்ள கருத்து மிகவும் சிந்தனைக்குரியது.

**"வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்"**

இக்குறளுக்கு மூன்று உரைகள் கீழே தரப்படும்.

முதல் உரை வருமாறு:-

நாம் உண்ணப்போகும் சமயத்தில் ஒரு விருந்தினர் நம் இல்லத்திற்கு வந்துவிட்டால் நாம் அவரை உண்ண அழைக்கின்றோம். அவர் திடீரென வந்தோமே! நமக்காக உணவு தயாரித்திருப்பார்களா! என்று கூச்சப்பட்டுக் கொண்டு உண்ண மறுக்கிறார். அக்குறிப்பை அறிந்து கொண்ட நாம், அவரை நோக்கி "உங்களுக்காகவா உலை வைக்கப் போகிறோம்? உங்களுக்காகவா கடைக்குப்போய் அரிசி வாங்கிவரப் போகிறோம்? ஏதோ உங்கள் புண்ணியத்தால் எல்லாம் உள்ளன. நீங்கள் தயக்கமின்றி உண்ணலாம்" என்று சொல்லி அவரையும் உண்ணச் செய்கிறோம். அன்று உணவு நிறைய இருந்தால் எல்லோரும் நிரம்ப உண்ணுவதும் உண்டு. போதுமான அளவு இல்லாவிட்டால் வீட்டுக்காரர்கள் சற்றுக் குறைத் துண்ணுவதும் உண்டு.

இன்னும் சில விருந்தினர் ஒரு வேலையினிமித்தம் நம் மனைக்கு வருவதுண்டு. வேலை முடிந்ததும், நமக்குச் செலவுவைக்க விரும்பாத அவ்விருந்தினர் தம்முருக்குப் புறப்படுவார். நாம் அவரை மறித்து, எங்கள் வீட்டில் உண்டு செல்லவேண்டும் என்போம். அவர் மறுப்பார்.

நாம் விடாமல், "இன்றைக்கு நீங்கள் செல்லவே கூடாது. உங்களுக்காகவா நாங்கள் நிலத்தில் நெல்விதைத்துப் பயிரிட்டு அறுத்துக் கொண்டு வந்து சமைக்கப் போகிறோம்? ஏதோ எங்களுக்கு உள்ளதில் தாங்களும் சிறிது உண்டு செல்லவேண்டும், என்று தடுத்து உண்ணச் செய்கிறோம். இதுதான் முதல் உரையின் கருத்து.

எனவே, வந்த விருந்தினரை உண்ணச் செய்து விட்டு, மிகுதியிருந்தால் தான் உண்ணும் மனப்பான்மை யுடைய ஒருவன், விருந்தினர்க்காகச் சேர்த்து நிலத்தில் விதை விதைக்க வேண்டுமா? வேண்டாவே! எனவே, இத்தகையவன் விருந்தினர் வந்துவிட்டால் என்ன செய்வ தென்று விழிக்கவும் வேண்டியதில்லை; மறையவும் வேண்டியதில்லை; அல்லது ஓடியாடிப் புதிதாகத் தயாரித்துத் தொல்லையடையவும் வேண்டியதில்லை என்பது பெறப்படும்; ஏனென்றால் அவன் சமயம் நேரிடின் தனக்குள்ளதையே அவர்க்கு அளித்து விடுவான் அல்லவா?

இரண்டாவது உரை வருமாறு:—

தன்னலம் பாராது பிறர் நலம் பேணுபவன் - தன் பசியையும் பாராது பிறர் பசியைப் போக்குபவன் - தனக்கு வைத்திருக்கும் உணவைப் பிறர்க்கு அளித்துவிடும் பெரிய உள்ளம் படைத்தவன், வீட்டில் ஒன்றும் இல்லாதபோது விருந்தினர் வந்து விட்டால், விதைப்பதற்கென்று வைத் திருக்கும் விதை நெல்லை நிலத்தில் கொண்டுபோய் விதைக்கவும் விரும்புவானா? விரும்பமாட்டான். அதனைக் குத்தி அரிசியாக்கிச் சமைத்து விருந்தினர்க்குப் படைக்கவே

செய்வான் - என்ற கருத்து பொதிந்த கண்களுடன் இந்தக் குறளை நோக்குக.

தொம்பையிலிருந்த விதை நெல்லை அல்ல-விதைத்த நெல்லையே நிலத்திலிருந்து எப்படியோ எடுத்துக் கொண்டு வந்து குத்திச் சமைத்து வந்தவர்க்கு இட்ட வள்ளல் இளையான்குடி மாறநாயனாரது வரலாறு தமிழ் மக்கள் அறியாததொன்றன்று. எனவே, முன்னர் விருந்தினரை ஓம்பிப் பின்னர் மிஞ்சியிருந்தால் தான் உண்ணும் உளநிலை பெற்றிருப்பவன், விதையை - விதை நெல்லை நிலத்தில் இடவும் விரும்புவானோ? மாட்டான்; விருந்தினர்க்குச் சமைத்துப் படைக்கவே விரும்புவான் என்பது கருத்து.

இனி மூன்றாவது உரை வருமாறு:

பிறர்க்கு அளிக்காமல் தாங்கள் மட்டும் விலாப் புடைக்க உண்ணும் தன்னலக்காரரின் நிலத்திலும், பிறர்க்கும் அளிக்காமல் தாங்களும் அனுபவிக்காமல் வறட்டு வாழ்க்கை நடத்தும் கருமிகளின் நிலத்திலும், பணச் செலவிட்டும், உடல் முயற்சி செய்தும் நிலத்தில் விதைவிதைத்துப் பயிரிட்ட பின்புதான் விளைதல் வேண்டும் என்பது நீதி. ஆனால், தன் உணவுகளை யெல்லாம் பிறர்க்கேயிட்டு மிகுந்ததை உண்ணும் அறவோனது நிலத்திற்குக் கூடவா பணச் செலவு செய்ய வேண்டும்? உடல் உழைப்பு வேண்டும்? நீர் பாய்ச்ச வேண்டும்? ஏர் உழ வேண்டும்? எருவிட வேண்டும்? விதைவிதைக்க வேண்டும்? களை பறிக்க வேண்டும்? காவல் காக்க வேண்டும்? இவை நீதியற்ற செயல்

களல்லவா? இம்முயற்சிகள் எல்லாம் தேவைப்படாமலேயே இவன் நிலத்தில் ஏராளமான உணவுப் பொருட்கள் விளையவேண்டுமல்லவா? அவர்கட்கும் (கருமி - தன்னலக் காரர்), இவனுக்கும் வேறுபாடு இல்லையா? கழுதையும், குதிரையும் ஒன்றாகுமா? பிறர்க்கு உதவாதவர்களிடம் மட்டும் விதைத்தல் முதலிய முயற்சிகளைப் பெற்றுக் கொண்டு, பிறர்க்கு உதவுபவனுடைய நிலத்தில் எம்முயற்சியும் பெறாமல் ஏராளமாக விளைத்துத் தர வேண்டியது இயற்கையின் கடமையல்லவா? ஏன், அப்படிச் செய்தால் தகாதா? நீதியாகாதா? இதனால் அறவோன் இன்னும் பலர்க்கு உதவமுடியுமே! - என்று இயற்கையை நோக்கி நொந்து வினவுவதைப் போல், ஆசிரியர் விருந்தோம்புபவனது பெருமையைக் குறிப்பாக உணர்த்துவதாகக் கொள்ளலாம். இப்படியாக இந்தக் குறளைப் புதுக்கண் கொண்டு பார்க்கப் பார்க்கப் புதுப் புதுப் பொருள்கள் - புதுப்புது நயங்கள் புலப்படுகின்றன அல்லவா? இக்குறளின் வாயிலாக, விருந்தோம்புவானது உள்ளப் பண்பின் உயர் எல்லை ஓவியப்படுத்தப்பட்டுள்ள தன்றோ?

அடுத்து வள்ளுவர் கூறும் ஒருவகைப் புதிய குடும்பப் பொருளாதாரம் வியத்தற்கு உரியது. அதாவது, விருந்தோம்பிக்கொண்டேயிருப்பதால் செல்வங் குறைந்து குடும்பம் பாழ்படாதாம். மாறாகச் செல்வம் கொழிக்குமாம். முகமலர்ச்சியுடன் விருந்து பேணுபவனது இல்லத்தில் மனமகிழ்ந்து திருமகள் தங்கி வாழ்வாளாம். அவனைத் தேவர்கள் தம் விருந்தினனாக ஏற்றுக் கொள்வார்களாம்.

நாடோறும் வரும் விருந்தினர்க்கு உணவு அளித்துக் கொண்டே யிருப்பவனுடைய வாழ்க்கை பாழ்படாது என்று வள்ளுவர் கூறியிருப்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் இருக்கிறதே என்று எண்ணலாம் சிலர். அவர்கள் தம் எண்ணத்திற்குக் காரணமாக, எல்லார்க்கும் இட்டுக் கொண்டேயிருந்தால் செல்வம் குறைய வாழ்க்கை பாழ்பட்டே தீரும் என்று மொழியலாம். உண்மை அப்படியன்று.

கடன்காரனுக்கு அஞ்சித் தகப்பன் குதிர்க்குள்ளே புகுந்து கொண்டிருக்க, மைந்தன் வந்தவனிடம், "எங்கப்பா குதிருக்குள் இல்லை" என்று சொன்னதைப்போல், விருந்தோம்புவதால் குடும்ப வளர்ச்சி தடைப்படும் என்ற உண்மையை அறிந்தும், அதனை மறைப்பதற்காக, வேண்டுமென்றே திருவள்ளுவர் முன்னெச்சரிக்கையாக இக்குறளைப் பாடிக்கொண்டார் என்று சொல்வது பொருந்தாது. அப்படியெனின் இக்குறளைப் பாடியதின் நோக்கம், விருந்தோம்பினால் குடும்பம் நொடித்துப் போகும் என்று சொல்பவரை மறுப்பதேயாகும். ஆசிரியர் கூற்று எங்ஙனம் பொருந்தும் என்று சற்று ஆராய்வோம்:

விருந்தோம்புவேன் என்று தொடங்கித் தம்மிடமுள்ள பொருள்களை எல்லாம் வருபவரிடம் வாரி வாரி இறைத்துக் கொண்டேயிருந்தால்தான் குடும்ப வளர்ச்சி தடைப்படும். வள்ளுவர் அப்படிச் செய்யச் சொல்லவில்லையே! திங்கள் ஒன்றுக்கு நூறு (ரூபா) வெண் பொற்காசு ஈட்டும் சிலருடைய வீட்டின் எதிரில் இருந்து கொண்டு நோக்குவோமாயின், அவர் வீட்டில் காலையில் ஓர்

இரவலன் (பிச்சைக்காரன்) வந்து, ஒருகைப் பழையது வாங்கி உண்ணுவதைக் காணலாம்; பின் எட்டு மணிக்கு மேல் பன்னிரண்டு மணிவரையும் யாராவது வந்து அரிசி பெற்றுக்கொண்டு செல்வதைக் காணலாம்; அதற்குமேல் நண்பகலில் எவரேனும் சிறிதளவு சோறு பெற்றுக்கொண்டு செல்வதையும், இரண்டொருவர் குழந்தைச் சோறு வாங்கிக் கொண்டு போவதையும் காணலாம்; இரவிலும் இத்தகைய காட்சியைக் காணலாம். இந்நிகழ்ச்சிகள் நம் நாட்டில் ஏழை முதல் செல்வர்வரை பெரும்பாலான குடும்பங்களில் நிகழ்வன தாமே! இன்னும் சில குடும்பங்களில், பலர் வந்து பலநாளாக முழு உணவு உண்ணுவதையும் காணலாம். எனவே, இக்குடும்பங்கள் எல்லாம் பாழ்பட்டா விடுகின்றன? இல்லையே! மலருக்கு மணமும், விண்ணிற்கு வெண்ணிலாவும் சிறப்பளிப்பது போல, குடும்ப வாழ்க் கைக்குச் சிறப்பளிப்பது விருந்தோம்பலே. மணமில்லாத மலரையும் வெண்ணிலா இல்லாத விண்ணையும், விருந்தோம்பாத வீட்டினரையும் சில சமயங்களில் நாம் பார்த்திருக்கின்றோம். இம்மூன்றைப் பற்றியும் உலகம் என்ன எண்ணுகின்றது, என்ன பேசுகின்றது, என்ன எழுதுகின்றது என்பதையும் நாம் அறிவோம். மேலும், பிறர்க்கு உதவுபவனை, உதவி பெற்றவர் - பெறாதவர் எல்லோரும் போற்றுவதையும், அவனுக்கு ஏதேனும் துன்பம் உற்றபோது பலர் முன்வந்து உதவுவதையும், உதவ முடியாவிடினும், ''அவனுக்கு இதுதான் வேண்டும்'' என்று ஏளனம் செய்யாது இரக்கப்படுவதையும் வாழ்க் கையில் காண்கிறோம். எனவே அவனது வாழ்வு சரியாமல் மங்கலமாகப் பொலியும்!

**"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"**

**"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்."**

**"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."**

அடுத்து, விருந்தோம்ப எண்ணுபவர்க்கு ஆசிரியர் வள்ளுவர் நல்ல வழிகாட்டியுள்ளார். அதன் வாயிலாக எல்லோரும் விருந்தோம்புவதற்கு ஊக்கம் கொடுத்துள்ளார். அதாவது, விருந்தோம்புதல் இருப்பவர்களால்தான் செய்ய முடியும் என்றல்ல - இல்லாத ஏழைகளாலும் செய்ய முடியும் என்று துணிவு பிறப்பிக்கின்றார். ஒருவர் விருந் தோம்புதலுக்காக எவ்வளவு செலவு செய்துள்ளார் என்பதைப் பொறுத்து அதன் பயன் இல்லை. யாருக்கு விருந்தோம்பினார் என்பதைப் பொறுத்தே பயன் அமைந் துள்ளது. சோம்பேறிகட்கும் பொல்லாத கயவர்கட்கும் மலை மலையாகக் கொட்டி யழுது என்ன பயன்? "பாத்திரம் அறிந்து பிச்சை யிடு" என்பதற்கேற்ப விருந்தோம்புதலுக்குத் தகுதியுடையவர்க்கு ஒரு சிறிது உதவினாலும் அது இருபாலும் பெரும் பயன் அளிக்கும்.

**"இனைத்துணைத் தென்பதொன் றில்லைவிருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்."**

ஆலம் விதை மிகச் சிறியதாயினும், அதைத்தக்க நிலத்தில் விதைத்தால் அது பெரிய மரமாவதைப்போல, ஒருவன் விருந்தினர்க்குச் செய்த உதவி மிகச் சிறிய தாயினும், பெற்றுக்கொண்ட விருந்தினர் உயர்ந்தவரா

யிருப்பாரேயாயின், அச்சிறிய உதவியும் பின்பு செய்தவனுக்குப் பெரும் பயன் அளிக்கும் என்று நாலடியாரும் நவில்கின்றது.

நாம் நல்லவர்க்கு அணுவளவு உதவி செய்தாலும், அவர்கள் நன்றியறிதலாக நமக்கு மலையளவு உதவி செய்வார்கள். நாம் தீயோர்க்கு மலையளவு உதவி செய்தாலும் அவர்கள் அவற்றை மறந்து, பாலுண்ட பாம்பு நஞ்சையே கக்குவதுபோல, நமக்குத் தீங்கேயிழைப்பார்கள். ஆதலின் ஒருவன் விருந்தினர்க்குச் செய்யும் உதவியின் அளவைப் பொறுத்து அவனுக்கு நன்மை ஏற்படுவதில்லை. விருந்தினரின் தன்மையைப் பொறுத்தே செய்தவனுக்கு நன்மை ஏற்படும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இதனை ''உதவி வரைத்தன்று உதவி, உதவி, செயப்பட்டார்சால்பின் வரைத்து'' என்னும் குறளாலும் உணரலாம்.கறந்த பாலில் ஒரு சிறு கரண்டிச் சர்க்கரை யிடுவோம்; அடுத்தபடியாக (கசப்புள்ள மருந்துக் கியாழத்தைச் சொல்லவில்லை) மூன்று மடங்கு நீர் கலந்த பாலில் மூன்று சிறு கரண்டிச் சர்க்கரையை யிடுவோம். நமக்கு இனிப்பது முன்னதா? பின்னதா? பின்னதைவிட முன்னது இனிப்பதற்குக் காரணம் சர்க்கரையின் அளவா? இல்லையே! பாலின் தன்மையேயன்றோ? இன்னும் மருந்துக்கியாழத்தில் (கஷாயத்தில்) இட்ட சர்க்கரையின் நிலை என்ன? உதவியும் இதுபோலத்தான்! எனவே, இல்லாத ஏழைக் குடும்பத்தாருங்கூட, தக்கோர்க்குத் தம்மால் இயன்ற அளவு சிறிதாயினும் உதவின் அதுவேபோதும்.

பிறர்க்கு உதவ மனமின்றி, ஆறிடு மேடு மடு போலவும் சகடக்கால் போலவும் நிலையற்றதான செல்வத்தை நம்பிச் சிலர் பாதுகாத்து வந்தாலும், அச் செல்வம் அவர்களையும் ஏய்த்து, தனக்குள்ள இயற்கைப் படி, அவர்களிடம்சொல்லிக் கொள்ளாமலேயே சென்றாலும் சென்றுவிடலாம் அல்லவா? அப்போது இக்கருமிகள் தலை மேல் கைவைத்து வருந்த வேண்டியவர்தாமே! எனவே, நிலையற்ற செல்வம் நிலைத்துள்ளபோதே பலர்க்கும் பயன் படுத்த வேண்டும். அதுதான் அறிவுடைமை.

ஒருவர் எவ்வளவு பெருஞ்செல்வம் பெற்றிருப்பினும் பிறர்க்கு உதவாமற் போவாரேயானால் அவர் ஏழையாகக் கருதப்படுவார் என்று மட்டும் நினைத்து விடாதீர்கள்; அவர் அறிவிலி என்பதையும் மறக்காமல் நினைவு கூருங்கள். ஏன்? எப்படி?

ஒன்றும் அற்ற ஏழை பிறர்க்கு உதவ முடியாது. எல்லாம்பெற்ற செல்வரும் பிறர்க்கு உதவவில்லை யென்றால் ஏழைக்கும் செல்வருக்கும் வேறுபாடென்ன? ஒன்றுமற்ற ஏழையுங்கூட சில சமயங்களில் தன்னால் இயன்ற அளவு முயன்று பிறர்க்கு உதவுகிறபோது, எல்லாம் பெற்ற செல்வர் பிறர்க்கு உதவவில்லை யென்றால், அவரை ஏழை யுள்ளும் பெரிய ஏழையாகக் கூறுவதில் என்ன பிழை? மற்றும் "ஏழைகள்தாம் பிறர்க்கு உதவ முடியவில்லை. நாம் செல்வராயிற்றே! நாமும் உதவாவிட்டால் ஏழைக்கும் நமக்கும் என்ன வேற்றுமை? நிலையாத செல்வம் நிலைத்துள்ளபோதே நாம் பலர்க்கும் பயன்படாவிட்டால், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளாத மடையனுக்கல்லவா

நிகராவோம்? காற்று நின்றுவிட்டால் பின் என்ன செய்ய வியலும்?'' என்றெல்லாம் ஆராய்ந்து எண்ணிப் பார்க்காத கருமிச் செல்வர்களை அறிவிலிகள் என்று அறைவதில்தான் தவறு யாது?

> **''பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**
> **வேள்வி தலைப்படா தார்.''**

> **''உடைமையுள் இன்மை விருந்தோம்ப லோம்பா**
> **மடமை மடவார்கண் உண்டு;**

மிகமிக மென்மை உடையதான அனிச்சம் பூ கூட, பார்த்த அளவிலோ, அல்லது நெருங்கிய அளவிலோ வாடாது; மூக்கால் மோந்த பிறகுதான் வாடும். ஆனால் நல்ல விருந்தினரோ அத்தகையினரல்லர்; எட்டி வரும் போதே, வீட்டுக்காரரின் முகக்குறி வெறுப்பினால் சிறிது வேறுபட்டிருப்பதாக அறிந்து கொண்டாலும் அங்கேயே — அப்போதே மனம் சோர்வர். ஆதலின், வீட்டுக்காரர்கள் தங்கள் வீட்டிற்கு விருந்தினர் ஒருவர்வந்தக்கால், அவரை வரவேற்கத் தங்கட்கு வசதியில்லாவிடினும், வசதியிருந்தும் அங்ஙனஞ் செய்ய மனமில்லாது போயினும், அவரை வெறுப்பாக நோக்கி விரட்டாமல், இனிமையாக நோக்க இன்சொற் பேசித் தம் இயலாமையை அவர்க்குக்குறிப்பான் அறிவித்தனுப்புவதே அறிவுடைமையும் நாகரிகமும் ஆகும்.

வசதி இருப்பின் எல்லா நன்மையையும் இனிமை யாகச் செய்தனுப்பலே சிறந்தது.

> **''மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
> **நோக்கக் குழையும் விருந்து''**

# 6. இனியவை கூறல்

இனியவை கூறல்—ஓசையானும் பொருளானும் செவிக்கும் மனத்திற்கும் இனிமை தரக்கூடிய சொற் களைப் பேசுதல். இஃது பொதுவாக எல்லா மக்கட்கும் இன்றியமையாத தாயினும், சிறப்பாக விருந்தோம்பும் இல்லறத்தார்க்குத் தேவையாதலின் விருந்தோம்பலின் பின் நிறுத்தப்பெற்றது போலும்!

குளிர்ந்த அன்பொடு பொருந்தி, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகம் இல்லாததாகி, உண்மையை உணரும் ஆற்றலுடைய அறிவாளிகளின் வாயிலிருந்து வருவதே இன் சொல்லாகும். வஞ்சகம் இல்லாது உண்மையைப் பேசினாலும் வெறுப்பாகக் கசப்பாகப் பேசாமல் குளிர்ந்த அன்புடன் பேசவேண்டும். அன்பாகப் பேசுவதுபோல் நடித்து உள்ளே வஞ்சகம் வைத்துப் பேசலாகாது, என்பவற்றை அறிவிக்கவே

**"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்"**

என்றார் ஆசிரியர்.

கொடுத்தலினும் இன்சொல் சிறந்தது. எங்ஙனம்? பிறர்க்கு ஒன்று கொடுக்க உண்மையாக மனம் விரும்பி னாலும் அப்பொருள் நம்மிடம் இல்லாமற் போகலாம். இருந்தும், நாம் கொடுக்க விரும்பினாலும், நம்மைச்

சேர்ந்தவர்கள் தடை செய்யலாம். இருந்தும், நாம் கொடுக்க விரும்பினும், நம்மவர் தடை செய்யாமலிருப்பினும், கொடுக்கப்படுபவர் அப்பொருளை விரும்பாதொழியினும் ஒழியலாம். ஆதலின் நாம் கொடுக்க அவர் பெற சமயம் கூடாவிடினும், முகம் மலர்ந்து இன்சொல் பேசுதலால் எவர்க்கும் எவ்விடுக்கணும் எத்தடையும் இல்லையன்றோ? எனவே, கொடுத்தலினும் இன்சொல் எளிது. இதனால் இன்சொல் சொல்வதொன்றே சாலும் கொடுக்க வேண்டாம் என்று எண்ணிவிடலாகாது. இன் சொல்லோடு ஈதலும் செய்யின், சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது போலாகும்.

**"அகன் அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப்பெறின்"**

"யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரைதானே" என்றார் திருமூலரும்,

உள்ளே கள்ளம் உடையவர்கள் பிறரைக் கண்டபோது முகம் மலர்ந்தவர் போலவும் இனிய நோக்கினர் போலவும் தம்மை வலிந்து செய்து நடித்து இன்சொல் பேச முயல்வர். அது முறையன்று. அவர் நடிப்பு வெளியிலும் தெரிந்துவிடும். ஆதலின் முகமலர்ச்சி, இன்னோக்கு, அக மகிழ்வு, இன்சொல் என்னும் நான்கும் நாற்காலியின் நான்கு கால்களைப்போல் இருந்தே தீரவேண்டும். ஒன்று குறைந்தாலும் நாற்காலியில் அமர முடியாதல்லவா? இந் நான்கு கால்களின் மேல் அமைந்ததே அறம் என்னும் நாற்காலி.

**''முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்''**

எல்லோரிடத்தும் இன்சொல் பேசுபவர்க்கு வறுமையிருக்காது. எல்லோரிடத்தும் இன்சொல் பேசி இனியவராகப் பழகுவதால் யார் அவரை வெறுக்க முடியும்? யார் வேலை தரமுடியாது என்று சொல்ல முடியும்? யார் வேலையைவிட்டு நீக்க முடியும்? துன்பம் உண்டாக்கவும் யார்க்கு மனம் வரும்? துன்பம் நேர்ந்தபோது பார்த்துக் கொண்டிருக்க யார் துணிவர்? அவருடைய வறுமைக்கு யார் இடம் கொடுப்பர்? 'நான் முந்தி நீ முந்தி' என்று ஓடி எல்லோரும் அவர்க்கு உதவவே முற்படுவரன்றோ? பின்னர், துன்பம் தரும் வறுமை அவர்க்கேது? ''வாய் நலம் இருந்தால் ஊர் நலம் இருக்கும்'' என்பது நம் நாட்டுப் பழமொழியன்றோ?

திமிரான நடையும் துடுக்கான செயலும் மிடுக்கான பேச்சும் உடையவர்கள் எவ்வளவு ஆபரணங்களை அணிந்திருந்த போதிலும், நாம் அவரைக் கண்டதும் பகைவர்போல் - கொலைகாரர்போல் அருவருக்கின்றோம். அடக்கமும் நயமும் இன்சொல்லும் உடையவர்கள் ஓர் அணியும் அணிந்திராவிட்டாலும் நம் கண்ணையும் மனத்தையும் கவர்ந்து பாராட்டப் பெறுகின்றார்கள். எனவே மனிதனுக்கு அழகளிக்கும் அணி யாது என்பது புலப்படுமன்றோ? மேலும், பொன்னாபரணங்களை ஈட்டல் துன்பம்; காத்தல் துன்பம்; திருடராலோ, ஏழ்மை நெருங்குவதாலோ இழந்த காலையும் பெருந்துன்பம். மீண்டும் அவற்றைப் பெறல் அரிதாயினும் ஆகும். ஆனால் பணிவு

கலந்த இன்சொல் என்னும் அணியை யாரும் எங்கும் என்றும் எவ்விடையூறுமின்றி எளிதாய்ப் பெற்றுத் திகழ முடியுமன்றோ?

**"துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு."**
**"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணி அல்ல மற்றுப் பிற."**

ஒருவன் பிறரிடம் இனிமையாகப் பேசிப் பழகப் பழகிக் கொண்டு வருவானேயானால், அவனிடம் இவ்வளவு நாளாய் இருந்துவரும் தீக்குணங்கள் எல்லாம் அகலத் தொடங்கும்; இனியும் அவை தோன்றுவதற்கு இடமிராது; மேன்மேலும் நல்லெண்ணங்களும் நற்சொற்களும் நற் செயல்களுமே வளர்ந்து அவனை மாசற்ற - மாணிக்க மாக்கும். எப்படி? மக்கள் மன்றத்தில் (சமுதாயத்தில்) இனிமையாகவே பழகுவேன் என்று ஒருவன் சூள் (சபதம்) செய்து கொள்வானேயானால் அவனிடம் அறமின்றி மறம் தோன்றுவதற்கு வழி எங்கே?

பிறர்க்குப் பயனுண்டாகும்படி இனிமையாகப் பேசுபவ ரிடம், பிறரும் நயமுடன் (இனிமையாக) நடந்து, நன்றி யறிதலாக நன்மை பல செய்வர். நாம் கடுமையாயிருந்தால் பிறரும் கடுமையாகவும், நாம் இனிமையாயிருந்தால் பிறரும் இனிமையாகவும் பழகுவது உலக இயற்கைதானே! எட்டி விதைத்தவர் எட்டிக்கனியைத்தான் பெறமுடியும்! கரும்பு நட்டவன் கருப்பங்கட்டியைப் பெறமுடியும்!

இன்சொல் பேசியவர் இருக்கும்போதும் - இறந்த பின்னும் நன்மையும் புகழும் பாராட்டும் பெறுவர். அவ்

வின்சொல் இருக்கும்போதும் பிறர்க்குப் பயனளித்து, இறந்த பின்னும் வழிவழியாக உலகினர்க்கு உறுதி பயக்கும். திருவள்ளுவர் வாழ்ந்த போதும் - மறைந்த பின்னும் அவர் சொல்லாகிய திருக்குறள் அவர்க்கும் சிறப்பளித்துக் கொண்டு, உலகினருக்கும் உய்வழியளித்து வருகின்றதன்றோ? அதுபோல!

**''அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.''**

**''நயனீன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்.''**

**''சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பம் தரும்.''**

பிறர் நம்மிடம் கடுமையாகப் பேசினால் நமக்குப் பிடிப்பதில்லை. இனிமையாகப் பேசுவதை மட்டுமே விரும்புகின்றோம். நமக்கு இருப்பதைப் போலத்தானே பிறர்க்கும் இருக்கும்? அப்படியிருக்க, நாம் மட்டும் பிறரிடம் வன்சொற்களைப் பேசலாமோ?

வன்சொல்லோடும் இன்சொல்லோடும், கசப்புள்ள காஞ்சிரங்காய், வேப்பங்காய் முதலியவற்றையும் இனிப் புள்ள வாழைக்கனி, பலாவின்கனி, மாங்கனி முதலிய வற்றையும் ஒத்திடாவிடினும் ஒரே மரத்தின் காயையும் கனியையுமே ஒத்திட்டு நோக்குவோம். பசிக்குத் தின்ன விரும்புபவன், வாழைக்காயை விரும்புவானா - கனியை விரும்புவானா? மாங்காயை விரும்புவானா - கனியை விரும்புவானா? கனியை விரும்பாது காயை விரும்புதல்

இயற்கைக்கு மாறுபட்டதோடு அறியாமை நிறைந்த செயலும் ஆகுமல்லவா? இன்சொல்லைவிட்டு வன்சொல் பேசுதலும் இத்தகைய அறியாமையே.

**''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.''**

**''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.''**

# 7. செய்ந்நன்றி யறிதல்

தனக்குப் பிறர் செய்த நன்றியை - உதவியை மறவாமல் உணர்ந்து அதற்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும். நன்றியை மறக்கக் கூடாது - தீமையை மறந்துவிடுதலே நலம்.

உலகத்தில் பலர் தமக்கு உதவி செய்பவர்களுக்குக் கூட பதிலுதவி செய்வதில்லை. உதவி செய்யாததோடு அமைந்தால் போதுமே! தீங்கும் செய்கின்றார்கள். இது கூடாது. இத்தகைய இவ்வுலகில் ஓர் உதவியும் செய்யா தவர்க்கு உதவி செய்தல் என்பது அருமையினும் அருமை யன்றோ? அவ்வுதவியின் அளவுக்கு ஒப்பாக மண்ணையும் விண்ணையும் காண்பிப்பினும் போதாது. கைம்மாறாக அளிக்க வேண்டுமாயின், அவ்வுதவியின் அளவுக்கு இவை யிரண்டும் ஈடாகா. எனவே மிகச் சிறந்தது அவ்வுதவி என்பது போதரும்.

சில சமயங்களில் நடுப்பாதையில் நடந்து கொண்டி ருக்கும்போதே சிலர் மயங்கி விழுவதுண்டு. அப்போது அந்நிலையைக் கண்டவர், ஓடிச் சிறிது தண்ணீர் கொண்டு வந்து, விழுந்தவர் முகத்தில் தெளித்துப் பருகவும் செய்த போது, விழுந்தவர் சோர்வு நீங்கி உயிர் பிழைக்கிறார். அந்த விலையில்லாத - எளிய வெறுந் தண்ணீரின் அளவு சிறிதாயினும் அது உயிர் அளித்தது. அவர் விழுந்து

கிடக்கும் போது தற்செயலாய் அவ்வழியே வந்த அரச னொருவன் அவரை நோக்கி 'இவர் பிழைத்தெழுந்ததும் என் நாடு முழுமையும் பெற்றுக் கொள்ளலாம்' என்று நாட்டையே கொடுப்பதாகக் கூறினாலும் பிழைப்பாரா? எனவே, ஆபத்தில் செய்த உதவி அணுவளவு என்றாலும் அது அண்டத்தினும் பெரிது எனக் கொண்டு போற்ற வேண்டும்.

உலகில் பல மக்கள் ஒருவர்க்கொருவர் உதவுவது பண்டமாற்று வாணிகம் போலவே உள்ளது. சில செல்வர்கள் தம் வீட்டிற்கு ஏழைகள் வந்தால் பாராமுக மாயிருந்து, தம்மையொத்த செல்வர்கள் வந்தால் போற்றிப் பேணுகின்றனர். ஏன்? தாம் செய்வதுபோல் திருப்பித் தமக்குச் செய்ய ஏழைகளால் முடியாது; செல்வராலே முடியும் என்ற காரணத்தினாலன்றோ? மற்றும் பெரும் பாலான மக்களும் பதிலுதவி செய்யக் கூடியவர்க்கே உதவுவதைக் காண்கின்றோம். எனவே, இதனைக் கம்பு தந்து கேழ்வரகு மாற்றிக் கொள்ளும் பண்டமாற்று வாணிகத்தோடு ஒப்பிடுவதில் என்ன தவறு? சிலர் பதிலுதவியை எதிர்பார்க்காவிடினும், பிறர் தம்மைப் பெருமைப்படுத்திப் புகழ்வதற்காகவும் உதவுவது உண்டு. இதற்குத்தான் அறநிலை **வாணிகம்** என்று பெயராம். அதாவது அறத்தை புண்ணியத்தை – புகழை – விலைப் பொருள் தந்து பெறும் வாணிகமாகும். இஃதும் அத் துணைச் சிறந்ததன்று. எனவே, எந்தப் பயனையும் எதிர்பார்க்காது செய்யும் உதவி கடலினும் சிறந்ததாம். ஆகவே, உதவி செய்பவர் கைம்மாறு கருதாது காலத்தில்

செய்ய வேண்டும். உதவி பெறுபவர் அதனை மறக்கக் கூடாது.

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது".**

**"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது".**

**"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது".**

தன்னிடத்துள்ள நீரை ஆவியாக மாற்றி மேகமாக்கி உலகிற்குப் பயனளித்து மீண்டும் மழையின் மூலமாகவும் ஆற்றின் வாயிலாகவும் அந்நீரைத் தன்னிடத்தே பெற்றுக் கொள்கின்ற கடலைக் காட்டிலும் இக்கைம்மாறு கருதாத உதவியே சாலச் சிறந்தது என்று அறிவித்து, இலக்கியச் சுவை நம் உள்ளத்தில் ஊற்றெடுக்கச் செய்த திருவள்ளுவர் திறமைக்கு நாமென்ன கைம்மாறு செய்ய முடியும்? அவரும் நம்மிடத்துக் கைம்மாறு ஒன்றும் கருதவில்லை யன்றோ?

ஒருவர் தினையளவு சிறிய உதவி செய்தாலும் அச்சிற்றுதவியைப் பல மடங்கு பெரிய பனை யளவாக எண்ணிக் கொண்டாட வேண்டும். தினையின் சிறுமை எங்கே? பனையின் பெருமை எங்கே? தினையளவு நன்றியைப் பனையளவாகக் கருதுபவர் ஒருவர் உள ரென்றால், அவ்வர் அதன் பயனை மிக மிக உய்த்துணர்ந் துள்ளார் என்பது விளங்கும்.

எடுத்துக்காட்டாக: பயன் அளவில் சிறு பாம்பு ஒன்றைச் சிங்கத்தினும் சிறிதாக நாம் கருத முடியுமா?

சிங்கம் செய்யும் கொலையொன்றைச் சிறு பாம்பொன்றே செய்யக் கூடும் அல்லவா? எனவே பனையளவு நன்மையைத் தினையளவு உதவி ஏன் உண்டாக்க முடியாது? ஐந்து காசைக் கொண்டு ஐம்பதினாயிரம் காசு ஈட்டுதல் போல், தினையளவு உதவியைக் கொண்டு பனையளவு நன்மையை வளர்த்துக் கொள்பவர்களே பயன் ஆராயும் அறிவாற்றல் உடையவர்கள்.

ஒருநாள் காலையில் நம் வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வருகிறார். சிறிது நேரம் உரையாடிவிட்டு விரைவில் போக வேண்டுமென்கிறார். அதற்குள் சிற்றுண்டி செய்யப்படவில்லை. ஆதலின் அவரே விரும்பிக் கேட்டுப் "பழையது" சாப்பிட்டுச் செல்கிறார். அவர் சென்ற வுடனே மற்றொருவர் வருகிறார். அவருக்கு 'உப்புமா' செய்து படைக்கிறோம். அவர் வேண்டா வெறுப்புடன் உண்டுவிட்டு, 'கோதுமையும் கிழங்கும்தாம் வீட்டில் இருக் கின்றனவே! பூரிகிழங்கு செய்து போட்டால் என்ன குடிமுழுகிப் போய்விடுமாம்' என்று அண்டை வீட்டில் சொல்லிப் போகிறார். இவ்விருவருள் யாருக்குப் படைத்த உணவு எளியது. யாருக்குப் படைத்த உணவு சற்று உயர்ந்தது? யார் தமக்கு இட்ட உணவைப் பெரிதெனப் போற்றினார்? யார் தமக்கு இட்ட உணவைச் சிறிதெனத் தூற்றினார்? எனவே, நாம் பிறர்க்குச் செய்யும் உதவி அதைப் பொறுத்தில்லாமல், அதனைப் பெற்றுக் கொண்ட வரின் குணத்தைப் பொறுத்தே போற்றுதற்கோ அல்லது தூற்றுதற்கோ உரியதாயுள்ளது. எனவே, ஒருவர் செய்த நன்றி சிறிதாயினும் அதனைப் பெரிதாக மதித்துப் போற்ற வேண்டும்.

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்."**

**"உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து."**

குற்றமற்ற நல்லோர் நம்மிடம் காட்டிய அன்புக் கண்ணோட்டத்தை என்றும் மறத்தலாகாது. அது போலவே, துன்ப நேரத்தில் உதவியவர் தொடர்பையும் துறத்தலாகாது. அன்னாரது உதவியின் அருமையினை ஏழேழு தலைமுறை களிலும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு."**

**"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு."**

உதவி செய்த குடும்பத்தை உதவி பெற்ற நல்ல குடும்பம் தலைமுறை தலைமுறையாக மதித்துப் பாராட்டியும் அன்பு பூண்டும் பதில் உதவி செய்து வருவதும் வழக்கந் தானே! தமக்குத் தீங்கு செய்த ஒருவனை நோக்கி, தீங்கு செய்யப்பட்டவர், "இவன் ஏழேழு (நாற்பத்தொன்பது) தலைமுறைக்கும் உருப்படுவானா?" என்று வசைபாடும் உலக வழக்கையொட்டி, ஈண்டு "எழுமை எழு" என்பதற்கு ஏழேழு (49) என்று பொருள் உரைக்கப்பட்டது. ஒருவன் ஏழேழு தலைமுறைகட்கும் உருப்பட மாட்டான் என்றால், கெட்டவனான அவன் வழித் தோன்றும் நாற்பத்தொன்பது தலைமுறையினரும் இழிக்கப்படுவர் என்பது தானே பொருள்! எனவே இது, ஒன்றைச் சிறிது மிகைப்படுத்திக் கூறும் "உயர்வு நவிற்சியணி"யேயாகும். இக்குறளையும்

இதுபோலவே கொள்க. அஃதாவது ஒருவரிடம் உதவி பெற்ற நல்லவரின் நாற்பத்தொன்பது பரம்பரைகள், உதவி செய்தவரின் நாற்பத்தொன்பது பரம்பரைகளைப் பாராட்டும் என்பதாம். நாற்பத்தொன்பது என்பதுவே அறுதியிட்ட உறுதிக் கணக்கன்று. 'பல்லாண்டுகள்' என்பதன் பதில் மொழியே (பிரதிநிதிச் சொல்லே) "எழுமை எழு" என்பதாம்! 'ஒரு மனிதன் தான் இறந்தாலும் தன் மகனிடத்தில் மறைந்து வாழ்கிறான்' என்ற கருத்தை 'ராபர்ட் புருக்' (ஆங்கில ஆசிரியர்) போன்ற பல அயன் மொழிப் புலவர்களும் உரைத்துள்ளனரன்றோ? அம்மகன் அவன் மகனிடத்தில் வாழ்வான். அவன் அவன் மகனிடத்தில் வாழ்வான். இப்படியே முன்னோன் தன் பரம்பரையுள் மறைந்து வாழ்ந்து வருகிறான். ஏன், நம் முன்னோர் நம்முள் வாழ்கின்றனரன்றோ? நம் குடும்ப முன்னோரை எவரேனும் குறைத்துப் பேசினால் நமக்கு எப்படி இருக்கிறது? இக்கண்கொண்டு, திருவள்ளுவர் கூறும் 'எழுபிறப்பு' 'எழுமை எழுபிறப்பு' என்னும் தொடர்களை நோக்குங்கள்! தெளிவு எளிதில் கைவரப்பெறும்.

ஒருவர் தீமையே செய்யாமல் எத்துணை நன்மைகள் செய்தாலும், அவற்றுள் ஒன்றையும் மறக்கவே கூடாது. மற்றொருவர் நன்மையே செய்யாமல் எத்துணை தீமைகள் செய்தாலும், அவையனைத்தையும் செய்த அவ்வப் போழ்தே மறந்து விட வேண்டும். ஒருவரே நன்மையும் தீமையும் மாறி மாறிச் செய்தாலும், தீமைகளையெல்லாம் செய்த அவ்வப்போழ்தே மறந்துவிட்டு, நன்மைகளை எல்லாம் மறவாமல் நினைவு கூர்தல் வேண்டும்.

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு" என்பது ஏசுநாதரின் பொன்மொழி. ஆனால் மறு கன்னத்தைக் காட்டுவதென்றால் முதல் கன்னத்தில் அடித்த குற்றத்தை மறவாமல் நினைவில் வைத்துக் கொண்டிருந்ததாகத்தானே பொருள்படும்? அந்நினை வில்லையாயின் மறு கன்னத்தை எங்ஙனம் காட்ட முடியும்? மேலும், மறுகன்னத்தைக் காண்பித்தால், அடிப்பவனுக்குக் கன்னத்தை மீண்டும் காட்டுபவன் மேல் மிகுதியாகச் சினம் மூளக் கூடும். ஆதலின் அவ்விதம் மறுகன்னத்தைக் காட்டாமல், முதல் கன்னத்தில் அடித்த தாகவே உணராமல்–அஃதாவது அதைப் பற்றிய நினைவே இல்லாதவனாகக் காணப்பட்டு, அடித்தவன் முன்பு தனக்கோ அல்லது பிறர்க்கோ செய்துள்ள ஏதேனும் நன்மையொன்றினைக் குறிப்பிட்டு அவனைப் பாராட்டத் தொடங்கி விட்டால் அவன் வெட்கித் தலைகுனிவான்.

அஃதாவது, நமக்குப் பிறர் கொலை போன்ற எத்தகைய கொடிய துன்பம் இழைத்தாலும், உடனே முன்பு அவர் செய்துள்ள ஒரு நன்மையை நாம் நினைத்தோ மானால், அத்துன்பம் உடனே மறந்து போகும். போகவே, இருதிறத்தார்க்கிடையிலும் மறம் நீங்கி அறம் தவழும்.

> **"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
> **தன்றே மறப்பது நன்று."**

> **"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
> **ஒன்றுநன் றுள்ளக் கெடும்."**

உலகில் ஒருவர் எத்தீமை செய்தாலும் ஓரளவு உருப் படலாம்; ஆனால் பிறர் செய்த நன்மையை மறந்து

அவர்க்கே கேடு சூழ்ந்தால் உருப்படவே முடியாது. இந்தக் கருத்து புறநானூறு (செய்யுள் - 34) போன்ற பல தமிழ் இலக்கியங்களிலும் கையாளப்பட்டுள்ளது.

உலகில் ஒருவன் எத்தகைய தீமையைச் செய்தாலும், அதற்கேற்ற - குறிப்பிட்ட தண்டனையை மக்களாலோ அரசியலாராலோ பெறுகின்றான். இந்தத் தண்டனை அவனது குற்றத்திற்கு ஈடு செய்கிறது. தண்டனை முடிந்ததும், மீண்டும் மக்களின் ஒத்துழைப்பையும் - உதவியையும் ஓரளவு பெற முடியும். ஆனால், உதவி செய்தவர்களையே ஒழித்துக் கட்டிய - நன்றி கொன்ற கீழ்மகன், சிறைக்குச் சென்று தண்டனையை முடித்து வந்தாலும், மீண்டொரு முறை அவனுக்கு எவரேனும் ஒத்துழைப்பு தருவார்களா? அவனிடம் வாணிகம் செய்வார்களா? எள்ளத்தனைதான் அவனை நம்புவார்களா? நன்மை செய்தவர்க்கே தீமை செய்த கயவன் பிறரை என்ன செய்வானோ? என்று மக்கள் அவனை எண்ணினாலுமே அருவருக்க மாட்டார்களா? இத்தகைய சூழ்நிலைக்கிடையில் அவன் எங்ஙனம் உய்யமுடியும்? சுருங்கச் சொல்லி விளங்கவைக்க வேண்டுமென்றால், நுனிக்கிளையில் இருந்து கொண்டு, தன்னைத் தாங்கும் அடிக்கிளையை வெட்டுபவனுக்கு உய்வுண்டோ?

**''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''**

எனவே, இல்லறத்தார்கள் எப்போதும் செய்ந்நன்றி மறத்தலாகாது.

# 8. நடுவு நிலைமை

இல்லறத்தார்க்கு நடுவு நிலைமையும் வேண்டும். நடுவு நிலைமை என்றால், எல்லோர்க்கும் பொதுவாக நடக்கும் நேர்மை. நீதி வழங்கல், பொதுத்தொண்டு புரிதல் கடமையாற்றல், அறநெறி நிற்றல் முதலியவற்றில், நண்பர் பகைவர், உறவினர் - அயலார் என்பவருள் ஒருவர்க் கொருவிதமாயும், மற்றொருவர்க்கு மற்றொருவிதமாயும் (ஓரவஞ்சனை) இல்லாமல், எல்லோர்க்கும் பொதுவாக நடந்து கொள்ளவேண்டும்.

**''தகுதி எனவொன்று நன்றே பகுதியால்**
**பாற்பட் டொழுகப் பெறின்.''**

உலகில் மக்கள் இந்தியன் — அமெரிக்கன், வங்காளி – தமிழன் எனப் பல காரணங்களால் பிளவு பட்டிருக்கின்றனரன்றோ? பிளவுபட்ட ஒவ்வொருவரும் பொதுச் செயல்களில் தத்தம் பிளவை மறந்து மனித நீதிக் கிணங்க நடுநின்று ஒத்து வாழ வேண்டும் என்னும் உயர்ந்த கருத்தை இக்குறளைக் கொண்டு உலகினர் உணரவேண்டும். ஈண்டு, தகுதி என்பது நேர்மையான நடுநிலையைக் குறிக்கின்றது.

நேர்மையுடையவனது செல்வம், அவனுக்கு வசதி செய்து தருவதோடு, அவனது பரம்பரையிலும் நிலைத்து நின்று அனைவர்க்கும் பயன்படும். நேர்மையுடையவனது செல்வ வளர்ச்சிக்கு, அவன் நேர்மை கருதிப் பிறரும்

தடையுண்டாக்க மாட்டார்கள். நேரியவனாதலின் அவனும் அழிக்கமாட்டான். அவன் பரம்பரையினரும் நேர்மையுடன் இருப்பர். ஆதலின் பிற்காலத்தும் அச்செல்வ வளர்ச்சிக்கு யாதொரு தடையும் இராது.

கையூட்டு (லஞ்சம்) பெற்றுக்கொண்டு பொய்ச்சான்று (சாட்சி) கூறியும், ஓரவஞ்சனையாகத் தீர்ப்புச்செய்தும் ஒருவர்க்கு உரியதை மற்றொருவர்க்குரியதாக்கியும் வாழ் பவர்கள், அக்கையூட்டுப் பொருளால் தாம் ஆடம்பரமாக வாழ முடியும் என்றாலும், உலகினர் இழித்துத் தூற்றுவர் ஆதலானும், அரசு அறியின் ஒறுக்கும் ஆதலானும், பின்பு இயற்கையான ஊதியத்திற்கே உலை நேரும் ஆதலானும் நடுநிலை தவறி ஈட்டும் பொருள் கூடாது.

> **"செப்பமுடையவ னாக்கம் சிதைவின்றி**
> **எச்சத்திற் கேமாப் புடைத்து"**
>
> **"நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை**
> **அன்றே யொழிய விடல்"**

ஒருவர் நல்லவரா — கெட்டவரா என்பதை அவருடைய பிள்ளையைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். 'மகனறிவு தந்தையறிவு', தாயைப் போலப் பிள்ளை', 'தாயெப்படி மகள் அப்படி', 'தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்கவேண்டியதில்லை', 'விரையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா?', 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' முதலிய பழமொழி களை ஒப்பிட்டு நோக்கின் பெற்றோரின் குணமே பிள்ளைக்கும் இருக்கும் என்னும் விஞ்ஞான உண்மை புலனாகும்.

''தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.''

“இவர் நடுவு நிலைமையுடையர், இவர் நடுவு நிலைமையிலர் என்னும் விசேடம், அவரவருடைய நன் மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும். தக்கார்க்கு எச்சம் உண்டாதலும் தகவிலார்க்கு இல்லை யாதலும் ஒருதலை (நிச்சயம்) ஆகலின் இருதிறத் தாரையும் அறிதற்கு அவை குறியாயின'' — என்று பரிமேலழகர் உரை யெழுதியுள்ளார்.

நேருக்கு நேர் விஞ்ஞான முறையில் இக்குறள் அமைந் திருக்க, ஈண்டுப் பரிமேலழகர் பாவ – புண்ணியங்களைக் குறிப்பாகப் புகுத்தியிருப்பது இரங்கத்தக்கதாகும். அஃதாவது நல்லவர்க்குத்தான் பிள்ளை பிறக்குமாம்; கெட்டவர்க்குப் பிள்ளை பிறக்காதாம். எவ்வளவு அறியாமை! (சிரிக்கா தீர்கள்!) இஃது உறுதியாயின், உலகில் ஏறத்தாழ நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்திற்கு (90%) மேற்பட்டவர் கட்குப் பிள்ளை பிறக்கின்றதைக் காண்கின்றோமே! இவர்கள் எல்லோருமே நல்லவர்கள்தாமா? சிறைக்குச் செல்லும் குற்றவாளிகட்கு மட்டுமே பிள்ளையில்லை போலும்! மேலும், திருமணமாகாத துறவிகள், மணமாகியும் குழந்தை பெறாத வர்கள் முதலியோர் கெட்டவர்கள் — இவர்களையும் சிறையில் தள்ளவேண்டும் அல்லவா?

பரிமேலழகர் கூறியிருப்பது இப்பிறவியில் நல்லவராயோ கெட்டவராயோ இருப்பதைப் பற்றி யன்று; முன் பிறவியில் நல்லவராயிருந்தவர்க்கு இப்பிறவியில் பிள்ளை பிறக்கும்–முன் பிறவியில் கெட்டவராயிருந்தர்க்கு இப்பிறவியில் பிள்ளை

பிறக்காது, என்பதுதான் பரிமேலழகரின் கருத்து என்று சிலர் சப்பைக்கட்டு கட்டிப் பரிமேலழகரைப் பாதுகாக்க விரும்பலாம். இ∴து பரிமேலழகரின் கருத்தாயிருக்கலாம்; ஆனால் வள்ளுவர் கருத்தாமோ? "மக்களே, எல்லீரும் உம் வாழ்நாளில் (இப்பிறவியில்) தகுதி—நடுநிலை உடைய வராக வாழவேண்டும். நீங்கள் அப்படி வாழ்ந்தால்தான் உங்கட்குப் பிறக்கும் பிள்ளையும் ஒழுங்காய் இருக்கும். பின்பு பிள்ளையைக் குறை கூறி என்ன பயன்? நீங்கள் தவறி நடந்திருந்தால் உங்கள் பிள்ளையும் தவறி நடப்பான்; அதனால், நீங்கள் நல்லவர்போல் நடித்தாலும், நீங்கள் இருக்கும்போதும் சரி—நீங்கள் இறந்த பின்னும் சரி—உங்கள் மானத்தை வாங்கிவிடுவான்; ஆதலின் மக்களே, எல்லீரும் நேர்மையுடன் வாழ்க!" என்பதே திருவள்ளுவரின் கருத்து. ஒரு பெண் ஒழுங்காகக் குடும்பம் செய்யவில்லை யென்றால் முதலில் பெற்றோருக்குத்தானே வசை!

வாழ்வில் யார்க்கும் இன்ப — துன்பங்கள் மாறி மாறி வருவது என்றும் எங்கும் இயற்கை. ஆதலின் இன்பக் காலத்தில் இறுமாப்புறுதலும் துன்பக் காலத்தில் கலங்கு தலும், மக்களிடம் இன்பக் காலத்தில் ஒருவிதமாக நடந்து கொள்வதும் துன்பக் காலத்தில் ஒருவிதமாக நடந்து கொள்வதும் அறவே கூடா. மனம் என்றும் எங்கும் ஒரே அமைதி நிலையில்—நடுநிலையில் இருக்கவேண்டும். இப் பண்பு சிறந்த அணிகலனாகும்.

உலகில் பலர், தாம் செய்வன தீய காரியங்கள் என்பதைத் தம் மனம் அறியத் தெரிந்துவைத்துக் கொண்டே தன்னலங் கருதிச் செய்கின்றார்கள். அப்படிச்

செய்வதால் அப்போது நன்மையுண்டாவதுபோல் தோன்றினாலும், பின்னர் எல்லோராலும் அறியப்பட்டும்—இகழப்பட்டும் — தண்டிக்கப்பட்டும் கெட்டொழிவர். இதனை ஒவ்வொருவரும் உணரவேண்டும். நேர்மையற்ற செயலைப் பிறர்அறியாது போயினும் தம்மனமே தம்மைச் சுடுமன்றோ? அதற்கு என்ன ஆறுதல் செய்வது? மனம் புழுங்கிப் பித்துப் பிடித்துவிடும் அல்லவா?

பலர் நேர்மை தவறி நடப்பதால் பெரும் பொருள் ஈட்டி இன்பம் துய்க்கின்றனர். சிலர் நேர்மை தவற மனம் ஒவ்வாமையால், போதிய பொருளீட்ட முடியாது வறுமையிலேயே மூழ்கிவாடுகின்றனர். ஈண்டு உலகத்தாரால் பாராட்டப்பெறுவது நேர்மையற்றவனின் செல்வமா? அல்லது நேர்மையுற்றவனின் வறுமையா? பின்னதேயன்றோ?

நேர்மையற்ற செல்வன் ஆடம்பரமாக உலா வருவதைக் காணும் மக்கள், அவனை நோக்கி, "இதோ கள்ள வாணிகக்காரன் (பிளாக் மார்க்கெட்) வருகிறான்; பணமுட்டை வருகிறான்; கைந்நீட்டி (இலஞ்சம் வாங்கி) வருகிறான்; ஊர்த் தாலியை அறுத்தவன் வருகிறான்" என்றெல்லாம் எருக்கமாலை (இகழ்மாலை) சூட்டித் தூற்றுவதைக் காண்கின்றோமல்லவா? அதே நேரத்தில், நேர்மையுற்ற ஏழை எளிய தோற்றத்தில் வருவதைக் காணும் மக்கள், அவனை நோக்கி, "ஐயோ, நல்ல மனிதர்! நல்ல காலம் இல்லை! ஒரு துரும்பையும் தொடமாட்டேன் என்கிறார். இவர் மட்டும் பணம் வாங்குவது பணம் சேர்ப்பது என்று ஆரம்பித்தால் ஒரே நொடியில் குபேரனாகி விடலாம்! அதுதான் இவரது

அகராதியில் இல்லையே? அப்படியிருப்பதனால்தான் இவரை நாம் புகழ்கிறோம்'' என்று புகழ்மாலை சூட்டுவதையும் காண்கிறோமல்லவா? இதைத்தான் வள்ளுவர் சுருக்கி, 'நேர்மையுள்ளவனுக்கு அந்நேர்மையால் வந்த வறுமையை, உலகத்தார் உண்மையான வறுமையாகக் கொள்ள மாட்டார்கள்' என்று அறிவித்துப் போந்தார்.

> ''கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
> கோடாமை சான்றோர்க் கணி''
>
> ''கெடுவல்யான் என்ப தறிகதன் னெஞ்சம்
> நடுவொரீஇ அல்ல செயின்.''
>
> ''கெடுவாக வையா துலகம் நடுவாக
> நன்றிக்கட் டங்கியான் றாழ்வு''

துலாக் (நிறை) கோல் தான் சமமாகி, தன்னிடம் வைக்கப்பட்டுள்ள பொருளின் நிறையினையும் தவறின்றி உள்ளபடியறிவிப்பதைப் போல, மக்களும் தாங்கள் தவறின்றி நடந்து, பிறருடைய குற்ற நற்றங்களையும் ஓரவஞ்சனையின்றி உள்ளபடிச் சீர்தூக்கிப் பார்த்து அதற்கு ஏற்றன செய்தல் வேண்டும். அதுதான் அறிவும் அழகும் உடையவர்களின் அறிகுறி.

> ''சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ
> லமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி.''

ஈண்டுத் திருவள்ளுவர், 'சீர்தூக்கும் கோல் போல்' என்று மட்டும் சொல்லி விடவில்லை. 'சமன் செய்து' என்று முதலில் அதன் ஒழுங்கை வற்புறுத்தியுள்ளதை ஊன்றி நோக்குக! சிலவணிகர்களின் கெடுமதியைத்

(அயோக்கியத்தனத்தை) திருவள்ளுவரும் உணர்ந்திருப்பாரல்லவா? சிலருடைய நிறை கோல்கள் தூயனவாயிரா. அவர்கள் பிறரிடமிருந்து ஒன்றே கால் தூக்குப் பொருளை ஒரு தூக்காக நிறுத்து வாங்கிக் கொள்வர். தாம் பிறருக்கு விற்கும் போது அதே நிறை கோலால் முக்கால் தூக்கை ஒரு தூக்காக நிறுத்துக் காட்டி விற்பார்கள். வாங்கிய விலையைக் கூட்டி விற்பதால் உண்டான ஊதியத்தோடு, அரைத் தூக்குப் பொருளும் மறைமுகமாகக் கூடுதலாகக் கிடைக்கின்றதல்லவா? இது இன்றும் நடைபெறுகின்றது. இனியும் - என்றும் - ஏன் மனிதன் உள்ள வரையும் நடக்கும். ஆ! கொடுமை! இதுபோலவே சில அரசியல் அலுவலாளர்கள் உள்ளனர். இவர்களும் வேண்டியவர் என்பதற்காகவும், பணத்திற்காகவும் நெறி தவறி நடப்பார்கள். தூய்மையற்ற துலாக்கோலனிடம் பொருளை விற்றவன் - வாங்கியவன் என்னும் இரு திறத்தாரும் கால் - கால் தூக்கையிழப்பதைப் போல, இவர்களிடமும் மாறுபட்ட இரு திறத்தார் பொருள் கொடுத்து ஏமாந்து போதலும் உண்டு. இந்த முதலைகள் இருபக்கங்களிலும் - இருகைகளாலும் பணம் பெறுவார்கள். முடிவு என்ன? குரங்கு அப்பம் பங்கிட்ட கதைதான் தெரியுமே! உனக்கும் பே! பே! ! உன் அப்பனுக்கும் பே! பே ! என்று கூறி உதறித் தள்ளி விடுவார்கள். இத்தகைய சூழ்நிலை மக்களிடையே கூடாது. ஒழுங்கான நிறை கோல் போன்று ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்பது கருத்து.

சிலரைப் பேசும்போது பார்த்தால் சிறந்த நேர்மையாளர் போல் காட்சியளிக்கின்றனர் அல்லவா? அவ்

வெறும் வெளிப் பேச்சைக் கொண்டு அவர்கள் நடு நிலைமையுடையவராக மாட்டார்கள். அவர்களின் மனம் உண்மையாய் வஞ்சனையின்றி இருக்கவேண்டும். உள் ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல், உள்ளமும் - பேச்சும் ஒத்தனவாயிருப்பதே நடுநிலைமைக்கு அணி செய்வதாகும்.

**"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்டம் இன்மை பெறின்"**

வணிகர்கள் (வியாபாரிகள்) பிறருடைய பொருளையும் தம் பொருளைப் போலவே கருதி வாணிகம் செய்தால், அவர்கட்கு நன்றாக வாணிபம் நடைபெறும்.

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவுந் தமபோற் செயின்."**

பிறர் பொருளையும் தம் பொருள் போல் கருதுதல் என்றால் - பிறருடைய உடைமைகளையெல்லாம் தம் சொந்த உடைமையாகக் கருதிப் பறித்துக் கொள்ளுதல் என்பது பொருளன்று. வணிகர்கள் தம் உடைமையை எங்ஙனம் பாதுகாப்பார்களோ, அவ்விதமே பிறர் உடைமை யையும் காத்து அவர்கட்குச் சரியான கணக்கு ஒப்புவிக்க வேண்டும்; தம் உடைமையைத் தாம் இழக்க நேரிடின் தாம் எவ்வாறு வருந்துவார்களோ - அவ்விதமே பிறர் உடைமையைப் பிறர் இழந்தாலும் அவர் வருந்த நேரிடும் என்பதை யுணர்ந்து தாம் அவர் உடைமையில் வஞ்சகம் செய்யாது, நேர்மையில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். இதற்குத்தான் 'பிறவும் தமபோல் பேணிச் செயல்' என்று பெயராம். பிறரிடம் தாம் வாங்கும் பொருள்

அளவுக்கு மிகுதியாகவும், பிறருக்குத் தாம் விற்கும் பொருள் அளவுக்குக் குறைவாகவும் இருப்பின் அவரிடம் எவரும் தொடர்ந்து வாணிகம் செய்ய மாட்டாரன்றோ? தம் பொருளும் – பிறர் பொருளும், கொடுக்கலும் – வாங்கலும் நடுநிலைமையுடன் பேணப் பட்டால்தானே அவருடைய வாணிகம் மேன்மேலும் வளர்ச்சியடையும்?

**''தமவும் பிறவும் ஒப்ப நாடிக்**
**கொள்வதூஉம் மிகை கொளாது**
**கொடுப்பதூஉம் குறைபடாது**
**பல் பண்டம் பகர்ந்து வீசும்.''**

என்னும் 'பட்டினப் பாலை' நூலின் அடிகளையும் ''பிறர் பொருளும் தம போல் பேணிப் புரிவணிகர்'' என்னும் 'பிரபுலிங்க லீலை'ப் பகுதியினையும் ஈண்டு ஒத்து நோக்குக.

# 9. அடக்க முடைமை

எண்ணத்தில் அடக்கமும் (மனம்), பேச்சில் அடக்கமும் (மொழி), செயலில் அடக்கமும் (மெய்) உடையவராய் இருத்தல் வேண்டும். நடுவுநிலைமையைப் போல் இஃதும் இல்வாழ்வார்க்கு இன்றியமையாததன்றோ?

**"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்"**

அடக்கமுடையவர் தெய்வமாகி எல்லோராலும் போற்றப்படுவர். அடக்கமில்லாதவர் தம் அடாத குணத்தால் இருட்டில் ஆழ்ந்து அழிவர். இறவாத நிலையை உடையவருக்கு அமரர் என்று பெயராம். செத்தவர்களைத் தெய்வம் எனல் வழக்கம். "செத்துத் தெய்வமாகப் போய் விட்டார்" என்னும் உலக வழக்கைக் கொண்டு இதனை யோர்க! ஆராயின், அமரர்-தெய்வம் என்னும் இரு சொற்களும் ஒரு பொருளனவே! அப்பொருள்:- பூதவுடம்பை நீத்துப் புகழ் உடம்புடன் உலகில் என்றும் நின்று நிலைத்திருப்பவர்கள் என்பதாம். மன - மொழி - மெய் யடக்கத்துடன் வாழ்ந்து இறந்துபோனவர்களை நாம் தெய்வமாகக் கருதி வழிபடல் இன்றும் வழக்கந்தானே?

மற்று, இருட்டில் உள்ள பொருளை நாம் அறிய முடியாதன்றோ? அதுபோலவே, அடக்கமில்லாதவர் இறந்தபின்பு, அவர்க்குப் புகழுடம்பு இல்லையாதலின் அவரைப்பற்றி யாரும் அறிந்து கொள்ள முடியாது. ஆதலின்

அவர்கள் இருளில் மறைந்து விடுவார்கள் என நயம்பட நவின்றுள்ளார் நம் திருவள்ளுவர்.

அடக்கமுடையவனையே எங்கும் - என்றும் - யாரும் கொண்டாடிப் போற்றி உதவியும் புரிவாராகலின் அடக்கம் ஒரு சிறந்த பொருளாகும். ஆதலின் அதனை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். அடக்கம் இல்லாதவரின் நிலை தான் தெரியுமே!

கூரிய அறிவுத் திறமையினால் அறியவேண்டு வனவற்றை அறிந்தும் நன்முறை நடக்கையோடு நல்லடக்கம் பூண்டும் ஒழுகுபவரை அவருடைய திறமை யோடு அடக்கத்திற்குள்ள கூட்டுறவை நோக்கி உலகத்தார் பாராட்டுவர்.

**"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு"**

**"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின்"**

நிலை தடுமாறாது அடங்கியொழுகுபவனது தோற்றம் மலையின் தோற்றத்தினும் சிறந்ததாம்.

**"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது."**

தனது நிலையிற் கெடாதே அடங்கினவனது உயர்ச்சி மலையினும் மிகப் பெரிது என்பது மணக்குடவர் உரை.

இல்வாழ்க்கையாகிய தன்னெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி மலையின் உயர்ச்சியினும் மிகப் பெரிது என்பது பரிமேலழகர் உரை.

இக்குறளின் முழுக்கருத்தையும் எவ்வுரையாசிரியரும் எடுத்துக் காட்டினாரிலர். தோற்றம் என்பதற்குப் பொருளாக உயர்ச்சி-உயர்ச்சி என்று மட்டுமே உரையாசிரியர் பலரும் உரைத்துள்ளனர். பவணந்தி முனிவர் தமது நன்னூலில் மலையின் இலக்கணத்தை,

> **"அளக்க லாகா அளவும் பொருளும்**
> **துளக்க லாகா நிலையும் தோற்றமும்**
> **வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே."**

என்றுகூறி இம்மலையைப் போன்றவர்கள் நல்லாசிரியர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஈண்டு இமயமலையினையே எடுத்துக் கொள்வோம். அது அளக்க முடியாத அளவு (அஃதாவது) ஆழம் (அடிப்படை), அகலம், உயரம் உடையது. அதனிடம் அளக்க (அளவிட) முடியாத பல பொருட்கள் உள்ளன. மேலும் அது துளக்க (அசைக்க) முடியாத கெட்டிநிலையும், ஆழ - அகல - உயரத்தோற்றமும் உடையது. நாடு மழையின்றி வறண்டாலும் பல வளப்பங்களைத் தரும் வள்ளல் தன்மை உடையது அல்லவா? இதைத்தான் நன்னூல் பா (சூத்திரம்) அறிவிக்கின்றது. மலையின் இவ் வியல்புகளினும் சிறந்தது அடக்கம் உடையவனது தோற்றம் என்பதையே வள்ளுவர் குறுகிய அடியை உடைய குறளில் சுருங்கச் சொல்லியுள்ளார்.

எனவே, அடக்கமுடையவனது பெருமையை அளவிட முடியாது. அவனிடமுள்ள திறமை - பண்பு முதலிய வற்றையும் அளவிட முடியாது. அவனைப் பகைவர் உட்பட எவரும் அசைக்க (தோற்கடிக்க) முடியாது.

அவ்வளவு ஆழ்ந்து அகன்று உயர்ந்த அறிவும் திறமையும் பண்பும் பிறவும் உடையவன் அவன்.

மேலும் 'நிலையின் திரியாது' என்ற தொடரிலுள்ள நயங்களை ஆழ்ந்து காணவேண்டும். மலை என்றாயினும் தான் நின்ற நிலையினின்றும் திரிதலுண்டோ? அது போலவே அடக்கமுடையவனும் விளங்க வேண்டும். மற்றும், சிலர் அடங்காது தம் நிலையினின்றும் திரிந்து பட்டுக்கெட்டு, பின்னர் வேறுவழியின்றி அடக்கமுடையவ ராக மாறுவது உண்டு. இன்னுஞ் சிலர், உள்ளத்தில் நிலை திரிந்து வெளியில் மட்டும் அடக்கம் உடையவர்போல் நடிப்பர். இங்ஙனமெல்லாம் இன்றி, எங்கும் என்றும் உள்ளும் புறம்பும் நிலைதிரியவே திரியாமல் ஒரே அடக்க நிலையில் நிற்பவனே மிகச்சிறந்தவன். அவனது தோற்றமே 'மலையினும் மாணப்பெரிது.' இந்நயங்களையெல்லாம் நாம் உய்த்துணரும்போது திருவள்ளுவர் திறமையைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

பொதுவாக ஏழை — செல்வன் எல்லோர்க்குமே அடக்கம் வேண்டியதுதான். ஆனாலும் ஏழையிடம் அடக்கம் இருப்பதில் சிறப்பொன்றும் இல்லை. ஏனெனில் ஏழை யிடம் ஒன்றும் இல்லை. அவனால் ஒன்றும் செய்ய இயலாது. அவன் பிறரை அண்டிப் பிழைக்கவேண்டி இருத்தலின் அடக்கமுடையவனாகத்தான் இருப்பான். அஃது இயற்கையாதலின், சிறப்பாகச் செல்வர்க்கு அடக்க மிருப்பதே வியப்பிற்கு உரியதாகும்; ஏனெனில், செல்வர்கள் தம் செல்வ வளத்தால் எதுவேண்டுமானாலும் எளிதில் பெறலாம் — செய்யலாம்; அவர்கள் யாருக்கும் அஞ்சவோ -

அடங்கவோ வேண்டியதில்லை. ஆதலின் அத்தகைய செல்வர்கள் அடக்கமுடையவர்களாகத் திகழ்ந்தால்தான், உலகினர் அவரை நோக்கி "இப்பெருஞ்செல்வரும் இவ்வளவு அடக்கமுடையவராய் இருக்கிறார்" என்று பாராட்டுவார்கள். ஏழையின் அடக்கத்தை நோக்கினாலோ, உலகினர் "இவன் பிழைப்புக்காகக் காக்கா பிடிக்கிறான்," "கூழைக்கும்பிடு போடுகிறான்" என்று ஏளனம் செய்வார்கள். மேலும், செல்வன் அடங்காவிட்டால் 'இவன் பணத்திமிர் பிடித்தவன்' என்றும் உலகினர் பழிப்பார்கள். இக்காரணங்களினால் ஏழைகளினும் செல்வர்க்கு அடக்கமுடைமை இன்றியமையாதது என்பது வெளிப்படையன்றோ?

> **"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
> **செல்வர்க்கே செல்வம் தகைத்து."**

பெருமிதமின்றி அடங்குதல் எல்லார்க்கும் ஒப்பநன்றே எனினும் அவ்வெல்லாருள்ளும் செல்வமுடையார்க்கே வேறொரு செல்வமாம் சிறப்பினையுடைத்து என்பது பரிமேலழகர் உரை.

பரிமேலழகர் முதலிய பலர், செல்வர்க்கு இருக்கும் செல்வத்தோடு, அடக்கம் வேறொரு புதுச்செல்வமாகும் என்று குறிப்பிட்டுள்ளனர். வள்ளுவர் கருத்து இஃதன்று. செல்வர்கள் எவ்வளவு செல்வம் வைத்திருப்பினும் அடக்கம் இருந்தால்தான் அவர்கள் செல்வர்களாகக் கருதப் படுவார்கள். எனவே "அடக்கம்தான் சிறந்த செல்வம்" என்பதே ஆசிரியர் கருத்து.

இஃதே உண்மைக் கருத்து! அடங்காமல் ஆரவாரம் செய்தவர்களின் வரலாறுகள் நமக்குத் தெரியுமே! அடக்கத்தைவிட ஆக்கம் வேறில்லை என வெளிப்படையாக வள்ளுவரே இரண்டாவது குறளில் கூறியிருக்கும்போது வேறு பேச்சென்ன? அடக்கமே செல்வம் என்பதை அடங்காத செல்வர்களே முதலில் தெரிந்து கொள்ளவேண்டும் என்று செல்வர்கட்குச் "சாட்டையடி" கொடுக்கிறார் வள்ளுவர் இக்குறளில்! எனவே, மற்றைய செல்வங்களோடு அடக்கமும் ஒரு செல்வம் எனப் பரிமேலழகர் பகர்ந்திருப்பது, பணக்காரர்கட்குப் பரிந்து பேசுவதே யாகுமன்றோ?

ஒருவன் தன் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்துறுப்புக்களையும் தன் மனம்போன போக்கில் விட்டு, ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐம்புல நுகர்ச்சிகளையும் அளவின்றி நுகர்ந்து அவற்றிற்கு அடிமைப்பட்டானே யானால் விரைவில் கெட்டழிவான்; அவன் தலைமுறையினரும் அவ்விதமே (பரம்பரைப் பழக்கத்தால்) கெடுவர். ஆதலின், அவன் ஆமையானது வேண்டியபோது தன் உடலுறுப்புக்களை நீட்டி இன்புற்றும், வேண்டாதபோது - எதிரி நெருங்கியபோது - உள்ளே யடக்கித் தன்னைக் காத்தும் வாழ்வதுபோல வேண்டிய அளவு ஐம்புல நுகர்ச்சிகளை நுகர்ந்தும், அளவுக்குமேல் மனம் அவாக் கொண்டபோது அவற்றை அடிமைப் படுத்தி அடக்கியும் வாழ்வானேயானால், அவனும் இன்புறுவான்; அவனது (பிரதிநிதிகளாகிய) வழித்தோன்றல்களும் பரம்பரைப் பழக்கத்தால் அவனைப் போலவே புலனடக்கம் உடையவராய் நன்கு வாழ்வர்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து."

உண்ணக் கூடாதவற்றை அளவு மீறி யுண்டால் சில மணி நேரத்திற்குப் பின்பாவது அல்லது சில நாட்களுக்குப் பின்பாவது உடலுக்கு நோய் வரும். அளவு மீறித் திரைப் படம் பார்த்தாலும் அது போலவே பின்பு கண்ணுக்குக் கெடுதியுண்டாகும். சிற்றின்பம் முதலிய பிறவும் சிறிது இடைவெளிக்குப் பின்பே இடையூறு உண்டாக்கும். ஆனால் நாக்கையடக்காமல், பேசக் கூடாத பேச்சுக் களைப் பிறர் புண்படப் பேசினால், பேசியவர் பேசப்பட்ட வரால் உடனே திரும்பப் பேசப்படுவாரல்லவா? பின்னர் இருவரிடையும் கலகம் மூண்டு பெருந்தீங்கை இழைக்கு மல்லவா? அதனாலேயே மற்றவற்றை அடக்குவதில் சிறிது தாமதித்தாலும் பேச்சை வளர்க்கவே கூடாது. மேலும், மற்றைய உறுப்புக்களை அடக்காவிட்டால் தனக்கு மட்டுமே கெடுதியுண்டாகும். ஆனால் நாக்கையடக்காமல் புண் படுத்தும் பேச்சுக்களைப் பேசினால் பிறர்க்கும் கெடுதி - அதனால் தனக்கும் கெடுதியுண்டாகுமல்லவா?

"யாகாவா ராயினும் நா காக்க" என்று வள்ளுவர் கூறியிருப்பதில் உள்ள நுட்பம் இப்போது நன்கு விளங்குமே?

ஒருவன் நல்ல சொற்களாகவே பேசிக்கொண்டு வரும்போது, நடுவில் ஒரு சொல்லாவது கெட்ட பொருளைத் தந்து கேட்பவரைப் புண்படுத்துமேயானால், மற்றைய நல்ல சொற்களால் யாதொரு நன்மையும் இல்லாமல், அவையும் கெட்டனவாகக் கருதப்பட்டுவிடும். எடுத்துக்

காட்டாகப் பார்க்குமிடத்து:- நிலக்கடலை (மணிலாக் கொட்டை) தின்னும் போது பல நல்ல கடலைகளுக் கிடையில் ஓர் அழுகல் கடலை அகப்பட்டுக் கொண்டாலும் அனைத்துக் கடலைகளும் கெட்டு உமிழப்படுகின்றன வல்லவா? “குறுணி பதக்கைக் கெடுத்தது” என்பது பழமொழியன்றோ? “இலையில் எல்லாம் பரிமாறி ஓர் ஓரத்தில் எதையோ சிறிது வைத்ததுபோல்” என்று சொல்வது நம் நாட்டில் எளிய வழக்கம். எனவே, சொல்லடக்கமின்றி, பிறர் மனத்தைப் புண்படுத்தும் ஒரு சொல்லையும் சொல்லக்கூடாது.

நெருப்புக் காயம் குறித்த காலத்தில் ஆறிப் போவதையும், பிறர் திட்டியதால் உண்டான மனத்தாங்கல் அவரைப் பார்க்குந்தோறும், எண்ணுந்தோறும் உறுத்திக்கொண்டேயிருப்பதையும், மற்றும், திட்டியவர் மீண்டும் நண்பராகி விட்டாலும் சில சமயங்களில் பழைய நினைவு வர, முன் இவர் இப்படி திட்டினாரே - என்று மனம் ஏதோ ஒரு வேலை செய்வதையும் நாம் அனுபவ வாயிலாக அறிகிறோம்? ஆதலின் யாரிடமும் சுடுசொல் கூடாது.

நம் உடம்பின் ஒரு பகுதியில் நெருப்புப் பட்டவுடனே நம் மனம் துடிதுடிக்கும்; நாம் படாதபாடு படுவோம்; ‘ஆ’வென்போம் - ‘ஊ’ வென்போம்; துள்ளுவோம்- குதிப்போம். பின்பு நேரம் போகப் போக - நாட்கள் ஆக ஆகப் புண் மட்டும் இருக்கும் - ஆறிக் கொண்டும் வரும்; ஆனால், நெருப்புப் பட்டவுடனே நாம் ஆடிய ஆட்டம், மனத்துடிப்பு முதலியவை இருக்கா. எனவே, உடலில்

முழுப் புண்ணும் ஆறாமல் வெளியில் தெரிந்து கொண்டிருந்தாலும் நம் மனப்புண் ஆறிவிடும். ஆனால், பிறர் திட்டியதால் உண்டான தாங்கலோ வெளியில் தெரியாவிட்டாலும், உள்ளேயே புடை கொண்டு சென்று பச்சைப் புண்ணாகவே இருக்கும். அவர் திட்டியதை எப்பொழுது நினைத்தாலும், முதன் முதல் திட்டியபோது உண்டான வருத்தமும் - ஆற்றாமையும் - சினமும் மூளும். திட்டியவரும் திட்டப்பட்ட வரும் கூடிக் கொண்டாலும் கூட, அது - "நெல்லின் உமி (அரிசியை விட்டுச்) சிறிது நீங்கிப் பழமை போல் புல்லினும் திண்மைநிலை போம்" என்னும் "நன்னெறி"யடிக்கு ஏற்பவேயிருக்கும். தீயினால் உண்டாகக் கூடியதை வெறும் "புண்" என்றும், நாவினால் உண்டாகக் கூடியதை "வடு" என்றும் குறள் கூறும். வடு என்பது என்றைக்கும் மறையாமல் தெரிந்து கொண்டேயிருப்பதன்றோ? "கல்லடி பட்டாலும் படலாம், சொல்லடிபட முடியாது" என்பது பழமொழியல்லவா?

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."**

**"ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்."**

**"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு."**

ஒருவர் கற்றதோடு விட்டுவிடாமல், சினம் வராமல் காத்து அடங்கி ஒழுகுவாரேயானால், அவர் அறத்தைத்

தேடிச்செல்ல வேண்டியதில்லை; அறமே அவரைத் தேடி வந்து - அடையக்கூடிய பதம் பார்த்து அவரிடம் குடிபுகும். அதாவது, சினத்தைக் காத்தலும் அடங்கி ஒழுகுதலுமே பெரிய அறமாகுமன்றோ! எனவே, அங்ஙனம் ஒழுகுபவர் இயற்கையாகவே பெரிய அறவோராக மதிக்கப்பெறுவார்.

**"கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து."**

# 10. ஒழுக்கமுடைமை

அடுத்து, ஒழுக்கமே உயர்வைத் தரவல்லது; ஆதலின் ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாக ஓம்பிக் காக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். ஈண்டு மற்றையவற்றினும் ஓம்பவேண்டும் என்னாது, உயிரினும் ஓம்பவேண்டும் என்று உயிரைக் குறிப்பிட்டுள்ளதில் உள்ள நயத்தை ஊன்றி நோக்க வேண்டும். மக்கள் எல்லோருமே தத்தம் உடைமைகளைப் பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாய் இருப்பதைக் காண்கின்றோம். அவற்றுள்ளும், இழந்து விட்டாலும் மீண்டும் எளிதில் கிடைக்கக்கூடிய உடைமையைக் காப்பதற்குச் செலுத்தும் விழிப்பை (கவனத்தை)விட, இழந்தால் எளிதில் கிடைக்காமல் - அரிதிற் கிடைக்கக்கூடிய உடைமையைக் காப்பதற்குச் செலுத்தும் விழிப்பு மிகப்பெரிதாகும். தெளிவாகச் சொல்வோமானால், பொருளின் விலையும் அதைப் பெறும் முயற்சியும் குறையக் குறைய மக்களின் விழிப்பும் குறைந்து கொண்டே போகும்; விலையும் பெறும் முயற்சியும் பெருகப் பெருக மக்களின் விழிப்பும் பெருகிக்கொண்டே செல்லும். எடுத்துக்காட்டாக:- மண்பாண்டம், பித்தளைப்பாண்டம், செப்புப்பாண்டம், வெள்ளிப்பாண்டம், பொன்பாண்டம், வைர அணிகள்-இவை முறையே ஒன்றற்கொன்று பெரு மதிப்புடையனவாதலின் இவற்றைப் போற்றிக் காப்பதில் விழிப்பும் பெருகிக்கொண்டே செல்கின்றதல்லவா?

இரண்டாவதாக, - நம் உடலைவிட்டுப் பிரிக்கக் கூடிய மேற்கூறிய - இன்னும் ஏனைய உடைமைகளை விட, நம் உடலைவிட்டுப் பிரிக்கமுடியாத கை, கால், கண் முதலிய உறுப்புகளைக் காப்பதில், மேலும் மிகமிகப் பெரிய விழிப்பு செலுத்துகிறோம். (இவ்வுறுப்புகள் பிரிக்க முடியாதவையென்றால் வெட்டியெடுக்க முடியாதவை என்பது பொருளன்று; ஆடையணிகலன்களைப் போல் உடம்போடு கூட்டவும், பின்பு பிரிக்கவும் - பின்பு கூட்டவும் முடியாதவை என்பதே பொருள்.) ஏனைய உடைமைகளை இழந்துவிட்டால், அரியவிலை தந்து - அரும்பாடுபட்டாவது திரும்பப் பெற்றாலும் பெறலாம். ஆனால் உடலுறுப்புகளை யிழந்து அவற்றைத் திரும்பப் பெறமுடியாதன்றோ? அதனாலேயே உறுப்புகளை ஏனைய உடைமைகளிலும் மிகுதியாகப் போற்றுகிறோம்.

மூன்றாவதாக; - ஓர் ஊரில் எதிரி திடீரென்று படை யெடுத்துப் போர்புரியும்போது, மறவர்கள் (வீரர்கள்) தவிர மற்றையோர் ஊரைவிட்டு ஓடுகின்றனர். ஓடும்போது தம் உடைமைகளையெல்லாம் அறவேவிட்டு ஓடுகின்றனர். ஓடும் வழியில் ஒரு படைபட்டுக் கை வெட்டுண்டு விழுந்தாலும் அதைப் போட்டுவிட்டு ஓடுகின்றனர். கால் வெட்டுண்டாலும், முடிந்தவரை தரையில் ஊர்ந்து ஊர்ந்து ஓட முயல்கின்றனர். இங்ஙனம் தம் உடைமைகள், உடலுறுப்புகள் இவற்றையெல்லாம் மனமார விட்டுவிட்டு வெளியில் ஓடுகின்றார்களே! - எதைக் காப்பதற்காக இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஓடுகின்றார்கள்? தம் உயிரைக் காப்பதற்காக வன்றோ? உடைமைகள்

போனால் வேறு உடைமைகள் தேடிக்கொள்ளலாம். கை கால்கள் போனால் பொய்க் கை - பொய்க் கால் வைத்துக் கொண்டு வழக்கம்போல் எதையும் செய்யலாம். கண் போனாலும் வேறு கண் வைக்கப் பெற்றுத் திரும்பப் பார்வையைப் பெறலாம். இவற்றையெல்லாம் இக்கால விஞ்ஞானிகள் செய்து முடிக்கின்றார்கள் அல்லவா? உயிர் போனால் திரும்பி வருமா? வேறொருவருடைய உயிரைத் தான் பொருத்தமுடியுமா? அதனால் உடைமைகள் - உறுப்புகள் ஆகியவற்றினும் உயிர் சிறந்ததென்பது புலப்படு மன்றோ? மேலும் உடைமைகளேயில்லாத கோடிக்கணக் கான ஏழை யெளியவர்கள் உலகில் வாழ்வதைக் காண்கின்றோமே? உடலுறுப்புகளை இயற்கையாகவோ- செயற்கையாகவோ இழந்துவிட்ட கூன், குருடர், நொண்டி, முடவர் எண்ணற்றவர்கள் உலகில் வாழக் காண்கின்றோமே! ஆனால் உயிர் போனபின் வாழ்ந் தவர்களை என்றேனும் எங்கேனும் யாரேனும் பார்த்த துண்டா? உயிர் போனபின் பிணம் என்றல்லவோ பெயர்? அதன் நிலைதான் எல்லோர்க்கும் தெரியுமே! இத்தகைய காரணங்களினாலேயே, மற்றையவற்றைக் குறிப்பிடாமல், உயிரினும் ஓம்பப்படும் என்று உயிரையே குறித்தார் நம் வள்ளுவர்.

மற்றும், ஆசிரியர் உயிரைப்போல் ஒழுக்கம் ஓம்பப் படும் என்று கூறி உயிரும் ஒழுக்கமும் ஒரு நிலையுடையன என்றுகூடக் கூறவில்லை; உயிரைக் காட்டிலும் ஒழுக்கம் ஓம்பப்படும் என்று கூறி உயிரினும் உயர்ந்த பொருளாக ஒழுக்கத்தைச் சிறப்பித்துள்ள மாட்சி மிகப் பாராட்டுதற்

குரியதாகும். எனவே, உடைமைகளினும் சிறந்தன உடலுறுப்புகள், உடலுறுப்புகளினும் சிறந்தது உயிர், உயிரினும் சிறந்தது ஒழுக்கம் என்றாயிற்று. ஆகா! இதனினும் ஒழுக்கத்தின் உயர்வைச் சிறப்பித்தவர் எவர்? சிறப்பிக்கத்தான் முடியுமா?

நிற்க, ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பது எவ்வாறு பொருந்தும்? ஒழுக்கம் மட்டும் இருந்து உயிர் போய்விட்டால் மட்டும் உலகில் வாழ முடியுமா? என்பவற்றையும் ஆராயவேண்டும். ஏசுநாதர் போன்றோர் எதற்காக உயிரைவிட்டனர்? உலகில் ஒழுங்குமுறையை (ஒழுக்கமுறையை) நிலைநாட்டவல்லவா? தாம் மேற்கொண்ட செயல்களால் தம் உயிருக்கு ஊறு நேரிடலாம் என்பதை அவர்கள் முன் கூட்டியே உணராதவர்களா? உணர்ந்து வைத்தும், உயிரினும் ஒழுக்கத்தைப் பெரிதாக மதித்தே - ஒழுங்கை நிலைநாட்டவே உயிரை விட்டார்கள் அன்றோ? கயவன் ஒருவனிடம் சிக்கிக் கொண்ட கற்புடைய மங்கை அக்கயவனால் தான் கற்பழிக்கப்படக் கூடிய நிலை நெருங்கியபோது தற்கொலை செய்து கொள்கின்றாளே! அது ஏன்? உயிரினும் ஒழுக்கத்தைப் பெரிதாக மதித்தமையினாலன்றோ? இவர்களெல்லோரும் உயிரினும் ஒழுக்கத்தை மதித்து உயிர் விட்டதனால், புகழுடம்புடன், எல்லோராலும் பாராட்டப் பெற்று இன்றைக்கும் வாழ்கிறார்கள் - இனியும் என்றும் வாழ்வார்கள் அல்லவா? எனவே, ஒழுக்கமின்றி உயிர் வாழ்பவர்கள் பலராலும் தூற்றப்படுதலின் அவர்களே உயிர் வாழாதவர்கள்; ஒழுக்கத்திற்காக உயிர் விட்டவர்கள் பலராலும் போற்றப்

படுதலின் அவர்களே உயிர் வாழ்பவர்கள் என்பது வெளிப் படை. எனவே,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."**

பலர் பல தான தருமங்களைப் பற்றியும், சில பயன் உள்ள செயல்களைப் பற்றியும், அவற்றால் உண்டாகக் கூடிய பயன்களைப் பற்றியும் நன்கு தெரிந்து கொண்டு, அவற்றைக் கடைப்பிடித்தும் வரலாம். ஆனால் அவர்களிடம் நல்லொழுக்கம் இல்லாமலும் இருக்கலா மல்லவா? இந்நிலை கூடாது. புகழை விரும்பியும், முத்தியை நம்பியும் பிறர்க்கு வாரி வழங்குபவர்கள் பலர், தம் சொந்த ஒழுக்கத்தில் மிகத் தவறியிருப்பதைக் காண்கின்றோமல்லவா? அவர்களை மனத்தில் வைத்துதான் திருவள்ளுவர் "மக்களே! நீங்கள் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பீர்களேயானால், மாட்டையடித்துச் செருப்புத் தானம் செய்வீர்களாயின், தாய் தண்ணீரின்றித் தவிக்கக் கும்பகோணத்தில் கோதானம் கொடுப்பீர்களானால், இன்னும் இவற்றைப் போல் உள்ளுக்குள் தகாதன செய்து கொண்டு-வெளியில் சில நல்ல காரியங்களைச் செய்வீர்களானால் அவற்றால் ஒரு சிறிதும் பயனில்லை. அவையெல்லாம் துணையாகா. எல்லாவற்றிற்கும் அடிப்படையான நல்லொழுக்கமே நற்றுணையாவது" என்று சுட்டாமல் சுட்டியுள்ளார்—

**"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை."**

என்ற குறளால்!

அடுத்து, சாதிமுறை பற்றி ஆசிரியர் கூறும் கருத்து ஈண்டுக் கருதற்பாற்று.

> "ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
> இழிந்த பிறப்பாய் விடும்."

என்னுங் குறளில் சாதி என்பது என்ன என்பதை வள்ளுவர் தெள்ளத்தெளியத் தெரிவிக்கிறார். ஒழுக்கமுடைமையால் 'பார்ப்பார்' முதலிய வகுப்பினர் உயர் குலத்தாராகப் பகுக்கப்பட்டார்கள் என்றும், ஒழுக்கமின்மையால் பறையர் முதலிய வகுப்பினர் தாழ்குலத்தாராகப் பகுக்கப்பட்டார்கள் என்றும் சில ஆராய்ச்சியறிவிலிகள் உளறுகின்றனர். மேலும் சிலர், உயர் குலப் பார்ப்பான் ஒழுக்கம் தவறி விட்டால் தாழ் குலத்தானாவான் என்றும், தாழ்குலப் பறையன் ஒழுக்கம் உயர்ந்து விட்டால், உயர்குலத் தானாவான் என்றும் குளறுகின்றனர். இக்கருத்துக்கள் எல்லாம் தவறுடையவை.

பார்ப்பான் - பறையன் என்னும் சாதிப் பிரிவினை, அன்று ஒழுக்கமுடைமையையும் இன்மையையும் கருதிப் பிரிக்கப்பட்டதன்று. அவரவர்கள் செய்யும் தொழிலைக் கருதியே தொழிலுக்கேற்ற பெயர்கள் தரப்பட்டன. எடுத்துக்காட்டாக, - கணக்கு வேலை செய்பவரைக் கணக்குப்பிள்ளையென்றும், பாடம் கற்பிப்பவரை ஆசிரியர் என்றும், ஊர் நாட்டாண்மை செய்பவரை நாட்டாண்மைக் காரர் என்றும், சமையல் செய்பவரைச் சமையற்காரர் என்றும் இப்பொழுதும் நாம் அழைக்கின்றோம் அல்லவா? இதே போலத்தான் பண்டைக் காலத்தில் யார் யார் எவ்வெத்தொழில் செய்தனரோ, அவ்வத்தொழிலால்

அவ்வவரைப் பெயரிட்டு அழைத்தனர். செந்தண்மை யாகிய அந்தண்மை பூண்டு ஒழுகுபவன் (பார்ப்பான்) அந்தணன், பறையடிப்பவன் பறையன் என இங்ஙனம் அழைத்து வந்தார்கள். எனவே, ஒழுக்கம் குறித்து சாதிப் பிரிவினை ஏற்படவில்லை; தொழில் குறித்தே ஏற்பட்டது என்னும் கருத்தினை, நம் திருவள்ளுவர்

> **"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்"**

என வெட்ட வெளிச்சமாக அறிவித்துவிட்டார்.

உண்மை இங்ஙனமிருக்க, "ஒழுக்கமுடைமை குடிமை" என்னும் இக்குறளுக்கு, 'ஒழுக்கமுடைமை உயர் சாதித் தன்மை— ஒழுக்கமின்மை இழி சாதித்தன்மை' என்னும் கருத்தில் உரையாசிரியர்கள் பலரும் உரை பகர்ந்திருப்பதும், பரிமேலழகர் இக் குறளில் வருணத்தை இழுத்து மாட்டி யிருப்பதும் அறியாமையும் வருந்தத்தக்கதுமாகும். "ஏன்? இவ்வுரையாசிரியர்கள்மேல் என்ன தவறு? 'ஒழுக்கமுடைமை குடிமை—இழுக்கம் இழிந்த பிறப்பு' என்று வள்ளுவர்தான் வெளிப்படையாகச் சொல்லியிருக்கின்றாரே—அதைத்தான் இவர்களும் எழுதினார்கள். இது சரியில்லையென்றால் எது சரி?" என்று நம்மைச் சிலர் வினவலாம். ஆதலின் இக் குறளின் உண்மைக் கருத்தைத் தெளிவுறுத்துவோம்:—

முதலியார் என்னும் ஒரு சாதியை எடுத்துக் கொள்வோம். அம்முதலியாருள்ளும் பல முதலியார் பிரிவுகள் இருக்கலாம். அவற்றுள் ஏதேனும் ஒரு பிரிவு முதலியார் சாதியினரை ஈண்டு எடுத்துக்கொள்வோம். அவர்களே தம்

பிரிவுச் சாதிக்குள் – தம் உறவினருக்குள் உயர் சாதி – தாழ் சாதி கூறுவதை நாம் கண்கூடாகக் காணலாம். எங்கேயும் அப்பால் செல்ல வேண்டியதில்லை; ஒரு சாதிக் கணவன் – மனைவியையே எடுத்துக்கொள்வோம். கணவன் குடும்பத்தாரும், மனைவியின் தாய் வீட்டுக் குடும்பத்தாரும் ஐந்தாறு தலைமுறைகளாகப் பெண் கொடுக்கல் – வாங்கல் (சம்பந்தம்) செய்து வந்திருப்பார்கள். இங்ஙனம் வழிவழி உறவின் மேல் மணந்து கொண்ட இக்கணவன் மனைவியருக்குள் குடும்பத்தில் ஒரு சமயம் சிறு சச்சரவு ஏற்படுவதுண்டு. அப்போது கணவன், தன் மனைவி தவறு செய்ததாக எண்ணியபோது அத் தவறைச் சுட்டிக் காட்டி, ‘நீ என்னடி செய்வாய்? உன்னைக் குறை சொல்லிப் பயன் இல்லையடி, இது உன் சாதிப் புத்தியடி’ என்று வைகிறான். அது போலவே, மனைவியும் தன் கணவனை நேரில் சொல்வதுண்டு. சில பெண்கள் தம் கணவரைக் குறிக்காமல், தவறு செய்த தம் பிள்ளையை நோக்கி, ‘இது உங்கள் குலாசாரம் – சாதி வழக்கம்’ என்று கூறித் தம் கணவர் குலத்தைச் சுட்டிப் பேசுவதுண்டு. இவற்றையெல்லாம் நாம் நேரில் கண்டிருக்கின்றோமல்லவா?

அப்பப்பா! ஒரு சாதி ஆணும்–ஒரு சாதிப் பெண்ணும் மணந்து வாழ்கின்ற ஒரு குடும்பத்திலேயே கணவன் உயந்த சாதி–மனைவி தாழ்ந்த சாதி, அல்லது கணவன் தாழ்ந்த சாதி–மனைவி உயர்ந்த சாதி, இன்னும், தாய் ஒரு சாதி–சேய்(பிள்ளை) ஒரு சாதி யென்றால், பார்ப்பான்-

பறையன் முதலிய சாதிகட்குள் எது உயர்ந்தது? எது தாழ்ந்தது?

எனவே இக்குறள், பலவகைப்பட்ட வெவ்வேறு சாதியினரின் சாதி ஒழுக்கமுடைமை-இன்மைகளைப் பற்றிப் பொதுவில் கூறவில்லை. வெவ்வேறு சாதியினராயினும், ஒரே சாதியினராயினும், தலைமுறை தலைமுறையாக உறவினராயிருந்தாலும் சரியே! எவர்குடி (குடும்பம்) ஒழுக்கமுடைய குடியோ அவர்குடி உயர்குடியாகும்; எவர்குடி ஒழுக்கமற்ற குடியோ அவர்குடி தாழ்குடியாகும் – இது பரம்பரையாகத் தொடர்வதும் உண்டு. இந்த அடிப்படையிலேயே 'ஒழுக்கமுடைமை குடிமை – இழுக்கம் இழிந்த பிறப்பு' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், பார்ப்பார்க்குள்ளும் பறையர்க்குள்ளும் நல்லொழுக்கமுடையவரும் உள்ளனர், தீயொழுக்கமுடையவரும் உள்ளனர். நல்லொழுக்கமுடையோரெல்லாம் நற்குடியினர், தீயொழுக்கமுடையோரெல்லாம் இழிகுடியினர். இவர்களிடையே குணத்தைக் கொண்டுதான் உயர்குடி, தாழ்குடி பகுக்க வேண்டுமே தவிர, தொழிலுக்கேற்பவுள்ள தூய்மை – சுகாதாரச் சூழ்நிலை என்பவற்றைக் கொண்டு பொதுவில் உயர்குடி, தாழ்குடிகளைப் பிரிக்கக் கூடாது. அண்ணன் தம்பிகளுக்குள்ளேயே அரசாங்க அலுவல் பார்க்கும் அண்ணனுக்கும், வயல்வெளிச் சேற்றில் வேலை பார்க்கும் தம்பிக்கும் உருவத்தில் – தூய்மையில் – நாகரிகத்தில் வேற்றுமை இருக்கத் தானே செய்யும்? இவ்வேற்றுமையைக் கொண்டு இவர்கட்குள் உயர்வு தாழ்வு கற்பிக்க முடியாதன்றோ? இவருள்ளேயே தம்பி நற்குண நற்

செய்கையுடையவனாயிருப்பின் அவன் உயர்ந்தவன்; அண்ணன் தீக்குண - தீச் செய்கையுடையவனாயிருப்பின் அவன் தாழ்ந்தவன். இது போலவே பார்ப்பார்க்கும் பறையர்க்கும் இடையேயும் கொள்க. மற்றும், அடுத்த குறளும் ஈண்டு ஒப்பு நோக்கி ஆராயத்தக்கது.

**"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."**

பார்ப்பான், தனக்குரிய தொழிலாகிய ஓதுதல் - ஓதுவித்தலை மறந்தாலும் மறக்கலாம்; நல்லொழுக்கத்தை மட்டும் மறந்து கைவிடலாகாது. ஏனெனில், ஓதுதலை விட்டால் மீண்டும் ஓதிக்கொள்ளலாம். அது குறித்து அவனை அவ்வளவாக இகழ மாட்டார்கள். ஆனால் முதலில் தீயொழுக்கத்தில் நடந்து விட்டால், மீண்டும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க முயன்றாலும் கெட்ட பெயர் கெட்ட பெயர்தானே? அதனால் தான் ஓதுதலை விட ஒழுக்கத்தில் விழிப்பு மிக வேண்டும் என்றார் ஆசிரியர். இன்னும் இதனை மற்றொன்றாலும் அறியலாம். அது வருமாறு:- திருவள்ளுவர் "கல்வி" என்னும் பகுதியில்,

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு."**

**"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்."**

எனக் கல்வியைக் கண்ணினும் சிறந்ததாகக் கூறியுள்ளார். இவ்வதிகாரத்து முதற்குறளில், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று கூறியுள்ளார். எனவே, கண்ணைவிடக்

கல்வியையும் உயிரையும் விட ஒழுக்கத்தையும் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும் என்றாராயிற்று. ஆயின், கண் இன்றி வாழமுடியும் - உயிரின்றி வாழமுடியுமா? அது போலவே, கல்வியின்றி வாழ்ந்தாலும் ஒழுக்கமின்றி வாழக் கூடாது - எனவே ஒத்தினும் (ஓதுதலினும்) ஒழுக்கமே மேலானது என்பது தெளிவு. இக்கருத்தைத்தான் ஆசிரியர் இக்குறளில் குறிப்பாகக் (தொகுத்து) கூறியுள்ளார். நிற்க -

ஒழுக்கம் குறித்தே சாதிப் பிரிவினை ஏற்பட்டது என்னும் கருத்துடையோர், தம் கொள்கைக்கு ஆதாரமாக இக் குறளை எடுத்துக் காட்டலாம். அஃதாவது பார்ப்பான் ஒழுக்கம் குன்றினால் பிறப்புக்கெடும் என்று வள்ளுவர் கூறியிருப்பதால், ஒழுக்கத்தைக் கொண்டுதான் பார்ப்பான்-பறையன் என்ற சாதிகள் வகுக்கப்பட்டன என்பது விளங்க வில்லையா - என்று அவர்கள் சொல்லலாம். இக்குறளின் கருத்து இஃதன்று. ஒழுக்கத்தைக் குறித்தல்லாமல், தொழிலைக் குறித்தே சாதி வகுக்கப்பட்டது என்னும் நற் கருத்துக்கு, ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்னும் குறளோடு இந்தக் குறளும் ஆதாரமாகும்.

எங்ஙன மெனின் -

வள்ளுவர் இக்குறளில், 'பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்' என்று மட்டும் சொல்லவில்லை. 'மறப்பினும் ஒத்துக் கொளலாகும்' என்றும் கூறியிருப்பதை ஆழ்ந்தாராய வேண்டும். வேதம் ஓதலை மறந்தாலும் மறக்கலாம், ஒழுக்கத்தை மறக்கலாகாது என்பதிலிருந்தே, வேதம் ஓதுதலும் மிக மிக இன்றியமையாதது என்பது புலப்படும்.

திருடரிடம் அகப்பட்டுக்கொண்ட வீரனொருவன், 'என் உயிரைவிட்டாலும் விடுவேன், இந்தப் பொருளை மட்டும் விடமாட்டேன்' என்கிறான். அப்படியென்றால். உயிர்விடக் கூடாத பொருள் - எல்லாவற்றினும் உயர்ந்த பொருள் என்பது தெரிகிறதன்றோ? அதுபோலவே வேதமோதுதலும் மறக்கக் கூடாத ஒன்று - எல்லாவற்றைக் காட்டிலும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று என்பதும் புலப்படும். ஏனெனில், அவ்வேதம் ஓதிப் பிழைக்கும் தொழிலைக் கொண்டுதானே, அது செய்பவன் மறையவன் (பார்ப்பான்) என்று அழைக்கப்பட்டான்? ஆதலின் என்க! எனவே பார்ப்பான், தான் பார்ப்பன சாதியான் என்று அழைக்கப்படுவதற்கே காரணமான-பிழைப்புத் தொழிலான வேத மோதலை மறக்கக்கூடாது; தப்பித்தவறி மறந்தாலும் மீண்டும் ஓதிக்கொள்ளலாம் - அல்லது - வேறு தொழில் செய்தாவது பிழைத்துக் கொள்ளலாம். ஆனால், மனித இனத்திற்கே பொதுவாக இருக்க வேண்டியதான ஒழுக்கம் மட்டும் குறையலாகாது. அங்ஙனம் குறைந்ததால், உயர்ந்த வனாகத் தன்னை எண்ணிக் கொண்டிருக்கின்ற அவனது பிறவியும் பயனற்றதுதான் - இழிந்ததுதான்.

அதுமட்டுமா? பொறாமைக் குணம் உடையவன் பிறருடைய உடைமை, புகழ் முதலியவற்றைக் கண்டு கண்டு, நெஞ்சம் புழுங்கிப் புழுங்கிச் சாவானாதலாலும், அவன் ஒன்றும் செய்ய முடியாதாதலாலும், பிறரது உடைமையையோ - புகழையோ பொறாமையால் கெடுக்க முயன்றபோது பிறரால் தாக்கப்படுவானாதலாலும் அவ னிடத்தில் எத்தகைய நல்வளர்ச்சியும் இருக்க முடியாது;

அதுபோலவே, ஒழுக்கமில்லாதவனும் மக்களிடையே எத்தகைய உயர்வையும் அடைய முடியாது. அவனுக்குக் கிடைக்கக்கூடிய பரிசு பழியேயாகும்.

ஒழுக்கக் கேட்டால் உலகில் பல தீங்குகள் நேருவதை அறிந்திருப்பதால், அறிஞர்கள் நல்லொழுக்கத்தினின்றும் தவறவே மாட்டார்கள். இழுக்கத்தால் பல துன்பங்கள் நேரும் என்பதையும், அதனால் ஒழுக்கமுடையவராய் வாழ வேண்டும் என்பதையும் அறிந்து ஒழுகுபவரே அறிஞர்.

ஒழுக்கமுடையோரே உயர்வடைவர்; ஒழுக்க மில்லாதவர், பிற குற்றவாளிகள் அடைய முடியாத பழியையும் அடைவார்கள். அப்படியென்றால் ஒழுக்க மின்மை எவ்வளவு கொடிய குற்றம் என்பது பெறப்படு மன்றோ? மேலும், தாங்களே அடைய வேண்டாத பழியையும் அடைவார்கள். அஃதாவது, ஒரு குற்றத்தைப் பிறர் செய்தாலும், அதனை ஒழுக்கமில்லாத இவரே செய்திருக்கக் கூடுமென்று உலகத்தார் கருதி, ஒழுக்கமில்லாத இவரையே பழிப்பர்.

பயன் தரும் நல்ல பயிரை விளைத்துப் பயனுற்று வாழ விரும்புபவர்கள் முதலில் நல்ல விதையை விதைக் கின்றார்களல்லவா? அது போலவே, நன்மையை அடைய விரும்புபவர்கள் முதலில் நல்லொழுக்கம் உடையவர் களாகத் திகழ வேண்டும். தீயொழுக்கம் என்பதோ, துன்பம் என்னும் நச்சு மாமரத்தை - முள்ளிச் செடியை வளர்க்க இட்ட விதையேயாகும் - என்பதும் கருதத் தக்கது. எனவே, நன்றிக்கு நல்லொழுக்கம் வித்தானாற்

போல, இடும்பைக்குத் தீயொழுக்கம் வித்தென்றும், தீயொழுக்கம் இடும்பை தருவதைப் போல, நல்லொழுக்கம் நன்றி தரும் என்றும் கொள்ள வேண்டும்.

சிலர் நல்லொழுக்க முடையவராய் உள்ளனர்; ஆனால் அவர்கள் வாழ்க்கையில் நன்மையின்றித் துன்புறு கின்றனர். சிலர் தீயொழுக்கம் உடையவராயுள்ளனர்; ஆனால் அவர்கள் வாழ்க்கையில் தீமையின்றி இன்புறு கின்றனர் - இம்மாறுபட்ட காட்சிகளை நாம் காண்கின்றோ மல்லவா? விதை விதைத்தவன் விதைத்தவுடனேயே நன்மையடைவதில்லை; நன்மையடையாததோடு மேலும் மேலும் பணச் செலவும், உடல் முயற்சியும் செய்து உழல்கிறான். இப்போது அலுப்பாகவிருந்தாலும் பயிர் முற்றி விளைந்தபின் இன்புறுவானல்லவா? அதுபோலவே, நல்லொழுக்கமுடையவரும் முதலில் துன்புறுவதாகத் தெரியினும் பின்னொரு சமயம் நன்மை எய்துவார்கள். பின்னொரு சமயம் என்றால் அடுத்த பிறவியிலன்று. இப்பிறவியிலேயே, ஒரு சமயம், இவரது செயலால் உலகிற்குப் பயனுள்ளதாக மக்கள் அறிந்து கொண்டு இவர்க்குப் பல நன்மைகள் செய்வரன்றோ? ஆதலின் பின்னால் உண்டாகும் நன்மைப் பயிருக்கு இப்போது கொள்ளும் ஒழுக்கம் வித்தாகும். இஃது இப்படியெனவே, இப்போது நன்மை போல் தெரிந்தாலும் பின்னால் வரப் போகும் துன்பப் பயிரின் விளைவுக்குத் தீயொழுக்கம் முன் கூட்டி இடும் வித்தாகும் என்பதும் புலப்படும். மற்றும், தீயொழுக்கமுடையவர்கள் இப்போது இன்புற்றுக் கொண்டிருக்கும்போதே, தம் இழுக்கம் வெளியில் தெரிந்து

விட்டால் - அரசாங்கம் அறிந்து விட்டால் என்ன நேருமோ என்று அஞ்சிக் கொண்டேயிருப்பார்கள் ஆதலின், இப்போதும் அவர்கட்கு மன அமைதி இராது ஆதலானும், பின்னர் வெளிப்பட்ட போது தண்டனையும் பழியும் ஏற்பார்கள் ஆதலானும், தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கமுடையவர்கள், கெட்டவர்கள் பேசுகின்ற கெட்ட பேச்சுக்களை மறந்தும் - தவறியும் தம் வாயால் பேசவே மாட்டார்கள். எனவே, கெட்டதைப் பேசா திருப்பதும் நல்லொழுக்கத்திற்கு ஓர் அடையாளமாகும் என்று ஆசிரியர் குறளில் கூறியுள்ளார்.

இனிக் குறள்களைக் காண்போம்.

**"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு."**

**"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
**ஏதம் படுபாக் கறிந்து."**

**"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி."**

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்."**

**'ஒழுக்க முடையார்க் கொல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்."**

மேலும் ஒழுக்கம் என்னும் தலைப்பில் வள்ளுவர் கூறியுள்ள ஒரு புதிய கருத்து சிந்தனைக்குரியது:—

உலகில் பலர் பழைய முறையை விடக்கூடாது என்று கூறிப் பழமையோடே முட்டிக் கொண்டு கிடப்பதைப் பார்க்கலாம். இவர்கள், கோயில்களில் பழைய வழக்கப் படியுள்ள எண்ணெய் விளக்கைத் தவிர மின்னொளி (எலெக்ட்ரிக்) விளக்குப் போடவே கூடாது என்றும், சிலரைத் தீண்டக் கூடாது என்றும், உள்ளே விடக் கூடாது என்றும் ஒற்றைக் காலில் நின்றார்கள் - நிற்கிறார் கள். இன்னும் சிலர் கடல் தாண்டிக் கப்பல் போக்குவரவு செய்யக் கூடாது என்றார்கள் - என்கிறார்கள். அதிலும் பெண்களை அழைத்துச் செல்லவே கூடாது என்பது அவர்களின் விடாப்பிடி. இவையெல்லாம் இன்று எவ்வளவு அறியாமைக்கு உரியன? இவர்கள், வளர்ச்சி பெற்றுச் செல்லும் விஞ்ஞான உலகம் என்னும் குழந்தையை, மேலும் வளர விடாமல், பழையகாலப் பழக்கவழக்கம் என்னும் தாயின் கருவிற்குள் (வயிற்றுக்குள்) கொண்டு வைத்துவிட முயல்கின்றனர். இவர்கள் எவ்வளவு கற்றிருந்தாலும் அறிவிலிகளே யாவார்கள். அறிஞர் உலகம் இவர்களை மதிக்குமா? இவர்களின் கொள்கைகள் பொருத்தமற்றவை என்பதை கண்டு விளக்கி வீண்காலம் போக்க வேண்டியதில்லை. இக்காலத்திலுள்ள பத்து வயதுடைய பள்ளி மாணவரும் இவர்களின் பழைய கொள்கைகளைப் பழிப்பது வெளிப்படையன்றோ?

எனவேதான் நம் திருவள்ளுவர், மக்கள் தாம் எவ்வளவு கற்று அறிந்திருந்தாலும், உலகத்தோடு ஒத்துப் போக வேண்டும் என்னும் கருத்தில்,

**"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்."**

என்று அருளியுள்ளார்.

எதிர்காலம் மாறக்கூடும் என்பதை முன் கூட்டியே நுனித்துணர்ந்து வள்ளுவர் இக்குறளைக் கூறவில்லை யென்றால் அவருக்கு என்ன மதிப்பு? இதனாலேயே திருக்குறள் என்றும்-எங்கும்-எவரும் போற்றும் பொதுநூல் என்னும் பெயர் பெற்றதல்லவா?

பவணந்தி முனிவரும் தம் நன்னூலில்,

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே,"**

என்று கூறியுள்ளமையை நோக்குக.

ஒரு காலத்தில் நல்லொழுக்கமாகக் கருதப்பெற்றது மற்றொரு காலத்தில் இழுக்கமாகவும், ஒரு காலத்தில் இழுக்கமாகக் கருதப்பெற்றது மற்றொரு காலத்தில் ஒழுக்கமாகவும், ஓரிடத்தில் ஒழுக்கமாகக் கருதப்பெற்றது மற்றோரிடத்தில் இழுக்கமாகவும், ஒரு காலத்திலேயே- ஓரிடத்திலேயே - ஒரு கூட்டத்தாரால் ஒழுக்கமாகக் கருதப்பெற்றது மற்றொரு கூட்டத்தாரால் இழுக்கமாகவும், ஒரு கூட்டத்தாரால் இழுக்கமாகக் கருதப்பெற்றது மற்றொரு கூட்டத்தாரால் ஒழுக்கமாகவும் கருதப்பெறக்கூடும். இவற்றிற்கெல்லாம் எடுத்துக்காட்டு (உதாரணம்) தர வேண்டுமாயின் விரியும். எனவே, காலத்திற்கேற்ப, இடத்திற்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப மக்கள் தத்தம்

ஒழுக்கங்களை - நடைமுறைச் செயல்களை வகுத்துக் கொண்டு வாழ்வதே அறிவுடைமை.

கற்றவர் சிலர் - சிலரென்ன பலர்-தங்களை ஏதோ தனிப்பிரிவினர் - உயர்வகுப்பினர் என்று எண்ணிக் கொண்டு, சமூக மக்களோடு நன்கு கலந்து பழகாமல்- அவர்கட்கு ஆவன புரியாமல் ஒதுங்கி வாழ்கின்றனர். வேறு பல கலைகளைக் கற்றிருப்பினும், உலக மக்களோடு ஒட்டி வாழ்தலைக் கல்லாத இவர்களை உண்மையில் கல்வி உடையவர்களாக எப்படிக் கொள்ள முடியும்? கற்றும் இவர்கள் அறிவிலிகளேயாவார்கள். எனவே, உலகத்தோ டொட்டி ஒழுகலும் ஒரு சிறந்த பேரொழுக்கமாகும். இதனை இல்லறத்தார் இனிது உணர வேண்டும்.

# 11. பிறன் இல் விழையாமை

மற்றொருவனுடைய மனைவியைக் காம உணர்ச்சியால் பெண்டாள விரும்பலாகாது. ஒழுக்கமுடையவர் என்று சிறப்பிக்கப் பெறுபவர்க்கு இப்பண்பு மிகவும் இன்றியமையாதது.

> "பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
> தறம்பொருள் கண்டார்கண் இல்."

அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டு நீதி நெறி முறைகளை அறிந்தவர்கள் பிறன் மனைவியை விரும்ப மாட்டார்கள். எனவே, பிறன் மனைவியை விரும்புபவர்கள் நீதிநெறி முறைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் என்று புலப்படும்.

அறம் பொருள் காணுதலாவது:—திருக்குறளிலுள்ள அறத்துப்பால், பொருட்பால்களையே எடுத்துக் கொள்வோம். இவ்விரண்டு பகுதிகளிலும் கூறப்பட்டுள்ள அறத்தைப் பற்றியும் பொருளியலைப் பற்றியும் நன்கு கற்றறிந்து அவற்றைக் கடைப்பிடித்தலாகும். இத்தகையவர், காமத்தை வளர்ப்பதும் பிறருக்குக் கேடு செய்வதும் அறமல்ல என்பதையும், ஒருவன் பொருளை (மனைவியை) இன்னொருவன் சேர்வது களவுக் குற்றமாகலின் அரசியல் தண்டனைக்கு உரியவனாவான் என்னும் பொருளியலையும் உணர்ந்தவராகலின், பிறன் பொருளாகிய ஒரு பெண்ணைச்

சேர்ந்து ஒழுகும் தீயொழுக்கத்தை மேற்கொள்ள மாட்டார்கள். ஈண்டு, "பொருள் கண்டார்" என்பதற் கேற்ப, பிறன் மனைவி என்னாமல், "பிறன் பொருளாள்" என்று குறிப்பிட்டிருப்பதும் கருதத்தக்கது. மேலும், திருமணமாகிப் பிறனுக்கு மனைவியானவளேயன்றி, திருமணமாகாத கன்னியும் பின்னர் பிறனொருவனுக்கு (உடைமைப் பொருளாக) மனைவியாக வாழ்க்கைப்படப் போகின்றாள் ஆதலானும், கணவனையிழந்த பெண்ணும் பிறனொருவனுக்கு மனைவியாயிருந்தவள் ஆதலானும், எல்லோரையும் அடக்கிப் பொதுவாகப் "பிறன்பொருளாள்" என்று ஓதினார் ஆசிரியர். மணமாகாத கன்னியையோ கணவனையிழந்த விதவையையோ மணந்து கொள்ளும் உறுதி உடையவன், அன்னாரை மனத்தால் விரும்புவதை இக்குறள் கட்டுப்படுத்தவில்லை. கற்பழிப்பும் காமக்களி யாட்டமும் கூடாவென்பதே முதன்மையான கருத்தாகும்.

அறநெறிக்கு மாறாக நடக்கும் தீயோர்கட்குள் மிகவும் கொடியவர்கள் பிறன் மனைவியை விழைபவரே. ஒருவன் பிறன் மனைவியைக் கற்பழித்தால், அப் பிறன் அறிந்த போது மனைவியைக் கைவிட்டு விடுவான். அதனால் அவனுக்கும் துன்பம், அப்பெண்ணிற்கும் துன்பம்; கற்பழித்த வனுக்கும் நோய், தண்டனை முதலியன கிடைக்கும். மேலும், கற்பழித்தவன் பரம்பரைக்கும், கற்பழிக்கப் பட்டவளின் பரம்பரைக்கும் வழி வழிப் பழிமொழி எழுமாத லானும், வேறு தீச் செயல்களால் இவ்வளவு பழியும்கேடும் இல்லையாதலானும், இப் பிறனில் விழைவது எல்லா வற்றினும் கடைப்பட்டதாகும்.

நம்பியவன் மனைவியைக் கெடுத்து நம்பிக்கைக்கேடு (துரோகம்) செய்தவன், உயிருள்ளவனாகக் காணப்படினும், அவன் இறந்துபோனவனாகவே கருதப்படுவான். இறந்து போனவன், தன்னை நம்பியுள்ள தாய் தந்தையர், மனைவி மக்கள், உற்றார் உறவினர் முதலியோரை யெல்லாம் ஏமாற்றிவிட்டான் அல்லவா? அதுபோலவே, நண்பனின் மனைவியைக் கெடுத்தவனும் அவனை ஏமாற்றிவிட்டான் அல்லவா? மற்றும், நம்பிய நண்பனை ஏமாற்றக் கூடாது (துரோகம் செய்யக்கூடாது) என்னும் உணர்ச்சி யில்லாமையால், இக்கயவனை உயிருள்ளவனாக எங்ஙனம் மதிப்பது? உயிரிருந்தால் உணர்ச்சியிருக்குமே! மற்றும், பல பெண்களின் நடுவில் வாழும் இவனது உடம்பு அழுகின்ற பல பெண்களின் நடுவே கிடக்கும் பிணத்திற்கு ஒப்பன்றோ? மேற்கூறிய காரணங்களினாலேயே, பிறர்மனை விரும்பியவன் பிணமாக்கிக் கூறப்பட்டான். இக்காலத்தும், மக்களுக்குக் கேடு செய்த அரசியல் தலைவர்களுக்குக் கொடும்பாவி கட்டியிழுக்கும் வழக்கம் இருக்கின்ற தல்லவா? கொடியவர் உயிருடன் இருக்கும்போதே, அவர்களைப் பிணமாகக் கருதி, அவர்கட்குக் கொடும்பாவி கட்டியிழுக்கும் செயலின் உண்மை (தத்துவம்) நோக்கம் இப்போது நன்கு புரிகின்ற தல்லவா?

பெரிய மனிதரெனப் பேர் பெற்ற ஒருவர், சிறிதும் நல்லுணர்ச்சியின்றிப் பிறன் மனையாளோடு கூடினால், அது தீமையைத் தவிர ஒரு நன்மையினையும் செய்யாது. ஏன் எனில், கூடும் போது யாராவது அறிந்து தாக்கி னால் என்ன செய்வது? பின்னரும் வெளியில் தெரிந்து

விட்டால் என்ன ஆவது? என்ற அச்சம் தோன்றுவதால் இன்பம் சிறவாது ஆதலானும், பின்னரும் நோயும் பழியும் உண்டாமாதலானும் அக்கூட்டுறவால் நன்மையில்லை என உணர்க. எனவே, இத்தகைய இழி தொழில் கொண்டவர்க்கு ஏனைய தகுதிகள் இருந்தும் ஒன்றும் பெருமையில்லையாதலான் அத்தகுதிகளை இழந்தவராகவே கருதப் படுவார்.

**"அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**
**நின்றாரிற் பேதையார் இல்."**

**"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்**
**தீமை புரிந்தொழுகு வார்."**

**"எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரார் பிறனில் புகல்."**

மற்றைய குற்றம் செய்தவரின் வடு நாளடைவில் மறைந்துவிட்டாலும் மறைந்து விடலாம்; பிறனில் விழைந்தவனுக்கு எய்திய வடுவோ எந்நாளும் மறையவே மறையாது.

பிறன் மனைவியை விரும்பியவனுக்கு, அவள் இருக்கும் இடத்தை நோக்கிப் போகும்போதும் அச்சம் - அவ்விடத்துக்குள் நுழையும் போதும் அச்சம் - அவளோடு இன்பம் நுகரும்போதும் அச்சம் - அவளை விட்டுப் பிரிந்த பின்னரும் அச்சம் உண்டாவது இயற்கை. காரணம், உடையவனாவது பிறராவது கண்டு விட்டால் என்ன செய்வது என்ற கோழைமையே!

இக்கருத்தை நாலடியார்,

**"புக்க விடத்துஅச்சம் போதரும் போதுஅச்சம்
துய்க்கும்போது அச்சம் தோன்றாமல் காப்பச்சம்
எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்."**

எனக் கூறுகிறது. இவ்விதம் எப்போதும் உள்ள அச்சத் தோடு போய்விடாது. என்றாவது ஒரு நாள் உடையவன் அறியத்தான் செய்வான். அன்று தொடங்கி அவனோடும் அவனைச் சேர்ந்தவர்களோடும் இவனுக்குப் பகையும் உண்டாகும். இதனை ஊரார் உலகத்தார் அறிந்து பழிப்பராகலின் மூன்றாவதாகப் பழியும் வந்து சேரும். இதனால் இவனுக்கு இனி என்றும் தீமையே உண்டாகு மாதலின் அத்தீமையின் மூட்டை இப்போது ஒன்று சேர்ந்து பாவமாகி விடும். எனவே, இவை நான்கும் இவனை விட்டு நீங்கா.

**"எளிதென இல்லிறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி."**

**"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்."**

பிறன்மனை விரும்பாதவனே உண்மையில் அற நெறிப்படி வாழும் குடும்பியாவான். ஒருவன் தன் மனைவி யிருக்கப் பிறன் மனைவியோடு தொடர்பு கொண்டால், தன் மனைவி வாளா (சும்மா) விடுவாளா? கணவன் செய்யும் வேறு எக்குற்றத்தையும் மனைவி மன்னிக்க முடியும். ஆனால் பிற பெண்ணை விரும்புவதை மட்டும்

மன்னிக்க முடியாதன்றோ? எனவே, குடும்பத்தில் சண்டை-சச்சரவு மிகைப்படுவதற்குக் கேட்கவா வேண்டும்? ஆகவே, அவர்களின் இல்லறம் நல்லறமாகத் திகழாதன்றோ? அதனாலேயே, பிறன் மனை விரும்புபவன் உண்மையான இல்லறத்தானாகக் கருதப்படமாட்டான்; விரும்பாதவனே அப்பெருமைக்கு உரியவன்.

இன்னும் சிலர், மணந்த தம் மனைவிக்கு இன்பம் அளிக்காமல் பிற பெண்களையே சுற்றித் திரிவர். மனைவி மட்டும் என்ன - மரக்கட்டையா? மனிதப் பெண்ணாகிய அவளுக்கு மட்டும் உணர்ச்சியிராதா? ஏதோ புலனடக்கம் உடையவளாயிருந்தால் தப்பலாம். இல்லாவிட்டால் அவளும் வேறோர் ஆடவனை விரும்ப நேரிடலாமல்லவா? மற்றும், தன் கணவன் கூடா ஒழுக்கத்தால் உடல்நலம் கெட்டுப் புணர்ச்சிக்கு வன்மையில்லாதவனாய் விட்டாலும் அவளது மனம் மாறக் கூடுமல்லவா? அதைக் கணவன் அறிந்தால் என்ன ஆவது? எனவே, பிறன்மனை விரும்புபவனுடைய குடும்பம் உருப்படாது. அவன் உண்மையான குடும்பியாகான்.

> "அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
> பெண்மை நயவா தவன்."

பிறன்மனை நோக்காமை ஒரு பெரிய ஆண்மையாகும். அது சிறந்த அறமும் ஒழுக்கமும் ஆகும்.

> "பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
> அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு."

பாம்பையும் கையால் பிடித்து இழுத்து ஆட்டுவான்; பகைவரையும் பறக்கடிப்பான்; பெரிய போர்க்களத்தில் பம்பரம்போல் சுழல்வான் - அத்தகைய ஆண்மை (வீரம்) உடையவன் ஒருவன். ஆனால் அவனே ஒரு கட்டழகியைக் கண்டால் கலங்குகிறான். அவளைப் பின் தொடர்கிறான். அவள் பார்த்தால் போதும் என்று பல்லிளிக்கிறான். பேசினால் போதும் என்று துவள்கிறான். அவள் என்ன சொன்னாலும் சொன்னபடியே கேட்கிறான். இவன் பிறரிடம் காட்டிய சினம், முறைப்பு, பகைமை, அஞ்சாமை எல்லாம் பஞ்சாய்ப் பறக்கின்றன அவனிடம். எதிரியிடம் அகப்பட்டுக் கெஞ்சுகின்ற ஆண்மையற்ற கோழையைப் போலாகின்றான் அவளிடம். அதனால்தான் ஒரு பெண்ணைப் பொருட்படுத்தி அவளுக்கு அடிமையாகாமல்- கலங்காமல் நிற்கும் காளைத் தன்மையை வெற்று ஆண்மை என்றுகூடச் சொல்லாமல் பேர் ஆண்மை-பெரிய (வீரம்) ஆண்மை என்றார் நம் வள்ளுவப் பெருந்தகையார்

ஈண்டு ''பிறன் மனை சேராத பேராண்மை'' என்று சொல்லாமல் ''பிறன் மனை நோக்காத பேராண்மை'' என்று கூறியிருப்பது இன்னும் குறிப்பிடத்தக்கதாகும். சிலர் பிறன் மனைவியைச் சேர ஆர்வமுள்ளவராயிருந்தும், அதற்குரிய வசதியோ-வாய்ப்போ கிடைக்காததால் சேராமல் இருக்கலாம்; ஆதலின் சேராமை பேராண்மையாகாது; அவளைக் காம எண்ணத்தோடு உற்று நோக்கலும் செய் யாதிருப்பதே பேராண்மையாகும் என்றார் ஆசிரியர். உடலால் சேராதிருப்பதைவிடக் கண்ணால் பார்க்காமலும் இருப்பது சிறந்ததாகலாம். அதைவிட மனத்தால் எண்ணா

திருப்பது சிறந்ததாதலின் ''பிறன் மனைவி எண்ணாத பேராண்மை'' என்று ஏன் வள்ளுவர் கூறியிருக்கக்கூடாது? என்று சிலர் வினவலாம். அங்ஙனம் கூறுவது பொருந்தாது. ஒரு பெண்ணின் அங்க-அடையாள-அழகை உற்று நோக்கின பின்புதானே மனம் அவளையறிந்து பின் எண்ண முடியும். ஆதலின், மனம் எண்ணுவதற்கும் முற்பட்ட செயல் கண் நோக்குதல் ஆகும். அதனாலேயே வள்ளுவர் ''நோக்காத பேராண்மை'' என்றார். இந் நுட்பத்தை அறியாதிருக்க வள்ளுவர் என்ன கிள்ளுகீரையா?

வழியிலே கட்டழகி யொருத்தியைக் கண்ட பொழுது உணர்ச்சியுள்ள ஆண்மகன் ஏறெடுத்துப் பார்க்காமல் இருக்க முடியுமா? உணர்ச்சியற்ற பேடிதான் வாளா செல்வான்! என்று சிலர் சொல்லலாம். கட்டழகி சென்றால் பார்க்கக் கூடாது என்று வள்ளுவர் சொல்லவில்லை. ஓர் ஆண் மகனோ, ஒரு மாடோ சென்றால் அவனையும், அதனையும் எந்நோக்கத்தோடு நாம் பார்ப்போமோ? அந் நோக்கோடேயே அக்கட்டழகியைப் பார்ப்பதை வள்ளுவர் மறுக்கவில்லை. தம் உணர்ச்சியைச் செலுத்தி உவகை யுறும் நோக்கத்தோடு அவளைப் பார்க்கக்கூடாது. அவ் வுணர்ச்சியைத் திருப்பி மனைவியிடம் செலுத்த வேண்டும் என்பதுதான் கருத்து. பசித்த ஒருவன் வழியில் (பலகாரக் கடை) சிற்றுண்டிக்கடையைக் கண்டால் திருடித்தின்னாமல் இருக்க முடியுமா? என்று கேட்க முடியுமா? பசித்தால், தன் உழைப்பால் கிடைக்கும் தன் உடைமையைத் தானே உண்ண வேண்டும்? அஃதே போல் இஃதும் கொள்க!

பிறன்மனை நோக்காமையே பேராண்மை; அஃதுடைய வரே சான்றோர்; அஃதுடையவரே அறமுடையோர்; அஃதுடையவரே ஒழுக்கமுடையோர்; என்பது இக்குறளின் தெளி பொருள். இப்பேராண்மையை அறமாகக் குறிப்பிட்டதோடு நிறைவு (திருப்தி) கொள்ளாமல், ஒழுக்கமாகவும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளாரே! இந்த அறத்திற்கும் ஒழுக்கத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன? இவ்விரண்டும் எவ்வெவ்வ தனைக் குறிக்கின்றன என்பதனை ஒரு சிறிது ஆராய்வோம்: ஈண்டு அறம் என்றது, இல்லறத்தில் (குடும்பத்தில்) கடைப்பிடிக்க வேண்டிய இல்லற (தருமத்தை) நெறியை. ஒழுக்கம் என்றது பொதுவாக உலகத்தாரிடையே கடைப் பிடித்து ஒழுக வேண்டிய ஒழுக்கத்தை. பிறன் மனைவியை எவரும் தெரியாமல் கூடியவன், தன் மனைவியையும் அப்பிறனையும் வஞ்சித்து ஏமாற்றிவிட்டான் அல்லவா? தன் மனைவியை வஞ்சித்தல் இல்லற நெறிக்கு மாறு பட்டது. பிறனை வஞ்சித்தல் உலக ஒழுக்கத்திற்கு மாறு பட்டது. எனவே, பிறன்மனை விரும்பியவன் அறமும் ஒழுக்கமும் கெட்டவன் என்பது புலப்படும். புலப்படவே, பிறன்மனை விரும்பாத பேராண்மையுடையவன் அவ் வறமும் ஒழுக்கமும் கெடாதவன் என்பதும் புலப்படுமன்றோ? அதனைத் தான் வள்ளுவர் இக்குறளில் குறிப்பாகவும் சுருக்கமாகவும் கூறியுள்ளார். இந்நுணுக்கமெல்லாம் நுனித்துணர்ந்து மகிழ்தற்குரியனவன்றோ?

பிறன்மனை விரும்பியவர்க்கு அச்சம், பகை, பழி, பாவம், நோய், வறுமை, வயதுக்குறை முதலிய தீமைகள் நேரும் என்பது உறுதியான செய்தி! எனவே, பிறன்மனை

விரும்பாதவர்க்கு இத்தீமைகளுள் யாதொன்றும் வராது என்பதும் உறுதி! தீமை ஒன்றும் இல்லையெனவே நன்மைகளே உண்டாகும் என்பதும் உறுதி! ஆதலின், நன்மைக்கு உரியவர் பிறர்மனை விரும்பாதவரே என்று வரும் குறளில் கூறுகிறார் ஆசிரியர்.

"நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறற்குஉரியாள் தோள்தோயா தார்."

உலகில் வறுமை - பிணி முதலியவற்றால் வருந்தும் சிலரை நோக்கி "இவர் இளமையில் ஏராளமாக விளையாடி விட்டார், அதன் பயன்தான் இது!" என்று உலகத்தார் அவரது கூடா ஒழுக்கத்தைச் சுட்டுவதையும், நரை திரை மூப்பின்றி நீண்ட நாள் வாழ்பவரை நோக்கி "இவர் எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்; எத்தீமையும் புரிய மாட்டார் - இது தான் இவருடைய வயதை வளர்க்கின்றது!" என்று உலகினர் அவரது நல்லொழுக்கத்தைச் சுட்டுவதையும் நாம் காண்கின்றோமல்லவா? அதைத்தான் வள்ளுவரும் பிறற் குரியாள் தோள்தோயாதவர் நன்மைக்குரியவர் என்றும், தோய்ந்தவர் தீமைக்கு உரியவர் என்றும் சுட்டிக் கூறினார்.

நாமம் என்றால் மிகுதி. கடல், ஏனைய நீரோட்டம்- நீர்த்தேக்கங்களைவிட மிகுதியான நீரைத் தன்னிடத்தே உடையதாதலின் "நாமநீர்" என்று சிறப்பிக்கப் பெற்றது. இவ்வுண்மையுணராத பரிமேலழகர் முதலிய பல உரை யாசிரியர்கள் நாமம் என்பதற்கு அச்சம் எனப் பொருள் கொண்டு, அச்சத்தைத் தரும் கடல்நீர் என்று பொருள்

கூறியுள்ளனர். இஃதே உண்மைக் கருத்தாயின், இக்கருத்திலேயே ''நாமநீர்'' என்பதை வள்ளுவர் கூறியிருப்பாராயின், இதனினும் தமிழர்க்கு இழிவு (அவமானம்) வேறு வேண்டியதில்லை. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் முதலிய சேர மன்னர்களையும், கடலுள் போரிட்ட இளம் பெருவழுதி முதலிய பாண்டிய மன்னர்களையும், அரபிக் கடலிலுள்ள பன்னீராயிரம் பழந்தீவுகளைப் (இப்போதுள்ள மால் தீவுகளை) படையெடுத்து வென்ற இராசராசன் முதலிய சோழ மன்னர்களையும் தலைவர்களாகக் கொண்ட தமிழர் இனமா கடல் நீரைக் கண்டு அஞ்சுவது? 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்று ஓதிய ஔவையார் முதலிய பெண்மணிகள் பிறந்த தமிழகமா கடல் நீரைக் கண்டு அஞ்சுவது? அரேபியா, சீனா, பர்மா, இலங்கை, மலேயா, கிரேக்கம், ரோம் முதலிய பலநாடுகளுடன் பன்னூற்றாண்டுகளாகக் கடல் வாணிகம் செய்துவரும் தமிழர் குருதியா கடல் நீரைக் கண்டு கலங்குவது? அனைத்துலகையும் ஆட்டிப் படைத்த ஆங்கிலேயனோடு போட்டியிட்டுக் கப்பலோட்டிய வ. உ. சிதம்பரனார் முதலிய அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர்களைப் பெற்ற தமிழ் இனமா தண்ணீர்ப் பெருக்கைக்கண்டு அஞ்சுவது? வெட்கம்! வெட்கம்! ''நாமநீர்'' என்னும் வள்ளுவர் வாய் மொழிக்கு ''அச்சம்தரும் கடல்'' என்று பொருள் செய்திருப்பது அறியாமை! அறியாமை!! வருந்தத்தக்கது!! வருந்தத்தக்கது!! பழைய பரிமேலழகர் எழுதியதில் வியப்பில்லை. பிற்காலத் தமிழர்களும் இவ்விதம் உரை வகுத்திருப்பது வியப்பிற்குரியதாகும். எனவே, நாமம் என்பதற்கு மிகுதி என்பதே இவ்விடத்திற்குப் பொருத்தமான பொருள்

என்பதை உணர்க! இச்சொல் இப்பொருளும் தரும் என்பதை "நாம வெள்ளத்து நடுவண் தோன்றிய வாய் மொழி மகனோடு" என்னும் 'பரிபாடல்' (ஒரு சங்கநூல்) அடியாலும் தெளிக.

ஒருவன் இன்னின்னவை அறச்செயல்கள்-இவற்றைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்று வரை யறுத்து (திட்டமிட்டு)க் கொண்டு அவற்றைக் கடைப் பிடித்து ஒழுக வேண்டும்; அப்படி ஒழுக முடியவில்லை யாயின் செய்யக்கூடாத வேறு எந்தக் கொடுமைகளைச் செய்தாலும், பிறன் மனை விரும்பும் பெரிய கொடுமையை மட்டும் செய்யவே கூடாது.

**"அறன்வரையான் அல்ல செயினும் பிறன் வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று."**

வள்ளுவர் கூறுவது இருக்கட்டும் — நாமே எண்ணிப் பார்ப்போமே! மனைவியோடு கூடி வாழும் இல்லறத்தான் ஒருவன், தான் இன்னொருவனுடைய மனைவியை விரும்புவானேயானால், தன் மனைவியும் இன்னொருவனை விரும்புவதற்கு ஒப்புதல் அளித்து வழிவகுத்துக் கொடுத்தவ னாகிறான் என்பதுதானே அதற்குப் பொருள்! மேலும் அவன், இன்னொருவனோடு உடல் தொடர்பு கொண்ட இன்னொருத்தியோடு தான் உடல் தொடர்பு கொண்டு விட்டு, மீண்டுவந்து தன் மனைவியோடு உடல் தொடர்பு கொள்வதன் மூலம், அந்த இன்னொருவனுடைய உடல் தொடர்பை மறைமுகமாகத் தன் மனைவிக்கும் உண்டாக்கிய வனாகிறான். இதனால் ஏற்படும் பொல்லாத விளைவுகளை யெல்லாம் இல்லறத்தார்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

# 12. பொறையுடைமை

பிறர் வைதாலும் துன்பம் செய்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது பொறுத்துக் கொள்ளும் பொறுமை உடையவராயிருத்தல் இல்லறத்தார்க்குத் தலையாய பண்பாகும்.

**"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை."**

நாம் நன்றாக இருக்கின்ற சம நிலத்தைத் தோண்டிப்பாழ் செய்தாலும், அந்நிலம் நம்மேல் சினம் கொள்ளாமல், மேலும் நம்மைத் தாங்கியும், உணவு முதலிய பல உதவி களைச் செய்தும் காத்தல் போல, நம்மைப் பிறர் இகழ்ந்து பேசியபோதும், அவரைச் சினவாமல் பொறுப்பதோடு, மேலும் அவர்க்கு நம்மாலான உதவியையும் செய்ய வேண்டும். நம்மைத் தாங்கிப் பல உதவி செய்யும் நிலத்தை ஒப்புமை (உவமை) காட்டியதால், இகழ்ந்த வரைப் பொறுப்பதோடு அவர்க்கு உதவவும் வேண்டும் என்பது வருவித்து எழுதப்பட்டது. இங்ஙனம் இகழ்ந்த வரைப் பொறுக்காமல் நாமும் திரும்ப இகழ்வோமானால், அவர், மேலும் சினந்து இன்னும் அதிகமாக நம்மை இகழ்வார்.

இவ்வாறு நாம் இகழ, அவர் இகழ வம்பு முற்றும். அதனால் நமக்குத் துன்பம் உண்டாவது உறுதி. நாம்

திரும்ப இகழாமல் பொறுத்துக் கொள்வோமேயானால் அவர் குலைத்துப் பார்த்து விட்டு, பின் ஓய்ந்து போவார். பொறுத்ததோடு மேற்கொண்டு ஓர் உதவியும் செய்து விடுவோமேயானால், அவர் நம்மிடம் குழைந்து, மீண்டும் இகழவே மாட்டார். குலைக்கிற நாயோடு நாமும் திரும்பக் குலைக்காமல், அதற்கு ஒரு வெல்லக் கட்டியும் போட்டால் எப்படியிருக்கும்? அது போலத்தான் இஃதும்.

இகழ்ந்தவரைப் பொறுக்க வேண்டும் என்பதற்கு ஈண்டு வள்ளுவர் நிலத்தை ஒப்புமையாகக் காட்டியுள்ளாரே! நிலத்திற்கு ஏதேனும் உணர்ச்சி உண்டா? அது தன்னைத் தோண்டுபவரைப் பொறுத்துத் தாங்குவதில் ஒன்றும் பொருள் இல்லையே! என்று சிலர் வினவலாம். ஈண்டு வள்ளுவர் குறளின் நுட்பத்தை உணரின் மிகவும் நயப்போம். அது வருமாறு:- நிலம் தன்னை யார் எது செய்தாலும் எப்படி உணர்ச்சியற்றுக் கிடக்கிறதோ, அது போலவே, தன்னை யார் இகழ்ந்தாலும் உணர்ச்சியற்றவராக - அதாவது, - இகழ்ந்ததாக உணராதவராக - அவ்விகழ்ச்சியைப் பொருட்படுத்தாதவராக இருக்க வேண்டும் எனப் பொறுமையின் ‘எவரெஸ்ட்’ எல்லையை வள்ளுவர் இந்தக் குறளில் வற்புறுத்தியுள்ளார். உலகத்தின் உயர்ந்த தலை இமயமலையின் ‘எவரெஸ்ட்’ உச்சி தானே! எனவே தான் பொறுப்பவர் தலையாயவர் என்னும் பொருளில் ‘பொறுத்தல் தலை’ என்றார் வள்ளுவர்.

பிறர் செய்த தீமையைப் பொறுத்தால் மட்டும் போதாது; அதனை அப்போதே மறந்து விடவும் வேண்டும்.

**"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று".**

ஈண்டு இறத்தல் என்றால் கடத்தல் என்று பொருள். எனவே இறப்பு என்பது, முறை கடந்து - அளவு கடந்து பேசும் பேச்சினையும் செய்யும் செயலினையும் குறிக்கின்றது. நம்மிடம் பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் சிலர் பிறரால் துன்புறுத்தப் படும்போது, திரும்ப அவரைத் தாம் துன்புறுத்த இயலாமையால், அவரைப் பொறுத்துக் கொண்டதுபோல் நடித்து விட்டு, பின்னர் சமயம் வாய்த்த போது வன்மையாகத் தாக்குகின்றார்கள் அல்லவா? அது கூடாது. அதனைப் பொறுத்துக் கொண்ட அங்கேயே - அப்போதே மறந்தும் விடவேண்டும். மறக்காமல் இருந்தால் மேன்மேலும் பகை வளர்ந்து தீமை பெருகுமே தவிர நன்மை பெருகா தாகலானும், பொறுப்பதால் அப்போது மட்டும் தீமை விலகும்-மறத்தலால் எப்போதுமே தீமை விலகிவிடும் ஆதலானும் பொறுத்தலைவிட மறத்தல் இன்னும் 'நன்று' என்றார் வள்ளுவர்.

சிலர், செல்வமும் உடல் வலிமையும் இல்லாத ஏழையராகவும் கோழையராகவும் உள்ளபோது எவர் என்ன செய்யினும் பொறுத்துக் கொள்கின்றனர். ஆனால் அவரே செல்வமும் உடல் வலிமையும் உண்டாய்விட்டபோது, எவரிடமும் அணுவளவு பொறுமையும் காட்டுவதில்லை. இன்னவர் முடியாதபோது காட்டும் பொறுமைக்கு ஒரு பொருளோ - சிறப்போ இல்லை. ஆதலின், இன்னவர் தமக்கு எல்லாம் இருக்கும்போது முன் போலவே பொறுமை

யுடன் திகழவேண்டும் - என்பதற்காகவே "என்றும்" பொறுக்க என்றார் ஆசிரியர்.

செல்வம் இருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி, வீட்டிற்கு வரும் விருந்தினரைப் போற்றாதவரே ஏழை யருள்ளும் ஏழையராகக் கருதப்படுவர்; அதுபோலவே உடல் வலிமை யிருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி, பிறர் குற்றம் பொறுக்கும் மனப் பொறுமை இல்லாதவரே கோழைகளுள்ளும் கோழையராகக் கருதப்படுவர். அன்றியும் செல்வம் இருப்பினும் இல்லாவிடினும் விருந்தோம்புபவரே செல்வருள்ளும் சிறந்த செல்வராவர்; அது போலவே உடல் வலிமை இருப்பினும் இல்லாவிடினும் மனப் பொறுமையுடையவரே வீரருள்ளும் வீரராகக் கருதப் பெறுவர்.

**"இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை."**

செல்வம் இருந்தும் விருந்தோம்பா விட்டால், செல்வம் இருப்பதாகப் பொருளில்லை யல்லவா? வறுமையிருந்தும் விருந்தோம்பினால், வறுமையிருப்பதாகப் பொருளில்லை யல்லவா? அதனாலேயே, வறுமையுள் வறுமை விருந் தோம்பாமை என்றார். அதுபோலவே, உடல் வலிமை யிருந்தும் மனப் பொறுமை இல்லாமல் பிறரைத் தாக்கினால், தாம் பிறரை மூன்று அடி அடித்தாலும், அவர் தம்மை ஓரடியாயினும் அடிப்பாரன்றோ? உடல் வலிமை இல்லாவிடினும் மனப் பொறுமையிருந்தால் பிறரிடமிருந்து ஓரடியும் பட வேண்டியதில்லையன்றோ? எனவே தீய முறையில் அடியுதைபட்டுத் துன்பத்திற்கும் பழிக்கும்

ஆளாகுபவன் வீரனா? ஓரடியும் ஒரு துன்பமும் ஒரு பழியும் பெறாத பொறுமைசாலி வீரனா? பொறையுடை யானே வீரனாதலால்தான், வன்மையுள் வன்மை பொறுமை என்றார் ஆசிரியர். கத்தி தீட்டுவதைவிட - புத்தி தீட்டுவதும், வீரியத்தைவிட - காரியமும் பெரியன என்பதையே வள்ளுவர் இக்குறளில் வேறு சொற்களால் குறித்துள்ளார்.

ஒருவன் நம்மைத் தாக்கினால், நாம் வாளா இருந்தால் அவனுக்கு எளிதாய்விடாதா? இடம் கொடுத்ததாய்விடாதா? மீண்டும் எளிதில் வந்து தாக்குவானல்லவா? எனவே நாம் மீண்டும் தாக்கினால்தானே அவன் அஞ்சி மறுமுறை நம்மிடம் வர மாட்டான்? என்று சிலர் வினவலாம். உண்மை அ∴தன்று. நாம் திரும்பத் தாக்கினால் அறிவுடையவன்தான் அஞ்சி அடங்குவான்; அறிவில்லா தவன் மீண்டும் மீண்டும் சினம் (குரோதம்) கொண்டு தொடர்ந்து தாக்குவான். அறிவில்லாமல் குலைக்கும் வெறி நாயின்மேல் கல்லெடுத்துப் போட்டால் அது குலைப்பதை நிறுத்தாமல் மேன்மேலும் குலைத்துக் கொண்டேயிருக்கும். அதன்மேல் எறிய வேண்டிய பொருள் கல்லன்று. வெல்லக் கட்டியே! அதனால் வள்ளுவரும் அறிவில்லாதவனைப் பொறுத்துக் கொண்டுதான் தீரவேண்டும் என்பதனை வற்புறுத்துவதற்காக 'மடவார்ப் பொறை' என்று கூறினார்.

ஊதியத்தை விரும்பியவரிடத்திலேயே உழைப்பு இருக்கும். அது போல, நிறையை விரும்பியவரிடத்திலேயே பொறை இருக்கும். எனவே, ஊதியத்திற்கு உழைப்பு

காரணமாயிருப்பதுபோல, நிறைக்குப் பொறை காரணம்- அஃதாவது உழைப்பினால் ஊதியம் கிடைப்பதுபோல, பொறையினால் நிறை உண்டாகும் என்பது விளங்கும். பொறை என்றால் - பிறருடைய குற்றங்களையும் அவற்றால் உண்டாகும் துன்பங்களையும் பொறுத்து (சகித்துக்) கொள்ளுதல். நிறை என்றால் - ஒரு வழிப்பட்டு ஒரு காரியத்தைக் கவனியாமல் பல வழிப்பட்டு அலைந்து திரியும் மனத்தை ஒரே நிலையில் நிறுத்தியடக்குதல். பிறரது குற்றத்தையும் அதனால் உண்டாகும் துன்பத்தையும் பொறுக்க முடியாதவரது மனம் ஒரு நிலையில் நிற்கா தன்றோ? அதனாலேயே நிறை இருக்க வேண்டுமென்றால் பொறை இருக்க வேண்டும். பொறையால் நிறையும், நிறையால் காரிய வெற்றியும் கைகூடும். ஒருவர் தமக்குத் தீங்கிழைத்தவரைப் பொறுக்காமல் திரும்பத் தீங்கிழைப்பா ரேயாயின் ஏறத்தாழ அவர்க்கும் இவர்க்கும் என்ன வேற்றுமை இருக்க முடியும்? அதனால் ஒறுத்தவரை உலகினர் மதியார்-பொறுத்துக் கொண்டவரின் பெருந் தன்மையை நோக்கி அவரையே மதிப்பர். ஒருவரிடத்தில் ஓர் எளிய துரும்பும் இல்லை; மற்றொருவரிடத்தில் சிறந்த பொன் உள்ளது. இவ்விருவருள் பொன் ஈட்டியவரே சிறந்தவரல்லவா? அதுபோல, ஒறுத்தவர் ஒரு சிறு துரும் பாகவும் (ஒன்றாகவும்) கருதப்பட மாட்டார்; பொறுத்தவரோ உயர்ந்த பொன்னாகப் போற்றப்படுவார்.

தீங்கிழைத்தவர்க்குத் திரும்பத் தீங்கிழைப்பதால் இழைத்த ஒரு நாளைக்கு மட்டுமே மகிழ்ச்சி. பின்னர் இறக்கும் வரையும்-இறந்த பின்னும் இகழ்ச்சியே.

பொறுத்துக் கொண்டவர்க்கோ,அன்று ஒரு நாளைக்குத் தான் துன்பம்; பின்னர் இருக்கும்வரையும் உலகினரின் புகழைக் கேள்விப்படுதலால் மனத்திற்கு இன்பமேயாம். இறந்த பின்னும் அப்புகழ் நிலைக்கும்.

**"நிறையுடைமை நீங்காமை வேண்டின்**
**பொறையுடைமை**
**போற்றி ஒழுகப் படும்."**

**"ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து".**

**"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்."**

பிறர் நமக்குத் துன்பம் செய்தால், நாம் மீண்டும் அவர்க்குத் துன்பம் செய்யாமல் அவரை மன்னிப்பதோடு, அவருடைய அறியாமைக்கும் அதனால் அவர்க்கு உண்டாகப் போகும் துன்பத்திற்கும் பழிக்கும் இரங்கி வருந்தவும் வேண்டும்.

தம்மைச் சிலுவையில் அறைந்த தீயோர்களுக்கு ஒரு துன்பமும் செய்யாமல் காக்கவேண்டும் என்று ஏசுநாதர் இறைவனிடம் வேண்டியதாக வழங்கப்படும் வரலாறு ஈண்டு ஒப்பு நோக்குதற்கு உரியது. தமக்குத் தீங்கிழைத் தவரை மன்னிப்பதோடு, அதனால் அவர்க்கு என்றும் எவராலும் எத்தீங்கும் நேராதிருக்கவும் முயல வேண்டும்.

பணம், படிப்பு, பட்டம், பதவி முதலியவை மிக்குள்ள ஒருவர் நம்மிடம் இறுமாப்பாக நடந்து கொண்டபோது, நாம் அதைப் பொருட்படுத்திக் கண்டுகொண்டதாகக் காண்பிக்காமல், அமைதி (பொறுமை)யாக நடந்துகொள்

வோமேயானால், அவர் வெட்கித் தலை குனிவார். எனவே, அவர் தோற்க, நாம் வென்றவராவோம். வழியே போகும் போது நாய் குலைக்குமேயானால், அந்தப் பக்கமே திரும்பிப் பாராமல் நாம் போய்க்கொண்டே யிருப்போமானால், அந்நாய் சற்று நேரம் குலைத்துப் பார்த்துவிட்டுப் பின் செருப்பால் அடிபட்டதுபோல் ஓய்ந்து விடுமல்லவா?

**''திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்**
**தறனல்ல செய்யாமை நன்று.''**

**''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்''.**

எது வந்தாலும் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலுடையவர் எத்தீங்கையும் கருதவோ-பேசவோ-செய்யவோ மாட்டாராதலின், அவருடைய எண்ணம் - பேச்சு - செயல் ஆகியன துறவியர் போல் கள்ளமின்றித் தூய்மையுடன் மிளிரும்.

மிக்க உணவுண்டு விரைவில் இறந்தொழிபவனைவிட குறைந்த உணவுண்டு நீண்ட நாள் உயிர் வாழ்பவனே பெரியவன். ஒரு நாளைக்கு ஐந்தாறு முறை உணவுண்டு, இறை விழுங்கிய பாம்பைப் போல் புரண்டு கொண்டிருப்பவனைவிட, இருவேளை யுணவே உண்டு உழைக்கும் தொழிலாளி பெருமைக்குரியவன். மேலும் ஒரு நாளாவது ஒரு வேளை யுணவையாவது நிறுத்த முடியாதவர் பலர் வாழும் இவ்வுலகில், பல நாள் தொடர்ந்து உணவுண்ணாமல் (உண்ணா நோன்பு கொண்டு), எடுத்த காரியத்தை முடித்த பிறகே உணவுண்ணுபவரே மக்கள் எல்லோரினும் சிறந்தவரன்றோ? இதனாலன்றோ, பன்முறைகளில் பன்னாள்

உண்ணா நோன்பு (விரதம்) கொண்டு எடுத்த காரியத்தை முடித்த காந்தியடிகள் பெரியவராக உலகில் பாராட்டப் பெற்றார்?

ஆயின், பலவேளை பட்டினி கிடக்கும் ஏழைகளை நாம் ஏதாவது வைவோமானால் அவர்கள் அதனைப் பொறுத்துக் கொள்ளாமல், தங்களது பேச்சால் தம் வெறுப்பை நம்மிடம் தெரிவிக்கின்றனர்.

எனவே, பசியைப் பொறுக்கும் அவர்களால் பிறரைப் பொறுக்க முடியவில்லை என்பது தெளிவு.

எனவே, பசியைவிடக் கொடியது-பிறர் சொல்லும் இன்னாச்சொல்லே என்பதும், உண்ணாது நோற்றலைவிட-இன்னாச்சொல் நோற்றலே அருமை என்பதும், அதனால், உண்ணாது நோற்பவர் இன்னாச்சொல் நோற்பவருக்குப் பிற்பட்டவரே - அடுத்தபடியானவரே என்பதும் நன்கு விளங்கும். மற்றும், காரிய வெற்றிக்காக உண்ணாது நோற்பவர், பிறர் சொல்லும் இன்னாச்சொல்லையும் நோற்பார் என்பது என்ன உறுதி? எனவே உண்ணாது நோற்பதோடு, இன்னாச்சொல்லையும் நோற்பது (பொறுப்பது) மிகச் சிறந்தது; அவரது பெருமை சொல்லும் அளவினதன்று.

**"துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்."**

**"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்"**

# 13. அழுக்காறாமை

இல்லறவாழ்க்கை இனிது நடப்பதற்கு அழுக்காறு என்னும் பொறாமை அறவே கூடாது. அழுக்காறாமையை ஒரு சிறந்த ஒழுக்காறாக ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும். அழுக்காறுடையவர் ஒழுக்கமுடையவராகக் கருதப்படமாட்டார். பிறர் உடைமையைக் கண்டு பொறாமைப்படுவதால் நமக்கு வரக்கூடிய நன்மை ஒன்று மில்லையாதலானும், அதனால் மனவெரிச்சலும் புழுங்கலும் உண்டாக, அதனால் நோய், கெட்ட பெயர், துன்பம் முதலியன உண்டாமாதலானும் பொறாமை கூடாது.

ஒருவர் தாம் பல பேறுகளைப் பெற வசதியும் வாய்ப்பும் அதற்கேற்ற சூழ்நிலையும் அமையாமற்போயினும், பெற்றிருப்பவர்களை நோக்கிப் பொறாமைப் படாமல் இருப்பாரே யானால், அப்பண்பே எல்லாவற்றினும் சிறந்த பேறாகக் கருதப்பெறும். மாடமாளிகை-கூட கோபுரத்தில் வாழ்பவனைக் கண்டு பொறாமையால் மனம் புழுங்காமல், தன் குடிசையே தனக்குப் பெரிது என்னும் அமைதி ஒருவனுக்கு இருந்தால், எந்தப் பேறு இல்லாதவனாக அவனைக் கருதமுடியும்? பொறாமை இல்லாத அவனது அமைதியே, எல்லாப் பேறும் அவனுக்கு இருப்பது போன்ற ஓர் உணர்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருக்குமன்றோ? மற்று, ஒருவன் தன்னை மேன்மேலும் வளர்ச்சி செய்வதை இக்கருத்து தடுக்கவில்லை. பிறனைக் கண்டு வயிறு

எரிந்து சாகாதே என்றுதான் கூறப்படுகிறது. எனவே, தான் வளர்ச்சி அடைவதற்குச் சூழ்நிலை சரியாயில்லை யெனில், பிறனைக் கண்டு எரிந்து சாகாமல், சூழ்நிலை சரிப்படும்வரை அமைதியுடன் வாழவேண்டும் என்பது தெளிவு. பகைவரிடம் பொறாமை கொள்ளலாம், நண்பரிடமே பொறாமை கொள்ளக்கூடாது என்று எண்ணவேண்டாம். நண்பர்—பகைவர், வேண்டியவர்—வேண்டாதார் என்னும் எவரிடமும் பொறாமை கூடாது; பகைவரிடம் பொறாமை காட்டப் பழகினால், பின் அது நண்பரிடமும் காட்ட ஏதுவாகும்; ஆதலின் எவரிடமும் கூடாது.

**''ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு.''**

**''விழுப்பேற்றின் அஃது ஒப்பது இல்லை யார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.''**

அறமும் பொருளும் வேண்டுமானால் பொறாமை கூடாது. பிறனது வளர்ச்சியைக் கண்டு பொறாமைப் படுபவன், மனம் நொந்து புழுங்குவதிலும், பிறனது வளர்ச்சியைக் கெடுக்கமுயல்வதிலுமே தன் காலத்தைச் செலவழித்துக் கொண்டிருப்பானாதலால், தான் பொருள் ஈட்டுவதற்குத் தனக்கு நேரம் இல்லாமற் போகும்; போகவே, தனக்குப் பொருள் இல்லாமற்போகும். அதனோடு தன்னுடைய தீக் குணத்தையும் தீச் செயலையும் கண்ட உலகினர், ''இவன் அறவொழுக்கம் இல்லாதவன்'' என்று பழிப்பர். ஆதலால், பொறாமைக் குணமுள்ளவன் அறமும் - பொருளும் பெறாதவனாகின்றான். பிறனாக்கம் கண்டு

பொறாமைப் படாது பேணுதல் (போற்றுதல்) செய்பவன், அப் பிறனாலும் உலகினராலும் அற ஒழுக்கம் உள்ள வனாகச் சிறப்பிக்கப் பெறுவான்; அதுவுமன்றி, தனக்கு மனமும் சூழ்நிலையும் சரியாயிருப்பதால், அப்பிறனோடு ஒத்துழைத்தோ, அல்லது தனியாக இருந்தோ, தானும் தொழில் செய்து பொருளீட்டுவான். ஆதலால், பிறனாக்கம் கண்டு பேணுபவன் அறனும் ஆக்கமும் உடையவனாவான்.

**"அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்**
**பேணாது அழுக்கறுப் பான்."**

தீயொழுக்கத்தால் துன்பம்வரும் என்பதையும், அழுக் காறு ஒரு தீயொழுக்கம் என்பதையும், (ஆதலின்) பிறர்மேல் அழுக்காறு கொண்டு அவர்க்குத் தீங்குகள் செய்யக் கூடாது என்பதையும் அறிந்து, அறிந்தவண்ணம் ஒழுகு பவர்களே உயர்ந்தவர்கள்.

**"அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**
**ஏதம் படுபாக்கு அறிந்து".**

பொறாமைக் குணம் உடைய ஒருவனுக்குத் துன்பம் செய்யப் பகைவர் யாரும் வேண்டியதில்லை; அவனது பொறாமைக் குணம் ஒன்றே போதும்! அதுவே அவனுக்குப் பெரும் பகை! மற்றைய பகைவர்கள் செய்யக்கூடிய துன்பங்களையெல்லாம் ஏன் - பகைவர்களால் செய்ய முடியாத துன்பங்களையும்கூட, அப்பொறாமை யென்னும் பெரும் பகையே அவனுக்குச் செய்து முடித்துவிடும். துன்பம் செய்யப் பகைவர் தவறிவிட்டாலும், அப் பொறாமை தவறாது.

**"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடு ஈன்பது".**

துன்பம் தருவதில், பகைவரைக் காட்டிலும் பொறாமையே மிக்க வல்லமையுடையதென்பது எங்ஙனம் பொருந்தும்? என்பதைப் பற்றிச் சிறிது நோக்குவோம்:- பொறாமையுடையவன் வெளியில் சென்று பகைவரிடம் அகப்பட்டால்தான் - அகப்பட்டபோதுதான், பகைவரால் இவனைத் துன்புறுத்த முடியும்? மேலும், பகைவரால் நெருங்க முடியாத பாதுகாப்புடன் இவன் தன் வீட்டிற்குள் இருக்கும்போதும், பகைவர் இவனைத் தேடி வந்து துன்புறுத்த முடியாது. மற்றும், இவன் வெளியில் செல்லும் போதும், தக்க படை பாதுகாப்புடன் செல்வானேயானால், பகைவரால் இவனைத் துன்புறுத்த முடியாமற்போகும். ஆனால், இவன் வீட்டிற்குள் இருந்தாலும் - வெளியில் இருந்தாலும், விண்ணில் இருந்தாலும் - மண்ணுள் இருந்தாலும், தனித்திருந்தாலும் - படை பாதுகாப்புடன் இருந்தாலும், இவன் தனது பொறாமையால் பிறரது வளர்ச்சியை எண்ணும்போது, மனம் புழுங்கிப் புழுங்கி, வயிறு எரிந்து எரிந்து அமைதி குலைந்து குலைந்து வேதனை உறுவானன்றோ? இவ்விதம் இவனைத் துன்புறுத்தும் வன்மை பொறாமைக்கே உண்டென்பதை யறிந்தே, வள்ளுவர் "அது சாலும்" என்றார். இந்நயங்களை உணர்ந்து மகிழ்க!

ஒருவர் மற்றொருவர்க்கு ஏதேனும் உதவி செய்தால், அதைப் பொறாமையால் தடுக்கலாகாது; அவ்வாறு தடுத்தவரும் அவருடைய குடும்பத்தார்களும் உருப்படமாட்டார்கள்.

"ஈவது விலக்கேல்" என ஔவையாரும் அருளியுள்ளாரன்றோ? ஒருவர் மற்றொருவர்க்கு உதவுவதைத் தடுப்பவன், அவர் உதவி செய்யக்கூடாது என்பதற்கு என்ன காரணம் கூறுகின்றானோ, அதே காரணத்தை, அவன் பிறரிடம் உதவி கேட்ட பொழுதும் அவனுக்கு அவர் கூறி உதவ மாட்டாரன்றோ? "அன்று ஒருவனுக்கு உதவி செய்யக்கூடாது என்று தடுத்தாயே - உனக்கு மட்டும் உதவி செய்வது எங்ஙனம் பொருந்தும்? 'அவன் கெட்டான் குடிகாரன்- எனக்கு இரண்டு மொந்தை போடு' என்ற குடிகாரன் பேச்சாகவே இருக்கிறதே உன் பேச்சு!" என்று கூறி அவனை விரட்டி விடுவார்கள் அல்லவா? இவ்விதம் ஈவது விலக்கியவன் கெடவே அவன் குடும்பத்தினரும் கெடுதல் இயற்கைதானே! யாரும் எப்போதும் பிறருடைய சிறிய உதவியும் இன்றி வாழமுடியாததால், ஒருவர் மற்றொருவரிடமிருந்து உதவி பெறுவதைத் தடுப்பது கொடுந்தீவினையல்லவா? மனிதன் தான் தரமுடியாவிட்டாலும், பிறர் தருவதையாவது தடுக்காமல் இருப்பது நல்வினையல்லவா? 'தன்வினை தன்னைச் சுடும்' 'கெடுவான் கேடு நினைப்பான்'-என்னும் முதுமொழிகட்கிணங்க, கொடுப்ப தழுக்கறுப்பான் ஊண்-உடையின்றிக் கெடுவான் என்றால், அவனை எதிர்பார்த்து வாழும் அவனுடைய பெற்றோர், பெண்டாட்டி, பிள்ளைகள் முதலிய நெருங்கிய குடும்பச் சுற்றத்தாரின் நிலையென்ன? அம்மியே காற்றிலே பறக்கும்போது எச்சிலிலையின் நிலை என்னவோ, அதுதான் அவன் சுற்றத்திற்கும்!

பொறாமை யுடையவனிடத்தில் திருமகள் (சீதேவி) இருக்க மாட்டாள்; கரிய முகடிதான் (மூதேவிதான்)

இருப்பாள். அஃதாவது - செல்வம் இராது; வறுமைதான் வாட்டும். நம் நாட்டில் சில பொருள்களைப் பெண்ணாகச் சொல்வது வழக்கம். உண்மையில் அவை பெண்ணல்ல. எடுத்துக்காட்டாக, - தமிழைத் 'தமிழ்த்தாய்' என்கிறோம். தாயாவது - சேயாவது? இந்தியாவை "பாரத மாதா" என்கிறோம். மாதாவாவது - பிதாவாவது? அதுபோலவே, செல்வத்தைத் திருமகளாகவும், ஏழ்மையை முகடி (மூதேவி) யாகவும் கூறி வந்தனர் நம் மக்கள். மேலும், வறுமையின் தொல்லையைக் கருதியும், வறியோர் ஏதும் செய்ய முடியாது வாடிவதங்கிச் சோர்ந்து கிடப்பதைக் கருதியும், அவ்வறுமையை, வயதில் மூத்து முதிர்ந்து அழகிழந்து சோர்ந்து தூங்கும் மூதேவிப் பெண்ணாக உருவகித்தனர். செல்வத்தின் சிறப்புக் கருதியும், செல்வர்கள் அழகாய்- ஆடம்பரமாய் - விளக்கமாய் வாழ்வதைக் கருதியும், அச் செல்வத்தை, வயதில் இளைய அழகிய விளக்கமான திருமகளாக உருவகித்தனர். இளையவளைத் தங்கை யெனவும், மூத்தவளை தமக்கை யெனவும் வழங்குவது வழக்கந்தானே! மற்றும் செம்மையை (சிவப்பை) மங்கல முடைமைக்கு அடையாளமாகவும், கருப்பை மங்கள மின்மைக்கு அடையாளமாகவும் கூறும் வழக்கமும் நம் மக்களிடையே இருப்பதற்கேற்ப, திருமகளைச் சிவந்தவள் (செய்யவள்) ஆகவும், மூதேவியைக் கரியவள் ஆகவும் கூறிவருகின்றனர். ஆகவே அழுக்காறு உடையவனுக்கு, முன்னோர் ஈட்டி வைத்துப் போன செல்வம் இருப்பினும் அது, தன் இடத்தை வறுமைக்கு விட்டுத்தான் சென்று விடும் என்பது வள்ளுவர் கருத்து.

**"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்."**

**"அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்."**

பொறாமையானது, தன்னை உடையவனுக்கு முன்னோரால் வைக்கப்பட்டுள்ள செல்வத்தை அழிப்பதோடு, அவனையும் கெட்டவழியில் செலுத்தி விடும். பொறாமை உடையவன், ஆக்க வேலையில் கருத்தின்றி, அழிவு வேலையிலேயே முனைந்திருத்தலின் அவனுக்கு முன்புள்ள செல்வமும் போகப், பின்பும் புதுச் செல்வம் தேடமுடியாத சூழ்நிலை உண்டாக, அவன் மேலும் மேலும் தீயவழிகளி லேயே செல்ல நேரிடுகின்றது. ஒரு பொறாமைக்காரன், தன் பொருள் ஒன்று போனால் பக்கத்து வீட்டுக்கார னுடைய பொருள்கள் இரண்டு போகும்படிச் செய்ய வேண்டும் என்று கடவுளிடம் வரம் வாங்கிக் கொண்டு, "தனக்கு ஒரு கண் போகட்டும்" என்று சொல்லிப் பகடைக் கட்டையை உருட்டி, பக்கத்து வீட்டுக்காரனுடைய இரண்டு கண்களையும் கெடுத்ததாகச் சொல்லப்படும் கதையை ஈண்டு நோக்குக.

**"அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்."**

உலகில் பொறாமை உடையவனுக்குக் கேடும், செவ்விய மனமுடையவனுக்கு ஆக்கமும் இருப்பதுதான் முறை. ஆனால் அம்முறைக்கு மாறாக அவ்விய நெஞ்ச முடைய சிலர் ஆக்கமுடையவராகவும் - செவ்விய நெஞ்ச முடைய சிலர் வறுமையுடையவராகவும் இருக்கிறார்களே!

இம்முறை மாற்றத்திற்குக் காரணம் என்ன? - என்பது கருதப்பட வேண்டிய - ஆராயப்படவேண்டிய செய்தியாகும். அங்ஙனம் கருதியாராயுங்கால், அம்முறை மாற்றத்தின் காரணமாக நமக்குக் கிடைக்கும் பதில் என்ன? என்பதைக் கருதுவோம்:

அவ்விய நெஞ்சினன் ஆக்கத்தோடு வாழ்வதைக் காணும் உலகினர், ''அயோக்கியனுக்குத்தான் இது காலம்! இவன் இப்படி எவ்வளவு நாளைக்குத்தான் வாழ்வான் என்பதைப் பார்ப்போம்! இன்னும் இவனுடைய ஊழல் அரசியலாருக்குத் தெரியவில்லை! தெரிந்த இரண்டொரு வருக்கும் இவன் எலும்புத் துண்டை (இலஞ்சம்) போட்டு விடுகிறான். இருக்கட்டும்! பல நாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்பட்டுக்கொண்டுதானே தீரவேண்டும்'' என்றே நினைக்கின்றனர் அல்லவா? இத்தீயோனுடைய ஊழலை அரசியலார் அறிந்தபோது தீய வழிகளில் ஈட்டிய இவனது பணத்தையும் பறித்து, இவனுக்கும் தண்டனை விதிப்பார்கள். அதன் பின்னர் இவனது ஆக்க வாழ்வு மங்கும். எனவே, தீயவன் ஒருவன் தீய வழிகளில் பொருளீட்டி வளர்ச்சியோடு வாழ்வதற்குக் காரணம், இவனது ஊழலை, அரசியலார் நன்கு தெரிந்து கொள்ளாமையும் அதற்கேற்ற தண்டனை விதிக்காமையுமே யாகும் - என்று 'அவ்விய உளத்தனது ஆக்கம் உலகினரால் நினைக்கப்படும்.'

மற்று, செவ்வியான் கேடுற்று வருந்துவதைக் காணும் உலகினர், ''யோக்கியனுக்கு இது காலமில்லை! பாவம் இவர் நல்ல மனிதர்! இவருடைய குணமறிந்து-செயலறிந்து

உலகம் இவருக்குக் கடமைப்படுவது எந்நாளோ? பார்ப்போம்! காலம் இப்படியேவா இருந்து விடும்? ஒரு நாளைக்கு இவர் கொல்லையிலும் மழை பேயாதா? என்று நினைக்கின்றனரல்லவா? இவரது குணச் சிறப்பை-தொண்டின் பயனை உலகினர் புரிந்துகொண்டபோது இவருக்கு எண்ணற்ற பரிசுகளும் — சிறப்புக்களும் அளித்துப் பாராட்டுவார்கள். வறுமையால் வாடிய பழைய தமிழ்ப் புலவர்களை எடுத்துக் கொள்வோம் - ஏழ்மையில் வாழ்ந்த பல அரசியல் தலைவர்களை எடுத்துக்கொள்வோம் - அமெரிக்க ஆல்வா எடிசனைப் போன்ற விஞ்ஞானி களையும் எடுத்துக்கொள்வோம். இவர்களின் திறமை-யினை-தொண்டினை உலகம் புரிந்துகொண்டபின் இவர் கட்குப் பெரும் பொருளும்-பெரும் புகழும் வாரி வாரி வீசவில்லையா? எனவே, செவ்வியானது கேட்டிற்குக் காரணம் செம்மையை மன்பதை (சமூகம்) புரிந்து கொள்ளாமையும், அதற்கேற்ற சிறப்பினைச் செய்யாமையுமே யாகும் என்று செவ்வியான் கேடு உலகினரால் நினைக்கப் படும். கவி - சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த காலத்தில் தமிழகம் புரிந்து கொள்ளாமையாலன்றோ அவர் வறுமையில் வாடினார். எனவே அவ்வியானது ஆக்கத்திற்கும் செவ்வி யானது கேட்டிற்கும் காரணம், அவர்களைப் பற்றிப் பொது மக்களும் அரசியலாரும் புரிந்து கொண்டு ஏற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமையேயாகும் - என்று நினைக்கப்படும்.

உண்மையில் ஆராய்ந்து பார்க்கின், பொறாமை யுடையவன் வளமாக வாழ்ந்ததுமில்லை; பொறாமை

யில்லாதவன் வளமின்றிக் கெட்டதுமில்லை. எனவே, பொறாமை உடையவன் கெடுவான், பொறாமை யில்லாதவனே வாழ்வான் - என்பது புலனாகும்.

முன்பு கூறியாங்கு முறை மாறிப் பொறாமை உடையவன் வாழ்ந்தாலும், பொறாமையில்லாதவன் கெட்டாலும், அந்நிலை நெடுக நிலைக்காமல், பின்னொரு காலம் மாறிச் சரியான முறைக்கு வந்துவிடும். ஒருவேளை இறக்கும்வரையுமே கெட்டவன் ஆக்கமும், நல்லவன் கேடும் பெற்றிருந்தாலுங்கூட, அவர்கள் இறந்தபின்னர், கெட்டவ னுக்கும் அவன் பரம்பரைக்கும் இகழும், நல்லவனுக்கும் அவன் பரம்பரைக்கும் புகழும் உலகம் உள்ளளவும் நின்று நிலைத்துவிடுமல்லவா?

**''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்.''**

**''அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதுஇல்லார்**
**பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.''**

# 14. வெஃகாமை

வெ.:.காமை என்றால் பிறர் பொருளைக் கவர விரும்பாதிருத்தல். அழுக்காறாமையைப் போல் வெ.:.காமையும் வேண்டியது தானே!

ஒருவன் தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக பிறர் அரும்பாடுபட்டு நல்வழியில் ஈட்டிய நல்ல பொருளைக் கவர்ந்தால், தான் எண்ணியதற்கு மாறாகத் தன் குடும்பமும் கெடத் தானும் என்றும் நீங்காத குற்றச் சாட்டிற்கு உள்ளாவான்.

**"நடுஇன்றி நன்பொருள் வெ.:.கின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்."**

தன் பொருளைப் பிறன் கவர்ந்தால் தனக்கு எப்படி இருக்குமோ, அதுபோலவே, பிறன் பொருளைத் தான் கவர்ந்தாலும் அவனுக்குத் துன்பம் நேரிடும் என்னும் நடுநிலைமையுணர்ச்சி யுடையவர்கள் பிறன் பொருளைக் கவர நினையாராதலின் "நடுஇன்றி" என்றார் ஆசிரியர். பிறன் தீயவழிகளில் ஈட்டியதீய பொருளைத் தப்பித்தவறிக் கவர்ந்தாலும் அவன் தீய வழிகளில் ஈட்டியதற்குத் தரப் பட்ட தண்டனை போலாகும்; அப்படியின்றி நல்ல வழியில் ஈட்டிய பொருளைக் கவரவே கூடாது என்பதற்காகவே "நன்பொருள்' என்றார். தீய பொருளைக் கவர்ந்தால் உண்டாகும் பழியைவிட நல்ல பொருளைக் கவர்ந்தால்

உண்டாகும் பழியே மிக்கது என்பது கருத்தே தவிர, பிறரது தீய பொருளைக் கவரலாம் என்பது கருத்தன்று. பிறன் பொருளைக் கவர்ந்தவன் அரசாங்கத்தாரால் அறியப்பட்டு கவர்ந்ததையும் இழந்து சிறைக்குச் செல்வான். ஆதலால் அவனோ அவன் குடும்பமோ உருப்பட முடியுமா? உருப் படாததோடு ஆழமான குற்றச்சாட்டும் நீங்காதல்லவா?

தம் பொருளைப் போலவே பிறர் பொருளையும் பாதுகாக்க எண்ணும் நடுநிலைமையுடையவர்கள், பிறரிட மிருந்து கவரும் பொருளால் தாம் இன்னின்ன நன்மைகள் அடையலாம் எனக் கருதி அவாக் கொண்டு பல பழிச் செயல்களைச் செய்து பிறர் பொருளைக் கவரமாட்டார்கள்.

எனவே, நடுநிலைமை யுணர்ச்சி யில்லாதவரே பிறர் பொருளைக் கவர்ந்து பயன் துய்ப்பர் என்பது கூறினாரா யிற்று.

பழிச் செயல்களாவன:—

திடீரென்று புகுந்து திருடர்கள் திருடும் திருட்டைக் குறிக்கவில்லை இங்கு! நல்லவர் போன்று நடித்துக் கொண்டு கையூட்டு (இலஞ்சம்) வாங்குதல், கள்ள வாணிகம் செய்தல், வாங்கியதை இல்லையெனல், பொய்க் கணக்குக் காட்டுதல் முதலிய புன் செயல்களே இங்குப் பழிச் செயல்களாகக் குறிக்கப்பட்டுள்ளவை. இவை செய்வோர் பிறர் பொருளை வஞ்சகமாகக் கவர்கின்ற னரன்றோ?

பிறர் பொருளைக் கவர்ந்து ஆடம்பரமாக இன்பம் நுகர்பவன் அரசியலாரால் அறியப்பட்ட போது அவ்வின்பத்தை இழக்கிறான்.

அரசியலார் அறியாது இவன் நுகரும்போது பொது மக்கள் உணர்ந்து அவனது இன்பத்தை ஏளனம் செய்கின்றனர். அதனால், அவன் நுகரும் இன்பம் நிலைக்காததும் பிறர் பழிக்கு உள்ளானதும் ஆகிய சிறிய - அற்ப இன்பமேயாகும்.

எனவே, அவன் வாழ்நாள் வரையும் நிலைக்கக் கூடியதும் பிறரால் பாராட்டப்படுவதும் ஆகிய சிறந்த பேரின்பத்தை இழந்து விடுவான் - என்பது புலப்படும்.

சிற்றின்பமாவது:-

ஆடம்பரமாக ஆடை, அணி, ஊர்தி முதலியன கொள்ளல். இது விரைவில் அவனுக்கு அழிந்து விடுதலால்தான் "சிற்றின்பம்" எனப்பட்டது.

பேரின்பமாவது:-

அறவழியில் வந்த பொருளைக் கொண்டு, யார் என்ன சொல்வார்களோ என்ற அச்சமோ நாணமோ இன்றி, சாகும்வரையும் புகழுடனும் மகிழுடனும் வாழ்கின்ற வாழ்வின்பம்.

தேவைக்குமேல் ஐம்புல இன்பங்களில் அவாக் கொள்ளாதவர்கட்குப் பொருட் செலவு மிகாதாதலின், தாம் பொருளில்லாதவர் என்ற கவலை அவர்கட்குத் தோன்றாமையால், அவர்கள் தீய வழிகளில் பிறர்

பொருளைக் கவர விரும்பமாட்டார்கள். தமது நன் முயற்சி யால் வந்த நல்ல பொருள்களின் அளவிற் கேற்ப, உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய தேவையுடன் மனநிறைவு (திருப்தி) கொள்வர்.

எனவே, ஐம்புல அவாவை அடக்க முடியாதவரே, தீய வழிகளிலாயினும் பொருளீட்டி இன்பங்களை நுகர்வர் என்பது புலனாகும்.

**''படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாணு பவர்.''**

**''சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.''**

**''இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர்.''**

ஒருவர் பல நூற்களைக் கற்பதால் வரும் நுட்பமான கல்வியறிவும் வாழ்க்கையில் கண்ட அநுபவ அறிவும் நிரம்பப் பெற்றிருப்பினும், பிறர் பொருளைக் கவர விரும்பி, அறிவற்ற முறையில் (அறிவில்லாதவர் போல்) நடந்து கொண்டால், அவருடைய அறிவினால் ஒரு பயனும் இல்லை; அவர் அறிவுடையவராகவே கருதப்படமாட்டார்.

**''அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்**
**வெஃகி வெறிய செயின்.''**

அறிவை, 'அஃகி-அகன்ற அறிவு' என்றார் ஆசிரியர். அஃகுதல் என்றால் நுணுக்கமாயிருத்தல் - கூரியதாதல். 'அவன் கூரிய - நுட்பமான அறிவு உடையவன்' என்று உலக வழக்கில் சொல்வதைக் கேட்கின்றோமல்லவா? பிறர்

எளிதில் கண்டுபிடிக்க முடியாததை ஒருவன் நுணுக்கமாகக் கண்டுபிடித்து விடுகிறானே, அவனுடைய அறிவு அஃகிய அறிவாகும். அடுத்தபடியாக, (அகன்ற) அகலுதல் என்றால் விரிதல் – அகலப்படல் என்று பொருள். 'அவன் பரந்த அறிவுடையவன்' என்று உலக வழக்கில் சொல்வதைக் கேட்கின்றோமல்லவா? ஒருவன், பல மொழிகள், கணக்கு, வரலாறு, உயிர்நூல், உடல்நூல், உளநூல், நிலநூல், விஞ்ஞான நூற்கள், சிற்பம் – ஓவியம் முதலிய கலைகள், தன் வாழ்க்கையிலேயே பல அனுபவங்கள் முதலியவற்றை யெல்லாம் அறிந்திருப்பானேயானால், அவனது அறிவு "அகன்றஅறிவு" – பரந்த அறிவு எனப்படும். ஒருவன் எதையும் எளிதில் நுணுக்கமாகக் கண்டுபிடிக்கும் திறமை யோடு பல்கலைக் கல்வியும் பல அநுபவமும் பெற்றிருப்பா னேயானால், அவனது அறிவு, "அஃகி அகன்ற அறிவு" எனப்படும். இத்தகைய அஃகி அகன்ற அறிவைப் பெற்றவர் "பிறன் பொருளைக் கவர்தல் கூடாது; கவர்ந்தவர் வளராமல் அழிவர்" என்பதை நூல் வாயிலாக வும், முன்னிகழ்ந்த அநுபவவாயிலாகவும் பெற்றிருந்தும், பின்னொரு சமயம் பிறர்பொருளைக் கண்டால் பேராசையால் மனம் மாறிவிடுவார்களேயானால், முன்பெற்ற அஃகி யகன்ற அறிவினால் யாது பயன்? என்றே வள்ளுவர் இக்குறளில் கேட்டுள்ளார். தாம் கேட்டுப் பெற உரிமை யுள்ள தந்தை – தமையன் – தம்பி முதலிய நெருங்கிய உறவினராயினும் சரி, மற்றையோராயினும் சரி, அவர்கள் அறியாமல் – அவர்கள் விரும்பாமல் – அவர்களின் விருப்பத் திற்கு மாறாக அவர் பொருளைக் கவரலாகாது – என்பதை

வற்புறுத்துவதற்காகவே "யார்மாட்டும் வெஃகி" என்றார் ஆசிரியர்.

தன்னுயிரைப் போலவே மற்றைய பிற உயிர்களை யெல்லாம் கருதிப் பாதுகாக்கும் பண்பிற்கே அருளுடைமை என்று பெயராம். அந்த அருளுடன் வாழவேண்டும் என்னும் உறுதியுடன் வாழ்க்கையைத் தொடங்கியவன், இடையிலே அந்த அருளை விட்டு, பிறர் பொருளைக் கவரச் சூழ்ச்சி செய்வானேயானால், வந்த வேலையை மறந்து பந்தல் காலைப் பிடித்து நின்று வேடிக்கை பார்ப்பவன் போல - குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்பவன் போலப் பயனின்றி வீணில்தானே கெட்டு விடுவான்.

> **"அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்**
> **பொல்லாத சூழக் கெடும்."**

> **"வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்**
> **மாண்டற் கரிதாம் பயன்."**

ஒருவன் தன்பொருள் குறையாமல் பெருக வேண்டு மானால், தான் பிறர்பொருளை விரும்பாதிருக்க வேண்டும். பிறர் பொருளை விரும்பினால் தன் பொருள் குறையும். ஆனால், பிறர் பொருளையும் கவர்ந்து சேர்த்துக் கொண்டால்தானே தன் பொருள் பெருகும்? என்று ஈண்டு கேட்கலாம் போல் தோன்றலாம்! அது சரியன்று. ஒருவன் முதலில் தன்னிடம் நூறு பொற்காசுகள் வைத்திருந்தான். பின் அதனோடு, பிறரிடம் ஐம்பது காசுகளைக் கவர்ந்து, தன் தொகையை நூற்றைம்பது காசுகளாகப் பெருக்கிக்

கொண்டான் என்று வைத்துக் கொள்வோம். இது பிறரால் அறியப்பட்டு நீதி மன்றம் வரைக்கும் சென்றது. அங்கே ஒருவர் (நீதிபதி) இவன் கவர்ந்த ஐம்பது காசுகளை மீட்டு உரியவனிடம் சேர்த்து விடுகின்றார்; மேற்கொண்டு இவனுக்கு ஐம்பது காசுகள் தண்டமும் விதித்து விடுகிறார். அப்போது இவன் அத்தண்டத்தைச் செலுத்தித் தன் நூறு காசுகளை ஐம்பது காசுகளாகக் குறைத்துக் கொள்வானல்லவா? இவன் பிறர் பொருளைக் கவராதிருந் தால் இவனுடைய செல்வம் குறையாதல்லவா? அதனைக் கொண்டு நன் முறையில் முயற்சி செய்திருந்தால், மேலும் அது பெருகியிருக்குமே!

**அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்.''**

பிறர் பொருளை விரும்பாதவரை, அவரது நற் பண்பின் காரணமாகச் செல்வம் சென்றடையும்.

பிறர் பொருளை விரும்பியவர் அழிவர்; விரும்பாதவர் செயலில் வெற்றிபெற்றுச் சிறப்புறுவர். பிறர் பொருளை விரும்பி எதிர்பார்ப்பவர், கிடைக்கும் என்று அதனையே நம்பிக்கொண்டிருப்பாராதலானும், சோம்பலால் வேறு தொழில் செய்யமாட்டா ராதலானும் வருவாயின்றி அழிந்து போவார். பிறர் பொருளைக் கவர்ந்தாலும், அது பிறரால் கண்டுபிடிக்கப்பட்டுவிடு மாதலானும், தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் பின் ஒரு சமயமாவது கண்டு பிடிக்கப்பட்டுவிடுமாதலானும் அவர் அழிந்தொழிவது திண்ணம். பிறர் பொருளை வேண்டாதவரோ, தம் சொந்த

முயற்சியையே நம்பி உழைத்து உழைத்துக் காரிய வெற்றி பெறுவார். அவரது தகுதிக் கேற்பத் திருசேரும்.

**"அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்**
**திறனறிந் தாங்கே திரு."**

**"இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்**
**வேண்டாமை யென்னுஞ் செருக்கு."**

# 15. புறங் கூறாமை

இல்வாழ்வார் அறத்தைப் பின்பற்றாவிடினும், பிறரைப் பற்றிப் புறங்கூறாமலாவது வாழவேண்டும். ஒருவன் பிறரைப் பற்றிப் புறங்கூறும் போது, பொய்யாகச் சில வற்றைப் புனைந்து கூறலாம். புறங்கூறப்படுபவன் எதிரே வந்துவிட்டபோது, அதனை ஒத்துக்கொள்ளாமல் மறுக்கவும் செய்யலாம். அப்போதுதானே யார் கூறுவது உண்மை என்பது புலப்படும்? எனவே, பிறரொருவரைப் பற்றி அவரது முன்னே பேசலாமே தவிர அவரது பின்னே இகழ்ந்து பேசுதல் பேடித்தனமாம். பிறர் அறியாமல் பின்னே பேசுவதால், அவர் எவ்வாறு தம் குற்றத்தை யுணர்ந்து திருந்த முடியும்? அதனால் முன்னே பேசுவதுதான் வீரமும் நன்மை பயப்பதுமாகு மல்லவா?

> "அறங்கூறான் அல்ல செயினு மொருவன்
> புறங்கூறா னென்ற லினிது."

> "கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
> முன்னின்று பின்னோக்காச் சொல்."

பிறரொருவரைப் பின்னால் இகழ்ந்து பேசிவிட்டு, அவர் முன்னே பொய்யாகப் புகழ்ந்து பேசிப் பொய்ச் சிரிப்புச் சிரிப்பது, ஏனைய தீமைகளினும் கொடியது.

> "அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
> புறனழீஇப் பொய்த்து நகை."

ஒருவன் பிறரொருவரைப் பின்னால் இகழ்ந்தது போலவே முன்னாலும் வெறுப்புக் காட்டிப் பேசினால் அவர் இவனைப் புரிந்துகொண்டு - முன்னெச்சரிக்கையாக விழிப்புக் கொண்டு, தம்மைத் திருத்திக் கொள்ளவும்-காத்துக் கொள்ளவும் முடியும். அங்ஙனமின்றி, பின்னால் இகழ்ந்து, முன்னால் புகழ்ந்து சிரித்துக் குலாவினால், அவர் இவனைச் சிறந்த அன்பனாக - நண்பனாக நம்பி, மேலும் வேடிக்கையாகவும் - விளையாட்டாகவும் பல செய்திகளைப் பேசி அளவளாவுவார். அவ்விளையாட்டுப் பேச்சையெல்லாம் இவன் வினைப்பேச்சாக மாற்றி மூட்டை கட்டிக்கொண்டு, அவர் இல்லாத விடங்களில் சென்று அவிழ்த்து உதறுவான். இப்படி இவனால் பலவகைகளில் அவர்க்குக் கேடும் இகழும் பெருகும். எனவே, ஒருவன் பிறர்க்கு வேறு தீமைகளைச் செய்தாலும், அவர் விழிப் புடன் இருந்து தற்காப்புச் செய்துகொள்ள முடியும்; ஆனால் இத்தீமையைப் புரிவானேயானால் அவர் ஏமாந்து போவார்; ஆதலின், ஏனையவற்றைவிட இது மிகக் கொடியதாம்.

ஒருவன் புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்வதைவிட, சாவே அவனுக்கு நன்மை கொடுக்கும். அதாவது ஒருவன் நீண்ட காலம் புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்ந்தால் அவனுக்கு இருக்கும் புகழ் போவதோடு, மேற்கொண்டு இகழும் உண்டாகும், அவன் குறைவயதுடன் விரைந்து இறப்பானேயாயின், புறங்கூறிப் பொய்க்க முடியாதாதலின், புதிதாக இகழின்றி, இருக்கும் புகழாவது என்றும் நின்று நிலைக்கும். ஆதலின், அவன் உயிர் வாழ்தலினும்

சாதல் நன்று. நல்லவை செய்வார்க்கு இன்பமும் புகழும், அல்லவை செய்வார்க்குத் துன்பமும் இகழும் உண்டாகும் என்று நீதி நூல் கூறுகின்றது. எனவே, அதன்படிப் பிறரைப் புறங் கூறிப் பொய்த்து வாழ்பவன், அப் பிறரால் துன்பமும் உலகினரால் இகழும் பெறுவான் என்பதும், புறங்கூறிப் பொய்க்காது இறப்பவன், அத்துன்பத்திற்கும் இகழிற்கும் ஆளாகாமல், இருக்கும் வரை இன்பத்தோடும், இறந்தபின் இருக்கும் புகழோடும் போய்ச்சேருவான் என்பதும் புலனாகும். மேலும், அவன் இறந்து போவதால், உலகினர்க்கும் அவனால் உண்டாக விருந்த தீமைகள் நீங்கி, என்றும் உள்ள நன்மை நிலைக்கு மன்றோ?

> "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
> அறங்கூறும் ஆக்கந் தரும்."

நயவஞ்சகன் ஒருவன் பொதுமக்களை நோக்கி, 'மக்களே! நீங்கள் அவற்றைச் செய்வது பாவம்; இவற்றைச் செய்வதே நல்ல அறம்; ஆதலின் அறத்தையே கடைப்பிடியுங்கள்!' என்று அறவுரை வழங்கிவிட்டு, தான் பிறரைப் பற்றி அவரில்லாத விடங்களிலே இழித்துப் பேசினால், அதுமட்டும் அறமாகுமா? எனவே, அவன் பிறர்க்கு அறம் உரைத்தாலும், அவன் மனம் அறத்தை விரும்பவில்லை என்ற உண்மையைப் பொதுமக்கட்கு அறிவிக்கும் சான்று, அவனது புறஞ் சொல்லும் புன்மைக் குணமாம். அக்குணத்தைக் கொண்டு அவனது உண்மை யுருவத்தை மக்கள் புரிந்து கொள்வார்.

> "அறஞ்சொல்லு நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
> புன்மையாற் காணப்படும்."

சொல்லுதல் வாயினுடைய வேலையல்லவா? நெஞ்சத்தின் வேலை நினைப்பதல்லவா? உண்மையிங்ஙன மிருக்க, வள்ளுவர், அறம் சொல்லும் வாயான் என்னாது, அறம் சொல்லும் நெஞ்சத்தான் என்று கூறியிருப்பதி லுள்ள நயத்தை ஊன்றி நோக்க வேண்டும். அஃதாவது, அறத்தைப் பின்பற்ற உள்ளே மனம் விரும்பாமல், பிறரை ஏமாற்ற வெளியில் மட்டும் வாயால் அறத்தை யுரைப்பது மிக எளிது; அதனால் பயனில்லை. அறத்தை வாய் சொல்லா விட்டாலும், கடைப்பிடிக்க மனம் விரும்புவதே சிறந்ததும் இன்றியமையாததுமாகும் - என்னும் நயம் உள்ளடங்கிக் கிடப்பதை யுணர்க!

புறங்கூறல் என்னும் ஒரே ஒரு தீயசெயல் அவனிடம் இருப்பதைக் கொண்டே, அவனை அறமில்லாதவன் என்று கூறுவது பொருந்துமா? என்று வினவலாம்! அவன் இத்தீய செயலைச் செய்வதற்குக் காரணம், அவனது மனத்தின் புன்மை (இழிதன்மை) தானே? அப்புன்மை இதைச் செய்யத் தூண்டுவதுபோல், வழக்கமாக மற்றைய தீய செயல்களையும் செய்யத் தூண்டுமல்லவா? அதனால், அவன் அறமுடையவன் அல்லன் எனத் தெளிக!

ஒருவன் பிறரைப் பழித்துப் பேசிக்கொண்டிருந்தால், அவனைப் பற்றியும் பிறர் பழித்துப் பேசுவார்கள். குற்றம் செய்யாதவர் ஒருவரும் உலகில் இருக்க முடியாது. தப்பித் தவறி ஏதேனும் ஒரு குற்றமாயினும் செய்யத்தான் நேரிடும். அப்படியிருக்க, ஒருவன் பிறரது குற்றத்தைச் சுட்டிப் பழித்துப் பேசினால், அவரோ அல்லது வேறு யாரோ இயற்கையாக இவனுக்குள்ள குற்றத்தையும் சுட்டிப்

பழித்துப் பேசுவார்கள். அதனை இவன் உணர வேண்டும். உணர்ந்து புறங்கூறலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

"பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும்".

தன்னிடம் வந்து பிறரைப் பற்றிப் பழிப்பவன் இது போலவே தன்னைப் பற்றியும் பிறரிடம் பழிப்பான் என்பதைக் கேட்பவன் தெரிந்து கொள்ள வேண்டும் - என்பதும் இக்குறளிலிருந்து புலனாகலாம். வேலன் என்பவன் கொற்றன் என்பவனைப்பற்றி முருகனிடம் பழிக்கிறான். முருகன் என்பவன் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். கேட்கும் முருகன், தன்னைப் பற்றியும் வேலன் பிறரிடம் பழிக்கக்கூடும் என்பதையுணர வேண்டும். அப்படியுணரத் தொடங்கி விட்டால், பிறன் பழி கூறுபவனை யாரும் நம்பமாட்டார்கள். அவனைக் கண்டதுமே விரட்டுவார்கள் என்பது பெறப்படும்.

ஒருவன் தன் நண்பரைப் பற்றி, அவர் இல்லாத விடத்தில் பிறரிடம் இனிமையாக - நல்லவிதமாகப் பேசினானேயானால், அதைக் கேட்டவர், பின்னொரு சமயம் இவனுடைய நண்பரைக் கண்டபோது "உம் நண்பர் உம்மைப்பற்றி எம்மிடம் மிக நல்லவிதமாகச் சொன்னார்" என்று சொல்லுவார். அதைக்கேட்ட இவனுடைய நண்பர் இவனது உண்மையான அன்பையும் நட்பையும் நன்றாக நம்பி மேலும் இவன் மேல் மிக்க அன்பும் நண்பும் கொள்வார். இங்ஙனமின்றி இவன் தன் நண்பரைப் பற்றிப் பிறரிடம் இழிவாகக் கூறிவிட்டால், கேட்டவர் பின்னொரு சமயம் அந்நண்பரிடத்தில் "உம்

நண்பர் உம்மைப் பற்றி இழிவாகப் பேசினார்" என்று சொல்லி விடுவார். அதைக்கேட்ட அந்நண்பர், இவனது அன்பையும் நண்பையும் நம்பாமல் பொய்யெனக் கொண்டு இவனைவிட்டுப் பிரிந்துவிடுவார். எனவே, புறங்கூறும் இயல்புள்ளவன் தன் புறங்கூறும் தீச்செயலால் தன் நண்பரையும் பகையாக்கிப் பிரித்து விடுவான்.

இவ்வாறு நெருங்கிப் பழகும் உறவினர் - நண்பர் முதலியவருடைய குற்றத்தையே விடாமல் அவரறியாது தூற்றிக்கொண்டிருப்பவர்கள், அயலாருடைய குற்றத்தைப் புறத்தே சென்று தூற்றுவதை வாயால் சொல்லி முடியுமா? எழுத்தால் எழுதி முடியுமா? மிக மிக மிகத் தூற்றுவார்கள் அல்லவா?

**"பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்றாதவர்."**

**"துன்னியார் குற்றமுந் தூற்று மரபினார்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு."**

புறங்கூறுபவன் தனக்கும் பிறர்க்கும் தீமையே தேடு வதால் அவன் இருப்பதைவிட இறப்பதே மேலென்று முன்னரே வள்ளுவர் கூறியுள்ளாரல்லவா? அவன் இறவா தவன்போல் உலவிக் கொண்டிருந்தாலும் இறந்தவனாகவே கருதப்படுவான். அவனது உடல் நிலத்திற்கு (பூமிக்குச்) சுமையாய் (பாரமாய்) இருப்பதைத் தவிர வேறொன்றற்கும் உரியதன்று. அங்ஙனமிருக்க, இறந்தவன் உடலைத் தன்னுள் மறைத்துக்கொண்டு மக்கச் செய்தோ-சுட்டெரித்தோ வெளியில் தெரியாதபடிச் செய்துவிடும் இயல்புடைய நிலம், இவனுடைய உடலை மட்டும் சுமந்து

கொண்டிருப்பதற்குக் காரணம், எவரையும் பொறுத்தல்-தாங்குதல் அறச்செயல் என்று கருதி அவன்மேல் அருள் கொண்டிருப்பதே போலும்! புறங்கூறுபவர், உலகினர் உரைக்கும் பழமொழிக்கேற்ப, சோற்றுக்குக் கேடும் பூமிக்குச் சுமையுமாய்க் கிடந்து செத்தும் - சாகாத வராய்த் திரிகின்றனர்-என்பது ஈண்டு வள்ளுவர் கருத்து.

**''அறநோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை''**

புறங்கூறும் இயல்புடையவன் பிறருடைய குற்றத்தை எடுத்துத்தானே தூற்றுவான்? அவன், 'யாரும் குற்றம் செய்வது இயற்கை; ஆதலின் அதை அம்பலப்படுத்த லாகாது; ஏனெனில் - நாமும் குற்றம் செய்கிறோம்; இப் புறங்கூறுதலே ஒரு குற்றமல்லவா? நம்மைப்பற்றிப் பிறர் தூற்றமாட்டார்களா?' என்றெல்லாம் எண்ணியுணர்வானே யானால் பின்னர் எவரைப்பற்றியும் புறம் கூறமாட்டான். கூறான் எனவே, அவனுக்கோ-பிறர்க்கோ யாதொரு பழியும் துன்பமும் இல்லையாகும். இவ்வாறு ஒவ்வொரு வரும் தத்தம் குற்றங்களை யுணரத் தொடங்கிவிட்டால் பின்னர் குற்றம் செய்ய முற்படமாட்டாராதலின் யார்க்கும் யாதொரு தீங்கும் யாராலும் ஏற்படாதன்றோ? எனவே, புறங்கூறுபவன் முதலில் தன்னைத் திருத்திக் கொள்வானாக.

**''ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.''**

# 16. பயனில சொல்லாமை

புறங்கூறுதல் போலவே எந்தப் பயனற்ற பேச்சுக் களையும் இல்வாழ்வார் பேசுதலும் கூடாது. பலரும் வெறுக்கப் பயனற்ற பேச்சுக்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்வர்.

''பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.''

பத்துப் பேரைக் கொள்ளையடித்து ஒருவன் வாழ்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பத்துப் பேர் கெட்டால் ஒருவன் பெருவாழ்வு வாழ்வான். அவ் வொருவன் கெட்டால் பத்துப்பேரும் சீராக வாழ்வர். இங்கே ஒருவனது பெருவாழ்வைவிட, பத்துப் பேரின் வாழ்வே இன்றியமை யாததன்றோ? எனவே, பொதுமக்களும் அரசாங்கத்தாரும் பெரும்பான்மையினரான பத்துப்பேரின் நன்மைக்காக, சிறுபான்மையினனான ஒருவனையே தண்டிப்பார்களன்றோ?

எனவே, உலகில் பெரும்பான்மைக்கே மதிப்பு உண்டு என்பதை இதனாலும் இன்னும் பிற அநுபவங்களாலும் நாம் உணர்கிறோம். ஆகவே, ஒருவன், சிலர் மகிழ்வார்கள் என்பதற்காகப் பலர் வெறுக்கும் படியான பேச்சுக்களைப் பேசக்கூடாது — என்பதை யறிவிக்கவே ''பல்லார் முனிய'' என்றார் செந்நாப்புலவர். சிலர் தம்முடன் இருக்கும் இரண்டு மூன்று தீய நண்பர்கள்

கேட்டு மகிழ்ந்து சிரிக்கும்படிப் பலரைக் கிண்டல் செய்தும்- புண்படுத்தியும் - கெட்ட சொற்களைக் கலந்தும் பேசு கிறார்கள் அல்லவா? அது கூடாது. அப்படிப் பேசினால் அவரைக் கற்றறிந்த பேரறிவாளர்கள், எளிய பாமரமக்கள் ஆகிய எல்லோருமே "வெற்றுவேட்டு வீணன்" என்று இகழ்வார்கள் என்பதை யறிவிக்கவே "எல்லாரும் எள்ளப் படும்" என்றார்.

நண்பரிடத்தில் நயமாக (இனிமையாகப்) பேசாமல் கடுமையாகப் பேசுவதைவிடப் பலர்முன் பயனற்றவற்றைப் பேசுதல் தீயதாகும். தப்பித்தவறி நண்பர்களிடத்தில் நயமின்றிக் கடுமையாக நடந்துகொண்டாலும், அவர்கள் பொறுத்துக் கொள்வார்கள்; ஆனால், பெரும்பான்மையான பொதுமக்களின் முன் பயனல்லவற்றைப் பேசினால் அவர்கள் பொறுக்காது வெறுப்பர். பயனற்ற சொற்களைக் கூட வேடிக்கை விளையாட்டிற்காகத்தம் நண்பரிடையே சிறிது பேசிக் களித்துப் பொழுது போக்கலாமே தவிர, பலர்முன்னிலையில் பேசக்கூடாது.

ஒருவன் நயம் இல்லாதவன் என்பதை அவனது பயனற்ற பேச்சேயறிவித்துவிடும். எனவே, அவனது தன்மைக்குச் சான்று அவனது செயலே என்பது புலனாகும். பயன் இல்லாத பேச்சு என்றால், பிறரைப் புண்படுத்தக் கூடிய பேச்சு - ஊர் வம்புப் பேச்சு - என்று தானே பொருள்? பிறரைப் புண்படுத்தும் செயலுடையவனிடம், பிறரிடம் நயமாகப் பேசிப் பண்படுத்தும் இயல்பு எங்ஙனம் இருக்க முடியும்? சிறிது நேரம் பேசினாலுமே புண்படுத்தக் கூடிய பேச்சினை நீண்ட நேரம் பாரித்துப் பேசுபவ

னிடத்தில், மருந்துக்கும் நயமான - இனிமையான பேச்சு இருக்கமுடியாது-

'பயனில பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.''

''நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை''.

பயனற்ற சொல், கேட்பவருக்கு நயம் தராததோடு, சொல்பவனுக்கும் தீமையையன்றி நன்மையளிக்காது.

அதாவது, ஒருவன் பிறரைப் புண்படுத்தக் கூடிய வம்புப் பேச்சுக்களைப் பேசினால், கேட்பவருக்கும் இனிமை யிருக்காது; அதனோடு அவர் திரும்ப இவனுக்குத் தீமை விளைப்பாராதலால் சொல்பவனுக்கும் தீமையேயன்றி நன்மையில்லை.

இயற்கையில் நல்லவரும், இடையில் பயனிலாத சொற்களைச் சொல்லத் தொடங்கி விடுவாராயின், அவருக்குள்ள சீரும் சிறப்பும் அவரை விட்டு நீங்கும்.

''நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து''.

''சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின்''.

பயனில் சொல் பேசுபவன் மனிதப்பதர் ஆவான். மேல் தோலுக்குள்ளே உள்ளீடு (அரிசி) உள்ள (நெல்) மணியைத்தான் ''நெல்'' என்று கூறுகின்றோம். உள்ளீடு (அரிசி) இல்லாததைப் ''பதர்'' என்று அழைக்கிறோம். மற்றைய கூலங்கட்கும் (தானியம்)

இப்படியே கொள்க! இதுபோலவே, பயனுள்ள சொல் சொல்லுபவனை உண்மையான மனிதனென்று சொல்லுங்கள்! பயனிலாத சொல் சொல்லுபவனை உண்மையான மனிதனென மதிக்காமல், மனிதப் பதர் என்று சொல்லுங்கள்! என்று வள்ளுவர் கட்டளையிடுகிறார்.

ஈண்டு மனிதனுடைய சொல்லுள் பயன் இருத்தல், நெல்லினுள் அரிசி (உள்ளீடு) இருப்பது போல; சொல்லுள் பயன் இல்லாமை, நெல்லுள் அரிசியில்லாமை போல - ஆகும். எனவே பயனில்லாத சொல்லன் பதடி (பதர்) தானே! உலகில் உயர்ந்தவர்கள் பயனுள்ளதைத்தான்: உயர்ந்ததாக - இன்றியமையாததாகப் பாராட்டிப் பேசுவது வழக்கம். இந்த மூடனோ பயனற்றதையே உயர்ந்ததாகவும் - இன்றியமையாததாகவும் பாராட்டிப் பேசுவான்; இது புல்லை நெல்லென்று கூறும் பொய்யுரையாகும்.

'பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கள் பதடி எனல்"

"இனியவை கூறல்" என்னும் அதிகாரத்தில், கடுமையில்லாத-இனிய சொற்களையே பேசவேண்டும் என்று முன்னர் வள்ளுவர் அறிவித்துள்ளாரல்லவா? அந்த இனிமை (நயன்) இல்லாத சொற்களைச் சான்றோர் தவறிப் பேசினாலும் பேசலாம், பயனில்லாத சொற்களை மட்டும் பேசவே கூடாது என்று இங்கே கூறுகிறார்.

"நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று"

சான்றோர் பிறரிடம் குற்றம் கண்டவழி அவரிடம் நயமாகப் பேசியே அவரைத் திருத்தவேண்டும். அந்நயத்

திற்கு அஞ்சாதவர்களிடத்தில், நயமற்ற (இனிமையற்ற) கடிய சொற்களைக் கூறி மிரட்டியும், கடிந்து இடித் துரைத்துமே திருத்தவேண்டி வரும்; அதுபோன்ற சமயத்தில் நயமற்ற பேச்சைப் பேசுவதால் பிறர் திருந்துகின்ற பயன் உண்டாகின்றது; அதனால் அந்நயமற்ற பேச்சைப் பேசினாலும் பேசலாம்; எவர்க்கும் என்றும் யாதொரு பயனும் தராத பேச்சை மட்டும் பேசவே கூடாது என்று வள்ளுவர் கூறியிருப்பதில் உள்ள உண்மையை ஊன்றி யுணர்க! "என்றைக்குமே போடாத மகராசிதான் போட வில்லை; தினந்தோறும் போடும் தேவடியாளுக்கு என்ன கேடு?" என்றானாம் ஒரு பரம்பரைப் பிச்சைக்காரன். அது போல, என்றைக்குமே நயனில்லாதவற்றைப் பேசும் கயவர்கள், பயனில்லாதவற்றைப் பேசுவதில் வியப்பொன்று மில்லை. ஆனால் என்றைக்குமே நயனுள்ளவற்றைப் பேசும் சான்றோராயினும், அதில் தவறினாலும், பயனில்லாத வற்றைப் பேசாமல் இருக்கக்கூடாதா? - என்பதைக் குறிக்கவே, வள்ளுவர் இக்குறளில் சான்றோரை இழுத்துச் சுட்டிப் பேசியுள்ளார். 'நயனில சொல்லினும்" என்ற உம்மையால், சான்றோர் சொல்லமாட்டார் என்றறிக!

அரிய பயனையடைய அதற்குரிய வழியை ஆராய் பவர், பெரிய பயன் தராத சொற்களைச் சொல்ல மாட்டார்.

> **"அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்**
> **பெரும்பய னில்லாத சொல் "**

"பிறரை இழிக்கின்ற - புண்படுத்துகின்ற பயனற்ற பேச்சைத்தானே பேசக்கூடாது? எவரையும் புண்படுத்தாத

பேச்சால் வேறு பயன் இல்லாவிடினும், வேடிக்கையாகப் பொழுது போகின்றதல்லவா? பொழுது போக்குப் பயன் கருதி, யாரையும் புண்படுத்தாத பேச்சைப் பேசலாமே.'' என்று சிலர் வினவலாம். அறிஞர்கள், பொழுதுபோக்குப் பயனைப் பெரும் பயனாகக் கொள்ளாது சிறு பயனாகவே கொண்டு அதனைக் கைவிடுவர். அன்றாட வாழ்க்கைக்குக் கட்டாயம் பயன் தரத்தக்க பேச்சுக்களே அறிஞருக்குப் பெரும்பயன் தரத்தக்க பேச்சுக்களாகும். அப்பயனுள்ள பேச்சைக் கடைப்பிடித்தால், எல்லோராலும் அடைதற்கரிய அரும் பயனாகிய புகழ்-பெருமை-மதிப்பு கிடைக்குமன்றோ? இவற்றையெல்லாம் உள்ளடக்கியே, 'அரும் பயன் ஆயும் அறிவினார்' பெரும் பயனில்லாத (சிறு பயன் தரும்) சொல் சொல்லார்' என்றார் ஆசிரியர்.

அரும் பயன் ஆய்தல் என்றால், இன்னது செய்தால் இன்ன சிறு பயன்தான் கிடைக்குமென்றறிந்து அதனை விலக்கி, இன்னது செய்தால் இன்ன பெரும் பயன் கிடைக்குமென்றறிந்து, அதைப் பெறுதற்கேற்ற நடைமுறையினைத் தேடி யாராய்தல்-என்று பொருளாம். எனவே, சிறு பயன் தரத்தக்க சொற்களைப் பேசுபவர் அரும் பயன் ஆயும் அறிவிலாதவர் என்பதும், சிறு பயன் தரத்தக்க பேச்சைப் பேசுதல் பெருமைக்கும் புகழுக்கும் உகந்ததன்று என்பதும் விளங்கும்.

பயனில்லாத சொற்களைப் பொச்சாந்தும்-மறந்துங் கூடப் பேசவேகூடாது. எங்கும் என்றும் எவரிடமும் பொருள் உள்ள - பயன் உள்ள சொற்களையே பேச

வேண்டும். அதுதான் அறிவாராய்ச்சி உடைமைக்கு அழகாகும்.

"பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்."

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

# 17. தீவினை யச்சம்

வழிவழியாகத் தீச்செயல் செய்து வரும் வழக்கத் தினர், என்றைக்குமே தீச் செயல்களைச் செய்ய அஞ்சவே மாட்டார்கள். அவ்வழக்கமில்லாத நல்ல குடும்பத்தினர் என்றைக்குமே அஞ்சுவார்கள். திருடன் மகன் திருடுகிறான்; பிச்சைக்காரன் மகன் பிச்சையெடுக்கிறான். சில பெற்றோர் களே தம் பிள்ளைகளையும் இப்படிப் பழக்குகின்றனர். எனவே இவ்விதம் பரம்பரைப் பழக்கம் உடையவர்கள். செய்யக்கூடாத அச்செயல்களைச் சிறிதும் தாழ்ந்தன வாகக் கருதாமல் மிக எளிதில் செய்கின்றார்கள். ஆயின் நல்லோர் மரபில் தோன்றிய நல்லோர்கள் இன்னவற்றைச் செய்யமாட்டார்கள்; செய்யும்படியான நெருக்கடி நேரிட் டாலும் செய்ய அஞ்சுவார்கள்; பின்வாங்குவார்கள்.

"தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு".

ஈண்டு பரம்பரைப் பழக்கத்தைப் புகுத்தாமல், தனி மனிதனே தான் பலகாலும் தீவினை செய்து பழகியவனா யிருந்தால் அஞ்சமாட்டான், பழகாதவனாயிருந்தால் அஞ்சு வான் என்றே பொருள் கூறிவிடலாமாயினும், திருடன் திருடுவான் திருடாதவன் திருடமாட்டான் என்பது போல இச்செய்தி எல்லோர்க்கும் தெரிந்ததுதான் ஆதலால் இதில் ஒன்றும் சிறப்பில்லை; வள்ளுவர் புதிதாக ஏதேனும் ஒரு கருத்துக் கூறியிருப்பார்; அதுதான் பரம்பரைப் பழக்கம்

நெருப்போ தொட்டபோது மட்டுமே - அதிலும் தொட்ட இடத்தில் மட்டுமே சுடும். அதற்கு ஏதேனும் மருத்துவம் செய்தால் விரைந்து புண் ஆறும். தீயவையோ அப்படி யல்ல; செய்த போதும் தீமைதரும்; செய்த பின்னும் தீமைதரும்; இறந்த பின்னும் பழியை நிலைநிறுத்தும். மேலும், நெருப்பு தொட்டவர்க்கு மட்டுமே துன்பம் தரும். தீயதோ, செய்தவர்க்கும், அவரைச் சேர்ந்தவர்க்கும், அவரது வழிவரும் மரபினர்க்கும் தீமை தரும். மற்றும், நெருப்பு, நெருங்கினவரைச் சுடுகின்ற ஒன்றைத் தவிர, உணவைப் பதம் செய்தல், வெளிச்சம் தரல், குளிர் போக்கல் முதலிய மற்றைய பாகங்களில் எல்லாம் நன்மையே தருகின்றது. தீயவையோ அணுவளவு நன்மையும் தராமல், அளவிட முடியாத தீமைகளையே தரும். இந் நுட்பங்களை யெல்லாம் நோக்கி, "தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்ற ஆசிரியரின் அறிவின் மாட்சிதான் என்னே! தீயவற்றிற்கு அஞ்சவேண்டியதற்குக் காரணமும், தீய வற்றின் கொடுமை மிகுதியும் இக்குறளில் விளக்கப் பட்டுள்ளன. சுடும் என்ற ஒரு காரணத்திற்காக, பலவித நன்மைகளைச் செய்கின்ற நெருப்பிற்கே நாம் அஞ்சும்போது, எந்நன்மையும் செய்யாமல் தீமைகளையே தருகின்ற தீச் செயல்கட்கு நாம் எவ்வளவு அஞ்சவேண்டும்? என்பதையும் ஆசிரியர் சுட்டாமல் சுட்டியுள்ளதை உய்த்துணர்க!

நம்மை வருத்தும் பகைவர்க்கும் நாம் தீமை செய் யாமல் இருப்பதுதான், அறிவு மிக்க செயல்களுக்குள் அறிவு மிக்க செயலாகும். தம்மை வருத்தும் பகைவரல்லாத

என்று கருதியே இவ்வாறு பொருள் கூறப்பட்டது. எனவே ஒருவன் தீயதோ, நல்லதோ செய்வதற்கு அவனைப் பெற்று வளர்த்த பெற்றோரும் காரணம் ஆகின்றனர். ஆதலின் பெற்றோர்கள் பிள்ளையை ஒழுங்காக வளர்க்க வேண்டும்; தாமும் ஒழுங்காக ஒழுகவேண்டும் என்பது குறிப்பாகக் கூறப்பெற்றதாயிற்று. விழுமியார் அஞ்சுவர் என்றது போல, "கயவர் அஞ்சார்" என்று கூறாமல், "தீவினையார் அஞ்சார்" என வள்ளுவர் கூறினமையி னாலேயே இவ்வளவு விளக்கம் தரவேண்டியதாயிற்று. தீவினையார் என்பதற்கு, தமது முன் பிறவியில் தீவினை செய்தவர் எனப் பரிமேலழகர் கூறியுள்ள பொருளையும் பரம்பரையாகத் தீவினை செய்து வருபவர் என ஈண்டுக் கூறப்பட்டுள்ள பொருளையும் விஞ்ஞான முறையில் ஒப்பிட்டு நோக்கி உயர்ந்ததைக் கொள்க.

ஏதேனும் நன்மை கருதியோ - விளையாட்டாகவோ தீய செயல்கள் செய்பவர்கள், திரும்பத் தாம் தீமைகளையே அடைவதால், அவற்றிற்கு நெருப்பினும் அஞ்சவேண்டும். நாம் ஒருவருக்குத் தீமை செய்தால் அவரும் நமக்குத் தீமை செய்யலாம்; அரசாங்கமும் ஒறுக்கும்; உலகினரும் வெறுத்து ஒதுக்குவர். எனவே, இவ்வகையாக வாழ்நாளில் திரும்பத் திரும்பத் தீமையே இறக்கும் வரை தொடரும்; இறந்த பின்னும், நமக்கும் நம் மரபினர்க்கும் பழி நிலைக்கும் அன்றோ? ஆதலின் தீயினும் அஞ்சவேண்டும்.

**"தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினு மஞ்சப் படும்",**

நண்பர்க்கோ, அயலார்க்கோ தீமை செய்யாமல் இருப்பதே ஒரு சிறந்த அறிவு மிக்க செயலாகும் என்றால், பகைவர்க்கும் தீமை செய்யாதிருப்பது அதனினும் அறிவு மிக்க செயல் என்றுரைக்க வேண்டும்.

நாம் பிறருக்குக் கேடு சூழ்ந்தால் நீதியே நமக்குக் கேடு சூழும். அதாவது நாம் பிறருக்குக் கேடு செய்தால், நீதி–சட்டம் நம்மை வாளா விடுமா? நீதிமன்றத்தில் நீதியைக் காட்டி நீதிபதி தண்டிப்பாரன்றோ? அல்லது பிறரும் தண்டிக்கலாமல்லவா? ஆதலின் மறந்தும் பிறர்க்குக் கேடு சூழக் கூடாது.

ஒன்றும் இல்லாத வறியன் நல்ல வழியில் பொருளீட்டி னால்தான் செல்வம் உள்ளவனாவான்; தீய செயல்களைச் செய்தானாயின் இல்லாதவனாகவே ஆவான். திருடன் தான் ஒன்றும் இல்லாதவன் என்று கருதி, இரவில் இன்னொருவர் வீட்டில் புகுந்து திருடினால் உள்ளவனாய் விடுவானா? அப்பொழுதோ, அல்லது பின்பு எப்பொழுதோ அகப்பட்டுக் கொண்டு, திருடியதை இழப்பானல்லவா? சில திருடர்கள், குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்பவனைப் போல, திருடி இன்புறச் சென்று அடியுதை பட்டுத் துன்புற்று மீளுவதும் இயற்கைதானே! கள்ளவணிகர்கள், கையூட்டு (இலஞ்சம்) வாங்கிகள், பிறர் பொருளை வஞ்சகமாகக் கவர்பவர்கள் முதலிய பகல் திருடர்கள் — அரசியல் திருடர்கள் எல்லாரும் அத் தீத் தொழில்கள் அறியப் பட்டும், அரசாங்கத்தாரின் தண்டனையைப் பெற்றும், உள்ளதையும் இழந்து விடுவதும் இயல்புதானே! அவர்கள் அரசியலாரால் அறியப்படாமல் தப்பித்துக்கொண்டு

இறக்கும்வரை எல்லாம் உள்ளவராக இன்பத்தில் இறுமாந் திருந்தாலும், தீய வழிகளில் வந்த அவர்களின் செல்வத்தைப் பொதுமக்கள் உண்மையாக மனமார மதிப்ப தில்லை யாதலின், அவர்கள் இல்லாதவரையே நிகர்ப்பர் நீதியின்முன்!

தனக்குத் துன்பம் வரக்கூடாது என்றெண்ணுபவன், பிறர்க்கும் துன்பந்தரும் செயல்களைச் செய்யக்கூடாது; தவறிச் செய்தால் தனக்கும் துன்பம் வரும்.

**"அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல்."**

**"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு."**

**"இலனென்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலனாகு மற்றும் பெயர்த்து."**

**"தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால**
**தன்னை யடல்வேண்டா தான்"**

வேறெந்தப் பகையினின்றும் தப்பித்துக் கொள்ளலாம்; ஆனால் தீவினை என்னும் பகையினின்றுமட்டும் தப்பித்துக் கொள்ளமுடியாது. தீ, வெள்ளம், புயற்காற்று, நில நடுக்கம் (பூகம்பம்), போர், அணுப்படைகள், பாம்பு - புலி - சிங்கம் முதலிய கொடிய உயிர்கள் முதலிய பல்வகைப் பகைகளி னின்றும் அவ்வவற்றிற் கேற்ற வழி முறையை (உபாயம்) முன்னதாகக் கையாண்டு தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் தீவினை செய்துவிட்டால் அது செய்தவனை விடவே விடாது. அவன் எந்தவூர் சென்றாலும்—இவன் இன்ன வூரில் இன்னது செய்தவன் என்றும், அவன் எந்த நாடு

சென்றாலும் - இவன் இந்த நாட்டில் இன்னது செய்தவன் என்றும், உலகினர் இழித்துப் பழித்து, இவன் தப்பித்துக் கொள்ள ஓடி வந்துவிட்டான் — இவனை நம்பக்கூடா தென்றுணர்ந்து விழிப்பெய்துவர். அவனால் தீங்கு செய்யப்பட்டவரும் செய்த நாட்டு அரசாங்கத்தாரும் அவன் செல்லுமிடங்களிலெல்லாம் அவனுக்குத் தொல்லை கொடுக்க முயல்வர். அவன் சில காலங் கடந்து சொந்த இடம் மீண்டாலும் அவனது எதிரி அவனை வாளாவிடமாட்டான். மேலும் அவனது தீவினையை எவரும் அறியாவிடினும் அவனது மனமே அவனை அடிக்கடி இடித்துக் கலங்கச் செய்வதும் செயலறச் செய்வதும் இறுதியில் வெறி பிடிக்கவும் செய்வதும் உலகில் உண்டல்லவா?

இவற்றையெல்லாம் கருதியே தீவினை பகையாக உருவகிக்கப்பட்டதோடு ஏனைய பகைகளினும் கொடியது என்றும் கூறப்பட்டது.

> **"எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை**
> **வீயாது பின்சென் றடும்".**

ஒருவரை அவரது நிழல் விட்டு நீங்காமல் அவருடைய காலடியைப் பின் தொடர்ந்து செல்வது போல, தீயவை செய்தவரைத் தீமை விட்டு நீங்காமல் அவர் செல்லுமிடமெல்லாம் சென்று கெடுக்கும். ஒருவருடைய நிழலில் அவருடைய கைகள், கால்கள் முகம் முதலிய எல்லா உறுப்புக்களும் ஏற்ற பெற்றி தெரியும். ஆயினும் அந்நிழலின் எந்தப் பகுதியும் காலைத் தவிர வேறு எந்த உறுப்பிலிருந்தாவது தொடர்வதாகச் சொல்ல முடியாது. மொத்தத்தில் அம் முழு நிழலும் காலடியிலிருந்தே தொடர்ந்து தரையிலோ சுவரிலோ விழுந்து தெரிகின்றது.

மேலும், காலையிலும் மாலையிலும் மிக நீளமாகத் தெரியும் நிழல், ஞாயிறு (சூரியன்) உச்சிக்கு நெருங்க நெருங்கத் தானும் தன்னையுடையவனுடைய காலடியை நெருங்கிக் கொண்டே சுருங்குகிறது. சரியான உச்சி வேளையில் நிழலே வெளியில் தெரியாமல் காலடியுள் ஒடுங்கி விடுகிறது. நிழல் இங்ஙனம் காலடியுள் உறைந்து காணப் படாது மறையினும், பின்னர் உச்சி வேளை கழியக் கழிய மீண்டும் வெளித்தோன்றி நீண்டு கொண்டே செல்கிறது. உடையவன் எந்நாடு சென்றாலும் அது அவனை விடுவதில்லை. அது போலவே, தீயவை செய்தவர் சில சமயங்களில் தீமை இன்றி வாழ்வது போலக் காணப் படினும் அத்தீமை உண்மையில் அவரை விட்டு நீங்காமல் மறைந்து கிடக்கின்றது. சமயம் வந்தபோது காலடியி லிருந்து வெளிப்பட்டு நீளும் நிழல்போல், இத்தீமையும் நேரம் வந்த போது வெளிப்பட்டு, அவர் எங்கே செல்லினும் விடாது சென்று கெடுக்கும்.

> **''தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை**
> **வீயா தடியுறைந் தற்று.''**

ஒருவன் தான் நலமுடன் வாழவேண்டுமென்று தன்னலத்தை விரும்புவானேயானால், எவர்க்கும் எவ்வளவு சிறிய தீமையைத் தரும் செயலையும் செய்யலாகாது. சிலர் தன்னலங் கருதிப் பிறர்க்குத் தீங்கிழைக்கின்றார்களே, அது தன்னலங் கருதிய செயலாகாமல் தன்னலத்தைக் கெடுத்துக் கொள்ளும் செயலாகவே கருதப்படும். ஏனெனில், ஒருவன் பிறர்க்குத் தீங்கு செய்தால், அதனால் அவனுக்குக் கட்டாயம் கேடுவரும் என்பதனை

இதுகாறும் ஆராய்ந்து வந்தோமன்றோ? அதனாலென்க.

எனவே, தீவினை செய்யாதவன் எவனோ அவனே கேடில்லாதவன் என்பது புலனாகும். ஆகவே "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்னும் புறநானூற்று அடிக் கொப்ப, ஒருவன் கேடின்றி வாழ்கின்றானென்றால் அவன் தீவினை செய்யாதவன் என்றும், ஒருவன் கேடுற்று வீழ்கிறான் என்றால் அவன் தீவினை செய்தவன் என்றும் அளந்து முடிவு கட்டுகின்றார் ஆசிரியர்.

**"தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்**
**துன்னற்க தீவினைப் பால்".**

**"அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்**
**தீவினை செய்யா னெனின்".**

# 18. ஒப்புர வறிதல்

ஒப்புரவு அறிதல் என்றால், தம்மால் இயன்ற வரைக்கும் உலகிற்கு உதவி, உலகோடு ஒத்து வாழ்தலை அறிந்திருத்தல் - என்பது பொருள். அடுத்த பகுதியில் சொல்லப்படும் ஈகைக்கும் இந்த ஒப்புரவுக்கும் வேற்றுமை பெரிதில்லையாயினும் சிறிதுண்டு. ஈகை என்பது தம்மிடம் வந்து கேட்போருக்கு, இருப்பதை இல்லையென்னாது ஈதல் (கொடுத்தல்). ஒப்புரவு என்பது எவ்வெந் நேரத்தில் யார்யார்க்கு என்னென்ன குறைகள் உண்டு என்பதை, அவர் சொல்லியோ, அல்லது தாமாகவோ உணர்ந்து, அவற்றைப் போக்க முற்படுதல், அவருடைய தேவைகளைத் தம்மாலியன்றவரையும் நிறைவித்தல் முதலிய பரந்த பான்மை கொண்ட பண்பு. இன்னும் விளங்கச் சொல்ல வேண்டுமானால், கேட்டார்க்கு மட்டும் கொடுப்பது ஈகை எனவும் - கேளாதவர்க்கும் குறிப்பறிந்து கொடுப்பது ஒப்புரவு எனவும்; கேட்டவர்க்குத் தாமாகத் தாம் விரும்பியதைக் கொடுப்பது ஈகையெனவும் - வேண்டிய வர்கள் அவர்களாகவே அவர்கட்கு வேண்டிய அளவு எடுத்துக் கொள்ளும்படி விடுவது ஒப்புரவு எனவும்; பொருள் மட்டும் கொடுப்பது ஈகை யெனவும் - உடல், பொருள், உயிர், உழைப்பு எல்லாம் கொடுப்பது ஒப்புரவு எனவும்; கொடுப்பதோடு நின்று விடுவது ஈகையெனவும் - கொடுத்த பின்னும் நெடுகிலும் மனமொத்துக் கலந்து

கூடிக் கூட்டுறவு கொண்டு வாழ்வது ஒப்புரவு எனவும்; இருப்பதைக் கொடுப்பது ஈகை எனவும் - இல்லாவிடினும் முயன்று வருந்திக் கொடுக்க முற்படுவது ஒப்புரவு எனவும் உணர்க!

முன்னர், சில அதிகாரங்களில் இல்வாழ்வார் செய்யக் கூடாதனவற்றைப் பற்றி ஆசிரியர் சொல்லி வந்தார். ஈண்டு செய்ய வேண்டியதைச் சொல்லுகின்றார். பொதுவாகச் செய்யக் கூடாதனவற்றையெல்லாம் தொகுத்துத் 'தீவினை' என்பதனுள் அடக்கி, இறுதியில் தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தை அமைத்தார். பின்னர் (தீவினைகட்கு அஞ்சி) உலகோடு ஒத்து வாழுங்கள் - என்று இவ்வதிகாரத்தையமைத்தார். துப்பு என்னும் பகுதியினடியாகத் தோன்றிய 'துப்புரவு' என்னும் சொல்லைப் போல, ஒப்பு என்னும் பகுதியினடியாக இந்த ஒப்புரவு என்னுஞ் சொல் தோன்றியது. ஒப்புரவு என்றால் ஒப்புமை - ஒத்த தன்மை - ஒற்றுமை என்று பொருள். இருவர் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள் என்றால், ஒருவர்க்கொருவர் துன்பம் போக்கலும், குறை நீக்கலும், இருப்பவர் இல்லாதவர்க்குக் கொடுத்து உதவுவதும் செய்து வாழ்கின்றார்கள் என்பது தானே பொருள்? இதே ஒத்த வாழ்க்கையொற்றுமையை உலகினிடம் செலுத்துவதே 'ஒப்புரவு' என உணர்க!

**"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்**
**டென்னாற்றுங் கொல்லோ வுலகு."**

மேகமானது நம்மிடம் எந்தப் பதிலுதவியையும் எதிர்பார்த்து மழை பெய்வதில்லை. அத்தகைய மேகத்திற்கு

நாமும் எந்தப் பதிலுதவியும் செய்ய முற்படுவதில்லை. அம்மேகத்தைப் போலவே, ஒவ்வொருவரும் எப்பதிலுதவியையும் எதிர் பாராமல் உலகிற்கு உதவவேண்டும்; அதுவே சிறந்த ஒப்புரவு எனப்படும். தென்னை, வாழை, நெல், கரும்பு, ஆடு, மாடு முதலியவையெல்லாம் நம்முடைய உழைப்பினையும் உதவியினையும் பெற்றே நமக்குப் பதிலுதவி செய்தலின், அவற்றை விட்டு, நமது உதவியை என்றும் நாடாத மேகத்தையே ஈண்டு எடுத்துக் கூறிய வள்ளுவரின் உள்ளத் திறனையுணர்க. ஒருவர் கைக்கும் மற்றொருவர் கைக்கும் மாறி மாறி வழங்கப் படுதலால் பண்டமாற்றுப் பதிலுதவிக்குக் "கைம்மாறு" என்னும் பெயர் ஏற்பட்டது. இக்குறளில் கடப்பாடு என்றது ஒப்புரவை. கடப்பாட்டின் நேர் பொருள் "கடமைப்பட்ட செயல்" என்பதாகும். உலகில் எவரும் பிறருதவி ஒரு சிறிதுமின்றித் தாமே தனித்து வாழ முடியாது; எனவே, தமக்கு உலகினர் உதவி செய்வது போலவே தாமும் உலகிற்கு உதவி செய்யக் கடமைப் பட்டவர் தாமே? அக்கடமைப் பாடே - கடப்பாடே ஒப்புரவு எனப்பட்டது. ஒப்புரவிற்கு இவ்வளவு நுட்பமான பெயர் கொடுத்த வள்ளுவரின் திறன் என்னே!

முயற்சி செய்து உழைத்து ஈட்டிய பொருள்கள் பிறர்க்கு உதவுவதற்கே உரியனவாகும்; எனவே எவ்வளவு பொருள் சேரினும், தக்கவர் உலகிற்கே உதவிவிடுவர் என்பது புலப்படுமன்றோ?

**"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

அண்டை வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்பது போல, கடைத்தேங்காயை எடுத்து வழி பிள்ளையாருக்கு உடைப்பது போல, பிறருடைய பொருளை எடுத்து உதவி செய்யக் கூடாது; ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் என்பதையறிவிக்கவே, ''தாளாற்றித் தந்த பொருள்'' என்றார் ஆசிரியர். சிறிது உதவினால் போதாது, பெரிதும் உதவ வேண்டும் என்பதற்காகப் ''பொருளெல்லாம்'' என்றார்.

பொருளெல்லாவற்றையும் பிறர்க்குக் கொடுத்து விட்டால் தாம் என்ன செய்வது?-என்று சிலர் வினவலாம். தமக்கு வேண்டியதைச் செய்து கொள்வதைப் பற்றி வள்ளுவர் தடுத்துப் பேசவில்லை. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடு கெட்டுப் போகாதீர்கள்!-என்றுதான் ஆசிரியர் அறிவிக்கிறார். விரும்பியவர் தமக்கின்றிப் பிறர்க்குக் கொடுத்துவிடுவதை யும் அவர் தடுத்தாரில்லை.

உள்ளது போனாலும் மேன்மேலும் தாளாற்றித்தரும் வன்மை இருப்பவர் பிறர்க்குக் கொடுத்துக்கொண்டே யிருக்கலாம் - என்பதுதான் வள்ளுவர் நோக்கம். ஊறும் வல்லமையுடைய கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டே யிருப்பது பயனுடைய செயல்தானே?

எங்கேயோ தேவர் இருப்பதாக ஓர் உலகம் சொல்லு கிறார்களே - அந்தத் தேவ உலகத்திலும் சரி, இவ்வுலகத் திலும் சரி, ஒப்புரவைப்போல் உயர்ந்த வேறொரு பண்பு இருக்க முடியாது. எல்லாப் பண்புகட்குள்ளும் - செயல்கட் குள்ளும் ஒப்புரவே உயர்ந்தது.

**"புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற."**

ஒப்புரவறிந்தவனே உயிருள்ளவனாகவும் ஒப்புரவறி யாதவன் உயிரிருப்பினும் உயிரில்லாதவனேயாகவும் கருதப் பெறுவார்கள். ஒப்புரவறியாதவன், உயிரிருப்பினும், உலகினரால் தனக்குமட்டும் உதவி பெற்றுக்கொண்டு, தான் ஒருவருக்கும் ஒரு சிறிதும் உதவமாட்டானாகையால், பிறருக்கு ஒரு சிறிதும் பயனளியாது, துக்கத்தையும் வேலையினையும் உண்டாக்குகின்ற செத்த பிணமாகவே கருதப்படுவான் என்றார் ஆசிரியர்.

**'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்."**

ஒப்புரவு அறியாதவன் உயிரிருப்பினும் இறந்தவனாகக் கருதப்படுவானெனவே, ஒப்புரவு அறிந்தவன் இறந்து விடினும், அவன் புகழ் என்றும் நின்று நிலைப்பதால் உயிருள்ளவனாகவே கருதப்பெறுவான் என்பதும் கூறி யதாயிற்றல்லவா? ஈண்டு வள்ளுவர் ஒத்ததறிவானைச் சொல்லியபின், ஒத்தறியாதவனைச் சொல்லால் சுட்டவும் மனமில்லாதவர்போல் "மற்றையான்" என மேலெழுந்த வாரியாகச் சொல்லியிருப்பதிலுள்ள நுட்பமுணர்க! இக் குறளில் ஒத்தது என்றது ஒப்புரவை என்றால் ஒப்புரவறிதல்; ஒத்தது அறிதல். எனவே, ஒப்புரவு என்பதற்கு "ஒத்த தன்மை" என முன்னோரிடத்தில் பொருள் கூறியிருப்பதன் பொருத்தத்தைக் காண்க!

நீர் நிறையப் பெற்ற ஊருணிக் குளம் எவ்விதம் எல்லோர்க்கும் பயன்படுமோ, அவ்விதமே, ஒப்புரவு அறியும் பெரிய அறிவாளியின் செல்வமும் பலர்க்கும் பயன்படும்.

**"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு."**

பயன்படத்தக்க மரம் பயனுள்ள பழங்களைப் பழுத்துப் பலருக்கும் - பறவைகட்கும் பயன்படுவதைப் போல, ஒப்புரவறிந்தவனது செல்வமும் பலர்க்கும் பயன்படும்.

**"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்."**

பயன்படாத முள்மரம் - நச்சுமரம் முதலியவற்றினின்றும், விறகு- நிழல் முதலிய பயன்களைத் தருவதோடு நல்ல கனியையும் தருகின்ற மரத்தைத் தனித்துப் பிரிப்பதற்காகப் "பயன்மரம்" என்றார் ஆசிரியர். வெளியூரிலோ, மலைப்பிளவிலோ, மலையுச்சியிலோ உள்ள மரம் பழுத்தால் அப்பழங்களைப் பெறப் பெரிதும் முயல வேண்டும்; ஆனால் இது அத்தகையதன்று; மிக எளிதில் பெறத்தக்கது என்பதையறிவிக்கவே, "உள்ளூர்" என்றார். காயாக உதிர்ந்தால் எடுத்துப் பழுக்க வைக்க வேண்டிய முயற்சி தேவைப்படுவதோடு இயற்கைச் சுவையும் இராது; மரத்திலேயே பழுத்தால் முயற்சி குறைவதோடு, இயற்கைச் சுவையும் இருக்கும் என்பதை யுள்ளடக்கியே 'பழுத்தற்று' என்றார். ஊர் நடுவே பழுத்த மரத்தின் பயனுள்ள கனியைப் பலரும்-பறவைகளும் எளிதில் வேண்டியாங்குப் பயன்படுத்திக்கொள்வது போல் ஒப்புரவாளனுடைய செல்வத்தையும் பலரும் எளிதில் வேண்டியாங்குப் பயன்படுத்திக்கொள்வர்.

பல உறுப்புகளாலும் பலவகை மருந்துகளாகப் பயன்பட்டு, தவறாமல் எளிதில் கிடைக்கப்பெற்று, பலவகை

நோய்களையும் போக்குகின்ற (முருங்கை, வேம்பு போன்ற) சில மரங்களைப்போல, ஒப்புரவாளனுடைய செல்வமும், தவறாமல் எளிதில் கிடைக்கப் பெற்றுப் பலர்க்கும் பல வகையான பயன்களைச் செய்யும்.

> "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கட் படின்."

ஈண்டு வள்ளுவர் தொடர்ந்து மூன்று குறள்களில் ஒப்புரவாளனுடைய செல்வத்திற்கு உவமையாக, நீர் நிறைந்த ஊருணி, உள்ளூர்ப் பழுத்த பயன்மரம், மருந்தாகித் தப்பா மரம்-என்னும் மூன்று பொருளைக் கூறுவானேன்? ஏதேனும் ஒன்று கூறினால் போதாதா?- என்று வினவலாம். இம்மூன்றுவமைகளும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் தோன்றினும், உண்மையில் சிறு சிறு வேற்றுமையுடையனவாம். அதாவது:- ஒப்புரவாளனுடைய செல்வம் எப்போதும் எல்லோர்க்கும் குறைவில்லாமல் நிறையப் பயன்படும் என்பதை யறிவிக்க நீர் நிறைந்த ஊருணியையும்; அரிய முயற்சியின்றி எளிமையில் பயன் படும் என்பதையறிவிக்க உள்ளூரிலேயே பழுத்த பயன் மரத்தையும்; தவறாமல் பல வகையான பயன்களைத்தரும் என்பதை யறிவிக்க மருந்துகளாகித் தப்பாது பல நோய்களைப் போக்கும் மரத்தையும் உவமை கூறினார் ஆசிரியர் என்க! ஊருணி, பழுத்த மரம், மருந்து மரம் என்னும் இம்மூன்றையும், யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டு மானாலும், கைம்மாற்றுக் கட்டாயமின்றி, அரிய முயற்சியு மின்றி, எளிமையில் பயன்படுத்திக் கொள்ளலாமன்றோ?

இவை ஒரு நாள் பயன் கொடுத்ததோடு நில்லாமல், நம் வாழ்நாள் முழுவதும் பயன் தந்து வருகின்றனவன்றோ? இவற்றில் இருப்பவற்றை நாம் பயன்படுத்திக் கொண்டு இல்லையாக்கினாலும், மேலும் நீர் ஊறியும் - பெற்றும் தளிர்-இலை-பூ-கனி முதலியவற்றைப் புதிதாக வெளிப் படுத்தியும் உதவுகின்றனவன்றோ? மரம் பலகாலும் பயன் தந்து பின் பட்டுப்போய் விறகானாலும், அல்லது உயிரிருக்கும்போதே மனிதரால் வெட்டப்பட்டு விறகானாலும் அதன் விதைகளின் மூலம் மேலும் பல மரங்களை உலகிற்கு உதவியிருப்பதும் உண்மையன்றோ? இப்பொருத் தங்களையெல்லாம் ஒப்பிட்டு நோக்கி ஒப்புரவின் உயர்வை இல்லறத்தார் உய்த்துணரவேண்டும்.

ஒப்புரவாளர், ஒப்புரவு செய்தற்குத் தம் பொருள் நிலை இடம் கொடுக்காத போதும் ஒப்புரவு செய்தற்குப் பின் வாங்கமாட்டார் - அஃதாவது - அரும்பாடுபட்டாவது ஒப்புரவு செய்ய முயலுவார். வயலில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்து சோறு ஆக்கிப்படைத்த இளையான் குடி மாறரின் வரலாறு மக்கள் அறிந்ததே!

ஒப்புரவாளன் ஏழையாய் விட்டான் என்றால், செய்ய வேண்டிய ஒப்புரவைச் செய்ய முடியாமலும், அதனால் மனம் அமைதி பெறாமலும் வருந்துகின்றான் என்பதுதான் பொருள். அதாவது, ஒருவன் எவ்வளவு ஏழையாயிருப் பினும், அரும்பாடுபட்டு உழைத்து முயன்று ஒப்புரவு செய்து வாழ்வானேயாயின், அவன் ஏழையாகக் கருதப்பட மாட்டான்; சோம்பலுற்று ஒப்புரவு செய்யாதபோதே ஏழை யாகக் கருதப்படுவான்: எனவே ஏழையாயினும் ஒப்புரவு

செய்பவன் பணக்காரன் என்பதும், பணக்காரனாயினும் ஒப்புரவு செய்யாதவன் ஏழை என்பதும் தெளிவு.

ஒப்புரவு செய்வதால் கேடுவரினும், அவ்வொப்புரவை, ஒருவன் தன்னைப் பிறர்க்கு அடிமையாக விற்றாயினும் கொள்ளலாம். அ∴தாவது - ஒருவன் தன்னிடமுள்ள செல்வமெல்லாவற்றையும் பிறர்க்கு உதவி வறுமையடைந் தாலும், மேலும் தன்னைப் பிறர்க்கு அடிமையாக விற்று உழைத்தாயினும் பிறர்க்கு உதவி செய்ய வேண்டும்.

தன்னை விற்பது என்றென்ன? தன் தலையையே கொடுக்கத் துணிந்த குமணனது வரலாறு தமிழ் மக்கள் அறியாததல்லவே!

> ''இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
> கடனறி காட்சி யவர்''

> ''நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயுநீர
> செய்யா தமைகலா வாறு''.

> ''ஒப்புரவி னால்வரும் கேடெனின் அ∴தொருவன்
> விற்றுக்கோள் தக்க துடைத்து''.

# 19. ஈகை

முன் சொன்னது போல் பரந்த அளவில் உலகிற்கு ஒப்புரவு செய்தல் இல்லறத்தார்க்கு இயலாது போயினும், தம்மால் இயன்ற அளவாயினும் ஏழையெளியவருக்கு ஏதேனும் உதவலாமல்லவா? இல்லார்க்கு ஈவது சிறிதாயினும் அது பெரிய ஈகையாக மதிக்கப்படும். ஆனால் உலகியலில் சிலர் - சிலரென்ன - பலர், கைம்மாறு கருதியே - அதாவது பதிலுதவி எதிர்பார்த்தே ஒருவர்க் கொருவர் உதவி செய்து கொள்கின்றனர். இஃது ஈகையாகாது. இத்தகு செயல்களை வேறு பெயர்களாலேயே அழைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒருவர் இன்னொருவர்க்குப் பொருளுதவி செய்தாலும், உணவளித்தாலும் உடலுழைப்பு நல்கினாலும், திரும்ப அவர் இவர்க்குச் செய்து விடுகிறார். முதலில் உதவி செய்பவர்க்கும், திரும்ப அதனைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதில் குறி இருக்கிறது. உதவி பெற்றவர் திரும்பச் செய்யவில்லையென்றால், உதவி செய்தவர் மீண்டும் அது போல் செய்ய ஆர்வமோ அக்கறையோ கொள்வதில்லை. எனவே, முதலில் உதவி செய்யும் வசதியுள்ளவரும், பின்னர் அதனைத் திரும்பச் செய்யும் வசதி உள்ளவரும் ஒருவர்க்கொருவர் ஒன்று கொடுத்து வாங்கிக் கொள்ளும் செயலை ஈகை என்னும் பெயரால் குறிப்பிட முடியாது; இரவல் அல்லது வட்டியில்லாத கடன் என்றுதான் குறிப்பிட

முடியும். இக்கருத்தை வள்ளுவர் மிக அழகாகவும் அதே நேரத்தில் அழுத்தம் திருத்தமாகவும் கூறியுள்ளார்.

"வறியார்க்குஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து".

இக்குறளில், 'வறியார்க்கு ஒன்று ஈவதே' என்று 'ஏ' போட்டிருப்பதிலுள்ள அழுத்தத்தையும் தேற்றத்தையும் கவனிக்க வேண்டும். மேலும், ஒரு பசையும் – சிறு பசையும் இன்றி வற்றிப்போனவர் என்பதை 'வறியார்' என்னும் சொல் அறிவிக்கின்றதன்றோ? அவரால் பதில் உதவி எதுவும் செய்ய முடியாது தானே! அவ்வறியவர்க்குப் பல கொடுக்க வேண்டும் என்பதில்லை – அவர்க்கு மிகவும் இன்றியமையாததான 'ஒன்று' கொடுத்தாலே போதும்; அதுவே உண்மையான ஈகை என்கிறார் வள்ளுவனார். இஃதல்லாத மற்ற ஆடம்பர உதவிகள் எல்லாம் ஆசிரியர் கருத்துப்படி 'குறியெதிர்ப்பை' ஆகும். பெண்ணொருத்தி தன் பக்கத்து வீட்டுக்காரிக்கோ அல்லது எதிர் வீட்டுக்காரிக்கோ ஒருபடி உப்போ அல்லது பப்போ இரவல் கொடுத்து விட்டு, மீண்டும் ஒரு நாள் அதே குறி அளவை எதிர்பார்த்திருந்து திரும்பப் பெற்றுக் கொள் கிறாளே, அதற்குத் தான் 'குறியெதிர்ப்பை' என்று பெயராம். வறியாரல்லாதார்க்குச் செய்யும் உதவி களெல்லாம் இன்னவே!

இல்லாதார்க்கு இருப்பவர் ஈயவேண்டியது கடமை தான் எனினும், ஒருவர் கொடுக்க மற்றொருவர் வாங்கக் கூடிய நிலையில் சமுதாய அமைப்பு இருப்பதை எண்ணும் போது, என்னவோ போலிருக்கிறது. ஒருவரிடம் வாங்கிப்

பிழைக்கும் நிலையில் எவரும் இருக்கக் கூடாது. அது மிகவும் தாழ்வன்றோ? வாங்கிப் பிழைப்பது நல்லது- சிறந்தது என்று எவரும் சொல்ல முடியாதே! அப்படியே ஒருவர் சொன்னாலும் - ஏன் - ஒரு தெய்வத்தூதரே வந்து வாங்கிப் பிழைப்பவர்க்கே மேலுலகம் கிடைக்கும் என்று அடித்துப் பேசினும், பிறரிடம் வாங்கிப் பிழைப்பது தீயதே - தாழ்ந்ததேயாகும். என் செய்வது! சமுதாயத்தில் ஆதரவற்றவர்களும் உறுப்பிழந்தவர்களும் பிணியாளரும் இன்ன பிறரும் இப்படித்தானே பிழைக்க வேண்டியுள்ளது! இன்னோரன்ன ஏழையர்க்கு மற்றவர் உதவ வேண்டியது கடமையன்றோ? எனவே, முடியாதவர்க்கு முடிந்தவர் உதவியே தீரவேண்டும். அதனால் எத்துணைக்கேடும் இழப்பும் நேரினும் தயங்கலாகாது. ஏன் - கொடுப்பவர்க்கு மேலுலகம் இல்லையென்று எவரேனும் தலை கீழாழ்ச் சொல்லி மிரட்டினாலும், பிறர்க்குக் கொடுத்துதவுவதே சாலச் சிறந்தது.

> **''நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்**
> **இல்லெனினும் ஈதலே நன்று''.**

கொடுக்குந் துறையில் தமிழ்மக்கள் கடைப்பிடித்து வரும் ஒருவகை நெறி மிகவும் போற்றத்தக்கது: தம்மிடம் ஓர் இரவலன் (பிச்சைக்காரன்) வந்து இரவு (பிச்சை) கேட்பானேயாயின், அவனுக்கு இடுவர். தம்மிடம் உணவோ- அரிசியோ இல்லையாயின், 'இல்லை' என்று சொல்ல மாட்டார்கள்; அதற்குப் பதிலாக, 'நேரமாய் விட்டது போய்வா' என்றோ, 'இன்னோர் இடம்போய்ப் பாரு' என்றோ சொல்லுவார்கள். ஏன்? இல்லையென்று கூறாமல்

கொடுத்துக் கொடுத்துப் பழக்கப்பட்ட உயர் பண்புடைய மக்கள், உண்மையிலேயே தம்மிடம் இல்லை என்றாலும், 'இல்லை' என்று வாய் கூசாது எப்படிக் கூறுவார்கள்? கேட்பவனும் தன்னிடம் ஒன்றும் 'இல்லை' என்று சொல்லித்தான் கேட்கிறான். அதே 'இல்லை' என்னும் சொல்லைத் தாங்களும் சொன்னால், பின்னர் அவனுக்கும் தங்களுக்கும் என்ன வேறுபாடு? எனவேதான், தம்மிடம் இருப்பின் கொடுத்து விடுகிறார்கள்; இல்லையெனின் வெளிப்படையாக இல்லை என்று சொல்லாது 'போய்வா' என்கின்றனர். 'போய்வா' என்பது உயர்ந்த பண்பாட்டின் பிறப்பன்றோ? எனவே, வந்தவன் இல்லை என்று கேட்பதற்கு முன்பு, உனக்கு என்ன வேண்டும் என்று தாமாகக் கேட்டு, இல்லை என்னாது அதனைக் கொடுத்து உதவுவதே உயர்ந்த இல்லறப் பண்பாகும்.

**"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள."**

நாம் சிலநேரத்தில் நமக்குள்ள எத்தனையோ கவலைகளை மறந்து ஒருவிதமாக ஆறுதலுற்று, கடற்கரையிலோ - பூங்காவிலோ - அல்லது இன்ன பிற இடங்களிலோ அமைதியாக அமர்ந்திருப்பதுண்டு. அந்நேரத்தில் பிணியாளி அல்லது உறுப்புக் குறைந்தவன் ஒருவன் நம்முன் வந்து நின்று, அம்மா! ஐயா! என்று குழைந்து கெஞ்சுவான். அப்போது இளகிப்போன - இரக்கமுடைய நம் நெஞ்சம் என்னென்னவோ வேலை செய்கிறது; இப்படியும் ஒரு படைப்பு இருக்கவேண்டுமா? இறைவன் ஏன் இவனை இப்படி வைத்திருக்க வேண்டும்? மற்றவரைப்

போல இவனும் நன்றாக இருக்கக்கூடாதா? ஐயோ இவன் வாழ்வு என்னாவது? நாம் ஏன் இவனை இந்தக்கோலத்தில் பார்த்தோம்? இவனுக்கு என்ன கொடுத்தால் - எவ்வளவு கொடுத்தால் இவன் முகம் மலருமோ? என்றெல்லாம் எண்ணி நம் மனம் துன்புறுகிறது. ஆம், உண்மையான மனித உள்ளம் துன்புறத்தான் செய்யும்! இவ்விதமாக, கேட்பவர் துன்புறுவதைப் போலவே, கேட்கப்படுபவரும் துன்புறுகிறார். வந்து கேட்பவருக்கு அவர் விரும்பியதைக் கொடுத்து அவரது (திருப்தியான) மகிழ்ச்சியான முகத்தைக் காணும்வரைக்கும் கேட்கப்பட்டவருக்கும் மனநிறைவு இருக்க முடியாது. ஒன்றும் கொடுக்க வாய்ப்பில்லாது போய்விட்டாலோ, கேட்டவரினும் கேட்கப்பட்டவரின் மனநிலை மிகவும் இரங்கத்தக்க தன்றோ?

> **"இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
> **இன்முகம் காணு மளவு"**

உயிர்கட்குத் தீராத கொடிய பிணியாவது பசிப் பிணியேயாகும். மற்ற பிணிகளோ இடையிலே தோன்றிச் சின்னாள் இருந்து இடையிலேயே மறையக் கூடியன. ஆனால் பசிப்பிணியோ பிறக்கும் போதே உடன் தோன்றி இறக்கும் வரை உடன் இருக்கக் கூடியது. மற்ற பிணிகட்கு மருந்துண்டு. இதற்கோ எத்தனை நாளைக்கு எத்துணை உணவு போட்டாலும் போதாது - மேன்மேலும் கேட்டுக் கொண்டேயிருக்கும். போடா விட்டாலோ உயிரையே அரித்துத் தின்னும். ஒரு வேளை குறைந்தாலும்- ஏன் - ஒரு வேளையிலேயே ஒரு சிறிது குறைந்தாலும் சிரிப்பாய் சிரிக்க வைத்து விடும். இத்தகு பொல்லாப்

பசியை அடக்குவது என்பது எளிதா? வயிறு நிரம்பிப் பசியில்லாதிருக்கும் போதே, எதையேனும் போட்டு அரைத்துக் கொண்டிருக்கும் அவா மிக்குடைய உயிர்கள், உண்மையாகவே தோன்றிப் பேருருவங் கொண்டு தலை விரித்தாடும் அரக்கப் பசியை அடக்குவது என்பது எளிதா? அப்படி அடக்குபவர் ஒருவர் உளராயின் அவரது ஆற்றல் மிகவும் போற்றத் தக்கதாம். ஆம், பசியடக்கும் அந்நோன்பிகளது ஆற்றலே மற்ற ஆற்றல்களினும் பேராற்ற லாகும். ஆனால் அந்த ஆற்றலினும் மிக மிகப் பெரிய மற்றோர் ஆற்றலும் உளது. அஃதென்ன? கடும்பசியால் துடிதுடித்துத் தவிப்பவர்க்கு உணவளித்து அப்பசியைத் தணிக்கும் உயர்பண்பாளரின் கொடையாற்றலுக்குப் பிற்பட்டவையே மற்ற மற்ற ஆற்றல்களெல்லாம்!

**"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்."**

உலகில் மக்கள் தாம் ஈட்டிய பொருளில் தம் செலவுக்குப் போக மிஞ்சியதைப் பல வகையில் சேமிப்பு செய்து வைக்கின்றனர். சிலர் வீட்டின் மேலும் நிலத்தின் பேரிலும் போட்டு வைக்கின்றனர்; சிலர் நகை நட்டாகவும் பொன் வைரமாகவும் மாற்றி வைக்கின்றனர்; வேறு சிலர் பெட்டியில் வாளா தூங்க விடுகின்றனர்; இன்னும் சிலர் குட்டி போடும் வட்டிக்கு விட்டு வைக்கின்றனர்; மற்றுஞ் சிலர் வங்கிகளில் தங்க விடுகின்றனர். அந்தோ! மீந்த பொருளைப் போட்டு வைக்க வேண்டிய இடம் உண்மையில் இவைகளா? இல்லவேயில்லை - உறுதியாக (சத்தியமாக) இல்லவேயில்லை. உலகில் பச்சிளங் குழந்தைகள் உட்படப்

பன்னூறாயிரவர் பசிப் பிணியால் நைந்து நொந்து வாடி வதங்குகின்றனரே - அவர் தம் காலி வயிறுகள் அல்லவா மீந்த பொருளைப் போட்டு வைக்க வேண்டிய உண்மை யான இரும்புப் பெட்டிகளாகும்? மீந்த பொருளைப் பசித்தோரின் வயிறுகளில் போடுவது, அரசாங்க வங்கிகளில் போடுவது போல் இருதிறத்தார்க்கும் பெரும் பயன் விளைக்கும். பசித்தோரின் வயிறுகளில் போடுவது என்றால், உணவு மட்டும் என்றும் போட்டுக் கொண்டிருப்பது என்று பொருளில்லை; அவர்கட்கு நிலையாக எப்போதும் உணவு கிடைக்கும், வகையில் தொழில் அமைப்புக்களை ஏற்படுத்தி, வேலை வாய்ப்பு உண்டாக்கித் தருவதும் அதனுள் அடங்கும்.

இவ்வாறு தாமே பலர்க்கும் உணவு பகுத்தளித்தும், மேலும் நிலையாக எப்போதும் உணவு கிடைப்பதற்கு வழி செய்தும் இல்லறம் நடத்துபவர்களைப் பசிப்பிணி வருத்தாது என்பது மட்டுமல்ல—தீண்டவுஞ் செய்யாது. ஏன்? பிறர் பசியைப் போக்கும் ஆற்றல் உடையவருக்குத் தம் பசியைப் போக்கும் வழியும் தெரியும் என்பது ஒரு புறம் இருக்க, இவர் ஒருவேளை ஏழ்மையுற்றாலும், இவரால் பயனடைந்த உலகம் இவரது பசியைப் பார்த்துக்கொண்டே வாளா இராதன்றோ? எனவே, இல்லாதவரின் பசியைப் போக்குவது இல்லறத்தார்க்குக் கடமையாகும். அது சிறந்த சேமிப்பு மாகும். இது வள்ளுவரின் பொருளாதாரக் கொள்கைகளுள் ஒன்று! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கி யத்தில் தனி மனிதன் பொருளாதாரமும் சமூகப்பொருளா

தாரமும் பின்னிப் பிணைத்துப் பேசப்பட்டுள்ள பேரழகை என்னென்று வியப்பது!

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி."**

**"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது."**

உலகில் எத்தனையோ வகை இன்பங்கள் உள்ளன. வள்ளுவரோ இங்கே இல்லறத்தார்க்கு ஒரு புதிய இன்பத்தை அறிமுகப்படுத்துகிறார். சிலர் தம் செல்வத்தைத் தங்கட்கு மட்டும் பயன்படுத்தி இன்புறுகின்றனர். இவ் வின்பத்தினும், தம் செல்வத்தைப் பிறர்க்கும் பயன்படுத்தி, அதனால் அவர் பெறும் இன்பத்தைக் கண்டு தாம் மகிழும் இன்பமே பேரின்பமாகும். இந்த ஈத்து உவக்கும் இன்பத்தை அறியாதவர்கள் செல்வத்தை வீணே வைத்திருந்து இழந்துபோகின்றனர். இத்தகு இன்பத்தை இல்லறத்தார்கள் இழக்கலாகாது.

**"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
**வைத்திழக்கும் வன்க ணவர்."**

பிறர்க்குக் கொடுத்து மகிழும் இன்பத்தைப் பெறாதவர்கள் தம்செல்வத்தை இழந்தவராவார்கள் என்று ஈண்டு ஆசிரியர் கூறியுள்ளார். இஃது எங்ஙனம் பொருந்தும்? இவர்களுக்குப்பின்னால் இருக்கும் செல்வத்தை இவர்களுடைய பிள்ளைகளும் பேரப் பிள்ளை களும் துய்க்கமாட்டார்களா? இழந்துவிட்டதாக எப்படிச் சொல்லமுடியும்? அப்படியில்லை. பிள்ளைகளும் பேரப்

பிள்ளைகளும் துய்ப்பதால் நேர் முகத்தில் இவர்களுக்கு என்ன நன்மை? ஒன்றும் இல்லையே! இவர் உயிர் வாழ்ந்த போது அச்செல்வத்தால் பெறவேண்டிய நேர்முக இன்பத்தை இழந்தவர்கள் இழந்தவர்கள்தானே! அதனால் செல்வத்தையே இழந்தவர்களாகத்தான் பொருள்! ''ஆனால் இவர்கள் ஒருமுறை ஈத்துவக்கும் இன்பத்தை அறிந்து விடுவார்களேயாயின், பின்னர் செல்வத்தை வீணே வைத்து இழக்க மாட்டார்கள்; சுவை கண்ட பூனை விடாதல்லவா? அந்த இன்பத்தை அறியாததனால்தான் வீணே இழந்து விடுகிறார்கள் போலும்'' என்னும் போக்கில் அமைந்துள்ள இக் குறள்நடையில் எத்துணைச் சுவை உள்ளது!

பிறர்க்குக் கொடுக்காமல் நாம் மட்டும் புசித்து என்னதான் வாரிக் கட்டிக்கொள்ளப்போகிறோம். இந்தத் தசை மூட்டையை வளர்ப்பதைத் தவிர! சிலர் உண்பதற்கு முன் இரவலர் (பிச்சைக்காரர்) வந்து கேட்டால், இன்னும் நேரம் ஆகும் என்கின்றனர்; உண்டபின் வந்தால், நேரமாய் விட்டது என்கின்றனர். அதனால், உண்டு கொண் டிருக்கும்போது வந்தாலாவது ஒரு கைப்பிடி சோறு போடுங்களையா என்னும் பொருளில் ''யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி'' என்றார் திருமூலர் தம் திருமந்திரத்தில்! உண்மைதானே! பிறரிடம் சென்று இரத்தல் (யாசித்தல்) மிகவும் இழிந்த செயலாகும். இதனினும் இழிந்த செயல் யாதெனின், எச்சில் கையால் காக்கை ஓட்டவும் மனம் வராமல், தாங்கள் மட்டுமே தனித்து உண்ணுதலாகும். ஓர் ஏழை இரவலன் இருக்கிறான் - பிறர் பார்த்து விடுவார்களோ, பார்த்துக்

கேட்டு விடுவார்களோ என்று அஞ்சித் தான்மட்டும் தனித்திருந்து உண்ணுபவன் ஒருவன் இருக்கிறான் - இவ் விருவருள் எவன் உயர்ந்தவன், எவன் தாழ்ந்தவன் என்று கூர்ந்து நோக்கின் உண்மை புலனாகுமே?

**"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல்."**

இந்த 'ஈகை' என்னும் பகுதியில் வள்ளுவர் இவ்வளவு புரட்சி பண்ணியிருப்பார் என்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால் அவர் செய்திருக்கிறார். ஒவ்வொரு குறளிலும் புரட்சி! குறளுக்குக் குறள் புரட்சி முனைந்து நிற்கிறது. இறுதிக் குறளிலோ புரட்சி உச்சி எல்லையாம் கடைசிக் கட்டத்தை அடைந்து விட்டது. ஆம்! சாவைப் போல் துன்பம் தரத்தக்கது-வேதனை விளைக்கக் கூடியது வேறு ஒன்றும் இருக்கமுடியாது; ஆனால் அந்தச் சாவையே இனிமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும், பிறர்க்கு ஒன்று கொடுக்க முடியாத போது! என்று கொக்கரிக்கின்றார் வள்ளுவர். நிரம்ப வைத்துக்கொண்டே இல்லை என்று கைவிரிக்கும் வன்னெஞ்சினரின் மண்டை யிலடிக்கும் சம்மட்டியல்லவா இந்தக் கருத்து! உயிர் போன பிணத்திடம் ஒன்றும் இல்லை - அது ஒன்றும் கொடுக்க முடியாது; அதுபோலத்தானே இவர்களும்! எனவே, பிறர்க்குப் பயன்படாதவர் இருப்பதும் இறப்பதும் ஒன்றே!

**"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை."**

# 20. புகழ்

இல்லறத்தார் புகழுடன் வாழவேண்டும். பொது வாகப் புகழை விரும்பாதவர் உலகில் பெரும் பாலும் இருக்க முடியாது. புகழைப் போல் தெவிட்டாத பொருள் வேறில்லை என்று கூடச் சொல்லி விடலாம். அம்மம்மா! சிறு குழந்தைகளுக்கு மட்டும் புகழ் தெவிட்டுகின்றதா என்ன! தம் தம்பி தமையனைவிட, தங்கை தமக்கையை விட, எதையும் தானே முதலில் பெற்றதாக இருக்க வேண்டும் – எல்லோரும் தன்னைப் பாராட்டி மதிக்க – வேண்டும்–என்பன போன்ற புகழ் நோக்கில் குழந்தைகளுக்கு எத்துணைக் கொள்ளை விருப்பம்! இத்தகு புகழ் வேட்டை, வயதாக, வயதாக தெருவில் விளையாடும் போதும் சரி – பள்ளிக்கூட வாழ்க்கையிலும் சரி – உலக அரங்கிலும் சரி– நீடித்துப் பலவகை உருவங் கொள்கிறது.

உலகில் ஒரு சிலர் தங்களை யாராவது புகழ மாட்டார்களா என்று ஏங்கித் தவங் கிடக்கின்றனர்; புகழ்பவரைத் தேடி அலைகின்றனர்; புகழ்மாலை சூட்டுப வருக்கு வேண்டிய வசதிகள் செய்து தருகின்றனர். எப்படியும் தங்களை யாரும் புகழவில்லை. என்றால், தாங்களாகவே தங்களை மணிக்கணக்கில் புகழ்ந்து கொள்கின்றனர்; அப்புகழைப் பொறுமையுடன் கேட்பதற்கு ஆட்களைத் தேடியலைகின்றனர்; அவர்கட்கு வேண்டிய வசதியும் செய்கின்றனர். எத்துணைப் புகழ்ப்பித்து!

இவ்வளவுக்கும் இப் புகழ்ப்பித்தர்கள் ஆற்றியுள்ள அருஞ் செயல்கள் என்னென்னவாக இருக்கக் கூடும்? பிறரை மிகவும் திட்டியிருப்பார்கள் - அடித்திருப்பார்கள் - அடிதடி வழக்கில் வெற்றி பெற்றிருப்பார்கள். அல்லது, நன்றாக விளையாடியிருப்பார்கள் - திறமுடன் படித்திருப் பார்கள் - பல்வகைப் போட்டிகளில் பரிசு பெற்றிருப்பார்கள். அல்லது, மிகுதியாகப் பணம் சேர்த்திருப்பார்கள் - பட்டம் பதவிகள் பல பெற்றிருப்பார்கள் - பலருக்குத் தலைமை தாங்குவார்கள். அல்லது, மிடுக்காக உண்டு உடுத்துச் செலவு செய்வார்கள் - ஆரவாரக் கேளிக்கைகள் பல வற்றில் ஈடுபடுவார்கள் - எப்போதும் அரச குடும்பத்தினர் போல் காட்சியளிப்பார்கள். இவர்களின் அருஞ்செயல்கள் (சாதனைகள்) இத்தகையனவே. அப்பப்பா! இதற்காகவா இத்துணைப் புகழ் வேட்டை!

இவற்றால் கிடைப்பது உண்மைப் புகழாகாது - வெறும் போலியே? இந்தப் போலிப் புகழுக்குத் தமிழ் மொழியில் 'ஒளி' என்று பெயராம். தோன்றிச் சிறிது நேரம் இருந்து மறையும் ஒளியைப் போன்றதே இந்தப் போலிப் புகழும்! செயல் செய்த அப்போது மட்டும் சிலருக்குச் சிலரால் பாராட்டுக் கிடைக்கும். சிலர் மேலும் சிறிது காலம்வரைக்கும் பாராட்டப் பெறுவர். ஒருசிலர் வேண்டுமானால் இறக்கும்வரையும் பலரால் பாராட்டப் பெறலாம். அவ்வளவுதான்!

ஆனால் புகழ் என்பது இத்தகையதன்று. ஒருவர் இருக்கும்போதுஞ் சரி இறந்தபின்னுஞ் சரி—எப்போதும்

எல்லோராலும் பாராட்டப் பெறுவதற்குத்தான் ‘புகழ்’ என்று பெயராம். அரும்பெரும் பணி என்ன புரிந்தால் எப்போதும் எல்லோரும் பாராட்டுவர்?

ஆம், முற்கூறிய பல்வகைச் செயல்களும், செய்தவர்களின் உடல் வன்மை, உழைக்கும் ஆற்றல், அறிவுத்திறன், ஆரவாரம் முதலியவற்றை அறிவிக்கின்றனவே தவிர, அவற்றால் மன்பதைக்குக் (சமுதாயத்திற்குக்) கிடைக்கக் கூடிய நேரடியான பெருநன்மைகள் யாவை? இல்லையாதலின், அவர்கள் சிலபோது மட்டும்—சிலரால் மட்டும்-சிறிதளவு மட்டும் பாராட்டப்பெறுவர். ஆனால், தம்மைப் பற்றிக் கவலைப்படாமல், தம் உடல் பொருள் உயிர் அனைத்தையும் மக்கள் கூட்டத்திற்குப் பயன்படுத்துபவர் எவரோ—அதாவது, உலகிற்கு உதவுபவர் எவரோ-அவரே எப்போதும் எல்லோராலும் பெரிய அளவில் பாராட்டப் பெறுவார். அவருக்குக் கிடைக்கும் அழியாப் பாராட்டுக்கே புகழ் என்று பெயராம்.

உலகிற்கு உதவ வேண்டும் என்றால், அந்த உதவி எந்தக் கோணத்திலும் இருக்கலாம்—அந்த ஈகை எந்த உருவத்திலும் இருக்கலாம். அதனால் ஒருவர்க்கும் தீமையின்றிப் பலர்க்கும் பயன்கிடைக்கவேண்டும். அத்தகைய ஈகையால்தான் நிலைத்த புகழ் கிடைக்கும். பிறர்க்கு ஈபவரைப் பற்றித்தான் மக்கள் அக்கறை கொள்வர்—எப்போதும் அவர் புகழே உரைப்பர். இத்தகைய புகழை விட ஒருவருக்குச் சிறந்த ஊதியம் (சம்பாதனை) இப் பிறவியில் வேறு என்ன இருக்க முடியும? இவ்வுலகில்

ஒருவருடைய உடல், உடைமைகள் எல்லாம் அழிந்து விடும்; ஆனால் அவரது உயர்ந்த புகழ்மட்டும் என்றும் அழியவே அழியாது.

**''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.''**

**''உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று**
**ஈவார்மேல் நிற்கும் புகழ்.''**

**''ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன்று இல்.''**

இவ்வகையாக, அழியும் பொருளைக் கொடுப்பதால் அழியாப் புகழ் உண்டாகும் என்னும் நுட்பத்தைப் புரிந்து கொள்ளும் அறிவு எல்லார்க்கும் இருப்பதில்லை; இருந்தால், பொருளைப் பூட்டி வைத்து விட்டுப் புகழைக் கோட்டை விடுவார்களா? பொருளைப் பிறர்க்கு உதவுவதால் நமக்கு இழப்பு ஏற்படுவது போல் தோன்றினும் அஃது உண்மையான இழப்பாகாது; அதில் வளர்ச்சியிருக்கிறது - அதாவது, அந்த இழப்பில் புகழாகிய ஆக்கம் (செல்வம்) அடங்கியிருக்கிறது. இப்புகழைப் பெற்றவர்கள் இறந்து விட்டாலும் உண்மையில் இறந்தவராகக் கருதப்பட மாட்டார்கள்; என்றும் உள்ளவராகவே மதிக்கப் பெறுவார்கள். அதாவது, அவர் தம் ஊன் உடம்பு மறையினும் புகழுடம்பு மறையவில்லையன்றோ? இவ்வாறு ஆக்கத்தைத் தரும் இழப்பையும், என்றும் இருக்கச் செய்யும் இறப்பையும் கைவரப் பெறுபவரே உயர்ந்த வித்தகராவர். இத்தகு புகழ் வித்தகர்கள் துறவிகளை

விட - ஏன், தேவர்களை விடச் சிறந்தவராவர். நிலவுலகம் மட்டுமன்று - தேவருலகங் கூட, துறவிகளையோ தேவர் களையோ போற்றாமல் இப்புகழ்ச் செல்வர்களையே போற்றும்.

**"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லால் அரிது."**

**"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேள் உலகு".**

உலகில் சிலர் புகழான செயல்களின் பக்கம் தலை வைத்தும் படுக்காமல், இழிவான செயல்களிலேயே முழு மூச்சாக இறங்கி விடுகின்றனர். அதனால் இவர்களை உலகினர் இகழ்கின்றனர். அதற்காக இவர்கள் தம்மை இகழ்கின்றவரை நோகின்றார்கள். இது தேவையில்லையே! புகழ்ச் செயல் புரிபவரை உலகம் புகழத் தவறாது; அது போலவே, இகழ்ச் செயல் புரிபவரையும் உலகம் இகழத் தவறவே தவறாது. இந்த உலகியற்கையை ஒவ்வொரு வரும் உணர வேண்டும். எனவே, இழி செயல் புரிபவர்கள் தம்மை இகழ்பவரை நோகாமல், அவ்விகழுக்குக் காரண மான தங்களைத் தாங்களே நொந்து கொள்ள வேண்டும். 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே (செயலே) கட்டளைக் கல்' (உரைகல்) அல்லவா? 'பெருமையும் சிறுமையும் தான் தரவருமே' என்பது பட்டறிந்த முதுமொழியாயிற்றே!

இங்கே சிலர், 'நாங்கள் என்ன இழி செயல் செய்தோம்? கள், களவு, காமம், பொய், சூது, கொலை, கொள்ளை முதலிய குற்றங்களுள் எக்குற்றம் புரிந்தோம்?

ஒன்றும் இல்லையே! யாருக்கும் எத் தீங்கும் செய்ய வில்லையே! நாங்கள் உண்டு - எங்கள் காரியம் உண்டு என்று தானே இருக்கிறோம்! அப்படியிருக்கவும் எங்களைப் பலர் இகழ்ந்து பழிக்கின்றார்களே! இது ஏன்?' என்று கேட்கலாம். இவர்கள் இழிசெயல் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை; புகழான காரியம் செய்யாதிருப்பதே பெருங்குற்றமாயிற்றே! இஃது ஒன்றே போதுமே உலகம் இவர்களைப் பழிப்பதற்கு! உடலாற்றலும் அறிவு நலனும் பொருள் வசதியும் பெற்றிருப்பவர்கள் உலகிற்குப் பல நல்ல பணிகள் புரிய வேண்டியது கடமையாயிற்றே! உலகத்தாரின் ஒத்துழைப்பால் - கூட்டுறவால்தானே இவர்கள் வாழ் கிறார்கள்! எனவே, இவர்கள் உலகிற்கு உதவாதிருப்பது, புகழை இழந்ததாக மட்டும் ஆகாது - இகழை வலியத் தேடிக்கொண்டதாகவும் ஆகும்.

**''புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவ தெவன்.''**

**''வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்**
**எச்சம் பெறாஅ விடின்.''**

வள்ளுவனார்க்கு இங்கே கசப்பு வந்துவிட்டது போலும்! புகழ் இல்லாதவரது உடம்பைச் சுமந்து கொண்டிருக்கும் மண்ணால் பயனில்லை என்கிறார் ஆசிரியர்.

**''வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம்.''**

'புகழ் இல்லாதவரைப் பொறுத்த நிலம்' என்று ஆசிரியர் சொல்லவில்லை; 'இசையிலா யாக்கை பொறுத்த

நிலம்' என்றே ஆசிரியர் கூறியுள்ளார். இசையிலா யாக்கை என்றால், புகழ் இல்லாத உடம்பு என்று பொருளாம். இதிலிருந்து, 'புகழ் இல்லாதவரது உடம்பில் உயிர் இல்லை - அது வெற்றுடம்பாகிய பிணமே' என்பது புலனாகிறதன்றோ? மேலும், உடம்புக்கு உண்மையான உயிர் புகழ்தான் என்பதும் புலனாகுமே. எனவேதான், புகழ் பெற்றவர்களின் உடம்பு சுட்டெரிக்கப்பட்டுங் கூட அல்லது புதைக்கப்பட்டுங்கூட, புகழ் என்னும் உயிர்ப் பொருள் உலகில் உலவிக் கொண்டிருக்கிறது போலும்! இவ்வளவு அரிய கருத்துக்களும் 'இசையிலா யாக்கை' என்னும் குறள் தொடரிலிருந்து கிடைக்கப்பெற்றனவன்றோ? இம்மட்டுமா! புகழ் இல்லாதவர்கள் இருப்பதைவிட இறப்பதே மேல் - அதனால் நிலத்தின் சுமை குறையும் என்னும் கருத்தும் இதிலிருந்து கிடைக்கின்றதல்லவா? சுமந்த நிலம் என்னாது 'பொறுத்த நிலம்' என்று ஆசிரியர் கூறியிருப்பதிலிருந்து, 'போனால் போகிறதென்று இரக்கப்பட்டு நிலம் பொறுத்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு குறிப்புக் கிடைக்கின்றது. புகழில்லாதவர்களால் ஒரு பயனும் இல்லையாதலின், அவர்களைச் சுமந்துகொண்டிருக்கும் நிலப்பகுதியால் பயனில்லை என்றார் திருவள்ளுவனார். அப்படியே ஏதாவது அந்நிலத்தால் பயன் இருக்குமாயினும், ஒன்றுக்கும் உதவாதவர்களையும் இழி செயல்களே புரிபவர்களையும் சுமந்துகொண்டிருக்கிற ஒரு வசையே போதுமே அந்நிலத்திற்கு! எனவே, வசை (பழி)யில்லாத முறையில் அந்நிலத்தால் வளப்பமான பயன் அளிக்க முடியாது - என்னும் கருத்தில் 'வசையிலா

வண்பயன் குன்றும்' என்றார் ஆசிரியர். 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று ஔவையாரும் புறநானூற்றில் புகன்றுள்ளாரே.

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் தோன்றி மறை வதைப் போலவே மக்களும் தோன்றி மறைகின்றனர். என்ன பயன்! சிலர் ஆடுமாடுகளைப் போல—ஏன், அவற்றினுங் கேடாக வாழ்க்கை நடத்துகின்றனர்; அந்தோ அளியர்! நேற்றுச் செய்ததையே இன்றும் செய்கின்றனர் — இன்று செய்வதே நாளையும்! அதாவது, நாடோறுந்தான் உழைக் கின்றனர், உண்ணுகின்றனர், உறங்குகின்றனர் — சிலர் உழைப்பதுகூடக் கிடையாது. என்ன வாழ்க்கை! புதிய புதிய குறிக்கோள்களும் திட்டங்களும் நிறைவேற்றங்களும் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? புதிய புதிய அருஞ் செயல்கள் புரிந்து - பெரும் பணிகள் ஆற்றிப் புகழுடன் வாழ்வதே குறிக்கோள் வாழ்க்கையாகும். இங்ஙன மின்றி, செய்ததையே திரும்பத் திரும்பச் செய்துகொண் டிருக்கும் நாட்களை வாழ்நாளில் சேர்த்துக் கணக்கிட முடியாது. அதாவது, ஒருவன் ஒரு திங்களில் (மாதத்தில்) முதல் நாள் வீணே உண்டு உறங்கிக் காலங்கழித்தது போலவே மற்ற நாட்களிலும் இருப்பானேயானால், அவன் அத்திங்களில் ஒரு நாள் மட்டும் உயிர் வாழ்ந்ததாகவே பொருள். அது போலவே, ஓராண்டு முழுவதும் ஒருநாளில் செய்ததுபோல் மட்டும் செய்துகொண்டிருப்பானேயாயின், அவ்வாண்டில் ஒருநாள் மட்டும் உயிர் வாழ்ந்ததாகவே பொருள். இப்படிப் பார்த்தால் அவன் வாழ்நாளின் அளவு என்ன? அவன் பல்லாண்டுகள் உயிர் வாழ்ந்தாலும்,

உண்மையில் சின்னாட்கள் உயிர் வாழ்ந்ததாகவே பொருள். அதாவது, அவன் உயிரோடு பல ஆண்டுகளாக உலவிக் கொண்டிருந்தாலும், உண்மையில் அவன் எப்போதோ இறந்துவிட்டதாகவே பொருளாம். எனவே, வசையின்றி இசையுடன் வாழ்பவரே உண்மையில் உயிர் வாழ்பவரா வார்கள்; இசையின்றி வசையுடன் வாழ்பவரோ உயிர் வாழ்பவராகக் கருதப்படமாட்டார்கள்.

இதனால்தான், பிறந்தால் புகழோடு பிறக்கவேண்டும்; இல்லையெனின் பிறவாதிருப்பதே நல்லது என்று வள்ளுவப் பெருமான் திருவாய் மலர்ந்துளார். பிறக்கும்போதே எப்படிப் புகழோடு பிறக்கமுடியும்? அப்படியென்றால் பொருள் என்ன? அதாவது, உலகில் மக்களாய்ப் பிறந்தவர்கள் நற்பணிகள் புரிந்து புகழோடு வாழவேண்டும்; அங்ஙனம் வாழாதவர்கள், பிறந்தும் பிறவாதவராகவே கருதப்படுவார்கள் - என்பது பொருள்.

> **"வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய**
> **வாழ்வாரே வாழா தவர்."**
> **"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
> **தோன்றலின் தோன்றாமை நன்று."**

வள்ளுவனார் கூறியாங்குப் புகழுக்கு இவ்வளவு புகழ் இருக்கும்போது, பலர் புகழ்ச் செயல்கள் புரியாதிருப்பது ஏன்? காரணம் இன்றிக் காரியம் நிகழுமா? புகழில் ஆவல் மட்டும் இருந்தால் போதுமா? அதற்குரிய செயல் செய்ய வேண்டாமா? செய்யாமல் புகழ்ந்துகொள்ள முயல்வதால் யாது பயன்? இல்லாத புகழை இருப்பதாகப் பொய்யாய்ப் புனைந்துரையாய்ப் புகழ்ந்து கொள்ளலாமா? இன்னொருவர்

புகழை - ஏன், தம் முன்னோர் புகழையேகூட இரவலாகத் தம்மேல் ஏற்றிப் புகழ்ந்து கொண்டால் போதுமா? எனவே, ஒவ்வொருவரும் தாமே புகழான செயல்கள் புரிவாராக! புரிந்து புகழோடு வாழ்வாராக!

*　　*　　*

## வள்ளுவர் இல்லம்

தமிழ்த் திருமகனாராகிய - ஏன், உலகப் பெருமகனாராகிய திருவள்ளுவனார், திருக்குறள் இல்லறவியல் பகுதியில் இருபது தலைப்புக்களின் கீழ், பல கடமைகளைச் சிறப்பாக இல்லறத்தார் பெயரில் கூறியிருப்பினும், பொதுவாக உலக மக்கள் எல்லோர்க்கும் கூறியதாகவே கொள்ளவேண்டும். ஏன்? உலக மக்களை இல்லறத்தார், துறவறத்தார் என்னும் இரு பிரிவுக்குள் அடக்கிவிடலாம். துறவறத்தாரோ நூற்றுக்கு ஒருவர் தேறுவதே அரிது. எனவே, மிக மிகப் பெரும்பாலோர் இல்லறத்தார்கள்தானே! எனவே, மக்கள் வள்ளுவர் நெறி நின்று தத்தம் இல்லக் கடமைகளை ஒழுங்காய் நிகழ்த்தினால் அவர்தம் இல்லற வாழ்வு இனிது செழிக்கும்.

பொதுவாக இல்லறவியலின் இருபது தலைப்புக்களையும் கூர்ந்து நோக்கின், மக்கள் ஒருவர்க்கொருவர் ஒத்து உதவி ஒப்புரவு செய்து வாழவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தோட்டமாகத் தெரிவதால், அவர் நெறியை உலகமக்கள் பின்பற்றின், உலகமுழுவதும் ஒரே இல்லமாக- ஒரே குடும்பமாக அமைவது உறுதி.

இதுதான் வள்ளுவர் இல்லம்! வாழ்க!

## மக்கள் மதிப்புரை

பேராசிரியர் சுந்தர சண்முகனார் அந்நாளில் அவ்வப் போது எழுதி வெளியிட்ட திருக்குறள் தெளி பொருள் விளக்கங்களுக்கு பலதரப்பட்ட மக்களிடமிருந்து வந்த மதிப்புரைகளில் சில இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

**திரு. ப. நடேசலிங்கம், இலங்கை, 12—1—1949**

"தங்கள் குறள் ஆராய்ச்சி நூல் எல்லோரும் படிக்கக் கூடிய முறையில் வெளியிடுவது பற்றி மிகவும் சந்தோசம். தமிழ் நாடே தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. தி. நடராஜன், ஆர்க்காடு, 13—1—1949**

"திருக்குறள் தெளிவு கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றேன். தமிழ் உலகத்திற்குத் தாங்கள் செய்யும் தொண்டு போற்றுதற்குரியதாகும். தமிழர்கள் என்றும் உங்களுக்குக் கடமைப்பட்டவர்களாவார்கள்."

**திரு. இராவணதாசன், மருதூர், 22—11—1958**

"திருக்குறளுக்குப் பதின்மருக்கு மேலோர் உரை கண்டனர். கண்டும், வள்ளுவரின் உள்ளத்தைக் காணவும் மக்களின் மயக்கத்தைத் தீர்க்கவும் அவை வழி செய்வதா யில்லை. இந்நிலையில் தங்கள் 'ஆராய்ச்சியுரை' மக்கள் மயக்கம் தெளிந்து, சிறுமை போக்கிப் பெருமையடையப் பெரிதும் வகை செய்யும். இந்தச் சீரிய முயற்சியை வரவேற்கிறேன்."

**புலவர் திரு. கு. நா. கிருட்டிணமூர்த்தி,**
**குலசேகரப்பட்டிணம், 10—12—1958**

"பலர் மதம், சாதி, கடவுள், அரசியற் கொள்கை முதலிய சக்திகளையே குறள் மணிக்கு மெருகிடுவதாக

நினைத்துப் பூசி மாசுபடுத்தி வந்தனர். தங்கள் புத்துரை, மணியைத் தூய்மை கெடாதபடி எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இது தமிழ்த் தொண்டே.''

**திரு. நா வே பிள்ளை, உதவிப் பதிவாளர், சின்னசேலம், 1—2—1959**

''பண்டறியேன் புலவர் சுந்தர சண்முகனாரை. இன்றறிந்தேன் ''குறளின் அசைகளுக்கும் அளபெடைகளுக்கும் இலக்கணத்தோடு ஆழ்ந்த அரும்பொருள்* கூறும் ஆங்கிலமும் அறிந்த பெரும் புலவரேறு'' என்று. இது உயர்வு நவிற்சியன்று; உண்மை!''

**திரு. ஆடவல்லான், முகவை, 18—2—1959**

''தாங்கள் மேல் நாட்டில் பிறந்திருந்தால் இத்தகைய ஆராய்ச்சியைப் பாராட்டி 'நோபல்' பரிசும் தந்திருப்பார்கள். ஆனால் இங்கோ......! உண்மையான வள்ளுவரை உலகிற்குப் படம் பிடித்துக் காட்டுபவரைத் தமிழ் மக்கள் போற்றி மகிழ்ந்தாரிலர். போற்றும் நிலையில் தமிழகம் இன்றுள்ளதாயின், புலவரின் திருக்குறள் வெளியீடு கோடிக்கணக்கில் விற்பனையாக வேண்டுமே! காலம் வரத்தான் போகிறது - கனவு நனவாகும்''.

**மலேயா நாட்டு' தமிழ் முரசு' மே, 1959 இதழ்**

''சண்முகனார் உரையில் பல நயங்கள் காணப்படுகின்றன. ஆங்காங்கே தற்புதுமை (Orginality) புலப்படுகிறது...... இத்தகைய நல்லுரைக்குத் தமிழ்ப் பெருமக்கள் பேராதரவு அளித்தல் வேண்டும்.

**பேராசிரியர் தி. முத்துக் கண்ணப்பர், சென்னை, 1977**

சுந்தர சண்முகனாரின் திருக்குறள் ஆய்வு நூல்கள், மிக நுண்மையான அதுவரை குறளாய்வாளர் எவரும் கண்டறியாத ஆழ் பொருள் பொதிந்தவை. அவரைப் பழைய குறள் உரையாசிரியர்கள் பதின்மரையும் விஞ்சியவர் என்று கூறின் அது மிகையாகாது.

## சுந்தர சண்முகனாரின் திருக்குறள் தொண்டு

பேராசிரியர் சுந்தர சண்முகனார் திருக்குறள் பரப்பும் பணியினைத் தம்முடைய 26-வது அகவையில் தொடங்கினார். 30.7.1948 அன்று தொடங்கி 'திருக்குறள் தெளிவுரை' என்னும் பெயரில் குறள்களுக்கு விளக்கவுரை எழுதி உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கென்று பல பதிப்புகள் வெளியிட்டார். 23.1.1949 முதல் 'திருக்குறள் தெளிவு' என்ற பெயரில் திங்கள் இருமுறை விளக்க இதழ் வெளியிட்டார். ஒவ்வொரு இதழிலும் பத்து குறள்களுக்கு விளக்கம் தரப்பட்டது. 1957-ம் ஆண்டு 'வள்ளுவர் கண்ட மனையறம்' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். 22.10.1958 அன்று 'தெவிட்டாத திருக்குறள்' என்னும் பெயரில் இதழ் தொடங்கி திருக்குறள் ஆய்வுரைகளை இதழ்தோறும் வெளியிட்டார். 1963-ம் ஆண்டு 'வள்ளுவர் இல்லம்' ஆய்வு நூலினை எழுதி வெளியிட்டார். 2.6.1966 அன்று அரசு பதிவுபெற்ற 'திருவள்ளுவர் தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்ற அமைப்பினைத் தோற்றுவித்து 'திருக்குறள்' மற்றும் 'யாப்பு' வகுப்புகள் நடத்த ஆவன புரிந்து தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குப் பட்டங்கள் வழங்கினார். 28.8.1966 அன்று 'திருக்குறள் தெளிவு' என்ற பெயரில் திருக்குறள் முழு உரைநூல் எழுதி வெளியிட்டார். 1991-ம் ஆண்டு 'ஆழ்கடலில் சில ஆணிமுத்துக்கள்' என்னும் நூலினை வெளியிட்டார். திருக்குறள் ஆட்சி இல்லாத இவருடைய நூல்களே இல்லை. இவரின் திருக்குறள் பணியினைச் சிறப்பித்து 15.1.1991 அன்று தமிழக அரசு இவருக்குத் 'திருவள்ளுவர் விருது' வழங்கியது.

– நல்லாசிரியர் புலவர் **வ.ஞானப்பிரகாசம்**, பி.லிட்.